# திருமூலர் திருமந்திரம்

மூலமும் உரையும்

பகுதி I

மௌனாச்சிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW UTHAYAN PUBLICATION (PVT) LTD.
83 2/1, HAMPDEN LANE
COLOMBO 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருமூலர் திருமந்திரம்
# மூலமும் உரையும்

மௌனாச்சிரம்

1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவம்

ஏழு மௌன மடங்கள்
பாரத பூமியில் நிறுவிய

குருமுதல்வர்

# திருமூலர் பெருமான்

குருபூசை விழா மலர்

**18-10-1994**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# திருமூலர் திருமந்திரம்

மூலமும் உரையும்

பாயிரம், முதலாம், இரண்டாம் தந்திரங்கள். 548 - மந்திரங்கள்

## பகுதி I

முதலாம் பதிப்பு.


உரையாளர்

சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷர்.



மௌனாச்சிரம்
19, I. B. C. Road,
வெள்ளவத்தை
கொழும்பு - 6
இலங்கை.

1994

வெளியீட்டு எண் - 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவம்

# முன்னுரை

திருமூலர் திருமந்திரம் விளக்க உரையுடன் பகுதி பகுதியாக வெளிவர உள்ளது. 1993 ஆம் ஆண்டு திருமூலர் திருமந்திரம் முழுவதும் - 3,000 மந்திரங்களையும் உள்ளாக்கிய நூல் வெளியாகியது.

இவ்வருடம் 1994 இல் திருமூலர் திருமந்திரம் விளக்க உரையுடன் அதன் முதற்பகுதி வெளிவருகின்றது. முதற்பகுதியில் பாயிரம் - 112 மந்திரங்கள், முதலாம் தந்திரம் - 224 மந்திரங்கள், இரண்டாம் பகுதி - 212 மந்திரங்கள் ஆகியன உள்ளடங்கியுள்ளன. மந்திரங்கள் சொற்பிரிவுடன் அமைந் துள்ளன. மந்திரங்களின் உரையின் ஆங்கில மொழி பெயர்ப்பும் இவ்வாண்டு தனியாக வெளிவருகின்றது.

இவையனைத்தும் சிவபரம்பொருளின் அன்பாலும், கருணையாலும், அருளாலும் நிகழ்கின்றன. இத்திருமந்திர நூல்கள் இறைதாகம் உள்ளவர்களின் ஆத்மீக இதய இல்லங்களில் சிறப்புடன் விளங்க வேண்டுமென இது அன்போடு பிரார்த்தனை செய்கின்றது.

சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷ்ர்.

மௌனாச்சிரம்.

19, I. B. C. Road,
Colombo - 6 , Wellawatta,
Sri Lanka .

18.10.1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுறை (பக்கம்)


**பாயிரம்** 01 — 57

| | | |
|---|---|---|
| I. | **கடவுள் வாழ்த்து** | 01 |
| II. | வேதச் சிறப்பு | 26 |
| III. | ஆகமச் சிறப்பு | 29 |
| IV. | குரு பாரம் பரியம் | 34 |
| V. | திருமூலர் வரலாறு | 37 |
| VI. | அவை அடக்கம் | 48 |
| VII. | திருமந்திரத் தொகைச் சிறப்பு | 50 |
| VIII. | குருமட வரலாறு | 51 |
| IX. | திரிமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறைமை. | 52 |

**முதலாம் தந்திரம்** 58 — 171

| | | |
|---|---|---|
| I. | உபதேசம் | 58 |
| II. | யாக்கை நிலையாமை | 73 |
| III. | செல்வம் நிலையாமை | 86 |
| IV. | இளமை நிலையாமை | 90 |
| V. | உயிர் நிலையாமை | 95 |
| VI. | கொல்லாமை | 100 |
| VII. | புலால் மறுத்தல் | 101 |
| VIII. | பிறன் மனை நயவாமை | 102 |
| IX. | மகளிர் இழிவு | 104 |
| X. | நல்குரவு | 106 |
| XI. | அக்கினி காரியம் | 109 |
| XII. | அந்தணர் ஒழுக்கம் | 114 |
| XIII. | இராச தோட்டம் | 121 |
| XIV. | வானச் சிறப்பு | 126 |
| XV. | தானச் சிறப்பு | 127 |
| XVI. | அறம் செய்வான் திறம் | 128 |
| XVII. | அறம் செய்யான் திறம் | 132 |
| XVIII. | அன்பு உடைமை | 137 |
| XIX. | அன்பு செய்வாரை அறிவன் சிவன் | 142 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுறை (பக்கம்)


| | | |
|---|---|---|
| XXO. | கல்வி | 147 |
| XXI. | கேள்வி கேட்டு அமைதல் | 152 |
| XXII. | கல்லாமை | 157 |
| XXIII. | நடுவு நிலைமை | 162 |
| XXIIV. | கள் உண்ணாமை | 164 |


**இரண்டாம் தந்திரம்.**


| | | |
|---|---|---|
| I. | அகத்தியம் | 172 |
| II. | பதிவலியில் வீரட்டம் எட்டு | 173 |
| III. | இலிங்க புராணம் | 177 |
| IV. | தக்கன் வேள்வி | 183 |
| V. | பிரளயம் | 187 |
| VI. | சக்கரப்பேறு | 190 |
| VII. | எலும்பும் கபாலமும் | 192 |
| VIII. | அடிமுடிதேடல் | 192 |
| IX. | சர்வ சிருஷ்டி | 197 |
| X. | திதி | 211 |
| XI. | சங்காரம் | 216 |
| XII. | திரோபவம் | 221 |
| XIII. | அநுக்கிரகம் | 226 |
| XIV. | கர்ப்பக்கிரியை | 231 |
| XV. | மூவகைச் சீவவர்க்கம | 251 |
| XVI. | பாத்திரம் | 256 |
| XVII. | அபாத்திரம் | 258 |
| XVIII. | தீர்த்தம் | 260 |
| XIX. | திருக்கோயில் இழிவு | 263 |
| XX. | அதோ முகதரிசனம் | 265 |
| XXI. | சிவநிந்தை | 268 |
| XXII. | குருநிந்தை | 270 |
| XXIII. | மயேசுர நிந்தை | 274 |
| XXIV. | பொறை உடைமை | 275 |
| XXV. | பெரியாரைத் துணைக்கோடல் | 277 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவம்

## முதலாம் தந்திரம் சாராம்சம்

1. உண்மை (கடவுள்), சுத்த சக்தி, ஆத்மா எனும் மூன்றும் என்றும் உள்ளவை. ஒன்றோடு ஒன்று கலந்தும், தனித்தும், கலக்காதும் உள்ளவை.

2. முழுமைத்துவமான மௌனம் - இதுவே இறையவருடன் உள்ள நித்திய நிரந்தர ஞானத் தொடர்பு ஆகும்.

3. உயிர், உடம்பு, இளமை, செல்வம், ஆகியன ஒருபோதும் நிலைக்காது. நிலையான ஆத்மாவோடு கூடவருவது ஆத்மார்த்த இறைவிரதமும், தவத்தினால் பெற்ற இறைஞான அருளுமேயாகும்.

4. பஞ்சமா பாதகங்களைப், பிறர் மனைவியைப், பொது மகளிரை, அகவறுமையை ஒருபொழுதும் நாடாதீர்கள், தேடாதீர்கள்.

5. அக்கினி வளர்த்தலும், அக்கினி வழிபாடும் சகலர்க்கும் பொதுவானதும், மிகவும் பிரதானமானதும் ஆகும். ஆத்மீக சாதனைக்கு, வழிபாட்டுக்கு இது மிகவும் முக்கியமானதாகும். காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி ஆகிய தேவதைகளை முறைப்படி வழிபாடு செய்து அவற்றின் மூல மந்திரத்தை ஜெபியுங்கள்.

6. அந்தணர்கள் தங்களின் சர்வ செயல்களிலும் அகப், புறத் தூய்மையைக் கடைப்பிடிக்காவிடில் ;அவர்களின் போதனைகளும், மந்திர உபதேசங்களும், வழிபாட்டு கிரியை களும் எந்தவித இறை தாற்பரியத்தையும் வழங்காது போய்விடும். இது நாட்டுக்கும், மக்களுக்கும் நல்லதன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நாட்டின் அரசன் பசுக்களை, கற்புடைய பெண்களை, இறைஞானம் பெற்றவர்களைக் கண்ணும் கருத்துமாகக் காக்காவிடில் நாட்டில் பசி, பஞ்சம், பிணி தலைவிரித்தாடும். நாடும் கொடிய விலங்குகள் வாழும் காடாகிவிடும்.

8. எப்பொழுதும், மறதி மயக்க நிலையிலும் அறத்தையே செய்யுங்கள். வானம் வற்றாது மழை பொழிவதுபோல் நீங்களும் சிறந்த தானம் செய்யுங்கள். சர்வ ஜீவராசிகளையும் அன்பு செய்யுங்கள். அப்பொழுது தான் நீங்கள் இறைவரை உணர்வீர்கள். இறைவரை முழுமையாக, உண்மையாக என்றும் உணர்தலே கல்வியாகும். உங்கள் கேள்வி ஞானத்தை என்றும் தெளிவாக வைத்திருங்கள்.

9. ஒரு பொழுதும் நடுவு நிலையில் இருந்து தவறிவிடாதீர்கள்.

10. "வினை" என்று ஒன்று உண்டு. இதுவே சர்வ ஜீவராசிகளினதும் சடப்பொருள்களினதும் தோற்றத்திற்கும், செயற்பாட்டிற்கும் காரணமாகும்.

11. 96 தத்துவங்கள் விபரிக்கப்பட்டுள்ளன.

12. "அவதாரம்" அவதாரம் என்று ஒன்று இல்லை என மிகவும் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவம்

## திருமூலர் திருமந்திரம் பாயிரம் - சாராம்சம்

1. தமிழின் சிறப்பு:- தமிழ் இறைமந்திரம், இறை அன்பு இறைதொண்டு, உயிர், இறை இன்பம், இறைஅருள், இறை ஆனந்தம், இறை அழகு, மௌனம் எனும் கருத்துக்களை உள்ளாக்கியது.

2. மெய்ஞ்ஞானத் தவிப்பு, மெய்ஞ்ஞானத் தாகம், மெய்ஞ்ஞான ஏக்கம், மெய்ஞ்ஞானத் துடிப்பு - இவை இறைபரம்பொருளைப் பரிபூரணத்துவமாக உணர்ந்துகொள்ளப் பிரதான மானவையாம்.

3. இறைவனிடம் முழுமையான ஞானம், முழுமையான அன்பு, முழுமையான கருணை, முழுமையான அருள் ஆகியவற்றை மாத்திரம் வேண்டுங்கள்.


4. எல்லாவகையான சித்துக்களும் பேய்க்கும், பிசாசுக்கும் ஒப்பானவை. இவற்றை மறந்தும் ஒருபொழுதும் நாடாதீர்கள்.

5. அறிவை, உலக நூல்களை எல்லாம் விட்டுத் தள்ளுங்கள்.

6. அக வழிபாடும், புற வழிபாடும் இரு கண்களைப் போன்றன. ஆகவே இரண்டையும் தவறாது செய்யுங்கள்.


7. ஒழுக்கத்தை - அகப் புறத் தூய்மையைக் கண்ணும் கருத்துமாக உயிரிலும் மேலாகப் பேணுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாசூன்யம் - உண்மை - கடவுள் - தூயவெறுவெளி
எல்லா நிலைகளும் பரிமாணங்களும் கடந்த ...... சிவம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூக்குமமான மனத்தின் அமைப்பும் செயற்பாடுகளும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# I. கடவுள் வாழ்த்து

1. ஒன்று அவன் தானே இரண்டு அவன் இன் அருள்
நின்றனன் மூன்றின் உள் நான்கு உணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழு உம்பர்ச்
சென்றனன் தான் இருந்தான் உணர்ந்து எட்டே.

* ஒன்று - அவனாகவே உள்ளது. அதுவாகவே உள்ளது. அது எங்கும் என்றும் ஒன்றாகத் தானாக உள்ளது.

இரண்டு - அவனின் சிறந்த அருளாக உள்ளது. அதன் அருட் கடாட்சமாக வெளிப்படுகின்றது. அதன் அருட் சக்தியாகத் தொழிற்படுகின்றது.

* மூன்று - நிற்கின்றான் - நிற்கின்றது. பசு பாசம் பதி ஆக மண்ணிலே, வானிலே, விண்ணிலே: அருளாக, சக்தியாக, ஆன்மாவாக: உருவமாக, அருவமாக, அருவுருவமாக புலப்படுகின்றது. மும்மூர்த்திகளூடாகச் செயற்படுகின்றது.

நான்கு - உணர்கின்ற நிலை - உணர்த்தப்படுகின்ற நிலை. அறம், பொருள், இன்பம், வீடு பேறாக - சரியை, கிரியை, யோகம், ஞானமாக; ஆத்மாவின் நான்கு முகங்களாக - சப்த, நாத, அமிர்த, ஜோதியாக: பிரமச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசமாக.

* ஐந்து - வெல்லுகின்ற நிலை. ஐந்து புலன்களை, ஐந்து பூதங்களை, ஐந்து கருவிகளைத், தன்மாத்திரைகளைக் கடந்து போகின்ற நிலை;

ஆறு - விரிகின்ற நிலை. ஆறு ஆதாரங்களூடாக, ஆறு அத்துவாக்களூடாக, ஆறு அந்தங்களூடாக மலர்கின்ற நிலை;

* ஏழு - செல்கின்ற நிலை. ஏழு அண்டங்கள், ஏழு கடல்கள் கடந்த நிலை.

எட்டு - யாவற்றையும் உணர்ந்து அமருகின்ற நிலை.எட்ட முடியாத நிலை. இது அகர நிலை. இது சிவ நிலை. சிவமாக வெளிப்படுகின்ற புலப்படுகின்ற நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. போற்றி இசைத்து இன் உயிர் மன்னும் புனிதனை
நால் திசைக்கும் நல்ல மாதுக்கு நாதனை
மேல் திசைக்குள் தென் திசைக்கு ஒரு வேந்தனாம்
கூற்று உதைத்தானை யான் கூறுகின்றேனே.

* போற்றி, இசைபாடி, வழிபாடு செய்கின்ற சிறந்த உயிரை, – உயிரோடு மன்னிப் – பின்னிப் – பிணைந்து – இணைந்து நிற்கும் புனிதரை பரிபூரணத்துவரை;
* நாலா திசைகளையும் நல்ல வகையில் ஆளும் நல்ல மாதுவாகிய சக்திக்கு சிறந்த நாதத்தை வழங்குகின்ற நாதரை, தலைவரை;
* திசைகளுக்கு எல்லாம் மேலான தென் திசைக்கு ஒரு வேந்தராய் – ஒரே தலைவராய் – கூற்றாகிய எல்லா எழுத்து, சொல்,பொருள்களை – உதைத்தவரை – மரணத்தை உதைத்தவரை – ஞானத்தை வழங்குபவரை – காலத்தை வென்றவரை;
* தென்முக மூர்த்தியாகிய தெட்சணாமூர்த்தியை – திருநந்தி தேவரை சிவம் ஆகிய பரம்பொருளை, திருமூலனாகிய நான் கூறுகின்றேனே.

3. ஒக்க நின்றானை உலப்பு இலி தேவர்கள்
நக்கன் என்று ஏத்திடு நாதனை நாள்தொறும்
பக்க நின்றார் அறியாத பரமனை
புக்கு நின்று உன்னி யான் போற்றி செய்வேனே.

* எல்லாவற்றுடனும் ஒத்து, இணைந்து, புணர்ந்து நின்றானை, எந்த உலகங்களையும் சாராத தேவர்கள் ;
* நக்கன் என்றும் – நிர்வாணத்தைப் – பரிபூரணத்துவத்தை நாள்தோறும், தினமும் ஏத்தி வழிபாடு செய்யும் நாதம் ஆகிய நாதரை;
* ஒரு பக்கமாகிய நல்வினையை அல்லது தீவினையைச் சார்ந்து நிற்பவர்கள், ஒரு பொழுதும் அறிந்து கொள்ள முடியாத – தெரிந்து கொள்ள முடியாத – உணர முடியாத பரம்பொருள் ஆகிய பரத்தை – சிவத்தை;
* என்னுள்ளே புகுந்து, பின் சிவத்துள்ளே புகுந்து, உன்னி உன்னி, முயற்சி செய்து முயற்சி செய்து, சிரத்தையோடு சிரத்தையோடு, திருமூலனாகிய யான் போற்றி செய்வேனே! வழிபாடு செய்வேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அகல் இடத்தார் மெய்யை அண்டத்து வித்தைப்
புகல் இடத்து என்தனைப் போத விட்டானைப்
பகல் இடத்து இரவும் பணிந்து ஏத்தி
இகல் இடத்தே இருள் நீங்கி நின்றேனே.

* விளக்கே உருவான - ஜோதி மயமான மெய்யை - உண்மையை; அண்டாதி அண்டங்களுக்கு எல்லாம் மூலமாக - முதலாக - வித்தாக இருப்பதை;
* புகலிடத்தே - உண்மையான உறைவிடத்தே திருமூலனாகிய என்னை அமர வைத்தவரை - ஆறவிட்டவரை;
* பகல் முழுவதும் இரவு பூராவும் நான் பணிந்து வழிபாடு செய்து போற்றி ஏத்தி;
* ஒப்புவமை கூறமுடியாத இடத்திலோ, இருளை - அஞ்ஞானத்தை - அறியாமையை - மயக்கத்தை - மனமாகிய மாயையை நீங்கி - விலகி - விட்டு நின்றேனே! அமர்ந்தேனே! பரிபூரண ஓய்வு எடுத்தேனே!

5. சிவன் ஒடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவன் ஒடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்து அன்று பொன் ஒளி மின்னும்
தவளம் சடை முடித் தாமரை யானே.

* உண்மைக்கு - சிவம் ஆகிய பரம்பொருளுக்கு ஒப்பான - ஈடான - இணையான தெய்வம் தேடி ஓடி வாடித் திரிந்தாலும் இல்லவே இல்லை;
* முழுமைத்துவமான சிவத்திற்கு ஈடானவர் இல்லை. முழுமைத்துவத்தில் இருந்து முழுமைத்துவம் அற்ற எந்த மனிதரும் வரமுடியாது. அவதாரம் எதுவும் இல்லை என்பது இதில் இருந்து புலனாகும்.
* அன்று தொட்டு, தொன்று தொட்டு, இன்றும், என்றும் சகல புவனங்களையும் -அண்டங்களையும், கடந்து ஊடறுத்து பொன் போன்று -மங்களகரமாய் - ஜோதியாய் - ஒளியாய் மின்னி மின்னிச் சதா பிரகாசித்துக் கொண்டிருப்பது எதுவெனில்;
* வெண்மை பொருந்திய - தூய்மையான - தெளிவான - புனிதமான, இதய கமலங்களிலே - இதய தாமரையினிலே சடையும் முடியும் உடைத்துத் தாங்கி வீற்றிருக்கும் பரம் பொருளாகிய சிவம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அவனை ஒழிய அமரரும் இல்லை
அவன் அன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவன் அன்றி மூவரால் ஆவது ஒன்றும் இல்லை
அவன் அன்றி ஊர்புகுமாறு அறியேனே.

* பரம்பொருளாகிய சிவத்தைத் தவிர, சதா காலமும் வீற்றிருப்பவர் வேறு அமரர்களோ - தேவதைகளோ - தேவர்களோ இல்லவே இல்லை;
* பரம்பொருளை - சிவத்தை நோக்கிச், செய்யும் - இருக்கும் புரியும் தவமே, அருமையான தவம் - உண்மைத் தவம் - மெய்த்தவம் . வேறு இல்லவே இல்லை;
* பரம்பொருளின் - சிவத்தின் துணையில்லாமல் மும்மூர்த்திகளாகிய பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகியோர்களால் ஆகக் கூடிய காரியம் ஒன்று கூட இல்லவே இல்லை.
* பரம்பொருளின், சிவத்தின் அன்போடு, கருணையோடு, அருளோடு தான், திருமூலனாகிய யான், உண்மையாகிய - சத்தியமாகிய - மௌனமாகிய - பரிபூரணத்துவமாகிய சிவ ஊரை அடைவேன். வேறு ஒன்றும் யான் அறியவே மாட்டேன்.

7. முன்னை ஒப்பாய் உள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன்
தன்னை அப்பா எனில் அப்பனும் ஆய் உளன்
பொன்னை ஒப்பு ஆகின்ற போதகத் தானே.

* முன்னே உள்ளவர். ஒப்பு உவமை கூற முடியாதவர். மும்மூர்த்திகளுக்கு மூத்தவர் - முதலானவர்;
* தனக்கு ஒப்பாக வேறு எதுவுமே இல்லாதவர் என்றும் தலைமை ஆனவர்;
* அவரை "அப்பா" என்று நாம் கூறுவோமாகில் தந்தையாக - அப்பனாக உள்ளவர்;
* பொன் போன்ற நிறத்தை உடையவர். அருள் வழங்கும், கருணை வழங்கும், அன்பு வழங்கும், ஞானம் வழங்கும் போதம் ஆகின்றவர். அவரோ சிறந்த போதகத்தர் ஆக உள்ளவர். அதுவே சிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள் அறிவார் இல்லை
சேயினும் நல்லன் அணியன் நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.

* *தீயிலும் பார்க்க – நெருப்பிலும் பார்க்க (ஞானாக்கினி) வெப்பம் மிகுந்தவர், நீரிலும் பார்க்க (கங்காசலம்) மிகவும் குளிர்ச்சி பொருந்தியவர்;*
* *இருந்த போதிலும் அவருடைய அருளை அறிபவர்களை உணர்பவர்களைக் காண முடியவில்லையே;*
* *பச்சிளம் குழந்தையிலும் பார்க்க நல்லவர், சிறந்த அன்பர்களுக்கு அணியாகக் – காவலாக – அழகாக இருப்பவர்;*
* *ஈன்ற தாயிலும் பார்க்கச் சிறந்தவர் – நல்லவர் – அவர் யார் எனில், மிகவும் (தாழ்ந்த சடையை) – பணிவு நிறைந்த சுத்த சக்தியை, (குளிர்ச்சி பொருந்திய சடையை) – கருணை நிறைந்த சுத்த சத்தியை, எமது ஆத்மீக இதயங்களில் அருள் நிறைந்த பாதங்களோடு ஐக்கியமாகும் (சடையை.) – சுத்த சத்தியை உடைய இறையவர் ஆவர்;*

9. பொன்னால் புரிந்திட்ட பொற்சடை என்ன
பின்னால் பிறங்க இருந்தவன் பேர் நந்தி
என்னால் தொழப்படும் எம்மிறை மற்றவன்
தன்னால் தொழப்படு வார் இல்லை தானே.

* *பொன் இழைகளால் இழைக்கப்பட்ட உருவாக்கப்பட்ட (பொற் சடைதானோ) சுத்த சக்தி தானோ என்னவோ! இறைவரோ!;*
* *இந்தப் பொற்சடைக்கு சுத்த சக்திக்குப் பின்னால் தென்முகம் நோக்கி, மலை உச்சியிலே ஒருவர் இருக்கின்றார். அவரது பெயர்தான் நந்தி ஆகும்.*
* *எல்லோருக்கும் பொதுவாக உள்ள எம் இறைவர், அது சிவம் – பரம்பொருள் – உண்மை; திருமூலனாகிய என்னால் அது தொழப்படும் – வழிபாடு செய்யப்படும்;*
* *நந்தி தேவரை தொழுபவர்கள் – வழிபாடு செய்பவர்கள் யாருமே இல்லாமல் போய்விட்டார்களே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. தானே இருநிலம் தாங்கி விண்ணாய் நிற்கும்
தானே சுடும் அங்கி ஞாயிறும் திங்களும்
தானே மழை பொழி தையலும் ஆய் நிற்கும்
தானே தடவரை தண் கடல் ஆமே.

* தானாகவே மண்ணையும், வானையும் தாங்கியவாறு விண்ணாகவே நிற்கும். அது சிவம் - அது உண்மை - அதுதான் பரம்பொருள்.
* தானாகவே சுடுகின்ற தீயாகவும் (நடுநாடி - குரு - ஞானச்சுடர்), சூரியனாகவும் (வலநாடி - தந்தை - அறிவுச்சுடர்), சந்திரனாகவும் (இடநாடி - தாய் - ஊனச்சுடர்) விளங்கும்;
* தானாகவே பொழிந்து சொரிகின்ற மழை தருகின்ற பெண்மையாக - சுத்த சக்தியாகவும் விளங்கும்;
* தானாகவே தொடர்ச்சியாக நீண்டு உயர்ந்த மலைகளாகவும் குளிர்ச்சி பொருந்திய கடல் ஆகவும் விளங்கும்.

11. அயலும் புடையும் எம் ஆதியை நோக்கில்
இயலும் பெரும் தெய்வம் யாதும் ஒன்று இல்லை
முயலும் முயலில் முடிவும் அற்று ஆங்கே
பெயலும் மழை முகில் பேர் நந்தி தானே.

* எல்லாப் பக்கமும் விம்மி புடைத்து எழுந்து எம்முடைய ஆதியை - முதலை - சிவத்தை - பரம்பொருளை நாம் நோக்குவோமானால்;
* எல்லாம் நிறைந்த, பரிபூரணத்துவமான, முழுமைத்துவமான, யாம் எல்லோரும் பெருமைப்படக்கூடிய தெய்வம் சிவம். வேறு யாதும் ஒன்றும் இல்லவே இல்லை;
* அப்படி இல்லையென்று முயலுவோமே என்று முயற்சி செய்வோமானால் அது எந்தவிதமான முடிவுகளும் அற்றே இருக்கும்.
* அப்படியானால் அங்கே இருந்து ஒருவர் - அதன் இடத்தே இருந்து நேரடியாகத் தொடர்பு கொண்டு அன்பு மழையை கருணை மழையை - உண்மை மழையை - அருள் மழையை முகிலுடனே - வற்றாத பேரூற்றுடனே நந்தி என்னும் நாமத்துடன் எமக்கு வாரி வழங்கிக் கொண்டே இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கண்நுதல் ஆன் ஒரு காதலின் நிற்கவும்
எண்இலி தேவர் இறந்தார் எனப் பலர்
மண் உறு வார்களும் வான் உறுவார்களும்
அண்ணல் இவன் என்று அறிய கில் லார்களே.

* எமது நெற்றியிலேயே கண்ணாக ஆகி உள்ளவர், அதில் காதல் மயமாக – அன்பு மயமாக நிற்பது கண்டும்;
* எண்ண முடியாத கோடிக் கணக்கான தேவர்கள் இறந்து விட்டார்களோ எனப் பலர் பலவாறு எண்ணுகின்றார்களே!;
* மண்ணில் உறைகின்ற மனிதர்களும், வானிலே சஞ்சாரம் செய்கின்ற தேவர்களும்;
* எமது நெற்றிக் கண்ணிலே அண்ணி –அணைந்து – இணைந்து ஒன்றாகவே நிற்கின்றதை இவர்கள் ஒருவரும் அறியமாட்டாது, உணரமாட்டாது இருக்கின்றார்களே! என்னே! என்னே!

13. மண் அளந்தான் மலரோன் முதல் தேவர்கள்
எண் அளந்து இன்ன நினைக்கிலார் ஈசனை
விண் அளந்தான் தன்னை மேல் அளந்தார் இல்லை
கண் அளந்து எங்கும் கடந்து நின்றானே.

* மண்ணைப் பூமியை அளந்தவர் – மண்ணைப் பூமியை ஆய்ந்தவர் விஷ்ணு ஆவர். விஷ்ணு முதல் தொட்டு கோடிக் கணக்கான தேவர்கள்;
* எண் அளந்து – எண்ணை ஆய்ந்து – அறிவியலை ஆராய்ந்து, பரம்பொருளை இன்னமும் நினைக்க முடியாது உள்ளார்கள். (மனிதர்களும் உட்பட);
* அண்ட சராசரம் முழுவதும் அளந்து நிற்கின்ற வியாபகித்து நிற்கின்ற பரம்பொருளை அளந்தவர்கள் யாரும் இல்லவே இல்லை;
* எம்முடைய கண்களை ஊடறுத்து (முகக்கண், அகக்கண்) எங்கும் எல்லாமுமாய்க் கடந்து பரம்பொருள் நிற்கின்றது., விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. கடந்து நின்றான் கமலம் மலர் ஆதி
கடந்து நின்றான் கடல் வண்ணன் எம் மாயன்
கடந்து நின்றான் அவர்க்கு அப்புறம் ஈசன்
கடந்து நின்றான் எங்கும் கண்டு நின்றானே.

* ஆதியாகிய பரம்பொருள், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மாவைக் கடந்தே நிற்கின்றது. அது படைத்தல் தொழிலுக்கு அப்பாற்பட்டு நிற்கின்றது;
* ஆதியாகிய பரம்பொருள், கடலிலே பள்ளி கொள்ளும் மாயவேலை செய்பவனாகிய விஷ்ணுவைக் கடந்தே நிற்கின்றது. காத்தல் தொழிலுக்கு அப்பாற்பட்டு நிற்கின்றது;
* ஆதியாகிய பரம்பொருள், ஈசனை உருத்திரனை கடந்தே நிற்கின்றது. அழித்தல் தொழிலுக்கு அப்பாற்பட்டு நிற்கின்றது;
* உண்மை - சத்தியம் - பரம்பொருள் ஆகிய சிவம் - இதற்கு எந்தத் தொழிற்பாடுகளும் இல்லை. படைத்தல், காத்தல் அழித்தல் என்று ஒன்று இல்லை. இவை அனைத்தும் வெறும் தோற்றப்பாடுகளே. ஆதியாகிய பரம்பொருள் எல்லா வற்றையுமே கடந்து நின்று எங்கும் அருள் நிறைந்த காட்சியை வழங்குகின்றது.

15. ஆதியும் ஆய் அரன் ஆய் உடல் உள் நின்ற
வேதியும் ஆய் விரிந்து ஆர்ந்து இருந்தான் அருள்
சோதியும் ஆய் சுருங்காதது ஓர் தன்மை உள்
நீதியும் ஆய் நித்தம் ஆகி நின்றானே.

* பரம்பொருள் ஆகிய சிவம் ஆதியானது. அது வெளிப்படு கின்றபோது விம்பமாகப் புலப்படுகின்றது. அரன் ஆகிய சிவன் ஒரு விம்பம்;
* உடலின் உள்ளே ஓமகுண்டமாக - இதய கமலபீடத்தில், ஆத்ம சொரூபம் விரிந்து மிகவும் சுருங்கி அதிர்ந்த வண்ணம் புலப்படுகின்றது. ஆத்மசொரூபம் ஒரு விம்பம்;
* அருள் நிறைந்த ஒருபோதும் தேய்ந்து போகாத சோதியாய்ப் புலப்படுகின்றது. சோதியும் ஒரு விம்பம்;
* எம் உள்ளே எல்லாவற்றையும் நிறுத்துபவனாய், நீறாக்குபவனாய், நீதி செய்பவனாய்ப் புலப்பட்டு அது எப்பொழுதும் நிற்கின்றது. நீதியாகப் புலப்படுவதும் ஒரு விம்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
மாது குலாவிய வாள்நுதல் பாகனை
யாது குலாவி அமரரும் தேவரும்
கோது குலாவிக் குணம் பயில்வாரே.

* கொன்றை மலர்களால் அலங்கரிக்கப்பட்ட குழல்சடை - மாயை ஆகிய சக்தி, தன்னை மிகவும் அற்புதமாக அலங்காரம் பண்ணிக்கொள்ளும். வெறும் கோதையே, மாயை புணர்ந்து கொள்ளும்;
* அர்த்தநாரீஸ்வர சொரூபம் சிவமும் சக்தியும் ஆகும். இது பொருளும் சக்தியும் ஒன்றானவை என்பதைப் புலப்படுத்தும்.
* இந்த அர்த்தநாரீஸ்வர சொரூபத்தை உணர்ந்து கொள்ளாத மனிதர்களும், தேவர்களும் யாதையோ! ஏதையோ! புணர்ந்து கொள்கின்றார்களே!!
* அது மட்டும் அன்றி கோதையே - மாயையே - குற்றத்தையே, குலாவிப் புணர்ந்து, மாயையின் குணங்களில் இயல்புகளில் ஒன்றாகி அதையே பயிற்சி செய்கின்றார்களே!

17. காயம் இரண்டும் கலந்து கொதிக்கினும்
ஆயம் கத்தூரி அது மிகும் அவ்வழி
தேசம் கலந்து ஒரு தேவன் என்று எண்ணில்
ஈசன் உறவுக்கு எதிர் இல்லைதானே.

* இரண்டு உடல்கள் கலந்து புணர்ச்சியினாலே கொதித்து எழுகின்றபோது;
* காமக்கூடத்துள் கஸ்தூரி மானின் மதம் போன்று மேலும் காம வேட்கை வளர்ந்து கொண்டே செல்லும்;
* அவ்வழியே சென்று, எல்லாத் தேசங்களும் திரிந்து, அங்குள்ளவர்களோடு கலந்து தன்னை ஒரு தலைவராக, தன்னை ஒரு தேவனாக, ஒரு அவதார புருஷனாக , தத்துவ மேதையாக - போதனையாளனாக எண்ணிக் கொண்டேதான் இருக்கின்றார்களே! என்னே!! என்னே!!;
* இவர்கள் எல்லாம் வெறும் ஏமாற்று வித்தைக்காரர். பரம் பொருளின் உறவுக்கு - இறைவரின் தொடர்புக்கு நிகரானது வேறு எதுவும் எந்தப் பிரபஞ்சத்திலும் இல்லவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவ நோக்கி
அதுபதி ஆதரித்து ஆக்கம் அது ஆக்கின்
இதுபதி கொள் என்ற எம்பெருமானே.

* எல்லாவற்றிற்கும் முதலாய இறைவர் அணுமுதல் அண்ட சராசரங்களையும், வேந்தனுக்கு ஊடாக, அண்டாதித்தவர் களுக்கு ஊடாக செல்வங்கள் உட்பட எல்லாவற்றையும் சமன் செய்கின்றார்;
* உண்மையை நோக்கி, உண்மைச் செல்வத்தை நோக்கிப் பரம்பொருளை நோக்கிச் செய்கின்ற தவமே நிறைவான தவமாகும் - முழுமையான தவமாகும்;
* இவ்வாறு நிறைதவம் மேற்கொள்ளும் போது, அது - உண்மை ஆதரிக்கப்படுகின்றது. அங்கே அதில் இருந்து நிலையானவை எல்லாம் "ஆக்கம்" ஆகிக் கொண்டே இருக்கும்;
* எம்பெருமானார் எம் இல்லத்தில், இதய கமலத்தில் எழுந்து அருளி, இதன் சொரூபத்தைத் தெளிவுபடுத்தி, தன்னை உள்ளே பதித்து விடுகின்றார்.

19. இது பதி ஏலம் கமழ் பொழில் ஏழும்
முது பதி செய்தவன் மூதறி வாளன்
விது பதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அது பதி ஆக அமரு கின்றானே.

* ஏழு அண்டங்கள் - ஏழு அண்ட சராசரங்கள் எல்லாவற்றிலும் அருட்கடாட்சமும், கருணாஜோதியும் குறைவே இன்றி நிறைந்து மலர்ந்து கொண்டே இருக்கின்றது;
* முன்னையதிற்கு, முதுமையான பழம்பொருளுக்கு எல்லாம் தலைமையானவர் - பதியானவர். அது முழுமைத்துவம் ஆனது. பரிபூரணத்துவ உணர்வு நிறைந்தது;
* இளம் பிறைச் சந்திரனாகிய - அன்பை, குளிர்மையை; தனது நெற்றியாகிய - சிற்றம்பல வெளியிலே சூடிக்கொண்ட பரம்பொருளை நோக்கி மெய்யான தவம் மேற்கொள்ளும் பொழுது;
* அது உண்மை - பரம்பொருள் - சிவம், முதலாகப் - பதியாக எம்முள்ளே அமர்ந்து எம்மை எல்லாம் ஆறவைத்து ஆனந்தப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அற நெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவம்
கடிமலர்க் குன்ற மலை அது தானே.

* சர்வ ஜீவராசிகளினதும், சர்வ அணுக்களினதும், சர்வ அண்டங் களினதும்; முடிபை - ஆரம்பத்தை, இறப்பைப் - பிறப்பை என்றோ தீர்மானித்துவிட்ட, எப்பொழுதோ கணித்துவிட்ட;
* எமது அடிகள், அன்பையும் - அருளையும் பாதகமலங்களாக உடைய எமது தலைவர், உறைகின்ற - வாசம் செய்கின்ற; பெருநெறியைத், திருநெறியை, அறநெறியை நாம் எல்லோரும் நாடுவோமேயானால்;
* எம்முள்ளேயே இடி இடிக்கின்றது. முழங்குகின்றது. மின்னல் மின்னுகின்றது. மழை பொழிகின்றது. இவை எமது எல்லா மலங்களும் எரிகின்ற பொழுது நிகழும் அற்புத நிகழ்வுகள்;
* அப்பொழுது எம்முள்ளேயே, சிவம் - அதன் உருவம் மலர்களால் ஆன மலையாகக் - காட்சியாகப் புலப்படுகின்றது.

21. வானப் பெரும் கொண்டல் மால் அயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்த எம்
கோனைப் புகழுமின் கூடலும் ஆமே.

* பிரம்மாவும், விஷ்ணுவும், இந்திரன் முதலிய தேவர்களும் வான் நிலையில் சஞ்சாரம் செய்து கொண்டே தம்மைப் பெருநிலையில், புகழ்நிலையில், போகநிலையில் நிலைபேறாக நிறுத்திக் கொள்கின்றார்கள்;
* இவர்களும் கால சக்கரத்தினுள் சுழன்று கொண்டே உள்ளார்கள். ஆகையினால் இவர்களுக்கும் ஊனம் உண்டு. பிறவி உண்டு. இவற்றை எல்லாம் இல்லாது ஒழிக்கும் ஒருவர் உள்ளார்;
* எமது மனமாகிய கானகத்துள்ளே எண்ணிறந்த மதம் கொண்ட களிறுகள் - யானைக் கூட்டங்கள் உள்ளன. இவற்றை எல்லாம் கதறக் கதறப் பிளந்து எறிகின்ற;
* எமது தலைவரின் இறைவரின் புகழைப் பெருமையைப் பாடுவோமானால், கூறுவோமானால் நாம் அவனோடு கூடிக் கொள்ளலாம்- ஊடிக் கொள்ளலாம் - சேர்ந்து கொள்ளலாம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. மனத்தில் எழுகின்ற மாய நல் நாடன்
நினைத்தது அறிவன் எனில் தான் நினைக்கிலர்
எனக்கு இறை அன்பு இலன் என்பர் இறைவன்
பிழைக்க நின்றார் பக்கம் பேணி நின்றானே.

* மனம் என்னும் மாயை ஆகிய நாட்டில் இறைவர் மிகவும் நல்லவாறு எழுகின்றார், தென்படுகின்றார், புலப்படுகின்றார்;
* இந்த மாயையாகிய மனநாட்டின் எண்ணங்கள், நினைப்புகள் எல்லாம் அவர் அறிவார் - தெரிவார். அப்படி இருந்தும் மனமாகிய மாயை நாட்டைச் சேர்ந்தவர்கள் - சார்ந்தவர்கள் இறைவரை நினைக்க மாட்டாதவர்களாய், எண்ண மாட்டாதவர் களாய் உள்ளார்களே;
* இறைவர் தங்கள் மீது, அன்பு இல்லை என்று கூறுகின்றார்களே;
* எம்பெருமானார், உணரத் தெரிந்தவர்களோடு - வாழத் தெரிந்தவர்களோடு சேர்ந்து நிற்கின்றார். அவர்களை எல்லாம் பாதுகாத்துப் பேணி நிற்கின்றாரே.

23 வல்லவன் வன்னிக்கு இறை இடை வாரண
நில் என நிற்பித்த நீதியுள் ஈசனை
இல் என வேண்டா இறை அவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே.

* எல்லாம் வல்ல இறைவர் பிரம்மச்சாரிகளுக்கு எல்லாம் சிறந்த கவசமாகக் காவலாக விளங்குகின்றார்;
* நிலைபேறாக உண்மையுடன் -இறைவருடன் ஐக்கியப்படுகின்ற இந்த பிரமச்சாரிகள்;
* இல்லை, எங்களுக்கு எதுவும் வேண்டாம் என்று கூறிய பொழுதிலும், இறைவர் அந்தப் பிரம்மச்சாரிகளுக்கு தன்னிடம் உள்ள அன்பாகிய, கருணையாகிய முதல் எல்லாவற்றையும்;
* அல்லும் பகலும் இடைவிடாது வாரி வழங்கி அருளுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. போற்றி இசைத்தும் புகழ்ந்தும் புனிதன் அடி
தேற்றுமின் என்றும் சிவன் அடிக்கே செல்வம்
ஆற்றியது என்று மயல் உற்ற சிந்தையை
மாற்றி நின்றார் வழி மன்னி நின்றானே.

* புனிதத்துவம் நிறைந்த இறைவனது திருவடியினை போற்றி செய்யுங்கள். இசையுடன் பாடி ஏத்துங்கள். புகழ்ந்து வழிபாடு செய்யுங்கள்;
* உங்களுடைய செல்வங்கள் அனைத்தையும் பரம்பொருள் ஆகிய, சிவம் ஆகிய அதன் திருவடிக்கே என்றும் செலவு செய்யுங்கள்;
* மயக்கம் நிறைந்த சிந்தையை, சித்தத்தை ஆற்றுவதற்கு இது ஒன்றேதான் என்றும் வழி;
* இவ்வாறு முற்று முழுதாகத் தங்களை மாற்றியவர்களோடு இறைவர் சேர்ந்து நிற்கின்றார். மன்னி நிற்கின்றார். இணைந்து நிற்கின்றார்.

25. பிறப்பு இலி பிஞ்ஞகன் பேர் அருளாளன்
இறப்பு இலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பு இலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பு இலி மாயா விருத்தமும் ஆமே.

* சிவம் என்னும் பெயர் உள்ள பரம்பொருள் பிறப்பு ஒன்றும் இல்லாதது. நல்ல மிகவும் சிறந்த அருளை வாரி வழங்கும்;
* அது இறப்பு ஒன்றும் இல்லாதது. யாவர்க்கும் இன்பத்தை அருளிக் கொண்டே உள்ளது;
* அது துறப்பு ஒன்றும் இல்லாதது. எதையும் துறந்து பிரிந்து நிற்காதது. அதை நாம் அனைவரும் தொழ வேண்டும். வழிபாடு செய்ய வேண்டும். அப்படி நாம் தொழுவோமானால்;
* மாயையினுடைய எல்லா ஜால வித்தைகளையும், இடையூறுகளையும் நாம் கடந்து விடுவோம். இத்தன்மையை எந்தவித மறதியும் இல்லாது அது எமக்கு வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. தொடர்ந்து நின்றானைத் தொழுமின் தொழுதால்
படர்ந்து நின்றான் பரி பாரக முற்றும்
கடந்து நின்றான் கமலம் மலர் மேலே
உடந்து இருந்தான் அடிப் புண்ணியம் ஆமே.

* எம்மோடு எப்பொழுதும் தொடர்ந்து நிற்பவனைத் தொழுது கொள்ளுங்கள். இவ்வாறு நாம் தொழுது கொள்வோமானால்;

* அவன் சர்வ பிரபஞ்சங்களும் படர்ந்து, பரவி, நிறைந்து முற்று முழுதாகப் பரிபூரணத்துவமாக நிற்பதை நாம் உணரலாம்.

* சர்வ பிரபஞ்சங்கள் எல்லாம் அவன் கடந்து நிற்கின்றான். ஆனால் எமது இதய தாமரையிலே, இதய கமலங்களிலே;

* மிகவும் ஐக்கியமாக இணைந்து, இசைந்து தனது அருள் நிறைந்த கருணை வடிவான பாதார விந்தங்களைப் பதித்து விடுகின்றான். உண்மையில் நாம் எவ்வளவு புண்ணியம் செய்தவர்கள் ஆகி விடுகின்றோம்.

27. சந்தி எனத் தக்க தாமரை வாண் முகத்து
அந்தம் இல் ஈசன் அருள் நமக்கே என்று
நந்தியை நாளும் வணங்கப்படும் அவர்
புந்தியின் உள்ளே புகுந்து நின்றானே.

* எம்மை எல்லாம் சந்தி செய்கின்ற, ஆற்றுப்படுத்துகின்ற, வழிப்படுத்துகின்ற நந்தி எம்பெருமானார் -

* இதய கமலத்தின் பெரு வெளியிலே, வாண் முகத்திலே அமர்ந்திருக்கின்றார். இந்த குருநாதரை நாம் தினமும் வழிபாடு செய்வோமானால், வணங்குவோமானால்;

* அளவீடுகள் எல்லாம் கடந்த, இறைவரின் அருள் எல்லா வற்றையும், நந்தி எம் பெருமானார் எமக்கே ஆற்றுப் படுத்துகின்றார்;

* அப்பொழுது இறைவர் எம்முள்ளே இருந்து எம்மையெல்லாம் சதா விழிப்பு நிலையில் அமர்த்தி விடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. இணங்கி நின்றான் எங்கும் ஆகி நின்றானும்
பிணங்கி நின்றான் பின்முன் ஆகி நின்றானும்
உணங்கி நின்றான் அமரா பதி நாதன்
வணங்கி நின்றார்க்கே வழித்துணை ஆமே.

* சர்வஜீவகோடிகளுடனும் இணங்கி இசைந்து நிற்கின்றான். அவன் சர்வ பிரபஞ்சங்களிலும் காட்சி கொடுக்கின்றான்;
* சர்வ ஜீவ ராசிகளுடனும் பின்னிப் பிணைந்து நிற்கின்றான். காலம் எல்லாம் கடந்த அவன், எமக்கு எதிர்காலத்திலும் காட்சி தரவல்லோன், முற்காலத்திலும் காட்சி கொடுத்தே நின்றான். (நாம் அனைவரும் காலப் பிரமாணத்திற்குள் செயற்படுகின்றோம்)
* அமரர்களுக்கு எல்லாம் பதியாகிய தலைவர் எம் நாதர், நாம் வாடி நிற்கும் போது அவரும் வாடி நிற்பது போல் தென்படுகின்றார்;
* இறைவர் வணங்குபவர்களுக்கே, வழிபாடு செய்பவர்களுக்கே வழியாகப், பாதையாகத், துணையாகக், காவலாகக் காட்சி கொடுப்பார்.

29. காண நில்லாய் அடியேற்கு உறவு ஆருளர்
நாண நில்லேன் உன்னை நான்தழுவிக் கொள்ளக்
கோண நில்லாத குணத்து அடியார் மனத்து
ஆணியன் ஆகி அமர்ந்து நின்றானே.

* இந்தக் கண்கள் காணும்படியாக என் முன்னாக வந்து நிற்கமாட்டாயா? உனது திருவடிகளை இதயத் தாமரையில் தாங்கி வைத்திருக்கின்ற எனக்கு இப்பிரபஞ்சத்தில் உறவாக ஆர் இருக்கின்றார்கள்?
* நீ என் முன்னே வந்து கண்ணாரக் காட்சி கொடுக்கும்போது, உன்னை நான் ஓடோடி வந்து தழுவிக் கொள்ளுவேன். உன்னோடு ஐக்கியமாகிக் கொள்ளுவதற்கு நான் ஒருபோதும் நாணி நிற்கவே மாட்டேன்;
* இறைசிந்தனை உடைய அடியவர்களது இதயகமலத்தே, வற்றாத அன்பு ஊற்றாக இருக்கும் பரம்பொருள்;
* இதய கமலத்திலேயே ஆணித்தரமாக அமர்ந்துள்ளார், வீற்றிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. வான் இன்று அழைக்கும் மழைபோல் இறைவனும்
தான் இன்று அழைக்கும் கொல் என்று தயங்குவர்
ஆன் இன்று அழைக்கும் அது போல் என் நந்தியை
நான் இன்று அழைப்பது ஞானம் கருதியே.

* வானம் தெளிவாக இருக்கும் போது, சூரியாக்கினி கடலில் பூரணமாக விழுகின்றது. நீர் ஆவியாகிக் கருமேகங்கள் வானத்திலே பூமியைச் சூழ வலம் வருகின்றன. மறுபடி கருமுகில்கள் பூமியிலே மழையைப் பொழிகின்றன. இந்தத் தொடர்ச்சியான "வட்டத்து நிகழ்விற்கு" வானமே காரணம். சாட்சியும் கூட.
* இறைவரை நாங்கள் கூப்பிடுவதற்கு, மெய்யுருகி அழைப்பதற்கு ஏன் தயங்க வேண்டும்;
* பசுக் கூட்டங்கள் தங்கள் கன்றுகளை எவ்வளவு ஆதங்கத்துடன் அழைக்கின்றன. இவ்வாறே திருமூலனாகிய நானும் என் நந்தியை, என் வழிகாட்டியை இன்று அழைக்கின்றேன்;
* ஞானம் எனும் பெருமழைக்காகவே நான் நந்தியை அழைக்கின்றேன்.

31. மண் அகத்தான் ஒக்கும் வான் அகத்தான் ஒக்கும்
விண் அகத்தான் ஒக்கும் வேத அகத்தான் ஒக்கும்
பண் அகத்தின் இசை பாடல் உற்றானுக்கே
கண் அகத்தே நின்று காதலித் தேனே.

* திருமூலர் பெருமான் ஒரு பிரபஞ்சத்தின் முப்பரிமாணத் தன்மையை இப்பாடலில் வெளிப்படுத்துகின்றார்.
* மண் - மனிதர்கள் நிலை. மண்ணகம் அதிர்வு நிலையைப் பிரதிபலிக்கும்;
  வான் - தேவர்கள் நிலை. வானகம் ஜோதியைப் பிரதிபலிக்கும்;
* விண் - தெய்வநிலை. விண்ணகம் - பூரணத்துவ மௌன நிலையைப் பிரதிபலிக்கும். இறைதன்மை அதிர்வாக, ஜோதியாக, மௌனமாக அவர் அவர் தன்மைக்கு ஏற்ப உணரப்படும்;
* அதை உணர்ந்தவர்கள் சப்த்தமாக வெளிப்படுத்துகின்றார்கள். அதுதான் வேதகம்.
* மேலும் இசைவடிவாக உணர்கின்றவர்கள் திருப்பாடல்களை இறைவர் மேல் சாத்துகின்றார்கள். அதுதான் பண்ணகம்;
* திருமூலனாகிய நானோ இறைவனை இடைவிடாது அன்பு செய்கின்றேன். காதலிக்கின்றேன். அதுவும் எனது கண் அகத்துள் இருந்து நெற்றிக் கண்ணால், இதயக்கண்ணால், அகக் கண்ணால் இறைவரைச் சதா காதல் செய்கின்றேன். அதுதான் கண்ணகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. தேவர் பிரான் நம் பிரான் திசை பத்தையும்
மேவு பிரான் விரி நீர் உலகு ஏழையும்
தாவு பிரான் தன்மை தான் அறிவார் இல்லை
பாவு பிரான் அருட் பாடலும் ஆமே.

* தேவர்களுக்கு எல்லாம் தலைவர் எம் இறைவர். பத்துத் திசைகளைக் கடந்தே இருப்பவர் எம் தலைவர்;

* விரிந்து பரந்து நீண்ட குளிர்ச்சி பொருந்திய உலகங்கள் ஏழையும் - தாவி நிற்கும் எம் தலைவர் - கடந்தே நிற்கும் எம் இறைவர்;

* எம் இறைவரின் தன்மையை அறிந்தவர், தெரிந்தவர், தெளிந்தவர், உணர்ந்தவர் ஒருவர் தானும் இல்லையே;

* திருமூலனாகிய நானோ, இறைவரை அவரது அருளாலே பாடல்களால் பரவுகின்றேன். விரித்துக் கூறுகின்றேன்.

33. பதிபல ஆயது பண்டு இவ் உலகம்
விதிபல செய்து ஒன்று மெய்ம்மை உணரார்
துதிபல தோத்திரம் சொல்ல வல்லாரும்
மதிஇலர் நெஞ்சின் உள் வாடுகின்றாரே.

* மிகப் பழமை வாய்ந்த இவ் உலகம் பலவிதமான தலைவர்களைக் கண்டது. யுத்த புருஷர்கள், அவதார புருஷர்கள் எனப் பல வகைப்படும்;

* இத்தலைவர்கள் தங்களுக்கும், உலகத்திற்கும் பலவிதமான விதிகளைச், சட்டதிட்டங்களைச் செய்துள்ளார்கள். இவர்கள் ஒருபோதும் உண்மையை உணரமாட்டார்கள்;

* இவர்களுள் பலர் தோத்திரம் சொல்கின்றார்கள். பாடல்கள் பாடுகின்றார்கள். மெய்யுணர்ந்து, அன்போடு பக்தியுடன், பாடுவதில்லை;

* இவர்கள் எல்லாரும் மதி இல்லாதவர்கள். புத்தி இல்லாதவர்கள். ஐயகோ! இவர்கள் நெஞ்சின் உள்ளே வாடுகின்றார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. சாந்து கமழும் கவரியின் கந்தம் போல்
வேந்தன் அமரர்க்கு அருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடர் அன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே.

* கவரி மானின் கழுத்தில் இருந்து உருவாகும் கஸ்தூரி என்னும் வாசனைத் திரவியத்துடன், சந்தனச் சாந்து கலந்தால் நறுமணம் கமழுவதுபோல, வீசுவது போல;
* அமரர்களுக்கு எல்லாம் தலைவராகிய பரம்பொருள் அருளிய உண்மை நெறி, அருள் மணத்தை வீசிக் கொண்டே இருக்கின்றது;
* நிறைந்த, முழுமைத்துவமான, பரிபூரணத்துவமான ஜோதியை ஆயிரம் நாமங்கள் சொல்லி;
* நான் உலாவிக் கொண்டும், அமர்ந்து கொண்டும் இறைவரைப் புகழுகின்றேனே.

35. ஆற்றுகில்லா வழி, ஆகும் இறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்
மேல் திசைக்கும் கிழக்குத் திசை எட்டொடு
மாற்றுவன் அப்படி ஆட்டவும் ஆமே.

* எந்த வழிகளினாலும், ஆற்றுப் படுத்த முடியாது, பாதைகள் எதுவுமே இல்லாது புலப்படுகின்ற இறைவரை;
* நாம் எல்லோரும் போற்ற வேண்டும். போற்றிப் புகழ்ந்து பாட வேண்டும். அவ்வாறு நாம் துதி செய்வோமேயானால்;
* மேலாம் கீழாம் திசைகளுடன்,எட்டுத் திசைகள் எல்லாவற்றையும் மாற்றி, காலத்தைக் கடக்க வைத்து;
* எம்மை எல்லாம் இறைவர் ஆட்டி அசைத்து விழிப்பு நிலையை ஏற்படுத்தி சதா ஆனந்த நிலையில் அப்படியே அமர்த்தி விடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பு இலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசு ஆயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே.

* அணுமுதல் சர்வ அண்டங்களுக்கு, சர்வ ஜீவ கோடிகளுக்கு இறைவரே தந்தை, அவரே குரு, அவரே வற்றாத அமிர்தம்;
* அவரே ஒப்பு உவமை கூற முடியாத வள்ளல். அவரே சர்வ பிரபஞ்சங்களும் ஒடுங்குகின்ற போது - ஊழிக் காலத்து முதல்வராகத், தலைவராக வெளிப்படுவார்;
* இவ்வாறு உணரப்படுகின்ற இறைவரை எப்படியானாலும் எத்தன்மையாகவும் ஏத்துங்கள். வழிபாடு செய்யுங்கள். அப்படி வழிபாடு செய்வோமானால்;
* இறைவருடைய, பரம்பொருளின் உடைய அருளைப் பரிசாகப் பேரின்பமாக நாம் எல்லோரும் பெற்றுக் கொள்ளலாமே.

37. நானும் நின்று ஏத்துவன் நாள் தொறும் நந்தியைத்
தானும் நின்றான் தழல் தான் ஒக்கு மேனியன்
வானில் நின்றார் மதிபோல் உடல் உள் உவந்து
ஊனில் நின்று ஆங்கே உயிர்க்கின்ற வாறே.

* திருமூலனாகிய நானும் சதா விழிப்பு நிலையில் இருந்து, ஒவ்வொரு நாளும் இடைவிடாது நந்தியை ஏத்துகின்றேன். வழிபாடு செய்கின்றேன்;
* நெருப்பு நிறத்தினை ஒத்த மேனியை உடைய இறைவர் என் கூடவே வந்து நிற்கின்றார்;
* இந்த வானத்திலே சந்திரன் எப்படித் தென்படுகின்றதோ, அவ்வாறே உடலுக்குள்ளே விரும்பி வந்து;
* இறைவர் உயிர்ப்பு சக்தியாக, ஊனத்திற்குள் ஆங்காங்கே புலப்படுகின்றார். அவ்வப்போது வெளிப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. பிதற்று ஒழியேன் பெரியான் அரியானைப்
பிதற்று ஒழியேன் பிறவா உருவானைப்
பிதற்று ஒழியேன் எங்கள் பேர் நந்தி தன்னை
பிதற்று ஒழியேன் பெருமைத் தவன் நானே.

* பிதற்றுவதை ஒருபோதும் நிறுத்த மாட்டேன். மிக மிக அரிதாகவே உணரப்படுபவனை, பிரபஞ்சங்களுக்கு, பசுக் கோடிகளுக்கு எல்லாம்; பெரியவனைப் பிதற்றிக் கொண்டே இருப்பேன்;
* இறைவரின் உருவம் பிறப்பு அற்றது. அதனை நாளும் நான் பிதற்றுவேன்;
* நந்தி என்னும் இறை சொரூபம் தாங்கிய என் குருநாதரைப் பிதற்றிக் கொண்டே இருப்பேன்;
* இவ்வாறு பிதற்றிக் கொண்டே இருப்பேன். அதுவே என் தவம்.

39. வாழ்த்த வல்லார் மனத்து உள்உறு சோதியை
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெருமான் என்று இறைஞ்சியும்
ஆத்தம் செய்து ஈசன் அருள் பெறலாமே.

* வாழ்த்திக் கொண்டே இருப்பவர்களின் நெஞ்சத்துள், அணையாத ஜோதியாய் இருப்பவரை –
* ஆத்மீக தாகத்தைத் தீர்ப்பவனை, அமுதமாகிய தீர்த்தத்தை வழங்குபவனை, நெஞ்சத்துள்ளே திளைப்பவனை, உள்ளே அணையாது அணைந்து இணைந்து இருக்கும் தேவனை;
* ஏத்தி வழிபாடு செய்து எம்பெருமான் என்று இறைஞ்சுவோம், வேண்டுவோம்;
* ஆதி தொட்டு அந்தம் வரை எம்மைத் தயார் செய்வோம். அப்போது இறைவருடைய அருளை நாம் பெற்றுக் கொள்வோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. குறைந்து அடைந்து ஈசன் குரைகழல் நாடும்
நிறைந்து அடை செம்பொனின் நேர் ஒளி ஒக்கும்
மறைஞ் சடம் செய்யாது வாழ்த்த வல்லார்க்குப்
புறம் சடம் செய்வான் புகுந்து நின்றானே.

* எம்முடைய குறைகள் எல்லாவற்றையும், இறைவரிடம் ஒப்படைப்பதற்காக, அவரது நிறைவான திருப்பாதங்களை நாம் நாடுவோம்;
* நிறைவான சிவந்த பொன்னில் இருந்து நேரடியாகப் புறப்படும் ஜோதியை ஒத்த இறைவரை;
* எந்தவித கள்ளம் கபடம் அற்று, எந்தவிதமான மறைவான சடங்குகளும் செய்யாது - ஒழிவு மறைவு இன்றி நேரடியாகவே வாழ்த்த வல்லார்களுக்கு;
* இறைவர் அவர்களுக்கு வேண்டிய புறச் சடங்குகளை எல்லாம் செய்து, உள்ளே புகுந்து நிலைபேறாகவே நின்றுவிடுவார்.

41. சினம் செய்த நஞ்சு உண்ட தேவர் பிரானைப்
புனம் செய்த நெஞ்சிடைப் போற்ற வல்லார்க்குக்
கனம் செய்த வாள் நுதல் பாகனும் அங்கே
இனம் செய்த மான் போல் இணங்கி நின்றானே.

* அமிர்தம் வேண்டி காமாக்கினியை மூட்டி விடுகின்றார்கள் தெளிந்தவர்களாகிய தேவர்கள். அப்பொழுது கோபத்தால் உண்டாகிய நஞ்சை - (காம குரோதமாகிய நஞ்சை) நைதாக்கி - அன்பாகக் கருணையாக மாற்றிவிடுகின்றார் இறைவர்.
* இந்த இறைவரை எமது நெஞ்சத்திலோ, நன்கு தூய்மைப்படுத்தப் பட்ட இதயத்திலோ எவர் எவர் எல்லாம் போற்ற வல்லவர்களாக இருக்கின்றார்களோ;
* அவர்களது நெஞ்சங்களிலே, இறைவர் பார்பதி சமேதரராய் அர்த்தநாரீஸ்வர சொரூபமாய்;
* மிக மிக அற்புதமாக ஆத்மார்த்த சொரூபத்திலே இணைந்து, ஐக்கியமாகி விடுகின்றாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. போய் அரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயகன் நான்முடி செய்ததுவே நல்கும்
ஆய் அகம் சூழ்ந்து வர வல்லார் ஆகிலும்
வேயன தோளிக்கு வேந்து ஒன்றும் தானே.

* பரம்பொருளை நாடிப் புகழ்வதனால் நாம் பெற்றுக் கொள்வது யாதெனில்;
* நான்கு முடிகளை உடைய பிரம்மாவினது செயற்பாடுகளைப் பெற்றுக் கொள்வோம். பிரம்ம சொரூபத்தில் திளைப்போம்;
* தன்னது அகத்தினை ஆராய்ந்து, மன சஞ்சாரத்தினால் பிரபஞ்சத்தைச் சூழ்ந்து வரக்கூடிய வல்லமை பெற்றவர்களானாலும்;
* இவர்கள் உண்மையல்ல. பிரம்ம சொரூபர்களுக்கும், ஆத்ம சொரூபருக்கும், பிரபஞ்ச சஞ்சாரிகளுக்கும், சுத்த சக்திக்கும் உண்மையாக, தலைவராக விளங்குவது ஒன்றே தான். அதுதான் பரம்பொருள்.

43. அரன் அடி சொல்லி அரற்றி அழுது
பரன் அடி நாடியே பாவிப்ப நாளும்
உரன் அடி செய்து அங்கு ஒதுங்க வல்லார்க்கு
நிரன் அடி செய்து நிறைந்து நின்றானே.

* சிவபரம் பொருளினுடைய திருவடிக்கு மந்திர உச்சாடனம் சொல்லி, திருவடியினைப் பற்றியே பேசி, அழுது;
* பரம்பொருளினுடைய திருவடியையே ஒவ்வொரு நாளும் நாடி வழிபாடு செய்ய வேண்டும். இதுவே சிறந்த பாவனையாகும்;
* ஞானத்தினால் திருவடியை உணர்ந்து, சிந்தனையில் உருவாக்கி அதில் ஒன்றாக வல்லவர்களுக்கு, ஓய்வெடுக்க வல்லவர்களுக்கு;
* இறைவர் நிறைவை, முழுமைத்துவத்தைத் தனது திருவடியிலே மலரவைத்து, எமது இதய கமலத்திலே நிரந்தரமாகவே நிற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. போற்றி என்பார், அமரர் புனிதன் அடி
போற்றி என்பார், அசுரர் புனிதன் அடி
போற்றி என்பார், மனிதர் புனிதன் அடி
போற்றி என் அன்புள் பொலிய வைத்தேனே.

* தேவர்களுடைய, தேவதைகளுடைய, அமரத்துவம் பெற்றவர்களுடைய பாதங்களைப் புனிதத்துவம் வாய்ந்தது என்று கூறிப் போற்றுதல் செய்கின்றார்களே!
* அசுரர்களுடைய பாதங்களையும் புனிதத்துவம் வாய்ந்தது என்று கூறிப் போற்றுதல் செய்கின்றார்களே!
* மனிதர்களுடைய பாதங்களையும் புனிதத்துவம் வாய்ந்தது என்று கூறிப் போற்றுதல் செய்கின்றார்களே! என்னே! என்னே! அறிவீனம்!;
* நான், இறைவரின் அருள் நிறைந்த கருணையே உருவான திருவடியை, என் இதயத்திலே, அன்பால் நிறைத்து, அன்பால் அணைத்து வைத்துள்ளேன்.

45. விதி வழி அல்லது இவ் வேலை உலகம்
விதி வழி இன்பம் விருத்தமும் இல்லை
துதி வழி நித்தலும் சோதிப் பிரானும்
பதி வழி காட்டும் பகலவன் ஆமே.

* இறைவரின் அற்புதமான கட்டளையின் நிமித்தமே, இந்த உலகத்தில் ஐந்து தொழில்களும் சமன் செய்து நடைபெறுகின்றன;
* ஆத்மீக சாதனையில் ஈடுபடும் ஒருவருக்கு இறைவரின் அற்புதமான கட்டளையில் - இன்பமும், மாயையின் எந்தவிதமான இடையூறுகளும் இல்லை;
* ஒவ்வொருநாளும் வழிபாட்டினை நாம் மேற்கொள்வோமேயானால், ஜோதியே வடிவான தலைவர்;
* உண்மையின் தன்மையைத் தந்தையாகவே இருந்து காட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. அந்தி வண்ணா அரனே சிவனே என்று
சிந்தை செய்வண்ணம் இருந்து அடியார் தொழ
முந்தி வண்ணா முதல்வா பரனே என்று
புந்தி வண்ணன் எம் மனம் புகுந்தானே.

* மூன்று நாடிகளும் சந்திக்கின்ற இடத்தில், செந்நிறமாகக் காட்சி கொடுக்கும் பரம்பொருளே! சிவமே! என்று;
* சதா சிந்தை செய்த வண்ணம் அடியார் கூட்டம் வழிபாடு செய்கின்றது;
* முந்தையதே! மூத்ததே! முதலானதே! பரமே! என்று ஆத்மார்த்தமாக அழைக்கும் போது;
* ஞான சொரூபமானவன், எமது இதயங்களில் புகுந்து விடுகின்றானே.

47. மனை உள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவு உள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனை உள் இருந்த பருந்தது போல
நினை யாதவர்க்கு இல்லை நின் இன்பம் தானே.

* தங்களது இதயத்துள்ளேயே இருந்து இறை சஞ்சாரம் செய்பவர்கள், பெரிய தவம் செய்வதற்கு ஒப்பானவர்கள்;
* தங்களது மன எண்ணங்களில் சஞ்சாரம் செய்பவர்கள் பந்த பாசத்திலே உழன்று கொள்வார்கள்;
* பனை மரத்தில் தனது கூட்டில் இருந்து, பருந்து எனும் பறவை தன் இரையை – உணவையே சதா நினைத்துக் கொள்ளும். அது போலே;
* சதா இறைவனை ஆத்மார்த்தமாக நினைதல் செய்யா தவர்களுக்கு, இறைவரின் அருள் ஒருபோதும் கிடைக்கப் போவது இல்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை உன்னிப்பு
அடியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கு என்று மேவி நின்றேனே.

* அடியவர்கள் எல்லாம் வழிபாடு செய்கின்ற இறைவரை தேவர்களின் தலைவரை;
* ஆயிரம் இதழ் தாமரையை உடைய சகஸ்ரம் அமைந்த சிரசால், முழுமுதலை உயிர்ப்பு சக்தியால் நினைதலை ஏற்படுத்தி நான் வணங்குகின்றேன் ;
* அடியவர்களுக்கு எல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் தந்தையாகிய பரம்பொருளை;
* முடிவே இல்லாத விளக்கு - ஜோதி என்று நான் அதனுடன் அணைந்து, இணைந்து நிற்கின்றேன்.

49. பரை பசு பாசத்து நாதனை உள்ளி
உரை பசு பாசத்து ஒருங்க வல்லார்க்குத்
திரை பசு பாவச் செழுங்கடல் நீந்திக்
கரை பசு பாசம் கடந்து எய்தலாமே.

* சுத்த சக்தியாகிய ஆத்மீக தாய்க்கும், ஆத்மாவுக்கும், அசுத்த சக்தியாகிய உலக தாய்க்கும் தலைவராக விளங்கும் நாதரை நினைதல் செய்யுங்கள்;
* ஆத்மாவானது, உலக செயற்பாடுகள் அனைத்தில் இருந்தும் விலகி நிற்குமேயானால்;
* ஆத்மாவானது ஆபத்து நிறைந்த கடலைத் - திரையாகிய பாவத்தை நீந்தும்; - கடக்கும்;
* ஆத்மாவானது, எல்லாத் தடைகளையும் கடந்து கரையேறித் தலைவரை அடைந்து கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான் என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்து நின்று
ஆடுவன் ஆடி அமரர் பிரான் என்று
நாடுவன் நான் இன்று அறிவது தானே.

* பரம்பொருளை இதய கமலத்தினுள் அழகாகப் பூச்சூடுவது போன்று சூடிக்கொள்வேன். அங்கே அதனை மிகவும் பாதுகாப்பாக என் தலைவன் என்று வைத்துக் கொள்வேன்;
* இறைவர் மேல் ஆத்ம நாதத்தால் துதி பாடிக் கொண்டே இருப்பேன். இறைவர் மீது பல வகையான மலர்களைச் சொரிவேன். தூவுவேன்.
* மிகமிகப் பணிவாக - பரிபூரண சரணாகதி நிலையில் நின்று ஆடுவேன். எல்லாத் தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் தலைவர் என்று இறைவரை நாடுவேன்.
* சதா அவரை நாடி நாடிச் செல்வேன். இன்று எனக்கு ஏற்படுகின்ற தெளிவு இதுதான்.

## II. வேதச் சிறப்பு

51. வேதத்தை விட்ட அறம் இல்லை; வேதத்தின்
ஓதத் தகும் அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளம் உற்ற
வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே.

* அறங்களுக்குள் எல்லாம் சிறந்தது வேதம் ஆகும். அது சப்த்த சொரூபம்;
* இந்த சப்த்த சொரூபத்தின் உள்ளே எல்லாவிதமான ஓதக் கூடிய அறங்களும் அடங்குகின்றன.
* புத்திவளம் பெற்றவர்கள் வாதப் பிரதிவாதங்களை எல்லாம் கைவிட வேண்டும்;
* சப்த்த சொரூபமாகிய வேதத்தை அவர்கள் ஓத வேண்டும். அப்போது இறைவரின் மெய்ஞ்ஞான வீட்டை அவர்கள் பெற்று விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. வேதம் உரைத்தானும் வேதியன் ஆகிலன்
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்காய்
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டாவே.

* சப்த்த சொரூபமாகிய வேதத்தை மெய் உணர்ந்து ஓதாது வெறும் வாயால் உரைத்து உரை கூறுவர். இவர்கள் வேதியர் ஆகமாட்டார். மெய்யுணர்ந்தவர் ஆகார்;
* சப்த்த சொரூபத்தை விரித்துக் கூறினாலும் வேதம் விளங்கப் போவதில்லை;
* வேதியர்கள் வேள்வி செய்வதற்காகவே வேதம் உரைக்கின்றார்கள்;
* எது எப்படியானாலும் சப்த்த சொரூபமாகிய வேதம் என்றோ ஒருநாள் மெய்ப்பொருளை உணர்த்தியேவிடும்.

53. இருக்கு உருவாம் எழில் வேதத்தின் உள்ளே
உருக்கு உணர்வாய் உணர் வேதத்துள் ஓங்கி
வெருக்கு உருவாகிய வேதியர் சொல்லும்
கருக்கு உருவாய் நின்ற கண்ணனும் ஆமே.

* உலக நடைமுறையில் உள்ள எழுதப்பட்ட சிறப்பான வேதங்கள் நாலாகும். அவை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகும்.
* இந்த நான்கையும் விழிப்புணர்வுடன் ஓதுக. மெய்யுணர் நிலையில் ஓதுக. உள்ளத்தை உருக்கக் கூடிய வகையில் ஓதுக. வேதத்தினுள்ளே ஊறி வேதத்தை உணர்ந்து ஓதுக;
* இவ்வாறு மெய்ஞ்ஞானத் தவிப்பு நிலையில் வேதியர் ஓத வேண்டும்;
* அப்பொழுது எல்லா மூலங்களுக்கும் முதலாய், உருவாய் விளங்கும் இறைவர் புலப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. திருநெறி ஆவது சித்த சித்து அன்றிப்
பெருநெறி ஆய பிரானை நினைந்து
குருநெறியாம் சிவமா நெறி கூடும்
ஒரு நெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே.

* திருவருள் பொதிந்த மெய்ஞ்ஞான நெறியாவது, சித்தத்தை எல்லாம் கடந்தது. சித்துக்களை எல்லாம் கடந்தது.
* பெரிய நல்ல நெறியைத் தரவல்ல இறைவரை சதா நினைதல் செய்யுங்கள்;
* குரு நெறி என்று பேசப்படுகின்ற சிவம் ஆகிய நெறியை - உண்மையைக் கூடுங்கள்; ஒன்று சேருங்கள்;
* அப்போது ஒரே நெறியாக, ஏகமாகி நாம் வேதத்தை அந்தம் செய்ய, கடந்து செல்ல, வேதத்தை நாம் ஓதுவோம்.

55. ஆறு அங்கமாய் வரு மாமறை ஓதியைக்
கூறு அங்கம் ஆகக் குணம் பயில்வார் இல்லை
வேறு அங்கம் ஆக விளைவு செய்து அப்புறம்
பேறு அங்கம் ஆகப் பெருக்குகின் றாரே.

* முதல்வனில் இருந்தே வேதம் புறப்படுகின்றது. அந்த சப்த சொரூபம், ஓதுபவர்களுக்கு அங்கத்தின் உள்ளும், புறமும் ஆறுதலை வழங்குகின்றது;
* சப்த்த சொரூபத்தை மெய் உணர்ந்து ஓதி, பொருள் தெளிந்து கூறுபவர்களை அதன் சொரூபத்தைத் தெரிந்து பயில்பவர்களைக் காண முடியவில்லையே;
* வேறு வேறு அங்கங்களாகப் பாகுபாடு செய்து, ஏடுகளைப் பெருக்கி மேலும் மேலும் திசைமாறித்தான் எல்லோரும் செல்கின்றார்களே;
* இவர்கள் வேறு வேறு பலாபலன்களைச், செயற்பாடுகளை எதிர்பார்த்தே செயற்படுகின்றார்கள் என்பது தெளிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. பாட்டும் ஒலியும் பரக்கும் கணிகையர்
ஆட்டும் அறாத அவனியின் மாட்டாதார்
வேட்டு விருப்பார் விரதம் இல்லாதவர்
ஈட்டும் இடம் சென்று இகலல் உற்றாரே.

* *பெண்களின் பாட்டிலும், அவர்களின் நடனத்தில் இருந்து புறப்படும் ஒலியிலும் தமது பொழுதினைப் போக்குகின்றவர்கள்;*
* *வேறும், திசை திரும்பிச் செல்கின்ற செயல்களில் இருந்து விடுபடாதவர்கள், இந்தப் பூமியில் எதற்கும் பயன் இல்லாதவர்கள்;*
* *வேதம் ஓதி அக்கினி வளர்க்க மாட்டார்கள். ஒழுக்கத்தைக் கண்ணும் கருத்துமாகக் காக்கின்ற விரதங்களை மேற்கொள்ள மாட்டார்கள்;*
* *பொருளும், போகமும் தேடி; நாடும், தேசமும் அலைந்து இவர்கள் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டே இருக்கின்றார்களே!*

## III. ஆகமச் சிறப்பு

57. அஞ்சன மேனி அரிவை ஓர் பாகத்தன்
அஞ்சொடு இரு பத்து மூன்று உள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறு பத்து அறுவரும்
அஞ்சா முகத்தில் அரும் பொருள் கேட்டதே.

* *கருமை நிறைந்த மேனியை உடைய சுத்தசக்தியாகிய அம்பாளைப் பாகமாக உடையவர் இறைவன்;*
* *சிவபரம்பொருளால் வழங்கப்பட்ட ஆகமங்கள் இருபத்து எட்டு ஆகும்.*
* *ஆறுபேரும் பந்தப் பிணைப்புக்களைக் கடந்து பணிவோடு, வணக்கத்தோடு அப்பனை வழிபாடு செய்து;*
* *தெளிந்த திருமுகத்தில் இருந்து, அப்பனது திருவாயால் இருபத்து எட்டு ஆகமங்களையும் அதன் பொருளையும் கேட்டார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. அண்ணல் அருளால் அருளும் சிவ ஆகமம்
எண்ணில் இருபத்து எண்கோடி நூறு ஆயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணி நின்று அப்பொருள் ஏத்துவன் நானே.

* இறைவரின் அருளால், அருளப்படுகின்ற இந்த இருபத்து எட்டு சிவ ஆகமங்களையும்;
* நாம் வியந்து சிந்தனை செய்வோமேயானால், விண்ணவர்கள் - இறைநிலையை அண்மித்தவர்கள் - (மொத்தம் 280,100,000);
* இறைவரின் தன்மையைப் பெருமையை நிலையை உரைசெய்கின்றார்கள் - கூறுகின்றார்கள் - விளக்குகின்றார்கள்;
* திருமூலனாகிய நானோ இறைபொருளை - சிவப்பொருளை - பழம்பொருளை - பரம்பொருளை சதாகாலமும் நினைதல் செய்து வழிபடுகின்றேன்.

59. பண்டிதர் ஆவார் பதின் எட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத்து அறிவார் என்க
பண்டிதர் தங்கள் பதின் எட்டுப் பாடையும்
அண்ட முதலான் அறம் சொன்ன வாறே.

* பதினெட்டு மொழிகளிலும் வல்லவர்கள் பண்டிதர் ஆவார்கள். பதினெண் மொழிகளையும் ஆய்ந்தவர்கள் - கண்டவர்கள் புலமைத்துவம் ஆனவர்கள்;
* இவர்களும் தங்கள் கருத்துக்களை, இறைவனிடம் இருந்து அறிந்ததாகக் கூறுவார்கள்;
* அண்டங்களுக்கு எல்லாம் முதலான இறைவர் உணர்த்திய ஆகமத்தை, இவர்கள் அறம் ஆக விரித்துக் கூறுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. அண்ணல் அருளால் அருளும் திவ்ய ஆகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கு அரிது
எண்ணில் எழுபது கோடி நூறாயிரம்
எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே.

* இறைவரது அருளாலேயே இந்தப் பெருமை பொருந்திய திவ்வியமான சிவ ஆகமம் அருளப்படுகின்றது;
* விண்ணவர்களும், வானவர்களும் இதன் அரும் பெரும் பொருளை உணர்வது - விளங்குவது மிகவும் கடினமாகும்;
* எழுபது கோடி நூறாயிரம் வானவர்கள் - அமரர்கள் ; எண்ணினால் தான் என்ன, நினைத்தால் தான் என்ன;
* இவர்கள் ஆகமம் கூறும் உண்மையை உணராமையால், அவர்கள் எண்ணங்கள் - சிந்தனைகள் - செயற்பாடுகள் அனைத்தும் நீர்மேல் எழுதப்பட்ட எழுத்துக்கள் போன்று நிலையற்றவையாகும்.

61. பரனாய்ப் பராபரம் காட்டி உலகில்
அரனாய்ச் சிவ தன்மம் தானே சொல் காலத்து
அரனாய் அமரர்கள் அர்ச்சிக்கு நந்தி
உரன் ஆகி ஆகமம் ஓங்கி நின்றானே.

* நந்தியே பரம்பொருளாய், உண்மைக்கும் உண்மையான உண்மையை உலகத்தில் காட்டும்;
* சிவபரம்பொருளை, நந்தி, உண்மையாகவே, தானாகவே விரும்பி எமக்கு உணர்த்தும்;
* தேவர்கள் அனைவரும் திருநந்தி தேவரை சிவபரம் பொருளாகவே வழிபாடு செய்கின்றார்கள்;
* திருநந்தி தேவரே, ஆகமத்தின் சொரூபமாகி, தெளிவாகி உயர்ந்து ஓங்கி நிற்கின்றார்.

| | |
|---|---|
| சிவம் - உண்மை | - சிவ ஆகமம் ஆக வெளிப்படும். |
| திருநந்தி தேவர் | - சிவ ஆகம சொரூபம் |
| திருமூலர் | - திருமந்திரமாகி உணர்த்தும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. சிவமாம் பரத்தினில் சத்தி சதா சிவம்
உவ மாமகேசர் உருத்திரர் தேவர்
தவ மால் பிரமர் ஈசர் தம்மில் பெற்ற
நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே.

* சிவம் எனும் பரம்பொருளின் இடத்து நேரடியாகவே எண்மர் ஆகமங்களைப் பெறுகின்றார்கள்;

* அவர்கள் சக்தி, சதாசிவம், உமாமகேஷ்வரர், உருத்திரர், திருநந்தி தேவர், விஷ்ணு, பிரம்மா, ஈசர் ஆவர்கள்;

* ஒன்பது ஆகமங்களையும் எங்கள் நந்தியெம்பெருமானார் சிவபரம் பொருளிடம் இருந்து நேரடியாகவே பெற்றார்.

63. பெற்ற நல் ஆகமம் காரணம் காமிகம்
உற்ற நல் வீரம் உயர் சிந்தம் வாதுளம்
மற்ற அவ் வியாமளம் ஆகும் காலோத்தரத்து
உற்ற நல் சுப்பிரம் சொல்லு மகுடமே.

* நந்தியெம் பெருமானார் பெற்றவை ஒன்பது ஆகமங்கள் ஆகும். அவையாவன;

| | | |
|---|---|---|
| காரணம், | காமிகம், | வீரம், |
| சிந்தம், | வாதுளம், | வியாமளம், |
| காலோத்தரம், | சுப்பிரம், | மகுடம் |

ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. அண்ணல் அருளால் அருளும் சிவ ஆகமம்
எண்இலி கோடி தொகுத்திடும் ஆயினும்
அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடில்
எண்இலி கோடியும் நீர்மேல் எழுத்தே.

* இறைவரின் அருளால் இருபத்து எட்டு சிவ ஆகமங்களும் அருளப்படுகின்றன;
* இந்த ஆகமங்கள் எண்ண முடியாத கோடிக் கணக்கான வகையாக விரிக்கப்படுகின்றன;
* இறைவரின் அருளை, அன்பை, கருணையை,ஞானத்தை உணர வேண்டும்; இல்லாவிடில்
* கோடிக்கணக்காக விரித்தவை அத்தனையும் நீர்மேல் எழுதப்பட்டவைக்குச் சமானமாகும்.

65. மாரியும் கோடையும் வார்பனி தூங்க நின்று
ஏரியும் நின்று அங்கு இளைக்கின்ற காலத்து
ஆரியமும் தமிழும் உடனே சொலிக்
காரிகை யார்க்குக் கருணை செய்தானே.

* மாரிகாலம், கோடைகாலம், கடுமையான பனிக்காலம் என்று பூமியில் சூழ்நிலைகள் மாறிய வண்ணம் உள்ளன;
* சில சமயங்களில் குளங்களும், வாவிகளும், நீர் இன்றிக் காணப்படுகின்றன. இவை காலத்திற்கு உட்பட்டன;
* காலத்தை எல்லாம் கடந்து இருப்பது ஆரியமும், திராவிடமும், வடமொழியும், தென் தமிழும் ஆகும்;
* இந்த இரு மொழிகளையும் சக்திக்குக் கருணையோடு அருள் செய்தார் இறைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. அவிழ்க்கின்ற வாறு அது கட்டு மாறும்
சிமிட்டலைப் பட்டு உயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ் இரண்டும்
உணர்த்தும் அவனை உணரலும் ஆமே.

* ஒரு பக்கம் அவிழ்க்கப்படுகின்றது. குலைக்கப்படுகின்றது. மறுபக்கம் கட்டப்படுகின்றது;
* இந்நிகழ்ச்சிகள் கண் மூடித் திறக்கு முன் நிகழ்கின்றன. இதனைப் பட்டுப் பூச்சியின் வாழ்க்கை வட்டத்தில் நேரடியாக நாம் காணலாம். இறுதியில் அதன் உயிரும் போகின்றது;
* இவ்வாறுதான் எமக்கும் நிகழும். அதற்குமுன்னதாகவே, தமிழ் மந்திரத்தை, வட மந்திரத்தை நன்கு பயன்படுத்தி;
* உணர்த்த - உணர - உணரப்படும் இறைவரை நாம் தெளிவாக, விரைவாக உணர்ந்து கொள்வோம்.

## IV. குருபாரம்பரியம்

67. நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடில்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்று இவர் என்னோடு எண்மருமாமே.

* திருநந்தி தேவரிடம் அருள் பெற்றவர்கள் - நாதாந்த முடிபைக் காண்பவர்கள் - நாதர்களாவர். அவர்களை இப்பொழுது நான் கூறுகின்றேன்;
* நந்தியின் அம்சம் பொருந்தியவர்கள் நால்வர். அவர்கள் முறையே சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆவர்.
* மேலும் சிவயோக மாமுனிவர், வெளியையே சதாகாலமும் தொழும் பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர்;
* திருமூலர் ஆகிய என்னுடன் சேர்த்து மொத்தம் எண்மர். இவ் எண்மரும் நந்தியின் நேரடி மாணாக்கர் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாவது என் செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நான் இருந்தேனே.

✻ *நந்தி தேவரின் அருளாலே நாதாந்த முடிபை எண்மரும் உணர்ந்தோம். அதனால் நாதர் எனும் நாமம் பெற்றோம்;*

✻ *நந்தி தேவரின் அருளாலே மூலத்தை – முதலை எண்மரும் நாடிச் சென்றோம்;*

✻ *நான் இருக்கும் நாட்டில் நந்தி தேவரே அருள் எல்லாம் தரவல்லார் என்ற நம்பிக்கையோடு;*

✻ *நந்தி தேவர் வழிகாட்ட நான் இருந்தேனே! அமர்ந்தேனே! ஒய்வு எடுத்தேனே!*

69. மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோடு
இந்த எழுவரும் என்வழி யாமே.

✻ *திருமூலராகிய என்னிடம் மந்திரம் நேரடியாகப் பெற்ற மாணாக்கர்கள் எழுவர் ஆவர்;*

✻ *அவர்கள் முறையே மாலங்கர், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், கந்துருக் காலாங்கி, கஞ்ச மலையன் ஆவார்கள்;*

✻ *இந்த ஏழு பேரும் எனது வழியை – என்னைப் பின் தொடர்பவர்கள் ஆவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. நால்வரும் நாலு திசைக்கு ஒன்று நாதர்கள்
நால்வரும் நானா விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரும் நான் பெற்றது எல்லாம் பெறுக என
நால்வரும் தேவராய் நாதர் ஆனார்களே.

* சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் ஆகிய நால்வரும், பூமியின் வடமுனை, தென்முனை, கிழக்குமுனை, மேற்குமுனை ஆகிய பகுதிகளுக்குச் சென்றுவிட்டனர்;
* இந்த நால்வரும் நான்குவிதப் பொக்கிஷத்தை எடுத்துச் சென்றுள்ளார்கள். அவை முறையே சப்த்த பொக்கிஷம், அமிர்த பொக்கிஷம், ஜோதி பொக்கிஷம், நாத பொக்கிஷம்;
* மிகுதி நால்வரும் முறையே சிவயோக மாமுனிவர், பதஞ்சலி முனிவர், வியாக்கிரம முனிவர், திருமூலர் ஆவர். இவர்கள் அனைவரும் திருமூலர் பெற்ற அனைத்தையும் பெற்றவர்கள்;
* இந்நால்வரும் தலைமைத்துவம் பெற்றார்கள். நாத மரபை பூமிக்கு வழங்கினார்கள். முதல் நாதர்கள் ஆனார்கள்.

71. மொழிந்தது மூவர்க்கும், நால்வர்க்கும், ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்
செழும் சுடர் மூன்று ஒளியாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்ட கிலானே.

* பரம்பொருள் எண்மர்க்கு நேரடியாக உபதேசம் செய்தது.
மூவர் - பிரம்மா, விஷ்ணு, உருத்திரர்
நால்வர் - சக்தி, சதாசிவம், உமாமகேஷ்வரர், திருநந்தி தேவர்+ ஈசர் மொத்தம் எண்மர் ஆவர்;
* பிறப்புகளினதும், இறப்புகளினதும் பெருமைகள் எல்லாம் அழிந்து போவன;
* ஆத்மசுடர், சக்திச்சுடர், பரம்பொருட் சுடர் ஆகிய மூன்றுடன் திருநந்தி தேவர், ஒளி வடிவுடாக நேரடியாகவே தொடர்பு கொள்ள வல்லார்.
* திருநந்தி தேவர் அழிந்துபோன, கடந்துபோன, மறைந்துபோன எந்தப் பெருமைகளையும் எனக்குக் காட்டவும் இல்லை, நினைவு கூரவும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. எழுந்து நீர் பெய்யினும் எட்டுத் திசையும்
செழுந் தண் நியமங்கள் செய்மின் என்று அண்ணல்
கொழுந் தண் பவளக் குளிர் சடையோடே
அழுந்திய எண்மர்க்கு அருள் புரிந்தானே.

* எட்டுத் திக்குகளில் இருந்தும், பலவிதமான கஷ்டங்கள், துன்பங்கள் வரும்;
* சிறந்த, உயர்ந்த நியமங்கள், ஒழுக்கங்களைத் தவறாது தினமும் கடைப்பிடியுங்கள், பின்பற்றுங்கள் ; என
* முழுமைத்துவம் நிறைந்த, குளிர்ச்சி பொருந்திய சுத்த சக்தியோடு கூடிய இறைவர்;
* உண்மையாக, விசுவாசமாகச், சத்தியத்தில் திளைத்திருக்கும் எண்மருக்கும் அருள்பாலிக்கின்றார்; அனுக்கிரகம் செய்கின்றார்;
எண்மர்: சக்தி, சதாசிவர், உமாமகேஷ்வரர், நந்தி தேவர், ஈசர், பிரம்மா, விஷ்ணு, உருத்திரர்.

## V. திருமூலர் வரலாறு

73. நந்தி இணை அடி நான் தலை மேல் கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றி செய்து
அந்திமதி புனை அரன் அடி நாள்தொறும்
சிந்தை செய்து ஆகமம் செப்பல் உற்றேனே.

* திருநந்தி தேவரின் திருப்பாதத்தினை எனது சிரசின் மேல் சூடிக் கொண்டேன்;
* எனது மெய்ஞ்ஞான மலர்ச்சியின் உள்ளே திருநந்திதேவரை அமர்த்தி போற்றி செய்கின்றேன்;
* எல்லாவற்றையும் அந்தம் செய்கின்ற இறைவரது திருவடியை வணங்கி விழிப்புணர்வு நிலையில் நாள்தோறும் இருந்தேன்;
* நன்றாக சிந்தை செய்து, சிவ ஆகமங்களைச் செப்புவதற்குக் கூறுவதற்குத் திருமூலனாகிய யான் முயன்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. செப்பும் சிவ ஆகமம் என்னும் அப்பேர் பெற்றும்
அப்படி நல்கும் அருள் நந்தி தாள் பெற்றுத்
தப்பு இலா மன்றில் தனிக் கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம் இருந்தேனே.

* *நான் இங்கே கூறப்போவது, சிவ ஆகமங்களையே;*
* *இவற்றை எனக்கு வழங்கிய அருள்நிறைந்த திருநந்திதேவரின் திருத்தாளை நான் பெற்றுக் கொண்டேன்;*
* *எந்தவித மாசு மறுக்களும் அற்ற சுத்தமான தூய வெறு வெளியில் இறைவரின் அற்புதமான தனிக் கூத்தினைக் கண்டு கொண்டேன். அதன் பிற்பாடு;*
* *ஒப்பு உவமை கூறமுடியாத, எழுத்தில் வடிவமைக்க முடியாத யுகங்கள் நான் இருந்தேனே.*

75. இருந்த அக்காரணம் கேள் இந்திரனே
பொருந்திய செல்வப் புவனாபதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித்து அடியேன்
பரிந்து உடன் வந்தனள் பத்தியினாலே.

* *தேவர்களுக்கும் மேலான இந்திரனே! நான் ஏன் யுகங்கள் தோறும் இருக்கின்றேன்? அதன் காரணத்தை நான் கூறு கின்றேன். நீ கேட்பாயாக;*
* *இறைவர் எல்லாப் புவனங்களிலும் – அண்டங்களிலும் – ஒன்றாகி நிறைந்து நீக்கம் அற எல்லாச் செல்வமுமாகி விளங்குகின்றார்.*
* *சுத்த சக்தி அந்த இறைவனை நோக்கி அரியதவம் செய்து கொண்டே இருக்கின்றாள். நான் சுத்த சக்தியைப் போற்றிக் கொண்டே இருக்கின்றேன்;*
* *அப்பொழுது இறைவர் கருணையோடு உடனடியாகவே ஓடி வருகின்றார். எல்லாவற்றிற்கும் நான் இறைவர் மீது வைத்திருக்கும் அளவு கடந்த உண்மைப் பக்திதான் காரணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்
நிதாசனியாது இருந்தேன் நின்ற காலம்
இதா சனியாது இருந்தேன் மனநீங்கி
உதா சனியாது உடனே உணர்ந்தோமால்

* சதாசிவம் என்றும், தத்துவம் என்றும், முத்தமிழ் வேதம் என்றும் அதை நான் வியக்கின்றேன்;
* எத்தனையோ விதமான வெப்பங்களை, வேட்கையை, காலத்தைக் கடந்து இருந்தேன்;
* மனத்தினால் ஏற்படுகின்ற செயற்பாடுகள் அனைத்தையும் விட்டு, இங்கே இருந்தேன்;
* அதனை உடனடியாகவே நாம் எப்பொழுதும் உணர்வோமானால் உதாரணங்கள் ஒன்றும் கூறமாட்டோம். எடுத்துக் காட்டுக்கள் இன்றி இருப்போம்.

77. மாலாங்கனே இங்கு யான் வரக் காரணம்
நீல அங்க மேனியன் நேரிளை யாளொடு
மூல அங்கம் ஆக மொழிந்த திருக் கூத்தின்
சீல அங்க வேதத்தைச் செப்ப வந்தேனே.

* கைலாய மலையினில் கல்லால மரத்தின் கீழ் திருநந்தி தேவருக்கு அருகாமையில் இருந்து நான் தவம் செய்கின்றேன்; அப்பொழுது மாலாங்கனுடைய வேண்டுதலுக்கு - விருப்பத்திற்கு - அழைப்புக்கு இணங்கித் தென்னாட்டிற்கு வந்தேன். மாலாங்கன் எனது சீடர்களுள் முதல்வன்;
* கருமை நிறைந்த சுத்த சக்தியோடு இறைவர் வீற்றிருக்கின்றார்;
* அவர் திருக்கூத்து ஆடிக்கொண்டு இருக்கின்றார். இந்த நடனம் எல்லாவற்றிற்கும் மூலமாக விளங்குகின்றது.
* நானோ, சிறப்பு மிகுந்த வேதத்தை - ஆகமத்தைத் தெளிவுபடுத்தவே, கூறவே, செப்பவே இங்கு வந்து சேர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. நேரிழை ஆவாள் நிரதிச ஆனந்தப்
பேர் உடையாள் என்பிறப்பு அறுத்து ஆண்டவள்
சீர் உடையாள் சிவன் ஆஅடு தண்டு உறை
சீர் உடையாள் பதம் சேர்ந்து இருந்தேனே.

* சுத்த சக்தி ஆனவள், தனக்கு மேற்பட்ட ஒன்று இல்லாத சிவபரம் பொருளுடன் சதானந்த நிலையில் இருப்பவள்;
* சுத்த சக்தி என்னும் பெயர் உடையவள், என் பிறப்புகளை எல்லாம் அறுத்து என்னை ஆண்டு கொண்டாள்;
* எல்லாவகையான செல்வங்களையும் உள்ளாக்கிய சுத்த சக்தியானவள், ஆன்மாவோடு சிவபரம்பொருள் அன்பாக உறைகின்ற கோயிலில் வாசம் செய்கின்றாள்;
* இவ்வாறு சிறப்புகளை உடைய சுத்த சக்தியின் திருப்பாதத்துடன் நான் சேர்ந்து கொண்டேன் - அடைந்து அமர்ந்து விட்டேன்.

79. சேர்ந்து இருந்தேன் சிவமங்கை தன் பங்கனை
சேர்ந்து இருந்தேன் சிவன் ஆஅடு தண்டு உறை
சேர்ந்து இருந்தேன் சிவ போதியின் நீழலில்
சேர்ந்து இருந்தேன் சிவன் நாமங்கள் ஓதியே.

* சுத்த சக்தியோடு கூடியிருக்கும் சிவபரம்பொருளுடன் நான் சேர்ந்திருந்தேன்;
* இறைவர் ஆன்மாவோடு அன்பு பூர்வமாக உறைகின்ற கோயிலிலே நான் சேர்ந்து இருந்தேன்;
* சிவபரம் பொருளின் மெய்ஞ்ஞான போதத்தின் கீழ், அன்பின் நிழலிலே, அருளின் நிழலிலே, கருணையின் நிழலிலே நான் உட்கார்ந்து கொண்டேன்;
* சிவபரம் பொருளினுடைய திருநாமங்களை ஓதிக் கொண்டே அமர்ந்து விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. இருந்தேன் இக்காயத்தே எண்இலி கோடி
இருந்தேன் இராப் பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என் நந்தி இணைஅடிக் கீழே.

* எண்ண முடியாத கோடிக் கணக்கான காலங்கள் இந்த உடம்புடன் -இந்தப் பெயருடன் இருந்து கொண்டேன்;
* இரவும் - பகலும், நன்மையும் - தீமையும், இன்பமும் - துன்பமும், இல்லாத இடத்திலே இருந்து கொண்டேன்;
* தேவர்கள் - தேவதைகள் ஏத்திப் போற்றி செய்கின்ற திருவடியின் கீழ் இருந்து கொண்டேன்;
* எனது திருநந்தி தேவரின் - திருவடியின் கீழ் இருந்து கொண்டேன்.

81. பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல் தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ்ச் செய்யு மாறே.

* அடுத்த பிறவியிலே இறைவரை வணங்குவோம் என்று எண்ணம் கொள்கின்றார்களே;
* இந்தப் பிறவியிலே இப்பொழுது நல்லபடியாக முயற்சி செய்து தவம் செய்ய மாட்டாது இருக்கின்றார்களே;
* என்னையோ இறைவர் மிகவும் நன்றாகப் படைத்துவிட்டார் - (உடல் ரீதியாக - உள ரீதியாக - ஆத்ம ரீதியாக);
* தனக்கு ஊழியம் செய்ய, தொண்டு செய்ய, அன்பு செய்ய, காதல் செய்ய, தமிழ் மந்திரம் ஓத; வழிகாட்டி விட்டார். தன்னை நன்றாக என்னுள் நினையுமாறே - தவம் செய்யுமாறே ஆக்கிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. ஞானத் தலைவி தன் நந்தி நகர் புக்கு
ஊனம் இல் ஒன்பது கோடி யுகம் தன்உள்
ஞானப் பால் ஆட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன் நல் போதியின் கீழே.

* நந்தி எம்பெருமானார் வாசம் செய்கின்ற ஒரு நகர் உண்டு. அங்கே சுத்த சக்தியானவள் ஞானத்திற்குத் தலைவியாக வீற்றிருக்கின்றாள்;
* எந்தவித துன்பங்களும் உடலுக்கும் உள்ளத்துக்கும் இன்றி, ஒன்பது கோடி யுகங்கள் என்னுள்ளே இருந்தேனே;
* மெய்ஞ்ஞான அருளால், நாதத்தை வழங்கும் தலைவனை - நாதனை அபிஷேகம் செய்து பூஜிக்கின்றேன்;
* நானும் மெய்ஞ்ஞான போதத்தின் கீழ், சிவஞான போத நிழலின் கீழ் அமர்ந்து கொண்டேன். முன்னே இதே நிழலின் கீழ் சுத்த சக்தி அமர்ந்து விட்டாள். நந்தி எம் பெருமானாரும் அமர்ந்து விட்டார். அந்த வரிசையில் இப்பொழுது நானும் அமர்ந்து விட்டேன்.

83. செல்கின்ற வாறு அறி சிவ முனிசித்த சன்
வெல்கின்ற ஞானத்து மிக்க ஓர் முனிவராய்ப்
பல்கின்ற தேவர் அசுரர் நரர் தம்பால்
ஒல்கின்ற வான் வழி ஊடு வந்தேனே.

* இவ்வாறு சிவஞான போதத்தின் கீழ் இருந்து, நான் பூமியை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். அப்பொழுது அறிவில் சிறந்த அகத்திய முனிவரை - சித்த புருஷரைக் கண்டேன்.
* பிறப்புகளை எல்லாம் கடந்து போகின்ற, ஞானத்திலே மிகவும் சிறந்த, அந்த அகத்திய முனிவரைக் கண்டேன்;
* கோடிக் கணக்கான தேவர்களை, இராவணேஸ்வரை, சிவ பக்தர்களை, மனிதர்களைக் கண்டேன்;
* இவ்வாறான காட்சிகளைக் கண்டவண்ணம், மிகவும் நுட்பமான ஆகாய மார்க்க வழியின் ஊடாக (ககன மார்க்கம்) நான் வந்து சேர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தமம் ஆகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கு இங்கு அருளால் அளித்ததே.

* சித்த புருஷர்களினால் ஆக்கப்பட்ட நூல்களில் மிகவும் சிறந்து விளங்குவது ஒன்று உண்டு;
* அது மிகவும் உத்தமமான வேதம். அதுதான் சிவ ஆகமம்;
* உடலின் செயற்பாடுகளையும், உள்ளகத்தின் முழுச் செயற்பாடு களையும் அது விவரிக்கும்.
* அத்தன் ஆகிய நந்திதேவர், இறைவனது அருட் கடாட்சத்தினால், எனக்கு முழுதாகவே வழங்கியுள்ளார்.

85. நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைப் பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே.

* இந்தப் பூமியில் உள்ள எல்லா மனிதர்களும், சகல ஜீவகோடிகளும் நான் பெற்ற மெய்ஞ்ஞான இன்பத்தைப் பெற்றுக் கொள்ளட்டும்;
* வானைப் பற்றி நிற்கின்ற - சப்த்த சொரூபத்தைத் தொடர்ந்து நிற்கின்ற, மறைபொருளை - மெய்ப் பொருளை நான் கூறுகின்றேன்;
* இந்த உடம்போடு இணைந்து நிற்கின்ற உணர்வு நிறைந்த மெய்ஞ்ஞான மந்திரம் ஒன்று உண்டு;
* தானாகவே, இயல்பாகவே, இயற்கையாகவே அதை நாம் தொடர்ந்து பற்றுவோமேயானால் அது வெளிப்படுவது நிச்சயமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. பிறப்பு இலி நாதனைப் பேர் நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்று கை கூப்பி
மறப்பிலர் நெஞ்சின் உள் மந்திரமாலை
உறைப்பொடும் கூடி நின்று ஓதலுமாமே.

* பிறப்புக்கள் ஒன்றும் இல்லாதவர். நாத மரபைச் சேர்ந்த தலைவர், அவர் பெயர்தான் நந்தி ஆவர்;
* இவரை மிகுந்த சிறப்புக்களுடன், வானவர்கள் நாடிச் சென்று கை கூப்பி வழிபாடு செய்கின்றார்கள்;
* மனிதர்கள் - மறக்க முடியாதவர்களாய், நெஞ்சத்தின் உள்ளே, மந்திரத்தை மாலையாக அணிந்துள்ளார்கள்;
* உண்மையாகவே! தாகத்துடன் தவிப்புடன் நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இறைமந்திரத்தை - திருமந்திரத்தை ஓதுங்கள்.

87. அங்கி மிகாமை வைத்தான் உடல் வைத்தான்
எங்கு மிகாமை வைத்தான் உலகு ஏழையும்
தங்கி மிகாமை வைத்தான் தமிழ்ச் சாத்திரம்
பொங்கி மிகாமை வைத்தான் பொருள் தானுமே.

* இறைவர் எம்முள்ளே அளவாகவே அக்கினியை வைத்துள்ளார். அதற்கு அமைவாகவே உடலையும் அமைத்துள்ளார்;
* ஏழு ஏழு உலகங்களாக, ஏழு ஏழு அண்டங்களாக, அனைத்தையும், சர்வவியாபக வெளியிலே; மிகவும் ஒழுங்குபட அமைத்துவிட்டார்;
* அவர் என்னுள்ளேயே தங்கியுள்ளார். தமிழ் எனும் மந்திரத்தை எனக்கு ஓதிவிட்டார். நான் உண்மையோடு ஐக்கியமாகிக் கொண்டே இருக்கின்றேன்;
* தமிழ் மந்திரத்தின் பொருளையும், மிகத் தெளிவாகப் புகட்டி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88. அடிமுடி காண்பார் அயன் மால் இருவர்
படி கண்டிலர் மீண்டும் பார்மிசை கூடி
அடி கண்டிலேன் என்று அச்சுதன் சொல்ல
முடி கண்டேன் என்று அயன் பொய் மொழிந்தானே.

* விஷ்ணு தேவர் உண்மையின் அடியைத் தேடிச் சென்றார். பிரம்ம தேவர் உண்மையின் முடியைத் தேடிச் சென்றார்;
* இருவரும் மீண்டும் முடிபுகள் எதுவும் இன்றிப், பூமியிலே வந்து ஒருவரை ஒருவர் சந்தித்தார்கள்;
* "ஒளியின் அடியினைக் காணவில்லை" என்று விஷ்ணு தேவர் கூறினார்;
* "ஒளியின் முடியினைக் கண்டேன்" என்று பிரம்ம தேவர் பொய் கூறினார்.

89. பெற்றமும் மானும் மழுவும் பிறிவு அற்ற
தற்பரன் கற்பனை ஆகும் சராசரத்து
அற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்
நல் பதமும் அளித்தான் எங்கள் நந்தியே.

* மானும், மழு எனும் ஆயுதமும் தாங்கி இடபவாகனத்தில் - பசுவில் அமர்ந்துள்ளார் திருநந்தி தேவர்;
* "இந்த அண்ட சராசரங்கள் எல்லாம் வெறும் கற்பனை. இவை அனைத்தும் மனதின் சிருஷ்டியே" என்று தெளிவு படுத்துகின்றார்;
* சிறந்த சமயத்தை - நாத மரபை அடியேனுக்கு இதய பூர்வமாக வழங்கி விட்டார்;
* எனது சிரசினில், தனது திருவடியினைச் சூட்டி விட்டார் எங்கள் திருநந்திதேவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90. ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை அச்சிவன் தன்னை அகோசர
வீயத்தை முற்றும் விளக்கி இட்டேனே.

* பரம்பொருளைக் கூறுகின்றேன். அதில் இருந்து புறப்படும் ஞானத்தைக் கூறுகின்றேன். ஞானத்தை உணரும், அனுப விக்கும் ஆத்மாவைக் கூறுகின்றேன்;
* ஆபத்து நிறைந்த மாய வித்தைகளைக் கூறுகின்றேன். சுத்த சக்தியைக் கூறுகின்றேன். அசுத்த சக்தியின் பலவித தன்மை களைக் கூறுகின்றேன்;
* "சிவன்" எனும் தேவனின் அகோரங்களை, வீரியங்களைக் கூறுகின்றேன்;
* இவற்றை முற்றும் விளக்கமாகக் கூறப் போகின்றேன்.

91. விளக்கிப் பரம் ஆகும் மெய்ஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கு அறும் ஆனந்தக் கூத்தன் சொல் போந்து
வளப்பில் கயிலை வழியில் வந்தேனே.

* மெய்மையான ஞானச் சோதியைப் பற்றி விளக்கம் கூறில், அதுதான் பரம்பொருள் ஆகும்;
* நந்தியைப் பற்றிக் கூறுவதாயில், அவர் அளவிட முடியாத பெருமையை உடையவர். சதா ஆனந்த நிலையில் இருப்பவர்;
* அசைவு அற்றே, ஆனந்தக் கூத்தாடும் இறைவனின் (வேகம் கடந்தால் - அசைவற்றதாகப் புலப்படும்) வழியில், மரபில், மௌன நிலையின் தேய்வில்லா வளர்ச்சியில்;
* திருக்கைலாயம் என்னும் சிவ மரபில், சைவ மரபில், நந்தி மரபில், நாத மரபில் வந்தேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92. நந்தி அருளாலே மூலனை நாடிப் பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்
நந்தி அருளால் மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நான் இருந்தேனே.

* திருநந்தி தேவரின் அருளாலே மூலத்திற்குள், முதலுக்குள், மூலாதாரத்திற்குள் இருப்பவனை நாடினேன்;
* திருநந்தி தேவரின் அருளாலே சதாசிவனைப் போன்று ஆகிவிட்டேன்;
* திருநந்தி தேவரின் அருளாலே மெய்யாகிய - உண்மையாகிய சத்திய ஞானத்திற்குள் சென்றுவிட்டேன்;
* திருநந்தி தேவரின் அருளாலே நான் உட்கார்ந்து கொண்டேன். அமர்ந்து கொண்டேன். ஆறிக் கொண்டேனே.

93. இருக்கில் இருக்கும் எண் இலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆர் அழல் வீச
உருக்கிய ரோமம் ஒளிவிடும் தானே.

* இந்த ஆத்மா எண்ண முடியாத கோடி வருஷங்கள் இருந்து கொண்டே இருக்கின்றது;
* ஆத்மா முதலோடு, மூலத்தோடு தான், தகதகத்தவாறு வீற்றிருக்கின்றது;
* சூரியன் ஆகிய தந்தை ஞானத்தை வழங்குகின்றார். சந்திரன் ஆகிய தாய் அன்பை வழங்குகின்றார். ஆத்மா தானாகவே வளர்கின்றது, வாழ்கின்றது.
* பரிபூரணத்துவ நிலையை ஆத்மா எய்தும் பொழுது, உடலில் உள்ள ஒவ்வொரு உரோமத்தின் துவாரங்களூடாக, ஒளியை காலித்து - வீசிக்கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94. பிதற்றுகின்றேன் என்றும் போர் நந்தி தன்னை
இயற்றுவன் நெஞ்சத்து இரவும் பகலும்
முயற்றுவன் ஓங்கு ஒளி வண்ணன் எம்மானை
இயல் திகழ் சோதி இறைவனும் ஆமே.

* *திருநந்தி தேவரின் திருநாமத்தை சதாகாலமும் மெய்மறந்து பிதற்றுகின்றேன்;*
* *இரவு பூராவும், பகல் முழுவதும் தவம் செய்து கொண்டே இருப்பேன்;*
* *எம்பெருமானார் ஓங்கி வளர்ந்து செல்லும் ஒளி ரூபமானவர். நீங்களும் முயன்று தவம் செய்யுங்கள்;*
* *இறைவர் இயல்பாகவே பிரகாசித்துக் கொண்டு என்றும் எங்கும் உள்ளார்.*

## VI. அவை அடக்கம்

95. ஆர் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
யார் அறிவார் இந்த அகலமும் நீளமும்
பேர் அறியாத பெரும் சுடர் ஒன்று அதின்
வேர் அறியாமை விளம்பு கின்றேனே.

* *இறைவரது பெருமையை முழுமைத்துவத்தை ஆர்தான் முழுதாக அறியப் போகின்றார்களோ!*
* *இந்தப் பிரபஞ்சத்தின் அகலத்தையும், நீளத்தையும் ஆர்தான் முற்றாக அளக்கப் போகின்றார்களோ!*
* *பெயர் சூட்ட முடியாத மிகப் பெரும் ஜோதியைக் காண்கின்றேன்;*
* *இந்தப் பெரும் ஜோதியின் மூலத்தை வேரை அறிய முடியாது, நான் ஏதோ உங்களுக்குக் கூறுகின்றேன் – விளக்குகின்றேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. பாடவல்லார் நெறி பாட அறிகிலேன்
ஆடவல்லார் நெறி ஆட அறிகிலேன்
நாடவல்லார் நெறி நாட அறிகிலேன்
தேட வல்லார் நெறி தேடகில்லேனே.

* இறைவர் மீது பாசுரங்களைப் பாடுகின்றார்கள். எனக்கு அந்த வழியைப் பின்பற்றிப் பாட முடியவில்லையே!;
பாடவல்லார் - இறைவர் சாம வேத கீத கானப் பிரியர்;
* இறைவர் ஆடவல்லார். இறைவரைப் போன்று பாவனை செய்து பெரியோர்கள் ஆடிக் கொண்டே இருக்கின்றார்கள். என்னால் ஆடவல்ல நெறியையும் பின்பற்ற முடியவில்லையே;
* இறைவரை மிகமிக நுட்பமாக அண்ணித்தாகப் பெரியோர்கள் நாடிக் கொண்டே இருக்கின்றார்கள். என்னால் அந்த வழியையும் பின்பற்ற முடியவில்லையே;
* இறைவரைப் பெரியோர்கள் ஆனந்தமாகத் தேடிக் கொண்டே இருக்கின்றார்கள். எனக்கு இந்த வழியினையும் தொடர முடியாமல் இருக்கின்றதே!
இறைவா! நான் என்ன செய்யப் போகின்றேனோ!

97. மன்னிய வாய் மொழியாலும் மதித்து அவர்
இன் இசை உள்ளே எழுகின்ற ஈசனைப்
பின்னை உலகம் படைத்த பிரமனும்
உன்னும் அவனை உணரலும் ஆமே.

* இறைவனால் மௌன நிலையில் அருளப்பட்ட, வழங்கப்பட்ட ஆகமத்தை என் சிரசின் மேல் கொண்டேன்;
* இறைவர் இசைப்பிரியர். அவர் சாம வேத கீத கானப் பிரியர். இசை வடிவிலே எம்முள்ளே புலப்படுகின்றார்;
* படைத்தல் தொழிலுக்கு அதிபதியானவர் பிரம்ம தேவர்;
* அவரும் முயற்சி செய்து - தவம் இருந்தே இறைவரை உணர முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வரை
முத்திக்கு இருந்த முனிவரும் தேவரும்
ஒத்து உடன் வேறாய் இருந்து துதி செய்யும்
பத்திமையால் இப் பயன் அறியாரே.

* குளிர்ச்சி நிறைந்த மலையில் கைலாயத்தில் மெய்ஞ்ஞானம் போதிக்கப்படுகின்றது;
* "முத்தியே" முக்கியம் என்னும் நோக்குடன் முனிவர்களும், தேவர்களும் அங்கே அமர்ந்துள்ளார்கள்;
* சேர்ந்தும், தனித்தும் இருந்து பலர் வழிபாடு செய்கின்றார்கள்;
* இங்கே பக்தியில் மேம்பட்டவர்கள் எந்தவித பயனும், பலனும் அறியாதே காணப்படுகின்றார்கள்.

## VII. திருமந்திரத் தொகைச் சிறப்பு

99. மூலன் உரை செய்த மூ ஆயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்து அறிந்து ஓதிடில்
ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே.

* திருமூலர் ஆகிய யான் மூவாயிரம் மந்திரங்கள் செய்துள்ளேன். ஆகமத்தை உரைத்துப் பாடியுள்ளேன்; இதனை,
* இந்தப் பூவுலகத்தில் உள்ள மனிதர்கள் அறிந்து கொள்ளத் தெரிந்து கொள்ள, உணர்ந்து கொள்ள நந்தி எம் பெருமானார் எனக்கு அருளியுள்ளார்;
* அதிகாலையில் நீங்கள் எல்லோரும் எழுந்து இந்த மந்திரங்களை உணர்ந்து ஓதுங்கள்; அப்பொழுது,
* ஞானத்தின் தலைவரோடு சிவபரம் பொருளோடு நீங்கள் எல்லாரும் சேர்ந்து கொள்வீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. வைத்த பரிசே வகை வகை நல் நூலில்
முத்தி முடிவு இது மூ ஆயிரத்தில்
புத்தி செய் பூர்வத்து மூ ஆயிரம் பொது
வைத்த சிறப்புத் தரும் இவை தானே.

* *இந்த சிறந்த நல்ல சிவ ஆகம நூலில், இறை பேரின்பம் பல்வேறு வகையாக வைக்கப்பட்டுள்ளது;*
* *மூவாயிரம் பாடல்களின் முடிவில் இறை முத்தி கிடைப்பது நிச்சயம்;*
* *சதா விழிப்பு நிலையில் இருந்தே, மூலத்தை – மூவாயிரம் மந்திரங்களாக்கியுள்ளேன். இவை எல்லோருக்கும் பொதுவானது – உரியது;*
* *எப்படி எப்படி எல்லாம் நீங்கள் இந்த மந்திரங்களை மேற்கொள்கின்றீர்களோ, அதற்கு ஏற்ப இவை உங்களுக்குச் சிறப்பினைத் தரும்.*

## VIII. குருமட வரலாறு

101. வந்த மடம் ஏழு மன்னும் சன்மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வு மூ ஆயிரம்
சுதந்தர ஆகமச் சொல் மொழிந் தானே.

* *எனது மரபு இறை காதல் மரபு, நந்தி மரபு, சைவ மரபு, சிவ மரபு. இதனைத் தெளிவுபடுத்த ஏழு மௌன மடங்கள் எனது மாணவர்களால் நிறுவப்பட்டுள்ளன;*
* *இம் மௌன மடங்கள் மூலத்தில் – முதலில் இருந்தே தோன்றின. அதனால் திருமூல மடம் என்றும் நாமம் பெறும்;*
* *மூவாயிரம் திருமந்திரங்களும் ஒன்பது பகுதியாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளன;*
* *அற்புதமான, அழகான சிவ ஆகமத்தின் சொல்லை – மந்திரத்தைச் சாரத்தைத் – தமிழை – அதன் பொருளை – அன்பை திருமூலராகிய யான் மொழிந்துள்ளேன். பாடியுள்ளேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

102. கலந்து அருள் காலாங்கர் தம்பால கோரர்
நலம் தரு மாளிகைத் தேவர் நாதாந்தர்
புலங் கொள் பரமானந்தர் போக தேவர்
நிலம் திகழ் மூலர் நிராமயத் தோரே.

* திருமூலர் நிறுவிய மடங்கள் ஏழு. அவரது மாணவர் எழுவர். (பாடல் 69ஐப் பார்க்கவும்) மாலாங்கர், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், கந்துருக்காலாங்கி, கஞ்சமலையன்.
* இம்மந்திரத்தில் ஏழு மௌன மடங்களின் வகைகளைக் கூறுகிறார். எழுவரும் நிராமயத்தவர்கள். நிர்குணபாவனை உடையவர்கள். ஏழுவகையும் வருமாறு;
   1. காலத்தைத் தாண்டியவர்
   2. கோர தவம் செய்பவர்
   3. தேவர்களின் மாளிகை இன்பத்தை அனுபவிப்பவர்
   4. நாதாந்த நிலையில் இருப்பவர்
   5. எப்போதும் பரமானந்த நிலையில் இருப்பவர்
   6. தேவர்களின் சுகபோகத்தில் திளைப்பவர்
   7. மூலத்துடன் முதலுடன் ஐக்கியமாக இருப்பவர்

## IX. திரிமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறைமை

103. அளவில் இளமையும் அந்தமும் ஈறும்
அளவியல் காலமும் நாலும் உணரில்
தளர்விலன் சங்கரன் தன் அடியார் சொல்
அளவில் பெருமை அரி அயற்கு ஆமே.

* குன்றாத இளமையை உணர வேண்டும். அந்தத்தை உணர வேண்டும். மரணத்தை உணர வேண்டும். அளவிட முடியாத, காலம் கடந்த நிலையை உணர வேண்டும்;
* சங்கரர் தனது சங்காரச் செயல்களின் போது ஒரு போதும் தளர்வே அடைவதில்லை. தனது அடியவர்களது சொற்களால், புகழ்ப்பாக்களால் சங்கரர் பெருமை அடைகின்றார்;
* பிரம்மா, விஷ்ணுவுக்கும் இவ்வாறே அடியவர்களால் பெருமை கிடைக்கின்றது. சங்கரர் - பிரம்மா - விஷ்ணு மூவர்களும் தொழில்களுக்கு அதிபதிகளாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

104. ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத்து அலர் மிசை யானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித்து உலகம் பிணங்கு கின்றார்களே.

* ஆதிப்பிரான் என்று கூறும் சங்கரனும், விஷ்ணுவும், ஆதிக் கமலத்தில் உறைந்திருக்கும் பிரம்மாவும்;
* இம்மூவரையும் நாம் சோதித்தால் ஒரே தொடர்ச்சியின், ஒன்றின், வெவ்வேறு பகுதிகளாகும்;
* ஆனால் உலகத்து மக்களோ இவற்றை வெவ்வேறாகப் பாகுபடுத்தித் தங்களுக்குள் சண்டை பிடிக்கின்றார்கள்.

105. ஈசன் இருக்கும் இரு வினைக்கு அப்புறம்
பீசம் உலகில் பெரும் தெய்வம் ஆனது
ஈசன் அது இது என்பார் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் தூர அறிந்தார்களே.

* இறைவர் இருவினைக்கு அப்பாற்பட்டே இருக்கின்றார்;
* இறைவர் உலகங்களுக்கும், அண்டங்களுக்கும் முதலானவர். பெரிய தெய்வமாக விளங்குபவர்;
* தேவர்கள் தம்முள் ஒன்றும் நினைக்க மாட்டாதவர்கள். இறைவர் அங்கே என்றும் இங்கே என்றும் அங்கலாய்க் கின்றார்கள்.
* இவர்கள் மாசுள்ளவர்கள். காலப் பிரமாணத்திற்கு உட்பட்டுத் தூரத்தை அளந்து கொண்டே உள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

106. சிவன் முதல் மூவரோடு ஐவர் சிறந்த
அவை முதல் ஆறு இரண்டு ஒன்றொடு ஒன்றாகும்
அவை முதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவை முதல் சங்கரன் தன் பெயர் தானே.

* சிவபரம் பொருள் முதலாக உள்ளது. பிரம்மா, விஷ்ணு, சங்கரன் மூவர் எனப்படும். சக்தி, உமாமகேஷ்வரர், சதாசிவர், ஈசர், நந்திதேவர், ஐவர் எனப்படும்.
* சிவபரம் பொருளின் சபையிலே பத்துப் பேர் உள்ளனர்;
* விந்து சப்த்த சொரூபமாக உள்ளது. நாதம் நாத (அதிர்வு) சொரூபமாக உள்ளது. இவை இரண்டும் இருவர் ஆகும்;
* இந்த அவையில் சங்கரனே சங்காரத் தன்மையால் தனது நாமத்தை உயர்த்திக் கொள்கின்றான்.

107. பயன் அறிந்து அவ்வழி எண்ணும் அளவில்
அயன் ஒடுமால் நமக்கு அன்னியம் இல்லை
நயனங்கள் மூன்று உடை நந்தி தமராம்
வயனம் பெறுவீர் அவ் வானவ ராலே.

* சிவபரம்பொருள் ஏற்படுத்திய சபையின் பயன்பாட்டை நாம் தெளிந்து கொள்ள வேண்டும், அவ்வழியை நாம் எண்ணிக் கொள்ள வேண்டும்;
* பிரம்மாவும், விஷ்ணுவும் எமக்கு ஒருபோதும் வேறாகக் காணப்பட மாட்டார்கள்;
* நாங்கள் மூன்று கண்களை உடைய நந்தி எம்பெருமானாரின் உறவுக்காரர்;
* தேவர்களால் நாம் எல்லோரும் நல்லவற்றைப் பெற்றுக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

108. ஓலக்கம் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பால் ஒத்த மேனி பணிந்து அடியேன் தொழ
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்பு நீ
ஞாலத்து நம் அடி நல்கிடு என்றானே.

* எண்ணிறந்த தேவர்கள் சூழ்ந்துள்ள ஓர் சபா மண்டபம் ஒன்றுண்டு;
* அங்கே பால் போன்ற மேனியை உடையவர் ஒருவர் உள்ளார். அவரை நான் பணிந்து வழிபடுகின்றேன். அவர் தான் திருநந்தி தேவர்;
* "திருமூலரே! நீர் ஆதியாம் பிரம்மாவிற்கும், விஷ்ணுவுக்கும் ஒப்பானவர்";
* "இந்தப் பூவுலகத்தில் உள்ளவர்களுக்கு எனது செய்தியை அறிவிப்பீர்களாக" என்று எம் நந்தி எம் பெருமானார் எனக்குக் கூறிவிட்டார்.

109. வானவர் என்றும் மனிதர் இவர் என்றும்
தேனமர் கொன்றைச் சிவன் அருள் அல்லது
தான் அமர்ந்து ஒரும் தனித் தெய்வம் மற்று இல்லை
ஊன் அமர்ந்தோரை உணர்வது தானே.

* "சிறந்த வானவர் என்றும் சிறந்த மனிதர் என்றும் திருமூலராகிய உம்மைக் கொண்டாடுவர்";
* "சுத்த சக்தியோடு வீற்றிருக்கும் சிவபரம்பொருளின் அருளாலேயே இவை நடைபெறும்";
* "சிவம்" எனும் தெய்வத்திற்கு மேலாம் தெய்வம் வேறு ஒன்றும் இல்லை என்பதை மக்கள் உணரும்படி செய்யும்;
* "உடம்போடு வாழ்க்கையை மேற்கொள்பவர்களுக்கு இந்த உண்மையை உணர்த்திவிடும்" என்று நந்தி எம்பெருமானார் எனக்குக் கூறிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110. சோதித்த பேர் ஒளி மூன்று ஐந்து என நின்ற
ஆதிக் கண் ஆவது அறிகிலர் ஆதர்கள்
நீதிக் கண் ஈசன் நெடுமால் அயன் என்று
பேதித்து அவரைப் பிதற்று கின்றாரே.

* இந்த எண்மரும் (பிரம்மா, விஷ்ணு, சங்கரர், சக்தி, உமா மகேஷ்வரர், சதாசிவர், ஈசர், நந்தி தேவர்) பெரும் ஜோதியையே ஆய்கின்றார்கள்;
* இந்த ஜோதியே ஆதியின் கண்ணாக உள்ளது. இதனை மனிதரும், தேவரும் உணராது அவதியுறுகின்றார்கள்;
* நீதிக் கண் என்றும், ஈசர் என்றும், விஷ்ணு என்றும், பிரம்மா என்றும் ஏதோ கூறுகின்றார்கள்;
* எல்லோரும் இவ்வாறு பாகுபாடு செய்து பிதற்றிக் கொண்டே உள்ளார்கள்.

111. பரத்திலே ஒன்றாய் உள்ளாய்ப் புறமாகி
வரத்தின் உள் மாயவனாய் அயனாகித்
தரத்தினுள் தான் பல தன்மையன் ஆகிக்
கரத்தினுள் நின்று கழிவு செய்தானே.

* பரம் பொருள் ஒன்றுதான் உண்டு. அது உள்ளாகவும், புறம் ஆகவும் உள்ளது;
* வரம் கேட்கின்ற போது அது விஷ்ணுவிற்கூடாகவும், பிரம்மாவிற்கூடாகவும் செயற்படுகின்றது;
* ஒவ்வொருவரினதும் பரிபக்குவத்திற்கு ஏற்ப அது வெளிப்படும்;
* எமது இதயக் கரத்தினுள் இருந்தே அது எமக்கு வேண்டாத வற்றை எல்லாம் நீக்கி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

112. தான் ஒரு கூறு சதாசிவன் எம் இறை
வான் ஒரு கூறு மருவியும் அங்குளான்
கோன் ஒரு கூறு உடல் உள் நின்று உயிர்க்கின்ற
தான் ஒரு கூறு சலமயன் ஆமே.

* சதாசிவர் இறைவரது ஒரு ஏற்பாடு ஆகும்;
* வானமும் இறைவரது கட்டளையின் நிமித்தம் ஏற்பட்டதாகும்;
* எம்முள்ளே உள்ள ஆத்மாவும், உயிர்ப்பு சக்தியும் இறைவரது கட்டளைக்கு உட்பட்டதாகும்;
* அன்பு, அருள், கருணையால் உருவாகும் குளிர்ச்சியும் இறைவரின் கட்டளைக்கு உட்பட்டதே.

## பாயிரம் முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I. முதலாம் தந்திரம்
### க. உபதேசம்

113. விண் இன்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்கொண்டு
தண் நின்ற தாளைத் தலைக் காவல்முன் வைத்து
உள் நின்று உருக்கி ஓர் ஒப்பு இலா ஆனந்தக்
கண் இன்று காட்டிக் களிம்பு அறுத்தானே.

ஒன்று - விண் நிலை :- தெளிவு நிலை - சமாதி நிலை- நாதாந்த முடிபில் ஏற்படும் நிலை - நாமமும் பிந்துவும் இணைந்திருக்கும் நிலை - மனமற்ற - நினைவற்ற - செயலற்ற நிலை.

இரண்டு - இழிகின்ற நிலை :- தெளிவு நிலையில் இருந்து விடுபடும் நிலை, நாதமும் பிந்துவும் பிரிந்த நிலை. மனமுள்ள - நினைவுள்ள - செயலுள்ள நிலை. விண் நிலையில் இருந்து விடுபடுகின்ற நிலை;-

மூன்று - வினை ஆகும் நிலை :- வினை என்பது விண் நிலையில் இருந்து இழிவதால் ஏற்படுவது. எத்தன்மையதாய் இழிவு ஏற்படுமோ அத்தன்மைக்கு ஏற்ப வினை இருக்கும்.

நான்கு - மெய் கொள்ளும் நிலை :- இந்த வினைக்கு ஏற்ப உடம்பு எடுக்கப்படுகின்றது - இது பிறப்பு நிலை.

ஐந்து - தாள் காவலாகும் நிலை :- குளிர்ச்சி பொருந்திய திருவருள் நிறைந்த பாதம் - திருவடி தலையாக - முதலாகக் காவலாக உள்ளே - உடம்பின் உள்ளே வைக்கப்படும்.

ஆறு - உள்ளே உருக்குகின்ற நிலை :- திருத்தாள் - திருவடி உள்ளே இருந்து எம்மை உருக்கும். முன்பு விண் நிலையில் இருந்து இழிந்ததால் ஏற்பட்ட வினை எல்லாம் போகும் வண்ணம் எம்மைத் தெளிவு நிலைக்கு மாற்றும்.

ஏழு - காட்டுகின்ற நிலை:- ஒப்பு உவமை கூறமுடியாத ஆனந்தக் கண்ணினை உள்ளே காட்டும்.

எட்டு - அறுகின்ற நிலை:- இவ்வாறு நிகழும்போது களிம்பு அறுக்கப்படும். விண் நிலையில் இருந்து இழிந்ததனால் உண்டான வினை முற்றாக விலக்கப்படும். அப்பொழுது ஆதி நிலை - முதல் நிலை - தெளிவு நிலை - சமாதி நிலை - மனமற்ற நினைவற்ற செயல் அற்ற நிலை கைகூடும். இது இறப்பு நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

114. களிம்பு அறுத்தான் எங்கள் கண்நுதல் நந்தி
களிம்பு அறுத்தான் அருள் கண் விழிப் பித்துக்
களிம்பு அணுகாத கதிர்ஒளி காட்டி
பளிங்கில் பவளம் பதித்தான் பதியே.

* நெற்றியிலே கண்ணுள்ள எமது நந்தி எம்பெருமானார், ஆன்மாவைச் சூழவுள்ள எல்லாக் களிம்புகளையும் முற்றாக நீக்கிவிட்டார்;
* களிம்பு – ஆணவம், கன்மம், மாயை
பிராரத்துவம், சஞ்சிதம், ஆகாமியம்.
நந்தி எனது அகக் கண்ணைத் திறப்பித்தார். அதில் அருளை நிறைத்துள்ளார்;
* நந்தி எந்தவிதமான களிம்பும் அணுகாமல் கதிர்ஒளியை எமக்குக் காட்டியுள்ளார்;
* பளிங்குக் கல் ஒன்றில் பவளம் பதித்தது போல், "பதியின் அம்சம் ஆத்மாவாக" உள்ளதை, நந்தி உணர்த்திவிட்டார்.

115. பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப் பசு, பாசம்
பதி அணுகில் பசு, பாசம் நிலாவே.

* பதி, பசு, பாசம் எனும் மூன்று அம்சங்களைக் கருத்திற் கொள்வோம்;
* பதி – இறைவன், பசு – ஆத்மா, பாசம் – சுத்த சக்தி.
இம்மூன்றும் சூக்ஷ்சுமம் ஆனவை.
* இம்மூன்றும் அனாதியானவை.
* இறைவனை ஆத்மாவோ, சுத்த சக்தியோ அணுகுவது மிக மிகக் கடினம்;
* இறைவன் ஆத்மாவை அணுகில், ஆத்மாவைச் சூழவுள்ள சுத்தசக்தி முற்றாக விலகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116. வேயின் எழும் கனல் போலே இம் மெய் எனும்
கோயில் இருந்து குடிகொண்ட கோன் நந்தி
தாயினும் மும் மலம் மாற்றித் தயா என்னும்
தோயம தாய் எழும் சூரியன் ஆமே.

* வேள்வித் தீயில் இருந்து எழுகின்றது அக்கினி;
* உடம்பு என்னும் கோயிலில் இருந்து எனது தலைவனாகிய நந்தி எம்பெருமானார் எழுகின்றார்;
* தாயிலும் பார்க்கக் கருணையுள்ள நந்தி எம்பெருமானார் எனது மும் மலங்களையும் முற்றாக நீக்கி விடுகின்றார்.
* நந்தி எம்பெருமானார் எனக்கு சூரியன் போன்று விளங்குகின்றார்;

மும்மலம் - ஆணவம், கன்மம், மாயை.

117. சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்
சூரியன் தோற்ற முன் அற்ற மலங்களே.

* சூரியகாந்தக் கல்லும் (குவிவுவில்லை) நன்கு காய்ந்த பஞ்சும் அருகருகே உள்ளன;
* இவ்வாறு இருந்தபோதிலும் சூரிய காந்தக் கல்லினால், காய்ந்த பஞ்சினை எரிக்க முடியவில்லை;
* ஆனால் சூரிய ஒளிக்கதிர் சூரிய காந்தக் கல்லில் படும்போது ஒளிக்கதிர் அதனூடாகச் சென்று பஞ்சிலே குவிக்கப் படுகின்றது. அப்பொழுது பஞ்சு எரிந்து முற்றாக நீறாகின்றது;
* இறைவனது ஞான ஒளி ஆத்மா எனும் வில்லைக்கு ஊடாகச் செல்லும்போது, மும்மலங்களும் முற்றாக எரிந்து நீறாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

118. மலம் களைந்து தாம் என மாற்றி அருளித்
தலம் களைந்தான் நல் சதாசிவம் ஆன
புலம் களைந்தான் அப் பொதுவினுள் நந்தி
நலம் களைந்தான் உள் நயந்தான் அறிந்தே.

* மும்மலங்களும் எரிந்து நீறான பின், இது அதைப் போன்று அருள் நிறைந்ததாக ஆகிவிட்டது;
* இடம் எனும் காலப் பரிமாணத்தை முற்றாக நீக்கிவிட்டது;
* ஐம்புலன்களின் செயற்பாடுகளையும் முற்றாகக் களைந்து விட்டது;
* இறைவன் சந்நிதானத்தில் இவை எல்லாம் நடை பெறுகின்றன. நந்தி எம்பெருமானார் சாட்சியாக இவற்றைப் பார்த்துக் கொண்டுள்ளார்.

119. அறிவு, ஐம்புலன், உடனே நான்று, அது ஆகி
நெறி அறியாது உற்ற நீர் ஆழம் போல
அறிவு அறிவு உள்ளே அழிந்தது போல
குறி அறிவிப்பான் குருபரன் ஆமே.

* அறிவு மாயையின் தோற்றப்பாடு. மனதின் சேர்க்கை. ஐம்புலன்களும் அறிவிலே மயங்கிப் போய் உள்ளன;
* இறைவரின் முழுமைத்துவம் அளவிட முடியாதது;
* வெளியே உருவாகிய அறிவும், கற்றதனால் மனம் உள்ளே சேர்க்கப்பட்ட அறிவும் முற்றாக அழிந்தன;
* அப்பொழுதே – இறைவர் குருவாகித் தனது “செய்தியைத்” தெரிவிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120. ஆ மேவு பால் நீர் பிறிக்கின்ற அன்னம் போல்
தாமே தனி மன்றில் தன்னம் தனி நித்தம்
தீமேவு பல் கரணங்களுள் உற்றன
தாம் ஏழ் பிறப்பு எரி சார்ந்த வித்தாமே.

* அன்னப் பறவை, நீர் கலந்த பசுவின் பாலில், பாலை மாத்திரம் தனியாக அருந்திக் கொள்ளும்;
* இறைவர் சகல ஜீவராசிகளுடனும், சர்வ அண்டங்களுடனும், சர்வ அணுக்கள் உடனும் ஒன்றாகிக் கலந்துள்ளார். அதேசமயம் சர்வ பிரபஞ்ச சுத்த வெறு வெளியில் தனித்தே நடனம் ஆடிக் கொண்டு உள்ளார்;
* தனு, கரண, புவன, போகங்களும் ஞானக்கினியால் எரிந்து சாம்பல் ஆகின்றன;
* தாமாகவே ஏழு பிறப்புகளும் எரிந்து சாம்பலாகின்றன. அப்பொழுது இது (ஆத்மா) - வித்து நிலையில் ஒடுக்க நிலையில் இருக்கும்.

தனு: உடம்பு. கரணம்: மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.
புவனம்: எல்லா அண்டங்களும்
போகம்: எல்லாவிதமான உடல் சுகங்களும்.

ஏழ் பிறப்பு: 1. நோய்க்காக 2. உணவிற்காக 3. காமத்திற்காக 4. இதய சுகத்திற்காக 5. அமிர்தம் பருக 6. இறைகாட்சியை அனுபவிக்க. 7. சமாதிகைகூடி மௌன நிலையில் இருக்க.

121. வித்தைக் கெடுத்து வியாக்கிரத்தே மிகச்
சுத்த துரியம் பிறந்து துடக்கு அற
ஒத்துப் புலனும் உயிர் ஒன்றாய் உடம்பொடு
செத்திட்டு இருப்பர் சிவயோகியார்களே.

* அது, (இறைவர்) வித்தை - ஒடுக்கத்தை முற்றாகச் சிதைத்து, இதன் வேகத்தை முற்றாக அழித்துவிடுகின்றது; அப்பொழுது,
* சுத்தமான துரியநிலை ஏற்படுகின்றது. எல்லாவிதமான வாசனைகளும் நீங்குகின்றது. சிவயோகம் கைகூடுகின்றது;
* புலன்களும், உயிரும் ஒன்றாக உடம்பொடுதான் இருக்கின்றன; இருந்தபோதிலும்;
* சிவயோகியர்கள் "செத்தநிலையில்" என்றும் இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122. சிவ யோகம் ஆவது சித்தசித்து என்று
தவ யோகத்து உள்புக்குத் தன்ஒளி தானாய்
அவ யோகம் சாராது அவன்பதி போக
நவ யோகம் நந்தி நமக்கு அளித்தானே.

* சிவயோகம் மனத்தின் எந்தவித செயற்பாட்டுக்கும் உரியதன்று; சித்துக்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டது;
* ஆத்மஜோதிக்குள் இயல்பாகவே - தானாகவே - முழுமையாகவே உட்புகுதல் உண்மைத் தவம் ஆகும்; யோகமாகும்;
* வேறு எந்தவிதமான தவறான, திசை திரும்பிய யோகங்களைச் சார வேண்டாம். நீங்கள் இறையைப் பதியைச் சாருங்கள் ;
* நந்தி எம்பெருமானார் எமக்கு ஒன்பது யோகங்களைக் கருணையோடு வழங்கியுள்ளார்.

ஒன்பது யோகங்கள் : அஷ்டாங்க யோகம், பக்தியோகம், கர்மயோகம், இராஜயோகம், ஞானயோகம், சந்திரயோகம், கேசரியோகம், பரியங்கயோகம், சிவயோகம்.

123. அளித்தான் உலகு எங்கும் தான் ஆன உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திரு மன்றுள் ஆடும் திருத்தாள்
அளித்தான் பேர் இன்பத்து அருள்வெளி தானே.

* சர்வபிரபஞ்சங்களிலும் - சர்வ அணுக்களிலும் - சர்வ ஜீவராசிகளிலும் இறையவர் கலந்தும் உள்ளார். தனித்தும் உள்ளார். இது என்றும் உள்ள உண்மை;
* இறையவரை, தேவர்களும், தேவதைகளும் அறிய மாட்டார்கள்;
* இறையவரின் திருத்தாள் திருவெளியில் திருநடனம் ஆடிக் கொண்டே உள்ளது;
* இறையவரின் பெரும் இன்பம் தூய வெளியில் அருளால் நிறைந்து உள்ளது.

இவற்றையெல்லாம் இறையவர் எனக்கு முழுதாக வழங்கிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

124. வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அவரே சிவ சித்தர் தாமே.

* *தூய வெறு வெளியோடு - சிவபரம்பொருளுடன்; தூய வெறு வெளி - ஆத்மா சேர்ந்து கொள்ளும் ;*
* *தூய கருணையோடு - (சிவபரம்பொருள்), தூய கருணை (ஆத்மா) ஐக்கியமாகிக் கொள்ளும்;*
* *தூய ஒளியில் (சிவபரம்பொருளில்), தூய ஒளி (ஆத்ம ஒளி) குவிந்து ஒன்றாகிக் கொள்ளும்;*
* *இந்த உண்மைச் செயலை உணர்ந்து தெளிந்து கொள்ளுபவரே உண்மையான சிவசித்தர் ஆவர்.*

125. சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்
சத்தமும் சத்த முடிவும் தம் உள்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள் பர
முத்தர் தம் முத்திமுதல் முப்பத்து ஆறே.

* *சித்தர் பெருமக்கள், இப்பூமியில் இருந்தே சிவம் ஆகிய உலகத்தைத் தரிசனம் செய்து கொண்டே உள்ளார்கள்;*
* *இறையவர் சத்தத்தை நேரடியாகக் கேட்போர் உள்ளார்கள். இவர்கள் சத்தத்தையும் அதன் முடிபையும் கடந்து செல்பவர்கள். தம்மை முழுமையாக இறையவரிடம் ஒப்படைத்தவர்கள்;*
* *இவர்கள் நித்தர் என்றும் (நித்தியம் உள்ளவர்), நிமலர் என்றும் (எல்லா மலங்களையும் கடந்தவர்), நிராமயர் என்றும் (இறைவரைச் சார்ந்தவர்) முத்தர் என்றும் (இறைமுத்தியில் உள்ளவர்) அழைக்கப்படுவர்;*
* *இறைமுத்தியை உணர்வதற்கு - அடைவதற்கு 36 படிமுறைகள் உண்டு. (பக்கம் 171 ஐப் பார்க்கவும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

126. முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத்து உள்ஒளி புக்குச்
செப்ப அரிய சிவம் கண்டு தான் தெளிந்து
அப்பரிசு ஆக அமர்ந்து இருந்தாரே.

* *36 படிகளும் இறை முத்தி அடைவதற்கு, ஏணியாக அமையும்;*
* *ஒப்புவமை கூறமுடியாத ஆனந்தம் ஒளியாக இறைமுத்தியில் எம்முட்புகும்;*
* *வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத, காண்பதற்கு அரிய சிவம் காணுவர். அப்பொழுது தெளிந்த தெளிவு ஏற்படும். தூய சமாதி கை கூடும்;*
* *இறையவர் வழங்கிய இப்பெரும் பரிசுடன் அவர்கள் எப்போதும் அமர்ந்திருப்பார்கள்.*

*(36 படிகள்: பக்கம் 171 ஐப் பார்க்கவும்.)*

127. இருந்தார் சிவம் ஆகி எங்கும் தாம் ஆகி
இருந்தார் சிவன் செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத்து இயல்பைக் குறித்து அங்கு
இருந்தார் இழவு வந்து எய்திய சோம்பே.

* *சிவசித்தர் சிவம் போலவே அமர்ந்து விட்டார்கள். அவர்கள் எங்கும் தாம் ஆக (ஆத்ம சொரூபமாக) வெளிப்படுகின்றார்கள்;*
* *இவர்கள் சிவன் எனும் தேவதையின் செயல்கள் யாவற்றையும் அவதானித்துக் கொண்டே உள்ளார்கள்;*
* *இவர்களுக்கு முக்காலத்து நிகழ்வுகள் யாவும் ஒரே பார்வையில் புலப்படும்;*
* *ஒருபோதும் இழக்க முடியாத "சோம்பல்" நிலையை - சமாதி நிலையை - இறப்பு நிலையைப் பெற்று இருப்பார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

128. சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பதும் சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்து இடம்
சோம்பர் கண்டார் அச்சுருதிக் கண் தூக்கமே.

* தூய சுத்தமான வெளியிலேயே சோம்பர்கள் - சமாதி பெற்றோர் இருப்பார்கள்;
* தூய சுத்தமான வெளியிலேயே சோம்பர்கள் - சமாதி பெற்றோர் கிடப்பார்கள் ;
* வேதத்தின் முடிவில் - சப்தத்தின் முடிவில் சோம்பர்கள் - சமாதி பெற்றோர், முழுமைத்துவத்தின் உணர்வு பெறுவர்;
* அப்பொழுது வேதம் தூங்கிவிடும். சப்தசொரூபம் முற்றாக நீங்கிவிடும். இந்த உண்மையைக் கண்டவர்கள் - சமாதி எய்தியவர் ஆவர். இவர்கள் சோம்பர் (ஞானத்தூக்கம் உள்ளவர்) எனவும் அழைக்கப்படுவர்.

129. தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டர் சிவயோகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டார் நிலை சொல்வது எவ்வாறே.

* சிவபரம்பொருளின் சிவ உலகத்தை ஞானத்தால் தூங்கியவாறே தம் உள்ளே காண்கின்றார்கள்
* சிவபரம்பொருளின் சிவயோகத்தை, ஞானத்தால் தூங்கியவாறே தம் உள்ளே காண்கின்றார்கள்.
* சிவபரம்பொருளின் அருட்போகத்தை, ஞானத்தால் தூங்கியவாறே தம் உள்ளே காண்கின்றார்கள்.
* இந்த ஞானத்தூக்கத்தில் - சிவ தூக்கத்தில் இருந்தே முழுமைத்துவத்தை - உண்மையை உணர்பவர்களை - சோம்பர்களை - சமாதிநிலை எய்தியோரை எவ்வாறு விளங்கப்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

130. எவ்வாறு காண்பான், அறிவு, தனக்கு, எல்லை
அவ்வாறு அருள் செய்வன் ஆதி பரம் தானும்
ஒவ்வாத மன்றுள் உமை காண ஆடிடும்
செவ்வானில், செய்ய செழும் சுடர் மாணிக்கம்

* எல்லைகளை எல்லாம் உடைத்து விடு. அறிவின் செயற்பாடுகளையும் கடந்து விடு;

* அப்பொழுதுதான் உன்னால் இறைவரின் பரிபூரண அருளை அனுபவிக்க முடியும். அதனால் ஆட்கொள்ளப்படுவாய்;

* தூய சுத்தமான வெறு வெளியில், பரம்பொருள், ஆனந்தத் திருக்கூட்டத்தில் அமைந்திருப்பதை, சுத்த சக்தி மிகவும் விழிப்பாகவே இருந்து அவதானிக்கின்றது;

* இந் நிகழ்ச்சி சிவந்த வான் வெளியில் நெருப்பு நிற மாணிக்கத்தைப் பதிப்பதற்கு ஒப்பாகும்.

131. மாணிக்கத்து உள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத்து உள்ளே மரகத மாடமாய்
ஆணிப் பொன் மன்றில் ஆடும் திருக்கூத்தைப்
பேணித் தொழுது என்ன பேறு பெற்றாரே!

* அது மாணிக்கத்திற்குள் தோன்றும் மரகதப் பச்சை நிறச் சோதியாய் வெளிப்படும்;
* அது மாணிக்கத்தின் உள்ளே மரகதப் பச்சை நிறத்தால் ஆன மாளிகையாகப் புலப்படும்;
* அது என்றும் என்றும் சுத்த தூய வெறுவெளியில் ஆனந்த நடனத்தில் உள்ளது;
* இந்த ஆனந்த நடனத்தைத் தொழுது, பக்குவமாக உள்ளே பேணிப் பாதுகாத்துப், பெரும் பெரும் பயன் பெறுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

132. பெற்றார் உலகில், பிரியாப் பெருநெறி
பெற்றார் உலகில், பிறவாப் பெரும்பயன்
பெற்றார் அம்மன்றில் பிரியாப் பெரும்பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே.

* அதன் ஆனந்த நடனத்தை அனுபவிப்பவர்கள் அதை விட்டு நீங்காத பெருநெறியில் இருப்பார்கள்;
* அவர்கள், உலகில் மீண்டும் பிறவாத பெரும் பயனை அடைவார்கள்;
* அவர்கள், சுத்த தூய வெறுவெளியைப் பிரியாத பெரும் பேறாகப் பெறுவர்;
* அவர்கள், இவ் உலகத்தில் உள்ளார்கள். ஆனால் மௌனமாகிப் பேசாத பெருமையுடன் உள்ளார்கள்.

133. பெருமை சிறுமை அறிந்து எம்பிரான் போல்
அருமை எளிமை அறிந்து அறிவார் ஆர்
ஒருமையுள் ஆமைபோல் உள் ஐந்து அடக்கி
இருமையும் கேட்டு இருந்தார் புரை அற்றே.

* அது அணுவுக்குள் அணுத்துகளாக உள்ளது. அது பிரபஞ்சம் கடந்து எங்கும் வியாபகமாக உள்ளது;
* அது மிகமிக அருமையாக அரிதாகவே புலப்படும். அதன் எளிமையை உணர்பவர் - அறிபவர் ஆர் உள்ளார்கள்.
* ஆமை தனது நான்கு கால்களையும், தலையையும் ஆபத்து வேளையில் ஒரே நேரத்தில் தனது ஓட்டினுள் இழுத்துக் கொள்ளும்; இவ்வாறு
* பெரியோர் ஐம்புலன்களின் முழுச் செயற்பாடுகளையும் தம் உள்ளே முழுமையாகத் திருப்பி விடுவார்கள்;
* இவர்கள் இரு வினைகளின் செயற்பாடுகளையும் கேட்டு, தெளிந்து எந்தவித மயக்கமும் இன்றி இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

134. புரை அற்ற பாலின் உள் நெய் கலந்தால் போல்
திரை அற்ற சிந்தை நல் இறைவன் செப்பும்
உரை அற்று உணர்வோர் உடம்பு இங்கு ஒழிந்தால்
கரை அற்ற சோதி கலந்த சத்தாமே.

* சுத்தமான பாலில் நெய் மிகவும் அற்புதமாகக் கலந்துள்ளது;
* எந்த விதமான மயக்கமும், கலக்கமும் இல்லாத நல்ல இதயத்தில் இறைவனின் சப்த்தம் மறைந்தே உள்ளது;
* இவர்கள் மௌன நிலையில் முழுமைத்துவத்தை உணர்வார்கள்.
* இவர்களின் உடம்பு கலைந்து போகும் காலத்து, அளவிட முடியாத சோதியுடன், சத்துப் பொருளுடன், இறைவனின் பாதார விந்தங்களில் இவர்கள் சேர்ந்து கொள்வார்கள்.

135. சத்த முதல் ஐந்தும் தன் வழித்தான் சாரில்
சித்துக்குச் சித்து அன்றிச் சேர்வு இடம் வேறு உண்டோ
சுத்த வெளியில் சுடரில் சுடர் சேரும்
அத்தம் இது குறித்து ஆண்டு கொள் அப்பிலே.

* சத்தத்திற்கு முதலானது "ஓம்" ஆகும். ஓங்காரத்திற்கு ஐந்து ஆதார பாதங்கள் உண்டு. அவையாவன அகரம், உகரம், மகரம், இகரம், எகரம் ஆகும்;
* வெறு வெளியுடன் வெறு வெளி சேர்ந்து கொள்ளும். நீர் நீருடன் கலந்து கொள்ளும்;
* இந்தச் சுத்த வெறு வெளியிலே - ஜோதியோடு ஜோதி சேர்ந்து கொள்ளும்;
* இந்தச் சிறந்த நெறியைத் தெரிந்து, ஏற்றுத் தெளிவடைந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136. அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பு எனப் பேர் பெற்று உருச்செய்த அவ் உரு
அப்பினில் கூடியது ஒன்றாகுமாறு போல்
செப்பினில் சீவன் சிவத்துள் அடங்குமே.

* சூரியனது வெப்பத்தினால் உப்பு நீர் ஆவியாகிச் செல்லும்;
* நீர் ஆவியான பின் எஞ்சிய பகுதி உப்பு ஆகின்றது;
* உப்பு மீண்டும் நீருடன் சேரும் போது உப்பு நீர் ஆகின்றது;
* ஆத்மா சிவபரம் பொருளின் பாதார விந்தங்களுடன் ஐக்கியமாக இருக்கும்.

சூரியன் - சிவம், சூரிய வெப்பம்- சக்தி
நீர் ஆவி - உயிர், உப்பு - உடம்பு
உப்பு நீர் - உடம்பும் உயிரும்.

137. அடங்குபேர் அண்டத்து அணு அண்டம் சென்று அங்கு
இடம் கொண்டது இல்லை இது அன்றி வேறு உண்டோ
கடம் தொறும் நின்ற உயிர் கரை காணில்
திடம் பெற நின்றான் திருவடிதானே.

* மிகவும் வியாபகமான பெரிய அண்டங்கள் உண்டு. மிகவும் நுண்ணிய அணுவுக்குள்ளும் அண்ட அமைப்பு உண்டு.
* ஆத்மா - அதில் இருந்து வெளிப்படும் "உயிர்ப்புச்" சக்தி அணு முதல் அண்டம் ஈறாகச் சஞ்சாரம் செய்கின்றது.
* எத்தனையோ பிறப்புக்களை உயிர் எடுக்கின்றது. எண்ண முடியாத கோடிக்கணக்கான உயிர்கள் இந்தப் பிரபஞ்சத்தில் உண்டு.
* இறைவர், எம்முள்ளேயே உறுதியாகத் திருவடியாக நிற்பார் - வெளிப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

138. திருவடியே சிவம் ஆவது தேரில்
திருவடியே சிவலோகம் சிந்திக்கில்
திருவடியே செல்கதியது செப்பில்
திருவடியே தஞ்சம் உள் தெளிவார்க்கே.

* சிவபரம்பொருளே திருவடியாகும். இந்த உண்மையை முழுமையாக உணர வேண்டும்;
* சிவபரம்பொருள் திருவடி எனும் உலகம் ஆகியுள்ளது. இதை நாம் ஆத்ம சிந்தனையில் சதா இருத்தல் வேண்டும்.
* நாம் செல்கின்ற இடம் எங்கும், எப்பொழுதும் திருவடியையே செபித்தல் வேண்டும்.
* திருவடியைத் தன்னுள்ளே தெளிவார்க்கு திருவடியே புகலிடமாகத் - தஞ்சமாக அமையும்.

139. தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே.

* சிவபரம் பொருளாம் குருவின் திருமேனியைக் காட்சியாகக் காணுதல் தெளிவு நிலையாகும் ;
* சிவபரம் பொருளாம் குருவின் திருநாமம் செபித்தல் தெளிவு நிலையாகும்;
* சிவபரம் பொருளாம் குருவின் சப்தத்தைக் கேட்டல் தெளிவு நிலையாகும்;
* சிவபரம் பொருளாம் குருவின் காட்சியை சதா சிந்தித்தல் தெளிவு நிலையாகும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

140. தானே புலன் ஐந்தும் தன் வசம் ஆயிடும்
தானே புலன் ஐந்தும் தன் வசம் போயிடும்
தானே புலன் ஐந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்து எம்பிரான்தனைச் சந்தித்தே.

* *ஐந்து புலன்களும் செயலற்று ஆத்மாவின் வயப்பட்டு விடும்;*

* *ஐந்து புலன்களும் செயலற்று ஆத்மாவோடு ஒன்றாகி விடும்; பின்னர்*

* *ஐந்து புலன்களும் ஞானப்பால் சொரிய ஆரம்பித்து விடும்;*

* *ஆத்மா எப்பொழுதும் இறைவனைத் தனியாகவே சந்திக்கும் - சந்திக்க முடியும்.*

141. சந்திப்பது நந்தி தன் திருத்தாள் இணை
சிந்திப்பது நந்தி செய்ய திருமேனி
வந்திப்பது நந்தி நாமம் என் வாய்மையால்
புந்திக்குள் நிற்பது நந்தி பொற்போதமே.

* *நான் திருநந்தி தேவரின் இணையாம் திருவடியைச் சந்தித்தேன்;*

* *நான் திருநந்தி தேவரின் அருட்திருமேனியைச் சிந்தித்தேன்;*

* *உண்மையாகவே திருநந்திதேவரின் திருநாமத்தைச் செபித்தேன்;*

* *என்னுள்ளே - ஆத்மாவின் உள்ளே நந்தியின் பொன்னான - மெய்ஞ்ஞான சிவபோதமே நிறைந்துள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

142. போதம் தரும் எங்கள் புண்ணிய நந்தியை
போதம் தனில் வைத்துப் புண்ணியர் ஆயினார்
நாதன் நடத்தால் நயனம் களி கூர
வேதம் துதித்திடப் போய் அடைந்தார் விண்ணே.

* *இறை புண்ணியம் நிறைந்த நந்தி எம்பெருமான் மெய்ஞ்ஞான சிவபோதத்தை எமக்குத் தருவார்;*
* *இம்மெய்ஞ்ஞான சிவபோதத்தை உணர்ந்து போற்றுபவர்கள் இறை புண்ணியர் ஆவர்;*
* *எம் அகக் கண் இறைவனது ஆனந்த நடனத்தைக் கண்டு ஆனந்தம் அடையும்;*
* *நாம் சப்த்த சொரூபத்தைக் கேட்டவாறே இறைநிலை எய்துவோம்.*

## II. யாக்கை நிலையாமை

143. மண் ஒன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண் என்று இருந்தது தீவினை சேர்ந்தது
விண் இன்று நீர்விழின் மீண்டும் மண்ணால் போல்
எண் இன்றி மாந்தர் இறக்கின்ற வாறே.

* *உடம்பு ஒரு மண். அது ஒரு பூமி. அதில் இரு வகையான பாத்திரம் உண்டு.*

  *ஒன்று: அறிவாலும் எண்ணங்களாலும் உருவாகிய மனப் பாத்திரம்.*

  *இரண்டு : அன்பாலும், அருளாலும் உருவாகிய ஆத்மீக இதயப் பாத்திரம்;*
* *விழிப்பற்றுத் தெளிவு அற்று இருந்ததனால், தீவினைகள் எல்லாம் பாத்திரத்தில் நிறைந்து விட்டது;*
* *மண் பாத்திரம் நீரில் நனைந்து கரைந்து மீண்டும் மண் நிலைக்குச் சென்றுவிடும்;*
* *தீவினையில் அகப்பட்டுக், கோடிக் கணக்கான மக்கள் இறந்து படுகின்றார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

144. பண்டம் பெய் கூரை பழகி விழுந்தக் கால்
உண்ட அப்பெண்டிரும் மக்களும் பின் செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழி நடவாதே.

* இந்த உடம்பு கூரையுடன் கூடிய ஒரு பானை. உடம்பு எல்லா உலக போகங்களையும் அனுபவித்துப் பின் விழுந்துவிடும்;
* அனுபவித்த - வாழ்க்கைப்பட்ட மனைவியும், குழந்தைகளும் பின் தொடரப் போவதில்லை.
* மேற்கொண்ட விரதங்களும், ஞானமும் தான் மரணத்தின் பின்தொடர்ந்து வரும்;
* ஆகவே இறைவனுடன் சேர்ந்து கொள்ள ; மனைவியையோ, குழந்தைகளையோ நம்பி இருக்க வேண்டாம். உண்மையான சாதனையை நீங்கள் மேற்கொள்ளுங்கள்.

145. ஊர் எல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம் என்று பேர் இட்டுச்
சூரையம் காட்டு இடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே.

* இறந்த பிற்பாடு ஊர்மக்கள் எல்லாரும் ஒன்றுகூடி சத்தமிட்டு அழுவார்கள்;
* உரிய் நாமத்தை நீக்கி, உடம்பிற்குப் பிணம் என்று பெயரிட்டுக் கொள்வார்கள்;
* சூரை மரம் நிறைந்த காட்டில் பிணத்தை எடுத்துச் சென்று சுடுவார்கள்;
* இறுதியாக நீரினில் நீராடி உன் எல்லா நினைவுகளையும் மறந்து விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

146. காலும் இரண்டு முகட்டு அலக்கு ஒன்று உள
பால் உள்பரும் கழி முப்பத்து இரண்டு உள
மேல் உள கூரை பிரியும் பிரிந்தால் முன்
போல் உயிர் மீளப் புக அறியாதே.

* இரண்டு கால்கள் உண்டு. மண்டை ஓடு ஒன்று உண்டு;

* முப்பத்து இரண்டு பிரதான எலும்புகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆண்பால், பெண்பால் எனும் இரு பிரிவு உண்டு; .

* மண்டை ஓட்டின் உச்சிப் பகுதி பிரிந்து போய்விடும்;

* உயிர் மீண்டும், இறந்த உடலுக்குள் புகுந்து செல்லும் தன்மை அற்றது.

147. சீக்கை விளைந்தது செய்வினை மூட்டு இற்ற
ஆக்கை பிரிந்தது அலகு பழுத்தது
மூக்கினில் கைவைத்து மூடிஇட்டுக் கொண்டு போய்க்
காக்கைக்குப் "பலி" காட்டிய வாறே.

* நோய் வந்து விட்டது. செய்த வினை சூழ்ந்து கொண்டது. எலும்பு மூட்டுகள் வலு இழந்து விட்டன;

* மண்டை ஓடும் நன்கு பழுத்து விட்டது. உயிர் பிரிந்து விட்டது;

* மூக்கில் கை வைத்துப் பார்த்தனர். சுவாசம் நின்று விட்டது. உடம்பை நன்றாக மூடி விட்டார்கள்;

* காகத்திற்குப் பலியான உடலை உணவாக விட்டுச் சென்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

148. அடப் பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக் கொடி யாரொடும் மந்தணம் கொண்டார்
இடப் பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்து ஒழிந்தாரே.

* எல்லாவற்றையும் பேணிப் பாதுகாத்தார். நல்ல நல்ல வகையான உணவுகளை உட்கொண்டார்;
* அழகிய இளம் பெண்களில் காதல் பூண்டு உறவு கொண்டார்;
* இறைவா! இடப்பக்கம் தான் நோகின்றதே! என்று கூறினார்;
* அப்படியே படுக்கையில் நோய்வாய்ப்பட்டுக் கிடந்து விட்டார். பின் இறந்து போனார்.

149. மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகை பெற்று ஏறினான்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்
சென்று அத்தா என்னத் திரிந்திலன் தானே.

* ஆத்ம வெளியிலே, உயிர் உறைந்து கொண்டு உடம்பை எடுத்துக் கொண்டது;
* ஆத்ம வெளியிலே உயிர் உறைந்து, அங்கிருந்து உயிர்ப்புச் சக்தியாக உடல் பூராவும் பிரயாணம் செய்து, உச்சியாகிய சகஸ்ரம் அமையும் இடத்திற்கு வந்து செல்லும்;
* ஆத்ம வெளியிலே, உயிரார் உயிர்ப்பு சத்தியால் வேண்டிய எல்லாவற்றையும் எடுத்துப், பிரபஞ்சத்தின் மூன்று கோடிகளை – முடிபுகளைத் தெளிவுபடுத்துகின்றார்;

*1. பிறப்பு* *2. இருப்பு* *3. இறப்பு*

* உயிரார், எல்லாவற்றையும் உடம்புக்கு உள்ளேயே அனுபவிப்பதால், அவர் எங்கும் செல்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

150. வாசந்தி பேசி மணம் புணர்ந்து அப்பதி
நேசம் தெவிட்டி நினைப்பு ஒழிவார் பின்னை
ஆசந்தி மேல்வைத்து அமைய அழுதிட்டுப்
பாசம் தீச் சுட்டுப் பலி அட்டினார்களே.

* இனிமையான மொழிபேசித் திருமணம் செய்து கொள்வார்கள். இருவரும் பின்னர் ஒன்று கூடிக் கொள்வார்கள்;
* அன்பு, நேசம், உறவு சலித்து விட்டது என்பார்கள். நினைப்புகள் எல்லாம் மறந்து போவார்கள்.
* மரணமான பின்னர், மலர்களை உடல் மேல் வைப்பார்கள். பாசப் பிரிவால் ஓலமிட்டு அழுவார்கள்;
* உடலை எடுத்துச் சென்று தீயினால் சுட்டு நீறாக்கி விடுவார்கள்.

151. கைவிட்டு நாடிக் கருத்து அழிந்து அச்சு அற
நெய் அட்டிச் சோறு உண்ணும் ஐவரும் போயினார்
மை இட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடை கொள்ளுமாறே.

* நாடிகள் துடிப்பது நின்றுவிடும். மனக் கருத்துக்கள் எல்லாம் முற்றாக அழிந்துவிடும்;
* நன்றாக நெய் ஊற்றி சோறு சாப்பிடும் ஐந்து புலன்களும் போய்விடும்;
* கண்ணுக்கு மை தீட்டிய மனைவியும் செல்வமும் இருக்கின்றன;
* இறந்த பின், உடம்பை எல்லாரும் துக்கத்துடன் வந்து பார்த்துப் பின் விடை பெற்றுக் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

152. பந்தல் பிரிந்தது பண்டாரம் கட்டு அற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைந்தன
துன்புறு காலம் துரிசு வர மேன்மேல்
அன்பு உடையார்கள் அழுது அகன்றார்களே.

* *சிரசின் உச்சி பிரிந்துவிட்டது.மூலத்துடன் – உள்ளே – ஒன்றுடன், ஒன்று தொடர்புள்ள பிணைப்புகள் எல்லாம் அறுந்துவிட்டன;*
* *ஒன்பது வாசல்களும் ஒன்றாக அடைத்துவிட்டன.*

| | | |
|---|---|---|
| *கண் 2,* | *காது 2,* | *மூக்குத்துவாரம் 2,* |
| *வாய் 1,* | *மலவாசல் 1,* | *சலவாசல் 1* |

* *நோய்வாய்ப்பட்டுத் துன்பப்படுகின்ற போது மேலும் துன்பம் நோய், அதிகரித்து மரணத்தை ஏற்படுத்துகின்றது;*
* *அன்பு உள்ளவர்கள் எல்லாம் வந்து அழுது பின் அகன்று செல்கின்றார்கள்.*

153. நாட்டுக்கு நாயகன் நம் ஊர்த் தலைமகன்
காட்டுச் சிவிகை ஒன்று ஏறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறை கொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே.

* *உயிரார் உடம்பு என்னும் நாட்டுக்குத் தலைவனாகத்தான் இருந்தார். ஊருக்கும் சிறந்த தலைவனாகவே இருந்தார்;*
* *ஆனால் அவர் ஒருநாள் மரணம் ஆகிவிட்டார். பின் காட்டுக் கட்டைகளால் ஆன அலங்கார ஊர்தியில் ஏற்றப்பட்டார். சடங்குகள் சம்பிரதாயங்கள் செய்யப்பட்டன;*
* *நாட்டு மக்கள் மரண ஊர்வலத்தின் பின்னே செல்கின்றார்கள். அதற்கு முன்னாடிப் பறை ஓசையினைக் கொட்டிக் கொண்டே செல்கின்றது;*
* *உடம்பின் உயிரும், தானாகவே விலகிச் சென்றுவிடுகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

154. முப்பதும் முப்பதும் முப்பத்து அறுவரும்
செப்ப மதில் உடைக் கோயில் உள் வாழ்பவர்
செப்ப மதில் உடைக் கோயில் சிதைந்த பின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே.

* தொண்ணூற்று ஆறுபேர் எமது உடலோடு உள்ளனர்;
* நன்றாகச் செய்யப்பட்ட, மதில்கள் உடைய உடல் எனும் கோயிலில் வாழ்கின்றனர்;
* நன்றாகச் செய்யப்பட்ட, மதில்கள் உடைய கோயில் ஒருநாள் சிதைந்து போகும்;
* அதன்பின் ஒரே நேரத்தில் தொண்ணூற்று ஆறுபேரும் ஓட்டம் எடுப்பார்கள்;

*(பக்கம் 171 ஐப் பார்க்கவும்)*

155. மதுவூர் குழலியும் மாடும் மனையும்
இது ஊர் ஒழிய இதணமது ஏறிப்
பொது ஊர் புறம் சுடு காடது நோக்கி
மதுவூர வாங்கியே வைத்து அகன்றார்களே.

* தேன் மொழி பேசும் மனைவியும், செல்வமும், வீடும் இருக்கின்றன. உயிர் பிரிந்து விட்டது;
* இந்தச் சொந்தங்களும் ஒழிந்து போகின்றன. உடலைப் பரண் மீது ஏற்றி வைப்பார்கள்;
* ஊருக்குப் பொதுவாகப் புறமாக உள்ள சுடுகாட்டை நோக்கி உடலை எடுத்துச் செல்வார்கள்;
* தேனை நன்றாக உடல்மீது ஊற்றித் தீயை வைத்து அகன்று விடுவார்களே – விலகி விடுவார்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

156. வைச்சு அகல் உற்றது கண்டு மனிதர்கள்
அச்சு அகலாது என நாடும் அரும் பொருள்
பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு, மற்றவர்
எச்சகலாது நின்று இளைக்கின்ற வாறே.

* *மனிதர் தம் உள்ளே வைக்கப்பட்டுள்ள விளக்கினைக் காணபரேல்;*
* *அவ்விளக்கின் மூலத்தைப் பிரியாது தேடற்கு அரிய பொருள் என்று நாடிக் கொள்வர்;*
* *உள்ளே தரப்பட்டுள்ள - தொடர்ச்சியான வாய்ப்பினை - சந்தர்ப்பத்தை இழப்பார்களேல், அவர்கள்;*
* *உடலின் ஆசாபாசங்களில் நின்று உழல்வார்கள். இறந்துபட்டு ஒழிவார்கள்.*

157. ஆர்த்து எழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்த பின்
வேர்த்தலை போக்கி விறகிட்டு எரி மூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதி இலோரே.

* *இறந்த பிற்பாடு, ஆரவாரித்துத் துக்கத்தால் எழுகின்ற சுற்றத்தவரும், மனைவியும், குழந்தைகளும்;*
* *ஊரின் இறுதி வரைக்கும் வருவர். பின்னர், வீட்டுக்குச் செல்வர்;*
* *தலையின் முடி நீக்கி விறகுகளில் உடலை வைத்து நெருப்பினை மூட்டி விடுவர்.*
* *பின் நீரில் மூழ்குவர். இவர்கள் எல்லோரும் நீதி இல்லாதவர்கள். உண்மை உணராதவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

158. வளத்திடை முற்றத்தோர் மாநிலம் முற்றும்
குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்
குடம் உடைந்தால் அவை ஓடு என்று வைப்பர்
உடல் உடைந்தால் இறைப்போதும் வையாரே.

* எல்லா விதமான வளங்களும் நிறைந்த வெறுவெளி ஒன்று உண்டு.
* கோடிக்கணக்கான அணுக்கள், கோடிக் கணக்கான ஜீவராசிகள், கோடிக் கணக்கான பிரபஞ்சங்கள்; குளிர்ச்சி நிறைந்த ஒரே வகையான மூலப் பொருள்கள் கொண்டு ஆக்கப்பட்டுள்ளன;
* மண்ணால் ஆன குடம் உடைந்தால், மனிதர்கள் அவை மண் ஓட்டின் துண்டு என வைப்பார்கள்;
* இறந்த உடலை ஒரு கணப் பொழுதேனும் வைக்க மாட்டார்கள்.

159. ஐந்து தலைப்பறி, ஆறு சடை உள
சந்து அவை முப்பது சார்வு பதின் எட்டு
பந்தலும் ஒன்பது பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது மேல் அறியோமே.

* தலையிலேயே - முகத்திலேயே ஐந்து புலன்களும் உண்டு. ஆறு வகையான மாயா மயக்கங்கள் உள்ளன;
* பதின் எட்டுப் பக்கங்கள் உள்ளன. முப்பது வகையான சந்துக்கள் உண்டு;
* ஒன்பது பந்தல்கள் உண்டு. பதினைந்து வரிசைகள் உண்டு;
* இறந்த பிற்பாடு இவை எல்லாம் நெருப்பிலே வெந்து கிடக்கின்றன. இவைக்கு மேற்கொண்டு என்ன நடந்ததோ தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

160. அத்திப் பழமும் அறக்கீரை நல்வித்தும்
கொத்தி உலைப் பெய்து கூழட்டு வைத்தனர்
அத்திப் பழத்தை அறக்கீரை வித்து உண்ணக்
கத்தி எடுத்தவர் காடு புக்காரே.

* பெண்ணினதும், ஆணினதும் சேர்க்கையினால் – புணர்ச்சியினால் கருப்பையில் குழந்தை உருவாகின்றது.
* பெண்ணையே ஒருவன் விடாது தொடர்ச்சியாகக் காம வேட்கையால் புணர்ச்சி செய்வான் ஆகில்;
* அவன் மிக விரைவாக மரணம் அடைந்து விடுவான். சுடுகாட்டை நோக்கியே செல்வான். கத்தி எடுத்தவர் யுத்தத்தில் கத்தி யாலேயே மரணம் அடைவர். காமம் தலைக்கு எடுத்தவர், காம வெறியின் யுத்தத்தில் இறந்து விடுவார்.

| | | |
|---|---|---|
| அத்திப்பழம் | – | பெண்ணின் புணர்ச்சிப் பகுதி |
| அறக்கீரை நல்வித்து | – | ஆணின் புணர்ச்சிப் பகுதி |
| கத்தி | – | காமம் |

161. மேலும் முகடு இல்லை கீழும் வடிம்பு இல்லை
காலும் இரண்டு முகட்டு அலகு ஒன்று உண்டு
ஓலையான் மேய்ந்தவர் ஊடு வரியாமை
வேலையான் மேய்ந்தது ஓர் வெள்ளித் தளியே.

* உடலின் மேல்பக்கமாக எந்தவிதமான உறுதியான கவசம் ஒன்றும் இல்லை. உடலின் கீழ்ப்பக்கமாகவும் தெளிவாக ஒன்றும் இல்லை.
* இரண்டு கால்கள் உண்டு. மண்டை ஓட்டைமுடி ஒரு கவசம் உண்டு.
* நரம்புகள், நாடிகள், நாளங்கள், எலும்புகள், தசை, தோல் ஆகியன உடலில் மிகவும் அற்புதமாக வேயப்பட்டுள்ளன. உச்சி – சகஸ்ரம் உள்ள பகுதி அவ்வாறு வரையப்படவில்லை;
* இவ்வாறு வேயப்பட்ட – வெள்ளியால் அமைந்தது போன்ற ஆத்ம கோயிலிலே இறைவன் அமர்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

162. கூடம் கிடந்தது கோலங்கள் இங்கு இல்லை
ஆடும் இலையமும் அற்றது அறுதலும்
பாடுகின்றார் சிலர் பண்ணில் அழுதிட்டுத்
தேடிய தீயினில் தீய வைத்தார்களே.

* உடம்பு இறந்துவிட்டது. அங்கே "உயிர்ப்பு" சக்தியால் ஏற்பட்ட கோலங்கள் ஒன்றையும் காணவில்லை;
* எல்லாவிதமான செயற்பாடுகளும், சின்னங்களும் அற்றுப் போகின்றன;
* இறந்த உடலுக்கு முன்னாக இருந்து, அழுது பண்ணில் பாடுகின்றார்கள்;
* பின்னர் உடம்பினைத் தீயில் வைத்து விடுகின்றார்கள்.

163. முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தான் இலை ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண்டு ஆண்டினில்
கெட்டது எழுபதில் கேடு அறியீரே.

* முந்நூறு நாட்களாகத் தாயின் வயிற்றில் இருந்து வளர்ந்து, பின் குழந்தை பூமிக்கு வருகின்றது;
* குழந்தை எந்தச் செல்வத்தையும் கொண்டு வரவில்லை. ஆண்டியாகத்தான் பிறக்கின்றது;
* பன்னிரண்டு வயதினிலே மணவாழ்க்கைக்குத் தயாராகி விடுகின்றது;
* எழுபது வயதில் இறந்து போகின்றது. இந்தத் துன்பத்தை அறியாதே இருக்கின்றார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

164. இடிஞ்சில் இருக்க விளக்குஎரி கொண்டான்
முடிஞ்சது அறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சு இருளாவது அறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே.

* எம்முள்ளே ஆத்மஜோதி உண்டு. ஆனால் வெளியில் உள்ள விளக்கினைத் தேடுகின்றார்களே;
* உடல் இறந்துபடுவதை அறியார்கள். மூடர்கள் பேருக்கும், புகழுக்கும் ஆகத் தங்களைப் பறைசாற்றிக் கொள்வார்கள்.;
* பொழுது விடிந்து காலை ஆகின்றது. பின் இருள் ஆகின்றது. இந்தச் செயலை அறியாது உள்ளார்கள்;
* மயக்கத்தால் தெளிவற்ற தன்மையில் அழுந்திப் பதைபதைத்துக் கொண்டே உள்ளார்கள்.

165. மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த
உடலும் உயிரும் உருவம் தொழாமல்
இடர் படர்ந்து ஏழா நரகில் கிடப்பர்
குடர் பட வெம்தமர் கூப்பிடு மாறே.

* மிக அலங்காரங்களுடன் பிரம்மதேவர் எல்லாப் படைத்தல் தொழிலையும் செய்கின்றார்;
* தரப்பட்ட தரவாகிய உடலாலும், உயிராலும், – தெளிந்த உருவத்தை வழிபடாது உள்ளார்கள்;
* துன்பத்திலேயே படர்ந்து கிடப்பார்கள். ஏழுவகை நரகங்களில் கிடந்து உழல்வார்கள்;
* மரண துன்பம் வரும் பொழுது குடல் எல்லாம் நோகத் தனது உறவினர்களையே கத்திக் கூப்பிடுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

166. குடையும் குதிரையும் கொற்ற வாளும் கொண்டு
இடையும் அக்காலம் இருந்து நடுவே
புடையு மனிதனார் போகும் அப்போதே
அடையும் இடம் வலம் ஆர் உயிராமே.

* வெண் கொற்றக்குடை, பட்டத்துக் குதிரை, பரம்பரையாக யுத்தத்தில் பாவிக்கப்படும் வாள் இவற்றை எல்லாம் வைத்து;
* அரசன் சபை நடுவே இருந்து நாட்டை ஆட்சி செய்கின்றான்.
* சுற்றம் சூழவே அரசனின் உயிர் போகும்;
* அப்பொழுது அவன் செய்த ஆட்சியின் தன்மையைக் கொண்டு – நன்மை தீமைக்கு ஏற்ப அவன் உயிர் பலனைப் பெறும்.

167. காக்கை கவரில் என் கண்டார் பழிக்கில் என்
பால் துளி பெய்யில் என் பல்லோர் பழிச்சில் என்
தோல் பையுள் நின்று தொழில் அறச் செய்து ஊட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போன இக்கூட்டையே.

* காகக் கூட்டம் வந்து உடலைக் கொத்தி உண்டால் தான் என்ன! காண்பவர்கள் எல்லோரும் இந்த உடலைப் பழித்தால்தான் என்ன;
* பால் பன்னீர் முதலியவற்றால் உறவினர் தெளித்தால் தான் என்ன! வேண்டியவர்கள் புகழ்பாடினால் தான் என்ன!
* உடம்பிற்குள் இருந்த தொழில்கள் எல்லாம் முற்றாக அற்றுப் போய்விட்டது;
* ஆத்மா உடலைவிட்டுப் புறப்பட்டுவிட்டது. இனிமேல் இந்த உடம்புக்கு என்ன வேண்டி இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III. செல்வம் நிலையாமை

168. அருளும் அரசனும் ஆனையும் தேரும்
பொருளும் பிறர் கொள்ளப் போவதன் முன்னம்
தெருளும் உயிரொடும் செல்வனைச் சேரில்
மருளும் பினை அவன் மாதவம் அன்றே.

* கொடை வள்ளலான அரசனும், அவனது தேர்ப்படையும், அவனது யானைப் படையும் நிலையற்றவை;
* நிலையற்ற செல்வங்கள் எல்லாவற்றையும் மாற்றார் ஒருநாள் எடுத்துக் கொள்வார்கள்;
* உயிர் தத்தளிக்கும் போதாவது இறைவனை உடனடியாக நாடுங்கள். சேருங்கள்;
* இதுவே சிறந்த தவம் ஆகும். அப்பொழுதே உங்கள் மாயாமயக்கங்கள் எல்லாம் அற்றுப் போகும்.

169. இயக்குறு திங்கள் இருள் பிழம்பு ஒக்கும்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மயக்கற நாடுமின் வானவர் கோனைப்
பெயற் கொண்டல் போலப் பெரும் செல்வம் ஆமே.

* எம்மை எல்லாம் இயக்குபவள் தாய் ஆவள். அவள் இருட்டில் வெளிப்படும் ஒளிப் பிழம்புக்கு ஒப்பானவள்;
* துன்பம் தருகின்ற தேய்ந்து போகின்ற செல்வத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்;
* மயக்கம் எல்லாம் அற்றுப் போகும் வண்ணம் இறைவனை நாடிக் கொள்ளுங்கள்;
* இதுவே உங்கள் அழியாத உண்மைச் செல்வம் ஆகும். தேட்டம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

170. தன்னது சாயை தனக்கு உதவாது கண்டு
என்னது மாடு என்று இருப்பர்கள் ஏழைகாள்
உன்உயிர் போம் உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காண் ஒளி கண்டு கொளீரே.

* என்னுடைய விம்பம் - என்னுடைய நிழல் எனக்கு ஒருபோதும் பயன்படப் போவது இல்லை;
* உண்மையை இன்னது என்று உணராதவர்கள் - இவர்களே ஏழைகள். தங்களுடைய செல்வம் என்று பெருமைப்படுகின்றார்கள்;
* உடலோடு ஒட்டிச் சேர்ந்து பிறந்த உயிர் ஒருநாள் போய் விடும்.
* அகக் கண்ணால் ஞான ஒளியை விரைந்து கண்டு கொள்ளுங்கள்.

171. ஈட்டிய தேன்பூ மணம் கண்டு இரதமும்
கூட்டிக் கொணர்ந்து ஒரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரந்து இட்டது வலியார் கொளக்
காட்டிக் கொடுத்ததைக் கைவிட்டவாறே.

* தேனீ எல்லா நல்ல வாசனை நிறைந்த மலர்களில் இருந்தும் தேனைத் துளிதுளியாக எடுக்கும்;
* தேனை எடுத்துச் சென்று தனது கூட்டில் சேர்த்து வைக்கும்;
* வலியவர்களாகிய மனிதர்கள், கூட்டில் உள்ள தேனீக்களைக் கலைத்து விட்டுத் தேனை முற்றாக எடுத்துக் கொள்வார்கள்.
* தேனைத் தேனீக்கள்தான் எமக்குக் காட்டித் தருகின்றன. நாம் அவையைக் கைவிட்டு விடுகின்றோம். கலைத்து விடுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

172. தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கன் மின்
ஆற்றுப் பெருக்கில் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் மறுத்து உங்கள் செல்வத்தை
கூற்றன் வரும்கால் குதிக்கலு மாமே.

* எல்லாவற்றையும் கடந்து - தேறித் தெளிந்து கொள்ளுங்கள். தெளிந்தவர்கள் கலக்கம் அடைய வேண்டாம்;
* சம்சாரம் என்னும் பெரிய ஆற்றில் கலந்து அதைக் குழப்பம் அடையச் செய்து, நீயும் மயங்கி, அதையும் மயக்காதே;
* எல்லா ஆசாபாசங்களையும் மாற்றி முற்றாகக் களைந்து விடுங்கள்.
* மரணம் வரும் முன்னரே உங்கள் எல்லாச் செல்வங்களையும் எல்லாருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

173. மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம்போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடு பேறாகச்
சிமிழ் ஒன்று வைத்தமை தேர்ந்து அறியாரே.

* மகிழ்ச்சி தருகின்ற எல்லாச் செல்வமும் வீடும் இருக்கின்றன;
* இவை எல்லாம் கடல் மேல் கவிழ்ந்து போகக் கூடிய கப்பல் போன்று அழிந்துவிடும்;
* எல்லாச் செல்வங்களும் கலைந்து போகும். அழிந்து போகும்;
* வீடு பேற்றை - மெய்ஞ்ஞானச் செல்வத்தை அடைவதற்கு எம் உள்ளே சிமிழ் எனும் ஆத்மவெளி இறைவனால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனை ஒருவரும் தெளிந்து தேர்ந்து அறியாது உள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

174. வாழ்வும் மனைவியும் மக்கள் உடன் பிறந்
தாரும் அளவேது, எமக்கு என்பர் ஒண்பொருள்
மேவும் அதனை விரிவு செய்வார் கட்குக்
கூவும் துணை ஒன்று கூடலும் ஆமே.

* கோடிக் கணக்கான பிறப்புக்கூடாக வந்த வாழ்க்கையும், மனைவியும், மக்களும், உடன் பிறந்தவர்களும் எத்தனை கோடியோ! அளவிட முடியவில்லையே!
* மெய்ப் பொருள் – செம்பொருள் – இறைவர் எம் எல்லோருக்கும் உரியவர்;
* இதனோடு சேர்ந்து கொள்வார்களுக்கு, இதனோடு மேலும் மேலும் தொடர்ந்து கொள்வார்களுக்கு;
* எம்மை எழிற்சி நிலையில் வைத்திருக்க எமக்கு ஒருதுணை ஒன்றே தேவை. இதனுடன் தெளிந்து தேர்ந்து கூடிக் கொள்ளுங்கள்;

175. வேட்கை மிகுந்தது மெய்கொள்வார் இங்கிலை
பூட்டும் தறி ஒன்று போம் வழி ஒன்பது
நாட்டிய தாய் தமர் வந்து வணங்கிப் பின்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே.

* அளவுக்கு அதிகமாகவே ஆசை மிகுந்து விட்டது. உண்மையை உணர்ந்து கொள்வார் இங்கு ஒருவரும் இல்லையே.
* உடம்பின் அகப் புறச் செயற்பாடுகளை ஒன்றாக நிலைப் படுத்துவது ஆத்மாவாகும். ஆனால் அது ஒன்பது வாசல்கள் வழியாகப் போய்விடும்;
* அதன் பின்னர் பெற்றதாய் உற்ற மனைவி வந்து வணங்கு வார்கள்;
* எல்லாவற்றையும் காட்டித் தந்தவர்கள் வந்து, பின் விலகிச் சென்று விடுவார்கள். கைவிட்டே விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

176. உடம் பொடு உயிர் இடை விட்டு ஓடும் போது
அடும் பரிசு ஒன்றுஇல்லை அண்ணலை எண்ணும்
விடும் பரிசாய் நின்ற மெய்ந் நமன் தூதர்
சுடும் பரிசத்தையும் சூழகிலாரே.

* உடம்பை விட்டு உயிர் நீங்குகின்ற பொழுது;
* தொடர்ச்சியாக வரப்போகின்ற செல்வம் ஒன்று இல்லை. ஆனால் இறைவனைச் சதா நினைந்து எண்ணிக் கொள்ளுங்கள்;
* எல்லாவற்றிடமும் இருந்து எம்மை - உயிரைக் காலனின் தூதுவர்கள் பறித்து எடுத்து விடுவார்கள்;
* ஆனால் காலனின் தூதரால் ஆத்மாவை, அதன் சுத்த தன்மையை அணுகவே முடியாது.

## IV. இளமை நிலையாமை

177. கிழக்கு எழுந்து ஓடிய ஞாயிறு மேற்கே
விழக் கண்டுத் தேறார் விழியிலா மாந்தர்
குழக் கன்று மூத்து எருதாய்ச் சிலநாளில்
விழக் கண்டும் தேறார் வியன் உலகோரே,

* கிழக்குத் திக்கில் இருந்து சூரியன், ஒவ்வொரு நாளும் மேற்குத் திசை சென்று மறைகின்றது;
* இந்தச் செயலின் தாற்பரியத்தை தெளியாது உள்ளார்கள். இவர்கள் விழியில்லாத மக்கள் ஆவர்; சூரிய அஸ்தமனமும் உதயமும் பூமியின் சுழற்சியால் ஏற்படுபவை. உண்மையில் இவை வெறும் தோற்றப்பாடே. இங்கு உதயமும் இல்லை. அஸ்தமனமும் இல்லை. இது திருமூலர் கண்ட மெய்ஞ்ஞான உண்மை. இன்றைய விஞ்ஞானமும் இதனை நிரூபணம் செய்கின்றது.
* பசுவினது கன்று எங்கள் கண் முன்னாகவே பிறந்து சொற்ப நாட்களில் எருதாகி விடுகின்றது. பின் இறந்தும் போகின்றது. சடுதியான இந்த இளமை மாற்றத்தை - அழிவை உணராது உள்ளார்களே உலகத்து மக்கள். வியப்பாக அல்லவோ இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

178. ஆண்டு பலவும் கழிந்தன அப்பனைப்
பூண்டு கொண்டு ஆரும் புகுந்து அறிவார் இல்லை
நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினும்
தூண்டு விளக்கின் சுடர் அறியாரே.

* *எத்தனையோ ஆண்டுகள் மறைந்து ஓடிவிட்டன;*
* *இறைவனை அன்பினால் பூசித்து, ஆத்மாவில் மலரவைத்து உணர்பவர் ஒருவரையும் காண முடியவில்லையே;*
* *காலங்கள் எல்லாம் நீண்டு கொண்டே செல்கின்றன. காலங்கள் வளர்ந்து எமக்குப் பல தடவைகள் இறைவனை எண்ணச் சந்தர்ப்பத்தைக் கொடுக்கின்றனவே;*
* *எல்லோரும் அணையாத ஜோதியாய் உள்ள இறைவனின் ஞான ஒளியை உணராது உள்ளார்களே.*

179. தேய்ந்து அற்று ஒழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்து அற்ற பின்னை அரிய கருமங்கள்
பாய்ந்து அற்ற கங்கைப் படர் சடை நந்தியை
ஓர்ந்து உற்றுக் கொள்ளும் உயிர் உள்ள போதே.

* *தேய்ந்து அழிந்து போகாத இளமை ஒன்று உண்டு. அதுதான் ஆத்மா. இதன் வழிவகைச் செல்லுங்கள்;*
* *ஆராய்வுகள் எல்லாவற்றிற்கும் முடிவு கட்டுங்கள். அதன் பின்னரே உங்களால் ஆத்மாவின் அரிய பெரிய செயலற்ற செயல்களை உணர முடியும்.*
* *திருநந்திதேவரின் சடாமுடியிலே, வீணாகப் பாய்ந்து ஓடி விரையமாகாத கங்கை நதி ஒன்று உண்டு. அதுவே "பரிபூரண ஞானம்" எனும் நதி.*
* *இவை எல்லாவற்றையும் உயிர் உள்ள போதே - உணர்வுள்ள போதே தெளிந்து கொள்ளுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

180. விரும்புபவர் முன் உன்னை மெல்லியன் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக் கொண்ட நீர்போல்
அரும்பு ஒத்த மென்முலை ஆயிழை யார்க்குக்
கரும்பு ஒத்துக் காஞ்சிரம் காயும் ஒத்தாயே.

* வாலிபப் பருவத்தில் முன்பு உன்னை எல்லாப் பெண்களும் விரும்புவார்கள்;
* கரும்பு மரத்தை வேரோடு சாய்த்துக் கரும்பு நீரை அருந்திக் கொள்வோம்;
* அவ்வாறே, இளமென் முலை மாதர்கள் இளமை என்னும் கரும்பை வேருடன்சாய்த்துக் காமத்தை எடுத்துக்கொள்வர்;
* நீயும் கரும்பு போல் பெண்களால் விரும்பப் படுவாய். பின்னர் காஞ்சிரம் காய்க்கு ஒப்பாவாய்.

181. பாலன் இளையன் விருத்தன் என நின்ற
காலம் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலம் கடந்து அண்டம் ஊடறுத்தான் அடி
மேலும் கிடந்து விரும்புவன் நானே.

* குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், முதுமைப் பருவம் என்று எமது வாழ்க்கையில் மூன்று நிலைகள் உள்ளன;
* காலம் இந்த மூன்று நிலைப்பாடுகளையும் எமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.
* இறைவனது திருத்தாமரை - திருவடி பூமியையும் கடந்து அண்டங்களையும் ஊடறுத்து எங்கும் வியாபகமாக என்றும் உள்ளது;
* நான் - திருமூலர் - இந்த அன்புத் திருவடியையே மேலும் தொடர்ந்து அன்பு செய்து கொள்ளுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

182. காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாழ்நாள் கழிவதும்
சாலும் அவ் ஈசன் சலவியன் ஆகிலும்
ஏல நினைப்பவர்க்கு இன்பம் செய்தானே.

* ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து கொள்கின்றோம்.
* ஒவ்வொருநாளும் மாலையில் – இரவில் தூங்கிக் கொள்கின்றோம்;
* இவ்வாறு வாழ் நாட்கள் கழிந்து கொண்டே செல்கின்றன;
* அருள் வழங்கும் ஈசன் எனும் தேவதை குளிர்ச்சி நிறைந்தவர் ஆவர்;
* இவரை நினைப்பவர்களுக்கு, அவர் இன்பம் செய்கின்றார்.

183. பருவூசி ஐந்தும் ஓர்பையின் உள் வாழும்
பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம்
பருவூசி ஐந்தும் பணித்தலைப் பட்டால்
பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே.

* ஐந்து புலன்களும் மனம் என்னும் பையில் வாழுகின்றன;
* ஐந்து புலன்களும் மனத்தின் ஊடாகச் சஞ்சாரம் செய்கின்ற பட்சிகளாகும்;
* நாம் இறைவனது திருப்பாதங்களில் சேர்ந்து கொண்டால்;
* ஐந்து புலன்களும், மனம் ஆகிய பையும் பறந்து சென்று விடும். இல்லாது போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

184. கண்ணதும் காய் கதிரோனும் உலகினை
உண்ணின்று அளக்கின்றது ஒன்றும் அறிகிலார்
விண் உறுவாரையும் வினை உறுவாரையும்
எண் உறும் முப்பதில் ஈர்ந்து ஒழிந்தாரே.

* கண்ணின் அகமணி எம் உள்ளே இருந்து எம்மை முழுமையாக அளவீடுகள் செய்கின்றது;
* சூரியனும் உலகைப் – பூமியை தனது ஒளிக் கற்றையை வீசி ஏதோ பெரும் செயல்கள் செய்கின்றது. மக்கள் இதனை ஒன்றும் அறியாது உள்ளார்களே.
* தெய்வ நிலையில் சஞ்சாரம் செய்பவர்கள், தங்களது முப்பது வயதிற்கு முன் ஆரம்பித்து விடுவார்கள் – ஆரம்பித்து விட வேண்டும்;
* வினை செய்பவர்களும் – பொன், பெண், மண் சுகங்களைத் தேடுபவர்களும் முப்பது வயதிற்கு முன்னாகவே பூர்த்தி செய்து விடுவார்கள் – பூர்த்தி செய்ய வேண்டும். இந்நுட்பத்தை உணராதவர்கள் நோய்வாய்ப்பட்டு ஒழிந்து போகின்றார்களே.

185. ஒன்றிய ஈர் எண்கலையும் உடன் உற
நின்றது கண்டு நினைக்கிலர் நீசர்கள்
கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்
சென்று அதில் வீழ்வர் திகைப்பு ஒழியாரே.

* பதினாறு வகையான கலைகளும் ஒன்றாகவே எம்மோடு உள்ளன. – (பிராணாயாமக் கலைகள் – 16)
* இதனைக் கண்டும் பயன்படுத்தாது – ஆத்ம சாதனம் செய்யாது நினைக்காது உள்ளார்களே! இவர்கள் நோய் பிடித்தவர்கள்;
* காலதேவன் காமம் ஆகிய கருக்குழியை வைத்து விடுவான்;
* இந்த நோய் பிடித்தவர்கள் அதில் சென்று வீழ்வார்கள். ஒரு பொழுதும் திகைப்பை ஒழிக்க மாட்டார்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

186. எய்திய நாளில் இளமை கழியாமை
எய்திய நாளில் இசையினால் ஏத்துமின்
எய்திய நாளில் எறிவது அறியாமல்
எய்திய நாளில் இருந்து கண்டேனே.

* நான் இறைவனது திருப்பாதங்களைச் சேர்ந்து கொண்டேன். அதனால் எனது இளமை அழியவில்லை;
* அத்திருப்பாதங்களைச் சேர்ந்த நாளில் இருந்து, நீங்களும் இறைவனை இசையினால் ஏத்தி வழிபடுங்கள்;
* இறைவனது திருப்பாதங்களைச் சேர்ந்த பின் எந்தத் தன்மையையும் - சக்தியையும் நான் விரயமாக்கவில்லை;
* இறைவனது திருப்பாதங்களைச் சேர்ந்தபின் எல்லாவற்றிலும் - பரிபூரணத்துவத்தை இருந்தபடி இருந்து கண்டேன்.

## V. உயிர் நிலையாமை

187. தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்றது எல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பு இன்றி எம்பெருமான் அடி ஏத்தார்
அழைக்கின்ற போது அறியார் அவர்தாமே.

* மரத்தின் இளம் குருத்தில் இருந்து, குளிர்ச்சி நிறைந்த மொட்டுக்கள் பூக்கள் ஆக மலர்கின்றன;
* களைப்படைவன - இழைப்படைவன - மாற்றம் அடைவன எல்லாம் எம் கண்முன்னேயே இறக்கின்றன;
* எம்பெருமானுடைய திருவடிகளை வணங்க மாட்டார்கள். ஏத்த மாட்டார்கள். இவர்கள் பிழைக்கத் தெரியாதவர்கள்;
* உயிர் உடலைவிட்டு நீங்கும் பொழுதாவது - கால தேவன் உயிரை எடுக்கும் போதாவது - இறைவனை உணர மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

188. ஐவர்க்கு ஒருசெய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவர்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல் விட்டாரே.

* ஐந்து புலன்களும் உயிராரும் உடம்பாகிய தோட்டத்தில் வாழுகின்றன;
* ஐந்து புலன்களும் உடம்பாகிய தோட்டத்தைக் காவல் காத்து வருகின்றன;
* ஐந்து புலன்களுக்கும் தலைவனாய் விளங்கும் உயிராருக்கு, இப்பொழுது காலதேவனிடம் இருந்து அழைப்பு ஓலை வந்துவிட்டது.
* காவல்காரர்களாகிய ஐந்து புலன்களும் காவல் தொழிலை விட்டுவிட்டார்கள்.

189. மத்தளி ஒன்றுஉள தாளம் இரண்டு உள
அத்துள்ளே வாழும் அரசரும் அஞ்சுள்ள
அத்துள்ளே வாழும் அரசனும் அங்கு உளன்
மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே.

* உடம்பு ஒன்று உண்டு. அதற்கு இரண்டு தாளங்கள் உள்ளன. ஒன்று மனமாகிய தாளம். இரண்டு ஆத்மீகமாகிய இதயம்;
* இந்த உடம்புள்ளே அரசரைப் போன்று ஐந்து புலன்களும் கெம்பீரமாக வாழ்கின்றன;
* இந்த உடம்புள்ளே உயிரார் ஆகிய அரசனும் அங்குதான் உள்ளார்;
* உயிரார் விலகிய போது, உடம்பாகிய பாத்திரம் மண்ணோடு மண்ணாய்க் கலந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

190. வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத்து உள்ளே விளையாடு நந்தியை
வேங்கடம் என்றே விரகு அறியாதவர்
தாங்க வல்லார் உயிர் தாம் அறியாரே.

* *எம்முள்ளே பத்து வகையான வேங்கைகள் உண்டு. அவை யாவன – காம, குரோத, உலோப, மோக, மத, மாச்சர்ய, சாம, பேத, தான, தண்ட. எம்முள்ளே உள்ள இவற்றை எல்லாம் அடக்கியவர் எம் தலைவர். அவர் வேதத்தின் அந்தத்தில் – முடிபில் நின்று ஆனந்தக் கூத்தாடுபவர்;*
* *எனது வழிகாட்டியாகிய நந்தியும் இந்த உடம்புக்குள் புகுந்து விளையாடிக் கொண்டு இருக்கின்றார்;*
* *வேங்கடத்தை – வேங்கையை அடக்கிய தன்மையை – உடலின் நுட்பத்தை தெளிந்து அறியாத மக்கள்;*
* *ஒரு போதும் தங்கள் உடலாரையும் தாங்க மாட்டார்கள். உயிராரையும் தாங்க மாட்டார்கள்.*

191. சென்று உணர்வான் திசை பத்தும் திவாகரன்
அன்று உணர்வால் அளக்கின்றது அறிகிலர்
நின்று உணரார் இந்நிலத்தின் மனிதர்கள்
பொன்று உணர்வார் இல்புணர்க்கின்ற மாயமே.

* *உயிரார் உயிர்ப்புச் சக்தியால் பத்துத் திசைகளுக்கும் சென்று உணர்ந்து வரவல்லராவர்;*
* *உயிர்ப்புச் சக்தி உணர்வால் செய்கின்ற அன்பான அளவை மக்கள் அறியமாட்டாது உள்ளார்கள்;*
* *இப்பூமியின் மனிதர்கள் ஆறி அமர்ந்து எதனையும் உணராது உள்ளார்கள்;*
* *அழிந்து போகின்ற வெறும் உடல் புணர்ச்சியினையே உணர்வர். ஐயகோ! என்ன இது மாயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

192. மாறு திருத்தி வரம்பு இட்ட பட்டிகை
பீறும் அதனைப் பெரிது உணர்ந்தார் இலை
கூறும் கருமயிர் வெண்மயிர் ஆவது
ஈறும் பிறப்பும் ஓராண்டு எனும் நீரே.

* உடம்பு மிகவும் அற்புதமாக வரையப்பட்டுள்ளது. அதனுள் உயிரார் உள்ளார்;
* உயிராருக்கு ஊடாக உயிர்ப்பு சக்தி உடல் முழுவதும் பிரகாசித்துக் கொண்டே உள்ளது. இதை உணர்பவர்கள் ஒருவரையும் காணவில்லையே;
* கருமை நிறைந்த உரோமம் வெண்மையான உரோமம் ஆகிவிடும்; பின்னர்
* பிறப்பு இறப்பை நோக்கிச் செல்லும். ஓராண்டுக்குள் நிகழ்வது போன்று இவ்விரண்டும் விரைந்து முடிந்துவிடும்.

193. துடுப்பிடு பானைக்கும் ஒன்றே அரிசி
அடுப்பிடு மூன்றிற்கும் அஞ்சு எரி கொள்ளி
அடுத்து எரியாமல் கொடுமின் அரிசி
விடுத்தன நாள்களும் மேற்சொன்ன வாறே.

* அகப்பைக்கும், பானைக்கும் ஒன்றாகவே அரிசி உண்டு;
* மூன்று கற்களால் அடுப்பு ஆக்கப்படும். பயம் தருகின்ற நெருப்பு அங்கே எரிக்கப்படும்;
* தொடர்ந்து அடுப்பினை எரிக்காமல் பானைக்குள் அரிசியை இடுங்கள்.
* இவ்வாறு பானை வைப்பதும், நெருப்பு எரிப்பதும், அரிசி இடுவதும் ஆக நாட்கள் கழிகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

194. இன்புறு வண்டு இங்கு இனமலர் மேல் போய்
உண்பது வாச மதுபோல் உயிர் நிலை
இன்புற நாடி நினைக்கிலு மூன்று ஒளி
கண்புற நின்ற கருத்துள் நில்லானே.

* தேன் வண்டுகள் வாசம்நிறைந்த பல வகையான மலர்களில் சென்று அமர்ந்து மிகவும் ஆனந்தமாக ரீங்காரம் இட்ட வண்ணம் தேனை அருந்தும்;
* இவ்வாறு உயிர்களும் இன்பம் தருகின்ற நிலைகளைச், செயற் பாடுகளை நாடியே நிற்கும்;
* முத்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல் செயற் பாடுகள் மூன்றும் ஒரே ஒளியின் தொடர்ச்சியாக உள்ளன;
* இவ் ஒளி எமது அகக் கண்ணுக்குப் புலப்படும். ஆனால் விழிப்பு நிலையில் இல்லாத உயிரார் இதனைக் காணமாட்டார்.

195. ஆம் விதி நாடி அறம் செய்மின், அந்நிலம்
போம் விதி, நாடிப் புனிதனைப் போற்றுமின்
நாம் விதி வேண்டும் அது என் சொலின் மானிடர்
ஆம் விதி பெற்ற அருமை வல்லார்க்கே.

* இறைவனது உண்மையான கட்டளையை உணர்ந்து அதனை நாடி அறம் செய்யுங்கள். அப்பொழுது
* முன்பு செய்த வினைகள் எல்லாம் போய்விடும். இறைவனை எப்பொழுதும் நாடிப் போற்றுதல் செய்யுங்கள்;
* இறைவனால் வழங்கப்பட்ட எல்லாவற்றையும் அன்போடு சிரமேற் கொள்ளுங்கள்;
* அப்பொழுது தான் இறைவனின் உண்மையான கட்டளையை உணர முடியும். அதுவே அற்புதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

196. அவ்வியம் பேசி அறம் கெட நில்லன் மின்
வெவ்வியன் ஆகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்வியன் ஆகிச் சிறந்து உண்ணும் போதொரு
தவ்விக் கொடுண்மின் தலைப்பட்ட போதே.

* *மனத்தினாலும், வாயினாலும் கண்டபடி அலட்டிப் பேசி அறத்தை நழுவவிட்டுத் தறிகெட்டு நிற்க வேண்டாம்;*
* *பேராசை பிடித்துப் பிறரின் பொருட்களை அபகரிக்க வேண்டாம்;*
* *நீங்கள் பாடுபட்டு உழைத்து, அதனைக் கொண்டு உங்கள் ஜீவனோபாயத்தை மேற்கொள்ளுங்கள்;*
* *நீங்கள் உண்ணும் போது எவர் தலைப்பட்டாலும், அவர்களுக்கும் மனம் விரும்பி உங்கள் உணவைப் பரிமாறுங்கள்.*

## VI. கொல்லாமை

197. பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்று ஓர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற, தீபமும் சித்தமும்
உற்றாறும் ஆவி அமர்ந்திடம் உச்சியே.

* *உங்கள் அன்புள்ள இறைவனைக், குருவாகப் பாவனை செய்து, பலவகையான மலர்களைப் பறித்துச் சாத்துகின்றீர்கள்;*
* *எந்த ஒரு அணுக்களையும் கொன்று விடாதீர்கள். மலர்களைப் பறிப்பதும் அவ்வளவு சிறப்பு உடையதன்று;*
* *நல்லவர்கள் நடுக்கமே இல்லாதவர்கள். நடுக்கம் இருவினைமையால் ஏற்படுவது. இவர்கள் சித்தம் தீபம் போன்றே இருக்கும்.*
* *இவர்களின் ஆத்மா உச்சியில் – சகஸ்ரத்தில் ஆறுதல் பெற்று அமர்ந்து கொள்ளும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

198. கொல்லிடு குத்து என்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக் கயிற்றால் கட்டிச்
செல்லிடு நில்என்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே.

* கொல்லுங்கள் குத்துங்கள் என்று கூறி மக்கள் உழறுகின்றார்கள்;
* இவர்களைக் காலனின் தூதுவர்கள் உறுதியான கயிற்றால் கட்டிக் கொள்வார்கள்.
* பின்னர் நரகத்திலே, அக்கினிப் பிழம்பின் வாசலிலே நிரந்தரமாகவே நிறுத்தி விடுவார்கள்.

## VII. புலால் மறுத்தல்

199. பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்தன் தூதர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே.

* ஊனை - இறைச்சியை உண்பவர்களே புலையர்கள் ஆவர்;
* இவர்களைக் காலனின் தூதுவர்கள் எல்லாரும் காணும்படியாக இழுத்துச் செல்வார்கள்;
* நரகத்தில் பற்றி எரியும் தீச்சுவாலைக்கு முன் கொண்டு செல்வர்;
* அங்கே சாய்ந்து விழும்படியாகத் தள்ளித் தடுத்து வைப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

200. கொலையே களவு கள் காம் பொய் கூறல்
மலைவான பாதகமாம் அவை நீக்கித்
தலையாம் சிவன் அடிசார்ந்து இன்பம் சார்ந்தோர்க்கு
இலையாம் இவை ஞான ஆனந்தத்து இருத்தலே.

* *1. கொலை செய்தல் - ஊன் உண்ணல், 2. களவு எடுத்தல் 3. கள் அருந்தல் 4. காமம் செய்தல் 5. பொய் கூறல்*
* *இந்த ஐந்தும் மிகவும் கொடிய பாதகச் செயல்களாகும். இவற்றை முற்றாக நீங்கள் நீக்கிக் கொள்ளுங்கள்;*
* *மிகவும் சிறந்த தலையாய சிவபரம்பொருளின் திருவடியினை - அதன் இன்பத்தைச் சார்ந்து கொள்ளுங்கள்;*
* *இதுதான் இறை ஞான இன்பத்தில் ஆனந்தமாக இருக்க வழி செய்யும்.*

## VIII. பிறன்மனை நயவாமை

201. ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனி உண்ண மாட்டாதார்
ஈச்சம் பழத்துக்கு இடர் உற்ற வாறே.

* *தமது சொந்த மனைவி வீட்டில் இருக்கின்றாள்;*
* *ஆனால் கள்ளமாகத் தமது வரவை எதிர்பார்த்து நிற்கும் மாற்றான் மனைவியுடன் இந்த இளைஞர்கள் காமம் செய்து கொள்கின்றனர்;*
* *இந்நிகழ்ச்சி தமது வீட்டில் கனிந்த பலாப்பழத்தை உண்ணா ததற்கு ஒப்பாகும். ஆனால்,*
* *காடும்மேடும் சென்று முட்களால் சூழப்பட்ட ஈச்சம்பழத்தை உண்டு துன்பப்படுவார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

202. திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
அருத்தம் என்று எண்ணி அறையில் புதைத்துப்
பொருத்தம் இலாத புளிமாம் கொம்பு ஏறிக்
கருத்து அறியாதவர் கால் அற்ற வாறே.

* நன்கு செப்பனிட்டுப், பாதுகாத்த தேன் சொரியும் மாமரத்தின் கனியைப்;
* பொன் போல் எண்ணி அறையிலே புதைத்து அநுபவிக்காது மறைத்து வைத்திருப்பார்கள். (மனைவியை)
* இவர்கள் எள்ளளவேனும் பொருத்தம் இல்லாத புளிமாமரத்தின் உச்சிக் கிளையில் ஏறி அதனைப் பறித்து உண்பர் (பொது மகளிர்);
* இவர்கள் குடும்ப அமைப்பின் தெய்வீகத்தை நோக்கத்தை உணராதவர்கள்;
* இவர்கள் வாழ்க்கையின் மகிமையை அறியாத நொண்டிகள் ஆவர்.

203. பொருள் கொண்ட கண்டனும் போதகையாளும்
இருள் கொண்ட மின்வெளி கொண்டு நின்றோரும்
மருள் கொண்டு மாதர் மயல் உறுவார்கள்
மருள் கொண்ட சிந்தையை மாற்ற கில்லாரே.

* அவனிடம் நிறையப் பொருளும் பண்டமும் உண்டு. அவளிடம் நிறைந்த காமபோகம் உண்டு;
* இருட்டினில் தோன்றும் மின்னல் வெளிச்சத்தைப் போன்று, பொருளும் போகமும் மறைந்து போகும்;
* ஆனால் இவர்கள் பொருளிலும் போகத்திலும் மயக்கம் கொண்டு நிற்பர்;
* இவர்கள் மயக்கம் நிறைந்த சிந்தையை மாற்றாது உள்ளார்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IX. மகளிர் இழிவு

204. இலைநல வாயினும் எட்டி பழுத்தால்
குலைநல வாம் கனி கொண்டு உணலாகா
முலைநலம் கொண்டு முறுவல் செய்வார்மேல்
விலகுறு நெஞ்சினை வெய்து கொள்ளீரே.

* "எட்டி" என்னும் மரம் நன்கு செழித்து வளரும். நல்ல அழகான பழங்கள் அதில் தூங்கும்;
* அந்தக் கனிகளை உண்ணவே கூடாது. காரணம் அவை நச்சுக் கனிகள் ஆகும்;
* பொது மகளிரும் தங்களை நன்கு அழகுபடுத்தித் தங்கள் காமக் கனியைக் கண்களூடாகவும், சிரிப்பின் ஊடாகவும் வெளிப்படுத்துவார்கள்;
* இவர்களின் செயற்பாட்டில் நீங்கள் மயங்குவீர்களேயாகில் நோய்வாய்ப்படுவீர்கள். அதனால் உங்கள் மனத்தை எரித்து விடுங்கள். இந்த எண்ணங்கள் எதற்கும் இடம் கொடாதீர்கள்.

205. மனை புகுவார்கள் மனைவியை நாடில்
சுனைபுகு நீர்போல் சுழிந்து உடன் வாங்கும்
கனவது போலக் கசிந்து எழும் இன்பம்
நனவது போலவும் நாட ஒண்ணாதே.

* உங்கள் மனைவியை நாடிக் கொள்ளுங்கள். அவளை அன்பால் அரவணைத்துக் கொள்ளுங்கள்.
* காமவெறி கொண்டு அவளை வருத்தாதீர்கள். காமவெறி கடல் நீரில் ஏற்படும் சுழியைப் போன்று அதில் அகப்படுபவரை அழித்துவிடும்;
* காமவெறி கனவு போன்று சடுதியாகத் தோன்றி இன்பத்தைத் தரக்கூடும்;
* இதனை நனவு – உண்மை என்று எண்ணி ஒருபோதும் நாடிச் சென்று விடாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

206. இயல் உறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்
புயல் உறப் புல்லிப் புணர்ந்தவர் எய்தும்
மயல் உறும் வானவர் சார்வு இது என்பார்
அயல் உறப் பேசி அகன்று ஒழிந்தாரே.

* இளம் பிடி மாதர்கள் உன்னையே சுற்றிச் சுழன்று வருவார்கள்;
* உன்னோடு ஒன்று கலந்து புணர்ச்சியில் ஈடுபடுவார்கள்;
* இதுதான் தேவர்கள் நிலை - அவதார புருஷர்கள் நிலை என்று உன்னை ஏற்றிப் போற்றி வழிபாடு செய்வார்கள்.
* மயக்கத்தினால் உன்னை எண்ணிறந்த மக்கள் பின் தொடரலாம். உன் நாமத்தைச் சொல்லி புதிய மடங்கள் உலகம் பூராவும் நிறுவலாம். ஆனால் ஒரு நாள் நீ இந்தப் பூமியை விட்டு நீங்குவாய். அப்பொழுது இந்தக் கோடிக் கணக்கான மக்களும் அவதாரம் வந்தது - போய்விட்டது என்று பேசுவர். பின் அவர்களும் ஒருவரோடு ஒருவர் மோதி ஒழிந்து அழிந்து போவார்களே!

207. வையகத்தே மடவாரொடும் கூடி என்
மெய்யகத்தோர் உளம் வைத்த விதியது
கையகத்தே கரும்பு ஆலையின் சாறுகொள்
மெய்யகத்தே பெறு வேம்பது வாமே.

* இந்தப் பூமியில் மடவார்கள் உடன் கூடுவது உனக்குச் சிரமம் இன்றி இருக்கலாம்;
* ஆனால் உன் உள்ளத்தால் விரும்பிய ஒரே ஒரு பெண்ணைத் தெரிவு செய்து, அவளை திருமணம் செய்து தெய்வீக வாழ்க்கையை நடாத்து;
* கரும்பு ஆலையில் இருந்து, கருப்பஞ் சாறு எடுத்து, நீங்கள் அளவு கடந்து உட்கொள்ளாதீர்கள்; இது உங்களுக்குப் பெரிதும் கெடுதியை விளைவிக்கும்;
* இது பொது மகளிருடன் கூடுவதற்கு ஒப்பாகும்.
* ஆனால் உனது இல்லத்தில் உள்ள மனைவியுடன் தெய்வீகமான வாழ்க்கையை நடாத்து. இது வேம்பில் இருந்து எடுக்கும் எண்ணெய் போன்று மருந்தாகவே உனக்குப் பயன்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

208. கோழை ஒழுக்கம் குளமூடு பாசியில்
ஆழ நடுவார் அளப்புறு வார்களைத்
தாழத் துடக்கித் தடுக்க கில்லா விடில்
பூழை நுழைந்தவர் போகின்ற வாறே.

* எல்லாப் பெண்களுடனும் காமம் செய்பவர்கள் கோழைகள். ஒழுக்கம் கெட்டவர்கள். ஆண்மையே இல்லாதவர்கள். பாசி மூடிய துர்நாற்றம் உள்ள குளத்திற்கு ஒப்பானவர்கள்;
* மிக மிக ஆழமாகவே பொது மகளிருடன் இவர்கள் கூடிக் கொள்வார்கள்;
* இவர்களை -இவர்களின் செயல்களைத் தடுத்து நிறுத்தாவிடில்;
* இவர்களின் உடல் நோயினால் பீடிக்கப்பட்டு, மனதாலும் கெட்டு ஒழிந்து போவார்கள்.

## X. நல்குரவு

209. புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப் பட்டார்களும் அன்பிலரானார்
கொடை இல்லை கோளில்லை கொண்டாட்டம் இல்லை
நடையில்லை நாட்டில் இயங்கு கின்றார்கட்கே.

* உடம்பிற்கு நோய் வந்துவிட்டது. அதனால் வாழ்க்கையிலும் பிடிப்பே இல்லாமல் போய்விட்டது;
* முன்பு நன்றாக ஊடியவர்கள் எல்லாரும், இப்பொழுது அன்பில்லாதவர்களாய்ப் போய்விட்டார்கள்;
* எல்லாச் சீர்சிறப்பும் போய்விட்டது. நாள், கோள் பலன்களும் போய்விட்டன. எந்தவிதமான கொண்டாட்டங்களிலும் பங்குபற்ற முடியாத நிலையாகிவிட்டது.
* நடக்கவும் முடியாமல் போய்விட்டது. நாட்டிலே இருந்து ஏதோ ஒரு வகையில் நாட்களை நகர்த்திக் கொண்டே உள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

210. பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருது என்று
அக்குழி தூர்க்கும் அரும் பண்டம் தேடுவீர்
எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின்
அக்குழி தூரும் அழுக்கு அற்ற போதே.

* பொழுது விடிந்து விட்டது என்று கூறியே, பொய்யான இரைப்பை ஆகிய குழியை நிறைத்துக் கொள்வார்கள்;
* துன்பம் நிறைந்த குழிகளைத் தூர்ப்பதற்குச் சிறந்த வழிபாட்டு சாதனாமுறைகளைத் தேடிக் கொள்ளுங்கள்;
* இறைவனைப் போற்றியவாறே எல்லாவிதமான குழிகளையும் நீக்கிவிடுங்கள்;
* எல்லா வினைகளும் நீங்குகின்ற பொழுது, துன்பம் இன்பம் தரும் எல்லாக் குழிகளும் இல்லாது போய்விடும்.

211. கற்குழி தூரக் கனகமும் தேடுவர்
அக்குழி தூர்க்கை யாவர்க்கும் அரிது
அக்குழி தூர்க்கும் அறிவை அறிந்த பின்
அக்குழி தூரும் அழுக்கு அற்றவாறே.

* கல்வியால் பலவிதமான குழிகள் துன்பங்கள் ஏற்படும். இதற்காகப் பொன் பொருள் தேடுவார்கள்;
* துன்பம் தருகின்ற பொறிகளை இல்லாமல் செய்வது, எல்லோராலும் இயலக்கூடிய செய்யக்கூடிய காரியம் அன்று;
* இந்த இருவினை வாசல்களை அடைக்க மெய்ஞ்ஞான அறிவைச், செல்வத்தை, உணர்வைப் பெறுங்கள்;
* அப்பொழுது எல்லாவித வாசல்களும் அடைபட்டு விடும். இருவினையால் ஏற்படும் அழுக்கு முற்றாக விலகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

212. தொடர்ந்து எழு சுற்றம் வினையினும் தீய
கடந்து ஓர் ஆவி கழிவதன் முன்னே
உடந்து ஒரு காலத்து உணர் விளக்கு ஏற்றித்
தொடர்ந்து நின்று அவ்வழி தூர்க்கலு மாமே.

* எமது கடந்த ஏழு பிறப்புகளும் எம்மைத் தொடர்ந்து வருவன. இவை இப்பிறப்பில் உள்ள இருவினைகளிலும் பார்க்க மிகவும் கொடியவை;
* இந்த உடம்பை விட்டு உயிர் மிக விரைவாகக் கழன்றுவிடும்;
* உங்களுக்குள்ளேயே ஒரு ஐக்கியத்தை உணருங்கள். அங்கே உண்மை உணர்வைத் தருகின்ற மெய்ஞ்ஞான விளக்கை ஏற்றுங்கள்;
* இவற்றை இடைவிடாது தொடர்ந்து செய்வீர்களானால், இருவினையால் ஏற்படும் மயக்கத்தை ஒழிக்கலாம்.

213. அறுத்தன ஆறினும் ஆனின மேவி
அறுத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்
ஒறுத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை
வெறுத்தனன் இறைவனை வேண்டி நின்றானே.

* ஆத்ம சொரூபத்தை எப்போதும் நாடிக்கொண்டால் நீ நன்கு ஆறுதல் அடைவாய். உன் எல்லாத் தளைகளும் அறுந்து போகும்;
* ஐந்து புலன்களாலும் ஏற்பட்ட எண்ண முடியாத துன்பங்களும் அழிந்து போய்விடும்;
* வாழ்க்கையில் ஏற்பட்ட எத்தனையோவித பொல்லாத வினைகள் எல்லாம் முற்றாக ஒறுக்கப்பட்டுவிடும்;
* எல்லா வாழ்வையும் நீ வெறுத்து விட்டாய். அதனால் இறைவனை எப்பொழுதும் நீ வேண்டிப் பிரார்த்தனை செய்த வண்ணமே உள்ளாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## XI. அக்கினி காரியம்

214. வசையில் விழுப்பொருள் வானும் நிலனும்
திசையும் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேத முதலாம்
அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே.

* ஒழுக்கத்திலே நிறைந்த அந்தணப் பெருமக்கள் அக்கினி வளர்த்து அதற்கு ஆகுதி கொடுத்தல் வேண்டும்; அப்பொழுது;
* மெய்ப்பொருள் நிறைந்த வேத முதல், ஒப்பு உவமை கூற முடியாத பரம்பொருள்;
* வானும், விண்ணும், நிலமும் ஊடறுத்து எல்லாத் திசைகளில் இருந்தும் தேவர் குழாங்கள் புடை சூழ வெளிப்படும் - காட்சிக்குப் புலப்படும்.

215. ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்
போகதி நாடிப் புறம் கொடுத்து உண்ணுவர்
தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி
தாம் அறிவாலே தலைப்பட்ட வாறே.

* அருமறையாகிய வேதங்களை ஓதி அந்தணப் பெருமக்கள் அக்கினி வளர்த்து அதற்கு ஆகுதி கொடுப்பார்கள்;
* இவர்கள் இறைவனது சந்நிதானத்தை வேண்டிச் செல்வர். யாரும் காணாதவாறு தங்களது இயம நியமங்களை ஆகா ரங்களை மேற்கொள்வர்;
* அவர் அவர்களுடைய செயற்பாட்டிற்கு ஏற்பப் பிராரத்து வத்திற்கு அமைய மெய்ப்பொருள் நெறி வெளிப்படும்;
* அவர்களது உள் உணர்வுகளினாலேயே மெய்ப்பொருள் உணரப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

216. அணைதுணை அந்தணர் அங்கியுள் அங்கி
அணைதுணை வைத்ததின் உட்பொருள் ஆன
இணைதுணை யாமத்து இயங்கும் பொழுது
துணைஅணை ஆயதோர் தூய் நெறியாமே.

* அன்புடன் மிகவும்ஒன்றித்து, அக்கினி வளர்ப்பார்கள் உண்மையான அந்தணப் பெருமக்கள்;
* தங்களுக்குள் உள்ள ஞான அக்கினியை வளர்ப்பதற்காகவே முற்காலத்தில் இருந்தே வெளியேயும் அக்கினியை வளர்த்தார்கள்;
* இவ்வாறு உள்ளகத்தே தகதக எனச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் ஞானாக்கினியை நாம் உணர்ந்து அதனுடன் ஒன்றாகி இயங்க வேண்டும்;
* அப்பொழுது என்றும் அணையாத துணையாக ஓர் சிறந்த தூயநெறி எமக்குக் கிடைக்கும்.

217. போது இரண்டு ஓதிப் புரிந்து அருள் செய்திட்டு
மாது இரண்டு ஆகி மகிழ்ந்து உடனே நிற்கும்
தாது இரண்டு ஆகிய தண்ணம் பறவைகள்
வேது இரண்டு ஆகி வெறிக்கின்ற வாறே.

* தூயநெறியினை உணருகின்ற பொழுது, முன்னிலையில் அது புலப்படுகின்றது. அப்பொழுது இருவகை துலாம்பரமாகும். ஒன்று அது - சிவம். மற்றையது இது - ஆத்மா. முன்னிலையில் அது இதற்கு அருள் புரிகின்றது.
* அதே நேரத்தில் சிவம் சக்தியாக - அர்த்த நாரீஸ்வர சொரூபராக ஆனந்தமான நிலைக் காட்சியைப் புலப்படுத்தும்;
* குளிர்ச்சி நிறைந்த பறவைகள் இரண்டு எம்முள்ளே உண்டு. ஒன்று **நாதம்**. இது பிராணன் என்னும் வாகனத்தில் பயணம் செய்யும். மற்றையது **பிந்து**. இது குண்டலினி என்னும் வாகனத்தில் பயணம் செய்யும்.
* உண்மையில் நாதமும் பிந்துவும் பிரிந்த காரணத்தாலேயே எமக்குப் பிறப்பும், வாழ்வும், இறப்பும் அதனைத் தொடர்ந்து வரும் வினைகளும் உண்டாகின்றன. நாதமும் பிந்துவும் பிரிந்தால் எமக்கு எல்லாவித வெறித் தன்மைகளும் ஏற்படும். எம் உள்ளே இவை இரண்டையும் ஒன்றாக்கி ஏகத்துடன் தொடர்பு வைத்தலே எமது வாழ்வின் சாதனா முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

218. நெய் நின்று எரியும் நெடும் சுடரே சென்று
மை நின்று எரியும் வகை அறிவார் கட்கு
மை நின்று அவிழ் கருமத் தினமாம் என்று
செய் நின்ற செல்வம் தீயது வாமே.

* அக்கினி வளர்த்து நெய் ஊற்றி நெடும் சுடரை நோக்கிக் கொள்ளுங்கள்;
* அங்கே - அச்சுடரிலே உங்கள் தீவினைகள் எல்லாம் எரிந்து போவதை அறிந்து கொள்ளுங்கள்;
* உங்கள் வினைகள் எல்லாவற்றினதும் முடிச்சுகள் அவிழ்க்கப் பட்டு முற்றாக எரிக்கப்படுகின்றன;
* உலக சுகங்களைத் தருகின்ற செல்வங்கள் எல்லாம் கொடியவை யாகும்.

219. பாழி அகலும் எரியும் திரிபோல் இட்டு
ஊழி அகலும் உறுவினை நோய் பல
வாழி செய்து அங்கி உதிக்க அவை விழும்
வீழி செய்து அங்கி வினை சுடு மாமே.

* பழமையான வினை எல்லாம் அகலுவதற்கு அக்கினியை, எல்லோரும் வளர்க்க வேண்டும்;
* ஊழிக்காலங்கள் - காலங்களின் செயற்பாடுகளை எல்லாம் கடந்து விடலாம். கொடிய நோய்களைத் தருகின்ற எல்லா வினைகளும் நீங்கும்;
* அக்கினியை வளர்த்து அதனை வணங்கி, வாழ்த்தக் கொடிய வினையும் அதனால் ஏற்படும் நோயும் நீங்கும்;
* அக்கினி எல்லா விதமான இருமை வகைச் செயல்களையும் சுட்டு நீறாக்கி ஒழிக்கும் ஆற்றல் உடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

220. பெரும்செல்வம் கேடு என்று முன்னே படைத்த
வரும் செல்வம் தந்த தலைவனை நாடும்
வரும் செல்வத்து இன்பம் வர இருந்து எண்ணி
அரும் செல்வத்து ஆகுதி வேட்ட நின்றாரே.

* உலகத்தில் உள்ள பெரிய பெரிய செல்வங்கள் எல்லாம் கேடு தருவன. இறைவனால் மிகவும் முன்னதாகவே ஏற்பாடு செய்யப்பட்ட இறை அன்பை, ஆத்மீகச் செல்வத்தை எமக்கு வழங்கிய இறைவனை நாடுங்கள்;
* வர இருக்கின்ற பேரின்பத்தினை ஒவ்வொரு இதயத் துடிப்பு நிகழும் போதும் எண்ணிக் கொள்ளுங்கள்;
* இவ்வாறான தூய தெளிந்த சிந்தனையுடனேயே, அந்தணப் பெருமக்கள் இறை இன்பச் செல்வத்தை வேண்டி அக்கினி வளர்த்து ஆகுதி வேட்க வேண்டும்.

221. ஒண் சுடரானை உலப்பிலி நாதனை
ஒண் சுடர் ஆகி என் உள்ளத்து இருக்கின்ற
கண் சுடரோன் உலகு ஏழும் கடந்த அத்
தண் சுடர் ஓமத் தலைவனும் ஆமே.

* அருள் ஜோதி ஒன்றானது. ஏகமானது. இதுவே எல்லா உலகங்களுக்கும் இறைவனாக விளங்கும்;
* இப்பெரும் ஜோதி என் ஆத்மீக இதயத்தின் உள்ளேயும் இருக்கின்றது;
* இறைவனது ஞானக் கண்ணில் இருந்தே புறப்படும் ஜோதி என்னுள்ளே உள்ள ஏழு உலகங்களையும் கடந்து செல்கின்றது;
* குளிர்ச்சி நிறைந்த இந்த ஜோதி, அக்கினி வளர்த்து ஓமம் செய் கின்ற போதும் வெளிப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

222. ஓமத்துள் அங்கியின் உள் உளன் எம் இறை
ஈமத்துள் அங்கி இரதம் கொள்வான் உளன்
வேமத்துள் அங்கி விளைவு வினைக் கடல்
கோபத்துள் அங்கி குரை கடல் தானே.

* அக்கினி வளர்த்துச் செய்யும் ஓமத்துள்ளேயும் இறைவன் உள்ளான்;
* இறுதிக் காலத்தில், உயிர் பிரிந்து செல்லும் போது, உயிர் பிராணன் எனும் வாகனத்திலேயே செல்லும்;
* பல்வேறு விதமான வேறுபாடுகள் தோன்றும் போது எல்லாம் அக்கினிதான் வினையாக உருப்பெறுகின்றது;
* கோபத்தால் நாம் தாக்குப்படும்போது, அக்கினியின் செயற்பாடு கத்துகின்ற கடலின் செயற்பாடு போல் எம்மில் பிரதி பலிக்கின்றது.

223. அங்கி நிறுத்தும் அருந்தவர் ஆரணத்து
அங்கி இருக்கும் வகை அருள் செய்தவர்
எங்கும் நிறுத்தி இளைப்பப் பெரும் பதி
பொங்கி நிறுத்தும் புகழது ஆமே.

* அருந்தவத் தேவர்கள் அன்போடு அக்கினியை வளர்த்துக் கொள்வார்கள்;
* அக்கினியின் பெருமை உணர்ந்தவர் அதன் அருட்கடாட் சத்தைப் பெற்றுக் கொள்வர்;
* அக்கினியின் சிறப்பை எல்லா இடத்தும் கூறி வளர்த்துப் பேணிக் காக்கச் செய்வர். பெரும்பதியுடன் தொடர்பு கொள்ள அக்கினி சிறந்த ஊடகம் ஆகும்;
* அக்கினியின் செயற்பாடும் பெருமையும் எங்கும் நிறைந்து பொலியும் போது அதுவே பெரும் புகழ் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## XII. அந்தணர் ஒழுக்கம்

224. அந்தணர் ஆவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பி முப்போதும் நியமம் செய்து
அந்தவ நல்கருமத்து நின்று ஆங்கு இட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கு அறுப் போர்களே.

* அந்தணப் பெருமக்களுக்கு ஆறுதொழில்கள் உண்டு.
1. ஓதுதல் 2. ஓதுவித்தல் 3. கேட்டல்
4. கேட்பித்தல் 5. கொடை 6. தயை

* அக்கினி வளர்த்துத் தினமும் மூன்று வேளையும் - காலை, மதியம், மாலை நியமம் செய்ய வேண்டும்;

* நல்ல தவம் வளர்க்கின்ற காரியங்களைச் செய்தல் வேண்டும்;

* ஆத்மீக நேயம் தரவல்ல சடங்குகளைச் செய்ய வேண்டும்.

225. வேதாந்தம் கேட்க விருப்பொடு முப்பதப்
போதாந்தம் ஆன பிரணவத்து உள்புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை
ஈதாந்தம் எனாது கண்டு இன்புறு வோர்களே.

* வேதாந்தம் கேட்பதானால் முதலில் விருப்பம் வேண்டும். பின்னரே மெய்ஞ்ஞான போதத்தின் அந்தத்தில் எம்மை அமர வைக்கும் முப்பதம் ஆகிய அகர, உகர, மகரங்களை ஓங்காரத்தின் பாதங்களை உணரலாம்;

* அதன் பிரணவ சொரூபமான "ஓம்" இற்குள் முழுமையாகச் செல்ல வேண்டும்;

* அப்பொழுது நாம் நாதத்தின் முடிவில் உள்ள, வேதத்தின் முடிவில் உள்ள, போதத்தின் முடிவில் உள்ள தலைவனை - இறைவனை உணர்வோம்;

* இதுதான் முடிபு என்று ஆராயாது மெய்ஞ்ஞானக் காட்சியைக் கண்டு இன்பநிலையில் என்றும் இருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

226. காயத்திரியே கருது சாவித்திரி சரஸ்வதி
ஆய்தற்கு உவப்பர் மந்திரம் ஆங்கு உன்னி
நேயத் தேர் ஏறி நினைவு உற்று நேயத்தாய்
மாயத்துள் தோயா மறையோகள் தாமே.

* காயத்திரி - 1. காயத்தைத் திரியாக்கி ஆத்மாவைச் சுடராக்கி இறைவனைப் பூசித்தல்.
2. திரிகரண சுத்தியால் இறைவனை வழிபடல்
3. மண், வான், விண் ஆகிய நிலைகளில் சஞ்சாரம் செய்து இறைவனை வழிபடல்.
4. பிரம்ம காயத்திரி எனும் மந்திரத்தை ஜெபம் செய்தல்.

* ஒரே மந்திரத்தைத் தினமும் மூன்று வேளையும் ஜெபித்தல் வேண்டும்.

காலையில் ஜெபித்தால் - காயத்திரி மந்திரம் - தேவதை - காயத்திரி ஆகும்.
மதியத்தில் ஜெபித்தால் - சாவித்திரிமந்திரம் - தேவதை - சாவித்திரிஆகும்.
மாலையில் ஜெபித்தால் - சரஸ்வதிமந்திரம் - தேவதை - சரஸ்வதி ஆகும்.

ஜெபமுறை

1. ஆத்மார்த்தமாக ஜெபிக்கலாம்.
2. அக்கினி வளர்த்து ஜெபிக்கலாம்.
3. நீரினுள் அமர்ந்து ஜெபிக்கலாம்.
4. மண்ணுக்குள் அமர்ந்து ஜெபிக்கலாம்.
5. காற்று மண்டலத்தை ஏற்படுத்தி ஜெபிக்கலாம்.
6. ககன மண்டத்தில் ஜெபிக்கலாம்.

* அவரவர்களின் பரிபக்குவத்திற்கு ஏற்ப ஜெபமுறை தெளியப் படும்;

பிரம்ம காயத்திரியின் சாராம்சம் வருமாறு;

ஓம் அருபின் அருபின், பிரதமப் பிரதம, தேஜஸ் தேஜஸ், ஜோதிர் ஜோதிர், அருப, அநக்னி, அதூம, அபஸ்ம, அநாதே, நாநா, நாநா தூதூ, தூதூ ஓம் பூ; புவ; சுவ; ஓம்தத் ஸவிதுர்
வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோநோ ப்ரசோதயாத்
அநீத, நீதன, நிதனோத்பவ, சிவ, சர்வ, பரமாத்மன், மகேஸ்வரஹ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

227. பெரு நெறியான பிரணவம் ஓர்ந்து
குரு நெறியால் உரை கூடி நால் வேதத்து
திரு நெறியான கிரியை இருந்து
சொரூபம தானோர் துகளில் பார்ப்பாரே.

* உண்மையான பெரிய சிறந்த பாதையான "ஓம்" காரத்தை ஓர்ந்து கொள்ள வேண்டும்;
* சிவபரம் பொருளின் சப்தத்தை உணர்ந்து, நால் வேதத்தையும் கேட்க வேண்டும்;
* சிறப்பு நிறைந்த உருவ வழிபாட்டின் தன்மையையும் தெளிய வேண்டும்;;
* இறைவனது சொரூபத்துடன் ஐக்கியமானோர், ஒவ்வொரு அணுத்துகள்களிலும் இறைவனைப் பார்ப்பார்கள்.

228. சத்தியமும் தவம் தான் அவன் ஆதலும்
எத்தகும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்
ஒத்த உயிர்கள் உண்டா உணர்வு உற்றுப்
பெத்தம் அறுத்தலும் ஆகும் பிரமமே.

* சத்தியம் காத்தல் வேண்டும். தவம் செய்தல் வேண்டும். "அது" போன்று பாவனை செய்தல் வேண்டும்;
* விந்தினை எம் உடல் உள்ளேயே உருக்கி மாற்றி ஆத்மீகச் செயற்பாட்டுக்கு வழி செய்ய வேண்டும்;
* "சர்வ ஜீவ பாவனை" ஏற்பட வேண்டும். எல்லா உயிர்களிலும் தன்னை உணர வேண்டும்.
* எல்லாவிதமான பந்தபாசங்களையும், அதன் தொடர்புகளையும் முற்றாக நீக்க வேண்டும்; இவையே பிரம்ம சொரூபத்தில் திளைப்பதற்குரிய வழிவகைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

229. வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தம் கேட்டும் தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்தம் ஆவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தம் கேட்டவர் வேட்கை விட்டாரே.

* அநேகமான பிராமணர்கள் வேதாந்தம் கேட்பதற்கு விரும்புகின்றார்கள்;
* ஆனால் வேதாந்தம் கேட்ட பின்பும் தங்களது ஆசாபாசங்களை ஒழிக்காது உள்ளார்கள்;
* வேதாந்தம், எல்லாவிதமான வேட்கைகளையும் ஒழித்த இடத்திலேயே தெளிவாக விளங்கும்;
* உண்மை ஆர்வத்துடன் வேதாந்தம் கேட்டவர் எல்லாவிதமான வேட்கைகளையும் விட்டு விடுவார்கள்.

230. நூலும் சிகையும் நுவலில் பிரமமோ
நூலது கார்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூல் உடை அந்தணர் காணும் நுவலிலே.

* அந்தணர்கள் அணியும் நூலோ, வளர்க்கும் முடியோ பிரமம் அன்று;
* நூல் ஒருவித பாசக் கயிறு. சிகை உரோமங்களால் சூழ்ந்த ஒரு கவசம்;
* நூல் வேதாந்தத்தின் சின்னமாகும். நுண்சிகை ஞானத்தின் சின்னமாகும். அடையாளங்கள், சின்னங்கள் உண்மையல்ல;
* இவையே அந்தணர்களின் நூலினதும், சிகையினதும் தாற்பரியம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

231. சத்தியம் இன்றித் தனி ஞானம் தான் இன்றி
ஒத்த விடையம் விட்டு ஒரும் உணர்வு இன்றிப்
பத்தியம் இன்றிப் பரன் உண்மை இன்றிப்
பித்து ஏறும் மூடர் பிராமணர் தாம் அன்றே.

* *சத்தியம் பேணார்கள், தூய ஞானம் உணரார்கள்;*
* *திரிகரண சுத்தி இல்லார்கள். தெளிந்து உணரும் உணர்வு இல்லார்கள்;*
* *பக்தி செய்யார்கள். பரம்பொருள் எனும் உண்மை மீது விசுவாசம் இல்லார்கள்; இவ்வாறான*
* *பிராமணர்கள் - அந்தணர்கள் ஆக மாட்டார்கள். இவர்கள் வெறும் பித்துத் தலைக்கு ஏறிய மூடர்கள் ஆவர்கள்.*

232. திருநெறி யாகிய சித்தசித்து இன்றிக்
குரு நெறியாலே குருபதம் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணும்
துரிய சமாதியாம் தூய் மறையோர்க்கே.

* *அருள் நிறைந்த உண்மையான நெறியானது சித்தம் கடந்தது. சித்துக்களும் கடந்தது;*
* *சிவபரம் பொருளின் கருணையாலேயே சிவபரம் பொருளின் திருப்பாதத்தினைச் சேர்ந்து கொள்ளலாம்;*
* *எல்லாவிதமான கரும நியமங்களைக் கைவிட்டு விடுங்கள்;*
* *அப்பொழுதுதான் துரிய சமாதி கைகூடும். நீங்களும் தூய்மையான மறையோர்களாகக் காட்சி அளிப்பீர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

233. மறையோர் அவரே மறையவர் ஆனால்
மறையோர் தம்வேதாந்த வாய்மையில் தூய்மை
குறையோர் தன் மற்றுள்ள கோலாகலம் என்று
அறிவோர் மறை தெரிந்த அந்தணர் ஆமே.

* மறைபொருளாகிய உண்மையை உணர்ந்தவரே மறையவர் ஆவர்கள்;
* இவர்கள் வேதாந்தத்தினால் தூய்மை ஆனவர்கள். அவர்களின் வாய்மையிலும் தூய்மையே வெளிப்படும்;
* அநேக அந்தணப் பெருமக்கள் விழாக்களிலும் ஆடம்பரச் செய்கைகளிலுமே ஈடுபடுகின்றார்கள்;
* மறை உண்மை உணர்ந்தவரே உண்மையான அந்தணப் பெருமக்கள் ஆவர்.

234. அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேரும் செழும்புவி
நந்துதல்இல்லை நரபதி நன்றாகும்
அந்தியும் சந்தியும் ஆகுதி பண்ணுமே.

* வேத சொரூபத்தின் முடிபிலே இறைவனின் அருட் கடாட்சக் குளிர்மையை உணரலாம்;
* தெளிந்த சித்தம் உள்ள அந்தணப் பெருமக்களால் பூமி சிறப்படையும்;
* பூமியிலே எந்தவிதமான குறைவுகளும் ஏற்படாது. பூமியில் உள்ள மக்களும் நல்ல வாழ்க்கை நடாத்துவர்;
* ஆகவே நீங்கள் எல்லோரும் காலை, மதியம், மாலை வேளைகளில் தினமும் அக்கினி வளர்த்து வழிபாடு செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

235. வேதாந்த ஞானம் விளங்க விதியிலோர்
நாதாந்த போதம் நணுகிய போக்கது
போதாந்த மாம் பரன்பால் புகப் புக்கதால்
நாதாந்த முத்தியும் சித்தியும் நண்ணுமே.

* சப்த்த சொரூப ஞானத்தை உணர்ந்து கடந்தவர், வேதாந்த நிலையில் தங்கவே மாட்டார்;
* அவர்கள் நாதாந்த போதத்திலே திளைத்து இருப்பார்கள்;
* இறைவனிடத்து வெளிப்படும் மெய்ஞ்ஞான போதத்திலே, அதன் நீழலில் யோக நித்திரையில் இருப்பார்கள்.
* இந்நிலையில் நாதாந்தம் கடந்த முத்தி, நாதாந்தம் கடந்த சித்தி நிலையில் இருப்பார்கள். இது பரிபூரணத்துவ மோன நிலைக்கு எடுத்துச் செல்லும்.

236. ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து
நன்றும் இருந்தும் நலம்பல பேசினும்
வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்
சென்று வணங்கும் திரு உடையோரே.

* நடுநாடியும், வல-இட நாடிகளும் ஒன்றாகவே ஒருமுகப்படும் காலத்திலே;
* இருவினைகளின் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்து கொள் வார்கள்;
* இருந்த போதிலும், எல்லாவற்றையும் கடந்த இறைவனை என்றும் நாடிக் கொள்வார்கள்;
* என்றும் இவர்கள் இறைவனது உண்மை சொரூபத்தை உணர்ந்து வணங்குவர். இவர்களே "திருஉடையார்" எனப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

237. தானே விடும் பற்று இரண்டும் தரித்திட
நானே விடப்படும் ஏது ஒன்றை நாடாது
பூமேவு நான்முகன் புண்ணிய போகனாய்
ஓமேவும் ஓராகுதி அவி உண்ண வே.

* தானாகவே இரு வினைகளால் ஏற்படும் பற்றுக்கள் விலகி விடும்;
* அதன் பின்னர் நானாகவே விலக்குவதற்கு ஒன்றும் இல்லை. எதையும் இனிமேல் நான் நாடப்போவதில்லை.
* பிரம்ம சொரூபத்தில் மோன நிலையில் உள்ளேன்;
* அங்கே புறப்படும் "ஓம்" எனும் ஆகுதியை உண்டவாறு அமர்ந்து விட்டேன்.

## XIII. இராச தோட்டம்

238. கல்லா அரசனும் காலனும் நேர் ஒப்பர்
கல்லா அரசனில் காலன் மிக நல்லன்
கல்லா அரசன் அறம் ஓரான்கொல் என்பான்
நல்லாரைக் காலன் நணுக நில்லானே.

* கல்வி அறிவு இல்லாத அரசனும், காலதேவனும் ஒரே செயற்பாட்டினை உடையவர்கள்;
* காலதேவன் கல்வி அறிவு அற்ற அரசனிலும் பார்க்க மிகவும் நல்லவன்;
* கல்வி அறிவு அற்ற அரசன் அறத்தினைத் தெரிந்து கொள்ளவே மாட்டான். "கொல்" எனக் கூறுவான்;
* ஆனால் கால தேவன் அறம் உணர்ந்தோரை – நல்லோரை அண்மிக்கவே மாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

239. நாள்தோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தோறும் நாடி அவநெறி நாடானேல்
நாள்தோறும் நாடு கெடுமூட நண்ணுமால்
நாள்தோறும் செல்வம் நரபதி குன்றுமே.

* ஒருநாட்டின் சிறந்த மன்னன், தவநெறியில் நிற்போரை ஒவ்வொரு நாளும் நாடிச் செல்ல வேண்டும்;
* அந்த மன்னவன் அவமே செல்கின்ற வேறு எந்த நெறியையும் நாடவே கூடாது;
* அவ்வாறு நாடி அறநெறி தவறுவானேயாகில், ஒவ்வொரு நாளும் நாடு கெட்டுக் கொண்டே செல்லும்;
* அந்நாட்டின் செல்வமும் சிறப்பும் ஒவ்வொருநாளும் தேய்ந்து கொண்டே செல்லும்.

240. வேட நெறி நில்லார் வேடம் பூண்டு என்பயன்
வேட நெறி நிற்போர் வேடம் மெய் வேடமே
வேட நெறி நில்லார் தம்மை விறல் வேந்தன்
வேட நெறி செய்தால் வீடது ஆகுமே.

* வேடங்களைப் பலவிதமாகப் பூண்டு கொள்வார்கள். ஆனால் இவர்கள் அந்தந்த வேடத்திற்கு ஏற்ப ஒழுகி வாழ மாட்டார்கள். இவர்களின் வேடங்களால் ஒருவித பயனும் இல்லை;
* உண்மைநெறி நிற்பவர்களே சிறந்தவர்கள். அவர்களின் வேடமே உண்மையான வேடமாகும்;
* உண்மை வேடத்தின் நெறி நிற்காதவனை, வேடத்தின் வழி ஒழுக வைத்தல், அரசனது முக்கியமான கடமைகளில் ஒன்றாகும்;
* இது அரசனுக்கும் நாட்டுக்கும் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

241. மூடம் கெடாதோர் சிகைநூல் முதல் கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடொன்று இலனாகும் ஆதலால் பேர்த்து உணர்ந்து
ஆடம்பர நுல் சிகை அறுத்தால் நன்றே.

* உண்மையான ஞானத் தெளிவு இல்லாதவர்கள் சிகையும், நூலும் அணிதல் ஆகாது. இவர்கள் இவற்றை அணிந்தால்;
* பூமியில் உள்ள வளங்கள் வாடும். மக்களின் பெருவாழ்வு குன்றும்;
* மன்னனும் நோயினால் பீடிக்கப்படுவான்;
* ஆகையால் இவற்றை உணர்ந்து, ஆடம்பரமான நூலையும் சிகையையும் அறுத்தல் எல்லோருக்கும் மிகவும் நன்றாகும்.

242. ஞானம் இலாதார் சடை சிகை நூல் நண்ணி
ஞானிகள் போல நடிக்கின்றவர் தம்மை
ஞானிகளாலே நரபதி சோதித்து
ஞானம் உண்டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே.

* சிறிதளவேனும் ஞானத் தெளிவு இல்லாதவர்கள் சடையும், சிகையும், நூலும் அணிந்துள்ளார்கள்;
* இவர்கள் பெரும் ஞானிகள் போன்று தம்மை வெளிப்படுத்தி நடிக்கின்றார்கள்;
* உண்மையான ஞானிகளாலே, இவர்களை ஆராய்ந்து, இவர்களின் தன்மையைக் குலைத்து எறிய வேண்டும்;
* சிறந்த ஞானத்தை உண்டாக்குதல் நாட்டிற்குச் சிறப்பு உடையதாகவும், மிகமிக நன்றாகவும் விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

243. ஆவையும் பாவையும் மற்று அறவோரையும்
தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையும்
காவலன் காப்பவன் காவாது ஒழிவனேல்
மேவும் மறுமைக்கு மீள நரகமே.

* பசுக்கூட்டங்களை, கற்புடைய பெண்களை, அறம் உணர்ந்த பெரியோர்களை, தேவர்கள் போற்றுகின்ற திருவேடம் தாங்கிய ஞானியர்களை;
* நாட்டின் காவலனாகிய அரசன் காப்பது அவனின் மிகவும் முக்கியமான கடமையாகும்;
* அரசன் இக்கடமையில் இருந்து தவறுவானாகில், இனி வரப் போகின்ற எந்தப் பிறப்புகளிலும் மீளமுடியாத நரகத்திலேயே கிடந்து உழலுவான்.

244. திறந்தரு முத்தியும் செல்வமும் வேண்டில்
மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும்
சிறந்த நீர் ஞாலம் செய்தொழில் யாவையும்
அறைந்திடில் வேந்தனுக்கு ஆறில் ஒன்றாமே.

* சிறந்த செல்வமும், முத்தியும் வேண்டுமானால் நீங்கள்;
* மறந்தும், நினைவோடும் அறநெறியினையே செய்தல் வேண்டும்.
* பூமியில் உள்ள எல்லாத் தொழில் செய்பவர்களையும் நல்ல வகையில் நெறிப்படுத்த வேண்டும்;
* இதுவே அரசனுக்குச் சிறந்த ஆறுதலைக் கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

245. வேந்தன் உலகை மிக நன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழியாய் நிற்பார்
பேர்ந்து இவ் உலகைப் பிறர் கொள்ளத் தாம் கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவகத் தானே.

* *அரசன் உலகத்தைச் சிறந்த முறையில், எல்லா வழிவகைகளாலும் பாதுகாப்பது மிகவும் நன்றாகும்;*
* *அப்பொழுது உலகத்து மக்களும், அரசனின் சிறந்த வழிகளைப் பின்பற்றி நிற்பார்கள்;*
* *இவ் உலகம் பாவம் நிறைந்தவர்களால் ஒருபோதும் ஆளப்படவே கூடாது; அப்படி அவர்கள் செய்தால்*
* *மிகவும் கொடிய புலிகள் வாழும் காடாக உலகம் மாறிவிடும்.*

246. கால் கொண்டு கட்டிக் கனல் கொண்டு மேல் ஏற்றிப்
பால் கொண்டு சோமன் முகம் பற்றி உண்ணாதோர்
மால் கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல் கொண்டு தண்டம்செய் வேந்தன் கடனே.

* *இடகலை, வலகலை அடைபடும் போது நடுநாடி செயற்பட ஆரம்பிக்கும், அப்போது ஞானாக்கினி நடுநாடி ஊடாக மேல் ஏறும்;*
* *ஐந்து புலன்களும் பால் சொரிய ஆரம்பித்துவிடும், அன்பு நிலையினை அடைந்து இவற்றை மெய்ஞ்ஞான விழிப்பு நிலையால் உணர வேண்டும் - அனுபவிக்க வேண்டும்;*
* *ஆனால் கிருஷ்ணலீலை பூண்டு உலகத்துப் பெண்களை எல்லாம் காமம் செய்கின்றார்கள் இருள் சூழ்ந்தவர்கள்;*
* *இந்தப் பொய் வேடத்து அவதாரிகளை அரசன் கைது செய்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவது அரசனது பிரதான கடமையாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

247. தத்தம் சமயத் தகுதி நில்லாதாரை
அத்தன் சிவன் சொன்ன ஆகமநூல் நெறி
எத்தண்டமும் செயும் மும்மையில் இம்மைக்கே
மெய்த் தண்டம் செய்வது அவ்வேந்தன் கடனே.

* மக்கள் எவ்வெவ் நிலைப்பாட்டில் நிற்கின்றார்களோ, அந் நிலையில் இருந்தே இறைவனை உணர ஆரம்பிக்க வேண்டும்;
* இறைவன் அருளிய ஆகமங்கள் சிறந்த உயர்ந்த நெறிகளை உள்ளாக்கியது;
* ஆகமங்கள் எல்லா வகையான சிறப்புக்களையும் இவ் உலகத்திற்கும் அவ் உலகத்திற்கும் வழங்குவன; மண், வான், விண் நிலைகளைத் தெளிவுபடக் கூறுவன;
* எல்லோரையும் சிறந்த வழியில் ஆகம நெறியில் நிலைப் படுத்துவது அரசனின் கடமையாகும்;

## XIV. வானச் சிறப்பு

248. அமுது ஊறு மாமழை நீர் அதனாலே
அமுது ஊறும் பன்மரம் பார்மிசை தோற்றும்
கமுகு ஊறு தெங்கு கரும்பொடு வாழை
அமுது ஊறும் காஞ்சிரை ஆங்கு அதுவாமே.

* அமுதம் ஊறுவது போன்று, வானத்தில் இருந்து பருவம் தவறாது பெருமழை நீராகப் பூமியில் பொழியும்;
* அதனால் பூமியில் உள்ள பலவகையான மரங்களில் - கமுகு மரம், தென்னை மரம், கரும்பு மரம், வாழை மரம் முதலியனவற்றில் அமுதம் ஊறும் - தோன்றும்;
* அதே நேரத்தில் காஞ்சிர மரமாகிய நச்சுமரமும் நன்கு வளரும். அதில் நஞ்சு உருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

249. வரைஇடை நின்றுஇழிவான் நீர் அருவி
உரை இல்லை உள்ளத்து அகத்து நின்று ஊறு
நுரை இல்லை மாசு இல்லை நுண்ணிய தெண்ணீர்க்
கரை இல்லை எந்தை கழுமணிக் குன்றே.

* உயர்ந்த மலைகளை, மழைமுகில் கூட்டங்கள் சூழ்ந்து கொள்ளும். வானத்தில் இருந்து இழிந்து நீர் அருவியாகப் பொழிந்து ஓடும்;
* இந்த ஆனந்தமான இயற்கைக் காட்சியைக் காணும்போது நான் மௌனமாகி விடுகின்றேன். தொடர் மௌனம் என் உள் அகத்தில் இருந்து வற்றாது ஊறிக் கொண்டே உள்ளது;
* எந்தவிதமான மாயையின் செயற்பாடுகளும், குறைபாடுகளும் எனக்கு இல்லை.

## XV. தானச்சிறப்பு

250. ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்
பார்த்து இருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே.

* எல்லாருக்கும் எல்லாவற்றையும் பகிர்ந்து கொடுங்கள். அவர் இவர் என பாகுபாடு காட்ட வேண்டாம்;
* நல்ல விருந்தாளியைப் பார்த்து (துறவி) அதன்பின் உண்ண வேண்டும். பழம்பொருளாகிய சிவபரம் பொருளைப் போற்றி வழிபடுங்கள்;
* எல்லாவற்றிலும் விருப்பம் உடையீர் அவசரப்பட்டு உணவை உண்ண வேண்டாம்;
* காகம் உண்ணும் போது கரைந்து எல்லாக் காகக் கூட்டங்களையும் கூப்பிட்டு ஒன்றாகவே உண்ணும். அவ்வாறே நீங்களும் விருந்தினர்களை அழைத்தே உண்ணுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## XVI. அறம் செய்வான் திறம்

251. தாம் அறிவார் அண்ணல் தாள் பணிவார் அவர்
தாம் அறிவார் அறம் தாங்கி நின்றார் அவர்
தாம் அறிவார் சிலர் தத்துவர் ஆவர்கள்
தாம் அறிவார்க்குத் தமர் பரனாமே.

* *தம்மை முற்றாக உணர்ந்தவர் இறைவனது திருப்பாதங்களை வணங்குவர்;*

* *தம்மை முற்றாக உணர்ந்தவர் அறத்தைத் தாங்கி நிற்பார்கள். அறத்திற்குக் காவலாக நிற்பார்கள்;*

* *தம்மைத் தெளிவாக உணர்ந்தவர்கள் சிறந்த தத்துவர்கள் ஆவர்கள்;*

* *தம்மைத் தெளிவாக உணர்ந்தவர்களது இடத்திலேயே சிவ பரம்பொருள் உறையும்.*

252. யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒருவாய் உறை
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன் உரை தானே.

* *சகல உயிரினங்களும் சாந்தமாக வாழ்வதற்கு, இறைவன்மீது பசுமையான இலை ஒன்றினை வைத்து வழிபாடு செய்யுங்கள். இது முடியாவிடில்;*

* *சகல உயிரினங்களும் சாந்தமாக வாழ்வதற்கு கண்ணுக்கு முன் தென்படும் பசு ஒன்றிற்கு ஒரு பிடி புல்லு வழங்குங்கள். இதுவும் முடியாவிடில்;*

* *சகல உயிரினங்களும் சாந்தமாக வாழ்வதற்கு நீங்கள் உண்ணும்போது உங்களுக்கு அருகில் உள்ளவர்க்கும் பரிமாறி உணவு அருந்துங்கள்;*

* *மேற்கூறிய எதுவுமே செய்ய வாய்ப்பு இல்லாதுபோனால் சர்வ உயிரினங்களும் சாந்தமாக வாழ்வதற்காக எல்லோருடனும் அன்பான வார்த்தையைப் பேசுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

253. அற்று நின்றார் உண்ணும் ஊனே அறன் என்னும்
கற்றன போதம் கமழ்பவர் மானிடர்
உற்று நின்று ஆங்கு ஒரு கூவல் குளத்தினில்
பற்றி வந்து உண்ணும் பயன் அறியாரே.

* விருந்தினருக்கும், துறவிகளுக்கும் உணவு வழங்கப்படுவதே அறம் ஆகும்;
* உண்மையான மானிடர்கள் தாம் பெற்ற மெய்ஞ்ஞானக் கல்வியால், அவர்களிடம் இருந்தே சத்திய போதம் வெளிப்பட்டு, அவர்களிலேயே மலர்ச்சியடையும்;
* "கூவல்" எனும் பறவை மிகுந்த ஆவல் மிகுதியால், குளம் ஒன்றில் அமர்ந்து தனது இரையை உண்ணும்;
* இதேபோன்று எல்லாப் பற்றுக்களையும் விட்ட துறவி பல காலத்திற்கு ஒரு தடவை ஆத்மார்த்தமாக உணவு அருந்துவர். இந்தச் செயற்பாட்டின் உண்மையாம் பயன்பாட்டை அறியாது உள்ளார்களே அநேக மக்கள்.

254. அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய நாளில் தருமம் செய்யீர்
விழித்து இருந்து என் செய்வீர் வெம்மை பரந்து
விழிக்க அன்று என் செய்வீர் ஏழை நெஞ்சீரே.

* மாயையின் செயற்பாட்டை விடமாட்டீர்கள். மெய்ஞ்ஞான அறிவைத் தேடமாட்டீர்கள்;
* எல்லா வசதிகளும், வாய்ப்பும் கிடைக்கின்ற போது தருமங்களைச் செய்ய மாட்டீர்கள்;
* உண்மையை உணராது இரவு பகலாக விழித்து இருந்து என்ன செய்யப் போகின்றீர்கள்;
* ஏழ்மையான நெஞ்சத்தை உடையவர்களே, உங்களுக்குக் காலதேவனின் அழைப்பு ஓலை வரும். அப்போது நீங்கள் விழிக்க இருந்து என்ன தான் செய்யப் போகின்றீர்களோ!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

255. தன்னை அறியாது தான் அல என்னாது இங்கு
இன்மை அறியாது இளையர் என்று ஓராது
வன்மையில் வந்திடும் கூற்றம் வருமுன்னர்
தன்மையில் நல்ல தவம் செய்யும் நீரே.

* உங்களை நீங்கள் உணராது உள்ளீர்கள். "நான்" பெரியவன் என்று பேசிக்கொண்டு இருக்காதீர்கள்;
* இவ் உடம்பின் உயிரின் சிறப்பை நோக்கத்தை உணராது உள்ளீர்கள். இன்னும் காலம் இருக்கின்றது என்று வழிபாட்டைப் பின்போடாதீர்கள்; பின்னர்,
* நோய் வந்திடும். கால தேவனும் ஓலையுடன் வந்துவிடுவான். அதன் முன்னதாகவே;
* நல்ல வகையான தெளிந்த வாழ்க்கை முறைகளை மேற்கொண்டு தவம் செய்ய உடனடியாகவே ஆரம்பியுங்கள்.

256. துறந்தான் வழிமுதல் சுற்றமும் இல்லை
இறந்தான் வழிமுதல் இன்பமும் இல்லை
மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்
அறம்தான் அறியும் அளவு அறிவாரே.

* உண்மையான துறவிகளுக்கு எந்தவிதமான சுற்றத்தவர்களும் இல்லை.
* துறவிகள் இறந்தவர்களைப் போல் இருப்பவர்கள். அவர்களுக்கு எந்தவிதமான இன்பமும் இல்லை;
* மறந்தவர்களுக்கு இறைவன் ஒரு போதும் அநுக்கிரகம் செய்யப் போவதில்லை;
* அறத்தின் உண்மையான தாற்பரியத்தை அறியாது மக்கள் உள்ளார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

257. தான் தவம் செய்வதாம் செய்தவத்து அவ்வழி
மான் தெய்வம் ஆக மதிக்கும் மனிதர்கள்
ஊன் தெய்வம் ஆக உயிர்க்கின்ற பல்உயிர்
நான் தெய்வம் என்று நமன் வருவானே.

* ஒருவர் செய்யும் தவத்திற்கு ஏற்ப அவருக்கு, இறைவரை அடையும் சிறந்த மார்க்கம் கிடைக்கின்றது;
* மனிதர்கள் சிறந்த இறை மார்க்கத்தைத் தெய்வம் ஆகவே மதிக்க வேண்டும்;
* அநேக மனிதர்கள் உடம்பையே தெய்வம் ஆக மதிப்பர். இவர்களுக்கு உயிர் போகும் காலத்து;
* நானே தெய்வம் என்று கூறிக்கொண்டு காலதேவன் - கூற்றுவன் வருவான்.

258. திளைக்கும் வினைக் கடல் தீர்வுறு தோணி
இளைப்பினை நீக்கும் இரு வழி உண்டு
கிளைக்கும் தனக்கும் அக்கேடில் புகழோன்
விளைக்கும் தவம் அறம் மேற்துணை யாமே.

* வினைக்கடலிலே திளைத்துத் தத்தளிக்கும் போது, ஒரு தீர்வாகத் தோணி ஒன்று தென்படும். அதுதான் ஞானத்தோணி;
* எல்லா வினைகளாலும் ஏற்படும் களைப்புகளைப் போக்க இரு வழிகள் உண்டு;
* சுற்றத்தவர்களும் நீயும், எல்லாவித துக்கங்களில் இருந்து விடுபட்டு விடலாம்;
* அவ்விருவழிகள்தான்; முறையே சிறந்த இறை மார்க்கம் ஆகிய அறமும், இறைவனை நோக்கி வாழுகின்ற தவவாழ்க்கையும் ஆகும்.

அறம் - எனும் தோணி - உலகத்தைக் கடக்க.

தவம் - எனும் தோணி இறைவனை அடைய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

259. பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை
அற்றம் உரையான் அறநெறிக்கு அல்லது
உற்று உங்களால் ஒன்றும் ஈந்தது வே துணை
மற்று அண்ணல் வைத்த வழி கொள்ளுமாறே.

* இந்தப் பூமியில் நீங்கள் பற்ற வேண்டியதைப் பற்றுங்கள்;
* அறநெறியைத் தவிர்ந்த வேறு எதனையும் மேற்கொள்ளாதீர்கள்;
* நீங்கள் எவ்வாறான அறம் செய்கின்றீர்களோ, அதுவே உண்மையில் உங்களுக்குத் துணையாக வரும்;
* இறுதியாக இறைவனால் ஏற்படுத்தப்பட்ட மெய்ஞ்ஞான வழி உங்களை அணைத்து எடுத்துச் செல்லும்.

## XVII. அறம் செய்யான் திறம்

260. எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய நல் அறம் செய்யாதவர் செல்வம்
வட்டி கொண்டு ஈட்டியே மண்ணில் முகந்திடும்
பட்டிப் பதகர் பயன் அறியாரே.

* எட்டி எனும் நச்சு மரத்துக் கொடிய கனிகள் பூமியிலே விழுந்து கிடக்கின்றன. இதனால் எப்பலனும் இல்லை;
* நல்ல அறங்களைச் செய்யாதவர்கள் உடைய செல்வமும் அவ்வாறே உலகத்தில் காணப்படுகின்றது;
* தங்கள் செல்வத்தை வட்டி கொண்டு மேலும் மேலும் பெருக்கி வாழுகின்றார்கள்;
* இவர்கள் பட்டி பட்டியாக அடைக்கப்பட்டு இருக்கும் செம்மரி ஆட்டுக் கூட்டங்களுக்கு ஒப்பானவர்கள். இவர்கள் அறத்தின் பயன் ஒன்றும் அறியாதவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

261. ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பனை நாளும் குறுகிப்
பிழிந்தன போலத் தம்பேர் இடர் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம் அறியாரே.

* எத்தனையோ காலங்கள் ஒழிந்து போய்விட்டன. ஊழிக் காலங்களும் வந்து போகின்றன.
* கற்பனைகள் எல்லாம் மனதில் தோன்றி மறைகின்றன. நாட்களும் குறுகிக் கொண்டே போகின்றன;
* செல்வம், பெயர், புகழ் எல்லாம் தேய்ந்து கொண்டே போகின்றன;
* இவை எல்லாம் எம் கண்முன்னாலேயே அழிந்து போகின்றன. இருந்தும் அறத்தின் சிறப்பை அறியாது உள்ளார்களே அநேக மக்கள்.

262. அறம் அறியார் அண்ணல் பாதம் நினையும்
திறம் அறியார் சிவலோக நகர்க்குப்
புறம் அறியார் பலர் பொய்ம்மொழி கேட்டு
மறம் அறிவார் பகை மன்னி நின்றாரே.

* அறமும் அறிய மாட்டார்கள். இறைவனது திருப்பாதங்களை நினைந்து கொள்ளும் திறமையும் அறியமாட்டார்கள்;
* "சிவலோகம்" என்னும் தெய்வீக நகர் இருப்பதையும் அறிய மாட்டார்கள். வெறும் பொய் மொழிகளைக் கேட்டு மறம் செய்வார்கள்;
* இதனால் பகையையே வளர்த்துக் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

263. இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமம் செய்யாதவர் தம் பாலதாகும்
உருமிடி நாகம் உரோணி கழலை
தருமம் செய்வார் பக்கல் தாழகிலாவே.

* இருமல், சோர்வு, தொய்வு, சூலை போன்ற நோய்கள், தருமம் செய்யாதவர்களைச் சூழ்ந்து கொள்ளும்.

* திடகாத்திரமும், வீரமும், மன உறுதிப்பாடும், திருவடி இன்பமும் தருமம் செய்பவர்களுக்குக் கிடைக்கும். இவர்கள் ஒருபோதும் தாழ்ந்து போகமாட்டார்கள்.

264. பரவப் படுவான் பரமனை ஏத்தார்
இரவலர்க்கு ஈதலை ஆயினும் ஈயார்
கரகத்தால் நீர் அட்டிக்காவை வளர்க்கார்
நரகத்தில் நிற்றீரோ நாள் எஞ்சினீரே.

* எல்லா இடங்களுக்கும் அலைந்து திரிவர். ஆனால் இறைவனை வழிபட மாட்டார்; இரப்பவர்களுக்கு ஒன்றுமே வழங்கார்;

* நல்ல பாத்திரத்தில் நீர் எடுத்து, இறைவனை ஜெபம் செய்து தன் உள்ளகத்தை வளர்க்க மாட்டார்கள்;

* நரகத்தில் நின்று உழல்வதற்கே தங்கள் வாழ்நாட்களைக் கழிக்கின்றார்கள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

265. வழி நடப்பார் இன்றி வானோர் உலகம்
கழி நடப்பார் கடந்தார் கருப் பாரும்
வழி நடக்கும் வினை மாசு அற ஓட்டிட
வழி நடக்கும் அள வீழ்ந்து ஒழிந்தாரே.

* வானவர்களது உலகத்தை நாடி நடப்பவர்களைக் காண முடியவில்லையே;
* ஒரு இலட்சிய நெறியினை நோக்கிச்செல்பவர்கள் எல்லாவிதமான மாயையின் செய்கைகளையும் கடந்து விடுவர்;
* வினையின் வழியே நடப்பவர்கள், மாயையின் செய்கையில் வாழ்பவர்கள் அறத்தைக் கைவிட்டு விடுவார்கள்;
* இவர்கள் எந்தப் பாதையால் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டாலும், வீழ்ந்து ஒழிந்து விடுவார்கள்.

266. கனிந்தவர் ஈசன் கழல் அடி காண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கம் அது ஆள்வர்
மலிந்தவர் மாளும் துணையும் ஒன்று இன்றி
மெலிந்த சினத்தின் உள் வீழ்ந்து ஒழிந்தாரே.

* உள்ளகம் கனிந்தவர், கருணை இதயம் கொண்டவர் இறைவனது திருவடியினைக் காண்பார்கள்;
* துணிவு உள்ளவர்கள், இறைவனைச் சூழ்ந்துள்ள துறவிகளில் தலைவர் ஆவர்;
* அநேக மக்கள் மாழுகின்ற உலக மாயா காரியங்களில் ஈடுபட்டுத் துணை இன்றித் தவிப்பார்கள்;
* தங்களது கோபத்தினால் வாடி வதங்கி வீழ்ந்து ஒழிந்து போவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

267. இன்பம் இடர் என்று இரண்டு உற வைத்தது
முன்பு அவர் செய்கையினாலே முடிந்தது
இன்பம் அது கண்டு ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம் அறியாரே.

* உலகத்தில் இன்பமும் துன்பமும் இருவகையாக வைக்கப் பட்டுள்ளன. இது ஒரு வெள்ளிக் காசின் இருபக்கத்தை ஒத்தன;
* முன்பு செய்த நல்ல புண்ணியங்களினால் இருமை வகையான தன்மை முற்றாக நீங்கி விடும்;
* பேதை மக்கள், தாம் இன்ப நிலையில் இருக்கும் போதாவது ஒன்றும் ஈயாது உள்ளனர்;
* இவர்களின் இதயம் அன்பே இல்லாதது. அதனால் அறம் ஒன்றும் அறியமாட்டார்கள்.

268. கெடுவதும் ஆவதும் கேடில் புகழோன்
நடு அல்ல செய்து இன்ப நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யில் பசுவது ஆமே.

* அழிவும், ஆக்கமும், எந்தவித குறைபாடும் இல்லாத புகழ் உடையவர்கள், நடுவு நிலைமையில் இருந்து விலகி எந்தவிதமான இன்பத்தையும் தேடமாட்டார்கள்;
* எக்காலத்திலும் எல்லாவற்றையும் எல்லாருக்கும் வழங்க வேண்டும். அறம் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் இருத்தலே மிகவும் சிறப்புடையதாகும்;
* எல்லோருக்கும் இன்பத்தையே இதயத்தால் பரிமாறிக் கொள்ளுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் உங்கள் ஆத்மார்த்த சொரூபத்தில் திளைப்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

269. செல்வம் கருதிச் சிலர் பலர் வாழ்வு எனும்
புல் அறிவாளரைப் போற்றிப் புலராமல்
இல்லம் கருதி இறைவனை ஏத்து மின்
வில்லி இலக்கு எய்த வில் குறியாமே.

* உலக செல்வத்தையே சதா மனக் கருத்தில் கொண்டுள்ளார்கள். பலர் அவ்வாறான வாழ்க்கையையே நடாத்துகின்றார்கள்;
* இவ்வாறான மிகவும் கீழ்மையான வாழ்க்கை நடாத்தும் அறிவீனர்களைப் போற்றிப் புகழ வேண்டாம்;
* உங்களது ஆத்ம நேயம் கருதி இறைவனைப் போற்றி வழிபாடு செய்யுங்கள்;
* இது வில்லில் நாண் பூட்டி அம்பை ஒரு இலக்கு நோக்கி எய்துவதற்குச் சமனாகும்;

வில்லு : உடம்பு, நாண் : பிராண சக்தி – உயிர்
அம்பு : ஆத்மா இலக்கு : இறைவன்

## XVIII. அன்பு உடைமை

270. அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவம் ஆய் அமர்ந்து இருந்தாரே.

* அறிவு இல்லாதவர்கள் அன்பு வேறு சிவம் வேறு என்று இரண்டாக்கிக் கூறுவர்;
* அன்பு தான் சிவம் - இறைவன் என்பதை யாரும் உணராது உள்ளார்களே;
* அன்பு தான் சிவம் ஆக விளங்குவதை உணர்ந்து கொள்ள வேண்டும்;
* அப்பொழுது நீங்கள் அன்பு சொரூபமாய் "சிவம்" போன்று அமர்ந்து ஆத்ம மலர்ச்சியோடு இருப்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

271. பொன்னைக் கடந்து இலங்கும் புலித்தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம் பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்கு
பின்னிக் கிடந்தது என் பேர் அன்புதானே.

* புலித்தோலினை அணிந்தால் போல், மாயையை ஆடையாக அணிந்துள்ளான். பொன்னைப் போன்ற மேனியை உடையவன்;
* இளம்பிறைச் சந்திரன் முடிமேல் இருப்பதால், மின்னி மின்னிக் காட்சி கொடுக்கின்றது;
* சுடலையின் சுடுசாம்பலையே என்றும் பூசுவான். அங்கே எங்கும் நிசப்த்தமான காட்சி. சதா ஆடிக் கொண்டே இருப்பான்;
* நானோ இந்த அற்புதமான காட்சிகளைக் கண்டு அதிலேயே பின்னிப் பிணைந்து இருக்கின்றேன். மேலும் மேலும் என் அளவு கடந்த அன்பை இறைவன் மேல் வைத்துக் கொண்டே உள்ளேன்.

272. என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன் போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி
என்பொன் மணியை எய்த ஒண்ணாதே.

* தனது உடம்பின் என்பினை விறகாக்கி, சதையை இறைச்சியாக அறுத்தால் தான் என்ன!
* பின்னர் அவற்றை நெருப்பிலே இட்டுப் பொன்போல் வறுத்தால் தான் என்ன!
* ஆத்மார்த்த இதய அன்போடு உருக்கமாக, அகத்தினைக் கருணையால் குழைவடையச் செய்ய வேண்டும்;
* அப்பொழுது தான் என் பொன்னான மணியை இறைவனை அடைய முடியும். வேறு எந்த வழிகளாலும் அவனை உணரவே முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

273. ஆர்வம் உடையவர் காண்பர் அரன் தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணை அடி
பாரம் உடையவர் காண்பார் பவம் தன்னைக்
கோர நெறி கொடு கொங்கு புக்காரே.

* உண்மையான ஆர்வம் உள்ளவர், சிரத்தை உள்ளவர் இறைவனது திருவுருவைக் காண்பர்;
* அன்பு, கருணை இதயத்தில் நிறைந்தவர் இறைவனின் இணையடியினைக் காண்பர்;
* மனத்திலே எல்லாவிதமான பாரங்களையும் உள்ளாக்கியவர்கள், பாவத்தையே சம்பாதிப்பார்கள்;
* இவர்கள் கொடுமையான செயல்களைச் செய்து நரகமே புகுவார்கள்.

274. என் அன்பு உருக்கி இறைவனை ஏத்துமின்
முன் அன்பு உருக்கி முதல்வனை நாடுமின்
பின் அன்பு உருக்கிப் பெருந்தகை நந்தியும்
தன் அன்பு எனக்கே தலை நின்ற வாறே.

* எனது முழுமையான அன்பையும் திரட்டி உருக்கி இறைவனை நான் வழிபாடு செய்கின்றேன்;
* நீங்களும் எல்லாவற்றிற்கும் முன்னதாகவே அன்பை முதலாக வைத்து இறைவனை நாடுங்கள்;
* பின்னாடித் தோன்றவுள்ள எல்லா அன்பையும் என் வழிகாட்டியாகிய நந்திக்கே ஒப்படைப்பேன்;
* இறைவனது முழுமைத்துவமான அன்பு எனக்கு என்றும் தலைமையாகக் காவலாக விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

275. தான் ஒரு காலம் சயம்பு என்று ஏத்தினும்
வான் ஒரு காலம் வழித்துணையாய் நிற்கும்
தேன் ஒரு பால் திகழ் கொன்றை அணி சிவன்
நான் ஒரு வண்ணம் என் அன்பில் நின்றானே.

* எல்லாவற்றையும் கடந்தவர் வென்றவர் என்று இறைவனை நான் போற்றி வழிபடுவேன்;
* நான் வானவீதியில் சஞ்சாரம் செய்கின்ற காலத்தும் இறைவன் எனக்கு என்றும் துணையாக இருப்பான்;
* தேனும் பாலும் நிறைந்த கொன்றை மலர்களை இறைவன் அணிந்துள்ளான்;
* மிகவும் அற்புதமாக, என் அன்பில் இறைவன் வீற்றிருக்கின்றான்.

276. முன்பு அடைத்த இன்பம் படைத்த முதல் இடை
அன்பு அடைத்த எம்பெருமானை அறிகிலார்
வன்பு அடைத்த இந்த அகலிடம் வாழ்வினில்
அன்பு அடைத்தான் தன் அகலிடத்தானே.

* மிகவும் முற்பட்ட காலத்து இருந்தே பேரின்ப நிலை முழுமைத்துவமாகிப் படைக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் பேரின்பமே முதலாகவும் இறுதியாகவும் உள்ளது;
* எம்பெருமான் - சிவம் அன்பை, முழுமைத்துவமாகவே எமக்கு அளித்துள்ளார்; அநேகர் இதனை அறியாது உள்ளார்கள்;
* இந்தப் பூமியில் உள்ள பெரும்பாலான மனித வாழ்க்கை சூது வாதுக்களால் சூழப்பட்டுள்ளது;
* ஆனால் இறைவனோ அன்பையே எல்லா இடத்தும் வைத்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

277. கருத்து உறு செம்பொன்செய் காய் கதிர்ச்சோதி
இருத்தியும் வைத்தும் இறைவன் என்று ஏத்தியும்
அருத்தி உள் ஈசனை ஆர் அருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே.

* செந்நிறப் பொன்னை அக்கினியில் இட்டுப் புடம் போடும் பொழுது, ஜோதி - கதிர் வடிவில் புறப்படுவதை நாம் எம் கருத்தினால் உணரலாம்;
* இவ்வாறு எம்மை நன்கு வாட்டி வதைத்துப் பக்குவப்படுத்தி இறைவனை வழிபட வேண்டும்;
* அப்போது இறைவனது அருள் எம் உள்ளே புகுந்துவிடும்;
* இறைவன் விண்ணவர்களுக்கு எல்லாம் தலைவன். எம்மை எல்லா வழிகளாலும் பக்குவப்படுத்திப் - பதப்படுத்தித் தன்னுடன் எடுத்துக் கொள்வான்.

278. நித்தலும் துஞ்சும் பிறப்பையும் செய்தவன்
வைத்த பரிசு அறிந்தேயும் மனிதர்கள்
இச்சை உளே வைப்பர் எந்தை பிரான் என்று
நச்சியே அண்ணலை நாடு கிலாரே.

* ஒவ்வொரு நாளும் எம் உள்ளே பிறப்பும் இறப்பும் நிகழ்கின்றன. இவற்றை இறைவன் ஏற்படுத்தி உள்ளான்;
* சிறந்த அருள் சொரூபமான ஆத்மாவும் எம்முள்ளே உண்டு. எல்லா மனிதர்களுக்கும் இது தெரியும்;
* ஆனால் உலக இச்சைக்கும், உடல் இச்சைக்கும் ஆகவே இறைவனை எண்ணுவர்;
* உண்மையான ஆத்ம நேயத்திற்காக இறைவனை நாடாது உள்ளார்கள் இந்த மனிதர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

279. அன்பின் உள்ளான் புறத்தாய் உடலாய் உளான்
முன்பின் உள்ளான் முனிவர்க்கும் பிரான் அவன்
அன்பின் உள்ளாகி அமரும் அரும்பொருள்
அன்பின் உள்ளார்க்கே அணை துணையாமே.

* இறைவன் "அன்பு" மயமாக உள்ளான். புறமாகவும் உள்ளான். சகல உருவங்களின் உள்ளேயும் வெளியேயும் உள்ளான். உடலாகவும் உள்ளான்;
* முன்னேயும் தென்படுபவன் இறைவனே. பின்னேயும் புலப்படுபவன் இறைவனே. சர்வ முனிபுங்கவர்களுக்கும் ஒருவனே இறைவன்;
* அன்பின் உள்ளே முழுமைத்துவமாக உட்சென்று அமரும் போது, அரும்பெரும் பொருள் - உண்மை புலப்படும்;
* அன்பாய் - அன்பில் நிறைந்தவர்களுக்கே, இறைவன் துணை யாகவும் அணையாத காவலாகவும் விளங்குவன்.

## XIX. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

280. இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்து அருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்து அன்பு செய்து அருள்கூர வல்லார்க்கு
மகிழ்ந்து அன்பு செய்யும் அருளது வாமே.

* உண்மையான புகழ்ச்சியினையும் இகழ்ச்சியினையும் இறைவன் அறிவான்;
* மிகவும் விருப்போடு அருள் செய்பவன் உத்தம தலைவனாகிய இறைவன்;
* முழுமைத்துவமான அன்பு மலரை, எம் உள்ளே மலரச் செய்து இறைவனுக்கு சாத்த வேண்டும்; இறை அருளைத் தெளிவாக உணர வேண்டும்;
* ஆத்ம மகிழ்ச்சியுடனும், மலர்ச்சியுடனும் இறைவனை அன்பு செய்தால் எல்லா இருளும் விலகிவிடும். இவை இறை அருளால் நிகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

281. இன்பப் பிறவிக்கு இயல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில் பல என்னினும்
அன்பில் கலவி செய்து ஆதிப் பிரான் வைத்த
முன்பு அப்பிறவி முடிவது தானே.

* பேரின்பம் தரவல்ல பிறவியைத் தந்து அதற்குரிய வழிவகைகளை இறைவன் செய்துள்ளான்;
* துன்பம் தருகின்ற பிறவிகளும், அதற்குரிய செயற்பாடுகளும் நிறைந்து காணப்படுகின்றன;
* உண்மையான ஆத்மார்த்த அன்பினால் ஆதித் தலைவனாகிய இறைவனுடன் கூடிக் கொள்ளுங்கள்;
* அப்பொழுது துன்பம் தந்த முன்னைய எல்லாப் பிறவிகளும், மீண்டும் தோன்றாதவாறு முடிந்துவிடும்.

282. அன்புறு சிந்தையின் மேல் எழும் அவ் ஒளி
இன்புறு கண்ணியொடு ஏற்க இசைந்தன
துன்புறு கண்ணி ஐந்து ஆடும் துடக்கு அற்று
நன்புறு சிந்தையை நாடுமின் நீரே.

* அன்புள்ள ஆத்ம இதயத்தில் இருந்து இறைவனது ஒளி பிரகாசித்து வெளிப்படும்;
* பேர் இன்பம் தருகின்ற வழிவகைகளை நாம் ஏற்கின்ற போது, இறை அருள் ஒளி எம்முடன் இசைந்து நிற்கும்;
* ஐந்து புலன்களும் துன்பத்தை நோக்கி ஆடுகின்ற பொறிகளாகும்;
* உங்கள் எல்லாவிதமான தோஷங்களையும் நீக்கி, நல்ல தூய ஆத்ம இதயத்துடன் இறைவனை நாடிக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

283. புணர்ச்சியுள் ஆயிழை மேல் அன்பு போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒருங்க வல்லார்க்கு
உணர்ச்சி இல்லாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பம் அது இது ஆமே.

* உண்மையான அன்புடனேயே, நீங்கள் புணருவதானால் புணர்ந்து கொள்ளுங்கள்;
* எல்லாவிதமான வெறிதருகின்ற உணர்ச்சிகளில் இருந்து ஒதுங்கிக் கொள்ளுங்கள்;
* உணர்ச்சிவசப்படாது,வெறித்தன்மை இல்லாது நீங்கள் கூடிக் கொள்ளலாம், ஊடிக் கொள்ளலாம்;
* இவ்வாறு உங்கள் துணையுடன் ஆத்மார்த்தமாக அணைந்து இன்ப வாழ்க்கையினை மேற்கொள்ளுங்கள். சிற்றின்பம் பேரின்பத்தை அடைவதற்கு எமக்குத் தரப்பட்டுள்ளது. இதற்கு ஏற்றவாறு உங்கள் குடும்ப வாழ்வினை அமைத்துக் கொள்ளுங்கள்.

284. உற்று நின்றாரொடும் அத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றும் தெரிந்து அறிவார் இல்லை
பத்திமையாலே பணிந்து அடியார் தொழ
முத்தி கொடுத்தவர் முன்பு நின்றானே.

* உண்மையான வாழ்க்கையை மேற்கொள்பவர்கள், இறை ஜோதியைக் காண்பார்கள்;
* சித்து ஆடுகின்ற புருஷர்கள் இறைவனது ஜோதியை ஒரு பொழுதும் காணப்போவதில்லை;
* உண்மையான அடியவர்கள் பக்தி சிரத்தையுடன் இறைவனை வழிபடுகின்றார்கள்;
* இறைவன் இவர்களுக்கு முத்தியை எல்லாருக்கும் முன்னாகவே வழங்கி விடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

285. கண்டேன் கமழ்தரு கொன்றையினான் அடி
கண்டேன் கரி உரியான் தன் கழல் இணை
கண்டேன் கமல மலர் உறைவான் அடி
கண்டேன் கழல் அது என் அன்பின் உள்யானே.

* வாசம் நிறைந்த கொன்றை மலர்களால் அலங்கரிக்கப்பட்ட இறைவனின் திருவடியினை யான் கண்டேன்;
* கொடிய மதங்கள் பாய்கின்ற யானையின் தோலை உரித்தவனின் திருவடியினை யான் கண்டேன்;
* இதயத் தாமரையில் உறைகின்ற இறைவனின் திருப்பாதங்களை யான் கண்டேன்;
* என் முழுமையான அன்பில் இறைவனின் திருவடியினை யான் கண்டு கொண்டேனே.

286. நம்பனை நானாவிதப் பொருள் ஆகும் என்
உம்பரில் வானவர் ஓதும் தலைவனை
இன்பனை இன்பத்து இடைநின்ற இரதிக்கும்
அன்பனை யாரும் அறிய கிலாரே.

* என்னுடைய பூரண நம்பிக்கைக்குரியவன் இறைவன். இறைவனே எனக்கு எல்லாம்;
* வானவர்க்கும் மேலான வானவர்கள் இறைவனின் நாமங்களை ஓதுகின்றார்கள்;
* இறைவன் பேரின்ப மயம் ஆனவன். எல்லோருக்கும், காமத் தலைவியாகிய இரதிக்கும் உரியவன்;
* ஆனால் அன்பு நிறைந்த இறைவனை யாரும் அறிய முடியாது உள்ளார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

287. முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்
அன்பில் இறைவனை யாம் அறிவோம் என்பர்
இன்பப் பிறப்பும் இறப்பும் இலான் நந்தி
அன்பில் அவனை அறிய கிலாரே.

* தங்களது முன்னைய பிறவிகளையும், இறப்புக்களையும் அறிய மாட்டார்கள் மனிதர்கள்;
* யாமும் அன்பு பூண்டு இறைவனை அறிவோம் என வெறும் வார்த்தைகளால் கூறுவர்;
* நந்தி எம்பெருமானுக்கு, எந்தவிதமான இன்பம் தருகின்ற பிறப்புகளும் இறப்புகளும் இல்லை;
* உண்மை அன்பினால் இறைவனை, நந்தி எம்பெருமானை உணராது அறியாது உள்ளார்களே.

288. ஈசன் அறியும் இராப்பகலும் தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவு செய்வார்களைத்
தேசுற்று அறிந்து செயல் அற்று இருந்திடல்
ஈசன் வந்து எம்இடை ஈட்டி நின்றானே.

* எமக்குத்தான் இரவும் பகலும் உண்டு. இறைவன் அருள் ஒளியாவதால் அவனைப் பகல் என்போம். தூய சுத்த சத்தியோடு இறைவன் வெளிப்படில் இரவு என்போம்;
* உண்மையான ஆத்மார்த்த விருப்பத்துடன் இறைவனை பூசித்துக் கொள்ளுங்கள்;
* எல்லாத் தேசங்களும் சுற்றி, எல்லாவற்றையும் அறிந்து, பின் ஓரிடத்தில் செயற்பாடுகள் எதுவும் அற்று இருக்க வேண்டும்;
* அப்பொழுது இறைவன் எம்முள்ளேயே வந்து நிலையாகவே இருந்து விடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

289. விட்டுப் பிடிப்பது என் மேதகு சோதியைத்
தொட்டுத் தொடர்வன் துலையாப் பெருமையை
எட்டும் என் ஆருயிராய் நின்ற ஈசனை
மட்டுக் கலப்பதும் அஞ்சனம் ஆமே.

* எப்பொழுதெல்லாம் இறைவனின் ஜோதி வெளிப்படுகின்றதோ, அப்பொழுதே அதனை விட்டுவிடாது இறுகப் பிடித்துக் கொள்வேன்;

* ஒருபொழுதும் அழிந்து போகாத இறைவனின் பெருமையைப் பற்றி, என்றும் அதனை நான் தொடர்ந்து செல்வேன்;

* என் உயிருக்கு உயிராய், ஆத்மாவிற்கு ஆத்மாவாய் விளங்கும் இறைவனை நான் அடைந்து கொள்வேன். சேர்ந்து கொள்வேன்;

* இது கருமை நிறைந்த கூந்தலுக்கு, மேலும் கருமை நிற அஞ்சனத்தைச் சேர்ப்பதற்கு ஒப்பாகும்.

## XX0. கல்வி

290. குறிப்பு அறிந்தேன் உடல் உயிரது கூடிச்
செறிப்பு அறிந்தேன் மிகுதேவர் பிரானை
மறிப்பு அறியாது வந்து உள்ளம் புகுந்தான்
கறிப்பு அறியா மிகும் கல்வி கற்றேனே.

* உடலின் தன்மைகளை அறிந்தேன். உடல் உடலுடன் கூடும் வகை அறிந்தேன். உடல் உயிருடன் இருக்கும் நிலை அறிந்தேன். உயிர் உயிருடன் கூடும் அற்புதம் அறிந்தேன்;

* தேவர்களுக்கு எல்லாம் தலைவனாகிய இறைவனின் உண்மைத் தன்மைகளை அறிந்தேன்;

* எந்தவித தடைகளும் இல்லாது, இறைவன் என் இதயத்துள்ளே புகுந்து கொண்டான்;

* எந்தவித மயக்கங்களும் இல்லாத நிறைந்த கல்வியை, யான் கற்றுக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

291. கற்று அறிவாளர் கருதிய காலத்துக்
கற்று அறிவாளர் கருத்தில் ஓர் கண் உண்டு
கற்று அறிவாளர் கருதி உரை செய்யும்
கற்று அறிகாட்டக் கயல் உள ஆக்குமே.

* *உண்மையான கல்வியை முழுமையாகக் கற்று அறிந்தவர்களின் கருத்துக்கள் படைப்புக்கள் காலத்தால் அழியாதவை;*
* *கற்று அறிந்த பெருமக்களின் கருத்துக்களில் கல்வியே கண்ணாக விளங்கும்;*
* *உண்மை ஆய்வுடன் கற்றுத் தெளிந்தவர்கள், எல்லாவற்றிற்கும் தெளிந்த உறுதியான உரையினைச் செய்வார்கள்;*
* *கல்வி கற்கின்ற முறையினைக் காட்டிக் கொடுக்க நெறிப்படுத்த, உள்ளே அகக் கண் திறக்கும்.*

292. நிற்கின்ற போதே நிலை உடையான் கழல்
கற்கின்ற செய்மின் கழிந்து அறும் பாவங்கள்
சொல் குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்
மற்று ஒன்று இலாத மணி விளக்காமே.

* *உங்களின் உடல், வாக்கு, மனம், உயிர், ஆத்மா ஆகிய ஐந்தும், தெளிவாக சுத்தமாக இருக்கும்போது இறைவனின் திருப் பாதத்தினை நாடுங்கள்;*
* *இறைவனது திருவடியை வழிபாடு செய்வதே, சிறந்த உண்மையான கல்வியாகும். அப்போது உங்களது எல்லாப் பாவங்களும் அழிந்து போகும்;*
* *ஆத்மார்த்த சம்பாஷணையால் தடையின்றி இறைவனைத் தொழுமின்கள். அவ்வாறு தொழுவீர்களாயின்;*
* *ஏக விளக்கை, ஒரே விளக்கைச், சிறந்த ஜோதியைத் தெளிவை நீங்கள் காண்பீர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

293. கல்வி உடையார் கழிந்து ஓடிப் போகின்றார்
பல்லி உடையார் பாம்பு அரிந்து உண்கின்றார்
எல்லியும் காலையும் ஏத்தும் இறைவனை
வல்லியுள் வாதித்த காயமு மாமே.

* வெறும் உலகாயுத, பணம் தருகின்ற கல்வியினைக் கற்பவர்கள் இறந்து பட்டுப் போவார்கள்;
* நாள் கோள் பலன் பார்க்கும் சாத்திரக் கூட்டங்கள் ஊனினை உண்டு உடல் இச்சைக்காக உடலை வளர்க்கின்றார்கள்;
* இடைவிடாது நீங்கள் எக்காலமும் இறைவனை ஏத்தி வழிபாடு செய்யுங்கள்;
* உடம்பினுடைய, பிறப்பினுடைய, உயிரினுடைய உண்மையாம் நோக்கத்தை உணர்ந்து செயற்படுங்கள்.

294. துணை அதுவாய் வரும் தூய நல் சோதி
துணை அதுவாய் வரும் தூய நல் சொல்லாம்
துணை அதுவாய் வரும் தூய நல் கந்தம்
துணை அதுவாய் வரும் தூய நல் கல்வியே.

* இறைவனது ஜோதி என்றும் எமக்கு நல்ல துணையாக வரும்;
* இறைவனது ஞானமாகிய செல்வம் என்றும் எமக்குத் துணையாகவே வரும்;
* எமது தூய்மையான உடல், எமது ஆத்மார்த்த பாதைக்கு என்றும் துணையாகவே செயற்படும்;
* எமது ஆத்மார்த்த இறைகல்வியும், எமது இறை பயணத்திற்குத் துணையாக வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

295. நூல் ஒன்று பற்றி நுனி ஏற மாட்டாதார்
பால் ஒன்று பற்றினால் பண்பின் பயன் கெடும்
கோல் ஒன்று பற்றினால் கூடா பறவைகள்
மால் ஒன்று பற்றி மயங்கு கின்றார்களோ.

* எம் உள்ளே தென்படுகின்ற பிராணன் எனும் நூல் ஏணியை – குண்டலினி எனும் நூல் ஏணியைப் பற்றி அதில் ஏறி ஆத்மீகப் பயணம் செய்யமாட்டார்கள்;
* காமப் பாலினைப், பெண் போகத்தினைப் பற்றினால், உங்களின் பண்புகளால் ஏற்படும் பயன்பாடுகள் கெட்டுப்போகும்;
* ஒரு தடியினை எடுத்துக் கையில் கொண்டால், பறவைக் கூட்டங்கள் எல்லாம் கலைந்து போய்விடும்;
* இந்த உலகத்து அவதார புருஷர்கள், காம லீலையைக் கிருஷ்ண லீலையைக் கைக்கொண்டு, அதில் மயங்கிப் போய்க் கிடக்கின்றார்கள்.

296. ஆய்ந்து கொள்வார்க்கு அரன் அங்கே வெளிப்படும்
தோய்ந்த நெருப்பது தூய் மணி சிந்திடும்
ஏய்ந்த இளமதி எட்ட வல்லார் கட்கு
வாய்ந்த மன மல்கு நூல் ஏணியாமே.

* உண்மைத் தாகத்துடன் ஆராய்ந்து கொள்பவர்களுக்கு இறைவன் நிச்சயம் வெளிப்படுவான்;
* இறைவன் ஞான நெருப்பாய், தூய்மையான மணிச் சுடராய்ச் சிந்திச் சிந்திக் காட்சி கொடுப்பான்;
* குளிர்ச்சி நிறைந்த இளம்பிறைச் சந்திரனைச் சூடும் இறைவனை நாடுங்கள்;
* அவ்வாறாயின், உங்கள் மனத்தையும் சிறந்த நூல் ஏணியாகப் பயன்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

297. வழித்துணையாய் மருந்தாய் இருந்தார் முன்
கழித் துணையாம் கற்றிலாதவர் சிந்தை
ஒழித் துணையாம் உம்பராய் உலகு ஏழும்
வழித் துணையாம் பெரும் தன்மை வல்லானே.

* இறைவன் என்றும் வழித்துணையாகவும், மருந்தாகவும் எமக்கு விளங்குவான்;

* கற்றும் அறிவு இல்லாதவர்களுடைய சிந்தை ஒரு போதும் சிறந்த துணையாக மாட்டாது;

* எல்லாவிதமான கூடாத துணைகளையும் அழித்து விடுங்கள். அப்பொழுதுதான், நாம் செல்லவுள்ள ஏழு உலகங்களுக்கும் இறைவன் துணையாகவும், தலைவனாகவும் எம்முடன் வருவான்.

298. பற்று அது பற்றில் பரமனைப் பற்றுமின்
முற்றது எல்லா முதல்வன் அருள் பெறில்
கிற்ற விரகில் கிளர் ஒளி வானவர்
கற்றவர் பேர் இன்பம் உற்று நின்றாரே.

* உண்மையாக நீங்கள் ஒன்றைப் பற்ற வேண்டுமானால் இறைவனைப் பற்றிக் கொள்ளுங்கள்;
* முழுமையாகவே இறைவனது அருளை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள்;
* வானவர்களும் உங்களின் ஒளிமயமான தோற்றத்தைக் கண்டு ஆனந்திப்பர்;
* கற்ற பெருமக்கள் என்றும் பேர் இன்பம் பெற்று உறுதியாக நிற்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

299. கடல் உடையான் மலையான் ஐந்து பூதத்து
உடல் உடையான் பல ஊழிதொறு ஊழி
அடல் விடை ஏறும் அமரர்கள் நாதன்
இடம் உடையார் நெஞ்சத்து இல் இருந்தானே.

* இறைவன் கடலில் உள்ளான். மலைகளில் உள்ளான்;
* ஐந்து பூதங்களால் ஆக்கப்பட்ட உடல்களிலும் உள்ளான். பலப்பல ஊழிக்காலங்கள் தோறும் வீரமான எருதில், பசுக்களில் ஏறி உலாவி வருவான்;
* அவன் அமரர்களுக்கு எல்லாம் தலைவன்;
* ஆத்மீக இதயத்தில் தெளிவான இடம் இருக்கும்போது அங்கே இறைவன் கோயில் கொள்வான்.

## XXI. கேள்வி கேட்டு அமைதல்

300. அறம் கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறம் கேட்டும் வானவர் மந்திரம் கேட்டும்
புறம் கேட்டும் பொன் உரைமேனி எம் ஈசன்
திறம் கேட்டும் பெற்ற சிவகதி தானே.

* நல்ல அறம் தாங்கிய செயல்களைக் கேளுங்கள். நல்ல நல்ல அந்தணப் பெருமக்களது சிறந்த வாய்மொழிகளைக் கேளுங்கள்;
* அறத்திற்குப் புறம்பானவற்றையும் தெரிந்து, அறத்தின் பெருமையை உணர்ந்து கொள்ளுங்கள். வானவர்களது மந்திரங்களையும் கேட்டுக் கொள்ளுங்கள்;
* எந்தவிதமான புறச் செயல்களில் நீங்கள் ஈடுபட்டாலும், இறைவனின் பொன்னான திருமேனியைப் பற்றிக் கூறுங்கள்;
* எந்தத் திக்கில் இருந்தும் இறைவனது மகிமையைத் திறமையைக் கேட்டுக் கொள்ளுங்கள். அவ்வாறு கேட்ட வண்ணமே சிவகதியை அடையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

301. தேவர் பிரான் தனைத் திவ்விய மூர்த்தியை
யாவர் ஒருவர் அறிவார் அறிந்த பின்
ஓதுமின் கேள்மின் உணர்மின் உணர்ந்தபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கி நின்றாரே.

* தேவர்களுக்கு எல்லாம் இறைவனே தலைவன். இறைவன் மிகவும் ஆனந்தமான உருவம் உடையவன்;
* இறைவனை நீங்கள் தெளிந்து அறிந்து கொள்ளுங்கள். அவ்வாறு அறிந்த பிற்பாடு, இறைவனின் திருநாமங்களை ஓதுங்கள். இறைவனின் சத்தத்தைக் கேளுங்கள். இறைவனை முழுமையாக உணருங்கள்;
* அவ்வாறு உணர்ந்த பிற்பாடு தொடர்ந்தும் இறைவனின் திருநாமங்களை ஓதியவாறே - உணர்ந்து கொண்டே இருங்கள். அப்பொழுது நீங்கள் என்றும் சிறப்பாகவே இருப்பீர்கள்.

302. மயன் பணி கேட்பது மாநந்தி வேண்டில்
அயன் பணி கேட்பது அரன் பணியாலே
சிவன் பணி கேட்பவர் தேவரும் ஆவர்
பயன் பணி கேட்பது பற்றது வாமே.

* ஞானச் செல்வத்தின் படைப்பின் தாற்பரியத்தினைக் கேட்க வேண்டுமானால், பெரிய சிறந்த வழிகாட்டியாகிய திருநந்தி தேவரை நாடுங்கள்;
* காக்கும் செயற்பாட்டின் தாற்பரியம் கேட்க வேண்டில், அழிவின் செயற்பாட்டின் தாற்பரியத்தை உணர்ந்து கொள்ளுங்கள்;
* சிவபரம்பொருளின் சிவப்பணிச் செய்தியைக் கேட்டவர்கள் எல்லோரும் தேவர்கள் ஆவர்;
* பிறப்பின் உண்மையான பயன்பாட்டைத் தெளிவாகக் கேட்டு உணர்பவர்களுக்குப், பற்றுக்கள் எல்லாம் முற்றாகவே விடுபட்டுவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

303. பெருமான் இவன் என்று பேசி இருக்கும்
திருமானிடர் பின்னைத் தேவரும் ஆவர்
வரு மாதவர்க்கு மகிழ்ந்து அருள் செய்யும்
அரு மாதவத்து எங்கள் ஆதிப் பிரானே.

* உண்மையையே இறைவன் என்று பேசி நாம் வாழ வேண்டும்;
* இவர்களே சிறந்த மானிடர்கள் ஆவர்கள். பின் இவர்கள் தேவரும் ஆவர்கள்;
* இனிமேல் பிறக்கப்போகின்ற பெருமக்களாகிய தவம் உடையோரை இறைவன் அருள் பாதுகாக்கும்;
* அரிய மாதவத்தால், முழுமையாக உணரப்படுபவர் – எங்கள் பெருமுதலாகிய இறையவர் ஆவர்.

304. ஈசன் அருளும் இறப்பும் பிறப்பையும்
பேசி இருந்து பிதற்றி மகிழ்வு எய்தி
நேசமும் ஆகும் நிகழ் ஒளியாய் நின்று
வாச மலர்க் கந்த மன்னி நின்றானே.

* இறைவனது அருட்கடாட்சத்தை எண்ணிக் கொள்ளுங்கள். பிறப்பினதும் இறப்பினதும் உண்மையான தாற்பரியத்தை ஆய்ந்து கொள்ளுங்கள்;
* இறைவனின் பெருமையை நன்றாகப் பிதற்றி மகிழ்ச்சி நிலையை அடையுங்கள்;
* ஆத்மார்த்த அன்பினை இறை ஒளி மீது வையுங்கள்;
* வாசனை நிறைந்த அழகிய மலர்களிலும் இறைவனே காணப்படுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

305. விழுப்பமும் கேள்வியும் மெய் நின்ற ஞானத்து
ஒழுக்கமும் சிந்தை உணர்கின்ற போது
வழுக்கி விடாவிடில் வானவர் தோறும்
இழுக்கு இன்றி எண்இலி காலம் அதாமே.

* உண்மையான ஞான நாட்டமுள்ளவர்களை, அவர்களின் சிரத்தையுடன் கூடிய கேள்வியும், விருப்பமும் அவர்களைக் காட்டித் தரும்;
* உயர் ஒழுக்கத்தை ஆத்மார்த்தமாக உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்;
* அவ்வாறெனில், ஒரு பொழுதும் இறைவனது பாதையில் இருந்து வழுக்கி விலகி விழுந்து விடமாட்டீர்கள்;
* எந்தவித இழுக்கும், துன்பங்களும் இன்றி, தேவர்களின் தலைவனை வழிபட்டவாறே எண்ண முடியாத காலங்கள் நீங்கள் வாழ்வீர்கள்.

306. சிறியார் மணல் சோற்றில் தேக்கிடு மாபோல்
செறிவால் அனுபோகம் சித்திக்கும் என்னில்
குறியாத ஒன்றைக் குறியாதார் தம்மை
அறியாது இருந்தார் அவர் ஆவர் அன்றே.

* சிறு குழந்தைகள் மணலால் வீடு கட்டி, மணலிலே சோறும் கறியும் சமைத்து விளையாடுவார்கள்;
* அவ்வாறே, இறை அன்பு பூண்டு இறை சொரூபத்தைத் தெளிந்து பாவனை செய்து கொண்டு இருக்கின்றேன்;
* எனக்கு எந்தவித நோக்கமும் இல்லை. பாதையும் இல்லை, இறைவனுக்கு என்று அப்படியே இருந்து விட்டேன்;
* எனக்கு எதுவுமே தெரியாது என்று இருந்து விட்டேன். அதனால் நான் இறைவன் போன்று ஆகி விட்டேன். நான் இறைவன் அன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

307. உறுதுணை ஆவது உயிரும் உடம்பும்
உறுதுணை ஆவது உலகு உறு கேள்வி
செறிதுணை ஆவது சிவன் அடிச் சிந்தை
பெறுதுணை கேட்கில் பிறப்பு இல்லை தானே.

* வரையறை அற்ற இறை பயணத்திற்கு உறுதுணையாக விளங்குவது உயிரும் உடம்பும் ஆகும்;
* உலகத்தில் உறுதியாக விளங்குவதற்கு மெய்ஞ்ஞானக் கேள்வியே உறுதுணையாகும்;
* மெய்ஞ்ஞான உண்மை அருளுக்கு, இறைவனது திருவடிமேல் வைக்கும் ஆத்மார்த்த இதய அன்பே துணையாகும்;
* முடிவிலே எமக்கு என்ன கிடைக்கும்? என வினவினால் அது பிறப்பும் இறப்பும் இல்லாத பெரும் பேறாகும்.

308. புகழ நின்றார்க்கும் புராணன் எம் ஈசன்
இகழ நின்றார்க்கும் இடும்பைக்கு இடமாம்
மகிழ நின்ற ஆதியை ஓதி உணராக்
கழிய நின்றார்க்கு ஒரு கற்பசு வாமே.

* புகழ்பாடுவதானால் நீங்கள் இறைவனை மட்டும் புகழ்ந்து பாடுங்கள். அப்பொழுது அவை இறை புராணம் ஆகிவிடும்;
* இறைவனை நீங்கள் இகழ்ந்து செயற்படுவீர்களானால், அதுவே உங்களின் துன்பங்கள் தோன்றுவதற்கு ஏதுவாகிவிடும்;
* உங்களுக்கு என்றும் பேரானந்த மகிழ்ச்சியைத் தருகின்ற இறைவனை ஓதுங்கள். உணருங்கள்;
* இவற்றில் இருந்து நீங்கள் தவறுவீர்களானால் எந்த ஜீவ அணுக்களுக்கும் பயன் அற்று விடுவீர்கள்;
* கல்லால் ஆன பசு ஒருவருக்கும் பயன் கொடுக்காததைப் போன்று ஆகி விடுவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

309. வைத்து உணர்ந்தான் மனத்தோடும் வாய்பேசி
ஒத்து உணர்ந்தான் உரு ஒன்றொடு ஒன்று ஒவ்வாது
அச்சு உழன்று ஆணி கலங்கினும் ஆதியை
நச்சு உணர்ந் தார்க்கே நணுகலும் ஆமே.

* உங்கள் வாயால் இறைவனைப் பற்றிப் பேசி, மனதால் இறைவனை எண்ணி, உணர்ந்து கொள்ளுங்கள்.
* திரிகரண சுத்தியுடன் செயற்பட்டு, அவனை உணர்ந்து அவனோடு ஒன்றாகிக் கொள்ளுங்கள்;
* உங்கள் திரிகரணங்கள் ஆட்டம் கண்டாலும், வேதனைப் பட்டாலும், உழன்றாலும்; இறைவனைச் சதா ஓதி உணர்ந்து கொண்டே இருங்கள். அப்பொழுதுதான் நீங்கள் இறைவனின் நிழலின் கீழ் அமருவீர்கள்.

## XXII. கல்லாமை

310. கல்லாதவரும் கருத்து அறி காட்சியை
இல்லார் எனில் அருட் கண்ணால் மதித்துளோர்
கல்லாதார் உண்மை பற்றா நிற்பர் கற்றோரும்
கல்லாதார் இன்பம் காணுகி லாரே.

* எந்தவித கல்வி அறிவு இல்லாதவர்களும் இறை காட்சியை அறிந்து கொள்வார்கள்;
* இறைவனை உணரும் வல்லமை பெற்றோர், அருட் கடாட்சக் கண்ணால் இறைவனைக் கண்டு வணங்கிப் போற்றுவர்;
* தன்னை ஆராயாதவர்கள் ஒருபோதும் உண்மையைப் பற்றவே மாட்டார்கள்;
* எந்தக் கல்வி கற்றும், தன்னை ஆய்ந்து தெளியாவிடில், இறை இன்பத்தை ஒருபோதும் அநுபவிக்கவே மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

311. வல்லார்கள் என்றும் வழி ஒன்றி வாழ்கின்றார்
அல்லாதவர்கள் அறிவு பல என்பார்
எல்லா இடத்தும் உளன் எங்கள் தம் இறை
கல்லாதவர்கள் கலப்பு அறியாரே.

* இறைவனை ஆய்கின்ற வல்லமையைத் தெரிந்து தெளிந்தோர் என்றும் இறை வழியிலேயே ஒன்றி வாழ்வார்கள்;
* இவற்றை உணர்ந்து புரிந்து கொள்ளாதவர்கள் பல வகையான அறிவு உண்டு என அலட்டி உளறுவார்கள்;
* சர்வ இடங்களிலும் எம் இறைவன் உள்ளான்;
* தன்னை ஆய்ந்து கொள்ளும் கல்வியைக் கல்லாதவர்கள், "இறை ஆத்மக் கலப்பை" ஒரு போதும் உணரவே மாட்டார்கள்.

312. நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலை என்று உணர்வீர்காள்
எல்லா உயிர்க்கும் இறைவனே ஆயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காண ஒண்ணாதே.

* உங்களது வாழ்க்கையின் எந்த நிலைப்பாடுகளும் நிலையற்றவை ஆகும்; நீங்களோ அவை நிலையென்று நெஞ்சத்தில் பதிக்கின்றீர்கள்;
* அழிந்து போகின்ற உடம்பையும் நிலையானது என்று கூறுகின்றீர்களே!
* சர்வ, கோடிக் கணக்கான உயிர்களுக்கும் ஒருவனே இறைவன்;
* உங்களை ஆய்ந்து தெளிந்து உணர்ந்து தெளிந்து கொள்ளாவிடில், உங்களால் ஒருபோதும் இறைவனைக் காண முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

313. கில்லேன் வினைத்துயர் ஆக்கும் அயலானேன்
கல்லேன் அரன் நெறி அறியாத் தகைமையின்
வல்லேன் வழங்கும் பொருளே மனத்தின் உள்
கல்லேன் கழிய நின்று ஆடவல்லேனே.

* நான் - கொடிய ஆணவத் தன்மையைக் குறிக்கும். நான் கொடியவன் - என்னைச் சூழ்ந்த அயலவர்களுக்கு வினைகளையும், துயர்களையும் செய்பவன் ஆகினேன்;
* இறைவனின் நெறியினைக் கற்க மாட்டேன். அறியாமையிலேயே நான் தகைமை பெற்றுள்ளேன். மாயையின் செயற்பாட்டில் வல்லவனாகினேன்;
* மன எண்ணங்களால் சூழப்பட்டேன். பொருளாசை கொண்டேன். என் மனதை அறிய மாட்டேன்;
* இவை எல்லாம் ஒழிந்து போகும் வண்ணம் இறைவனை வழிபாடு செய்து ஆனந்தக் கூத்து ஆடாது உள்ளேனே.

314. நில்லாது சீவன் நிலை அன்று என எண்ணி
வல்லார் அறத்தும் தவத்துளும் ஆயினார்
கல்லா மனித்தர் கயவர் உலகினில்
பொல்லா வினைத்துயர் போகம் செய்வாரே.

* உயிர் நிலையற்றது. ஒரு கணமேனும் தங்காது. இதனைத் தெரிந்து கொள்ளுங்கள்;
* தெளிவுடையவர்கள் அறவாழ்க்கை மேற்கொண்டுள்ளார்கள். தவம் செய்து கொண்டுள்ளார்கள்;
* தன்னை ஆய்ந்து கொள்ளாத மனிதர்கள் சூது, வாது, நிறைந்து குழப்பமும் போரும் செய்து உலகினில் கயவர்களாகி வாழ்கின்றனர்;
* எல்லா வகையாலும், எல்லாவற்றிலும் போகம் செய்து பொல்லாத வினையையும் அதனால் வரும் துயரத்தையும் இவர்கள் சம்பாதித்துக் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

315. விண்ணினின் உள்ளே விளைந்த விளங்கனி
கண்ணினின் உள்ளே கலந்து அங்கு இருந்தது
மண்ணினின் உள்ளே மதித்து மதித்து நின்று
எண்ணி எழுதி இளைத்து விட்டாரே.

* இறை காட்சி ஆத்ம பழமாகிப் பழுத்து "விண்" நிலையில் நிறைந்து காணப்படுகின்றது;
* இதே இறை காட்சி எனது அகக் கண்ணின் உள்ளேயும் கலந்து ஒன்றாகி இருக்கின்றது;
* ஆனால் இந்தப் பூமியில் உள்ள மக்கள் தங்களைத் தாங்களே புகழ்ந்து இச்சை பேசி வாழ்கின்றார்கள்;
* இவர்கள் எல்லாத் துறையினையும் எண்ணி, மனத்தால் கற்பனை செய்து அவற்றினை எழுதி, தங்கள் வாழ்க்கை பூராவும் களைப்படைந்து விட்டார்களே.

316. கணக்கு அறிந்தார்க்கு அன்றிக் காண ஒண்ணாது
கணக்கு அறிந்தார்க்கு அன்றிக் கைகூடாக் காட்சி
கணக்கு அறிந்து உண்மையைக் கண்டு அண்ட நிற்கும்
கணக்கு அறிந்தார் கல்வி கற்று அறிந்தாரே.

* ஒவ்வொருவருக்கும் முழுமையான தரவு கொடுக்கப்பட்டுள்ளது. தரப்பட்ட தரவைக் கொண்டு, கணக்கை ஒவ்வொருவரும் தனித்தே செய்ய வேண்டும்;
* இந்தக் கணக்கைத் தெளிவாகப், பூரணமாகச் சரியாகச் செய்தவர்களே இறைகாட்சியைக் காண்பர்;
* அண்டங்கள் எல்லாம் ஊடறுத்து நிற்கும், இறை உண்மையை இவர்கள் காண்பார்கள்;
* இவர்கள் தம்மைத்தாமே முழுமையாக ஆய்ந்து, தெளிந்து, உணர்ந்து முடிவில் இறை நிழலில் பூரணமாகவே இருப்பர்;

தரவு : உடம்பின் முழுமையான உள் அமைப்பும், புற அமைப்பும், வாழ்வதற்குத் தேவையான பஞ்சபூதங்களும்.

கணக்கு: ஆத்மார்த்த அன்பாக, மோனமாக, பேர் ஆனந்தமாக, உறுதியாகத், தெளிவாக, கருணையாக, அருளோடு, நிறைவாக, உண்மையாக வாழ்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

317. கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன் அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்து அறியாரே.

* மெய்ஞ்ஞானக் கல்வி கல்லாதவர்களை - இந்த மூடர்களை ஒருபொழுதும் காணவே கூடாது;
* இந்த மூடர்களின் சொற்களை ஒருபோதும் கேட்கவே கூடாது;
* இந்தக் கல்லாத மூடர்களுக்குக் கல்லாத மூடர்களே நல்லவர்கள் ஆவர்;
* இந்தக் கல்லாத மூடர்கள் எந்தவித தெளிந்த கருத்துக்களும் அறிய மாட்டார்கள்.

318. கற்றும் சிவஞானம் இல்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசு அறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதி இலோர்
கற்றபின் நிற்போர் கணக்கு அறிந்தார்களே

* உலகக் கல்வி கற்றுள்ளார்கள். ஆனால் இவர்கள் சிவஞான உணர்வு இல்லாத கழுதைகள் ஆவர்;
* இவர்கள் பந்த பாசங்களை ஒருபோதும் விட மாட்டார்கள். இந்த மூடர்கள் அழுக்குகளை ஒருபோதும் நீக்க மாட்டார்கள்;
* பரந்த விரிந்த நோக்கும் செயலும் இல்லாதவர்கள். இவர்கள் புத்தியே இல்லாதவர்கள்;
* உண்மையாம் மெய்ஞ்ஞானக் கல்வியைக் கற்று உணர்ந்து அதன்படி வாழ்க்கையை மேற்கொள்பவர்களே, தங்களுக்குத் தரப்பட்ட தரவை உண்மையாக உணர்ந்தவர்கள் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

319. ஆதிப் பிரான் அமரர்க்கும் பரம் சுடர்
சோதி அடியார் தொடரும் பெரும் தெய்வம்
ஓதி உணர வல்லோம் என்பர் உள் நின்ற
சோதி நடத்தும் தொடர்வு அறியாரே.

* இறைவர் எல்லாத் தேவர்களுக்கும் அமரர்களுக்கும் பரம் பெரும் ஜோதியாகச் சுடர்வார்;
* அடியவர்கள் என்றும் தொடர்ந்து வழிபாடு செய்யும் இந்தப் பரம்பெரும் ஜோதியே, அவர்களின் தெய்வமாகும்;
* அநேகர் "நாம் இறைவனை ஓதி உணரும் வல்லமை உடையோம்" என்று வெறும் வாயால் மட்டும் கூறுவார்கள்;
* பரம் பெரும் ஜோதி எம் உள்ளேயும் தென்படும். இந்த ஜோதியே எல்லாவற்றையும் ஒரு தொடர்ச்சியாகச் செயற் படுத்தும். அதனை அநேகர் அறியாது உள்ளார்கள்.

## XXIII. நடுவு நிலைமை

320. நடுவு நின்றார்க்கு அன்றி ஞானமும் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை
நடுவு நின்றார் நல்ல தேவரும் ஆவர்
நடுவு நின்றார் வழி நானும் நின்றேனே.

* நடுவு நிற்றல் : உலக நீதியுடன் ஒழுகிச் செயற்படல், தெய்வ நீதியுடன் இணைந்து வாழுதல், மனுகுல தர்மத்துடன் ஒட்டி வாழ்தல், இயற்கையுடன் ஒன்றாகி வாழ்தல், சர்வ உயிரினங் களினதும் ஆத்ம செயற்பாட்டினை உணர்ந்து வாழ்தல், சர்வ அணுமுதல் சர்வ அண்டங்களின் யதார்த்த அமைப்புடன் ஒன்றுதல், யோக நுட்பத்தால் நடு நாடி - சுழுமுனை நாடியூடாகப் பிராணனை ஏற்றி இறக்கி வாழுதல்;
* இவ்வாறு வாழில் : உண்மை ஞானம் உண்டு;
* ஒருபோதும் நரக வாயிலை அடையமாட்டீர்கள். எப்போதும் சிறந்த தேவர் ஆக வாழ்வீர்கள்.
* நானும் நடுவு நின்றவர்களது வழியினைப் பின்பற்றி நிற்கின்றேன். வாழ்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

321. நடுவு நின்றான் நல்ல கார்முகில் வண்ணன்
நடுவு நின்றான் நல்ல நான் மறை ஓதி
நடுவு நின்றார் சிவ ஞானிகள் ஆவோர்
நடுவு நின்றார் நல்ல நம்பனும் ஆமே.

* *நடுவு நிலையில் இருந்தே விஷ்ணு தனது காத்தல் தொழிலைச் செய்கின்றார்;*

* *நடுவு நிலையில் இருந்தே பிரம்மாவும் தனது படைத்தல் தொழிலைச் செய்கின்றார்;*

* *நடுவு நிலையில் நிற்பவர்களே சிறந்த சிவஞானிகள் ஆவர்; நடுவு நிலையில் வாழ்பவர் சிறந்த நல்ல ஆத்ம தலைவர் ஆவர்.*

322. நடுவு நின்றார் சிலர் ஞானிகள் ஆவர்
நடுவு நின்றார் சிலர் தேவரும் ஆவர்
நடுவு நின்றார் சிலர் நம்பனும் ஆவர்
நடுவு நின்றாரொடு நானும் நின்றேனே.

* *நடுவு நிலையில் நிற்போர் சிலர் ஞானிகளாக வருவர்;*

*நடுவு நிலையில் நிற்போர் சிலர் தேவர்களாக வருவர்;*

*நடுவு நிலையில் வாழ்வோர் நல்ல ஆத்மீக தலைவர் ஆவர்;*

*நடுவு நிலையில் வாழ்பவர்களுடைய வரிசையில் நானும் சேர்ந்து கொண்டேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

323. தோன்றிய எல்லாம் துடைப்பன் அவன் அன்றி
ஏன்று நின்றார் என்றும் ஈசன் இணை அடி
மூன்று நின்றார் முதல்வன் திரு நாமத்தை
நான்று நின்றார் நடுவாகி நின்றாரே.

* ஆக்கத்திற்கு உட்பட்டவை எல்லாம் அழிவுக்கும் உட்படும். இறைவனே இவற்றைக் கண்காணிக்கின்றான்;
* இவற்றை உணர்ந்தவர்கள் இறைவனது திருவடியினைப் போற்றுவார்கள்;
* மூன்று வேளையும் திரிகரணசுத்தியோடு முக்காலமும் உணர்ந்து; இறைவனின் திருநாமத்தை ஓதி வழிபடுவார்கள்.
* உறுதியாகவும், தெளிந்த வைராக்கியத்துடனும் வாழ்பவர்கள் நடுவு நிலையில் என்றும் இருப்பர்.

## XXIV. கள் உண்ணாமை

324. கழுநீர்ப் பசுப் பெறில் காயம் தொறும் தேரா
கழுநீர் விடாய்த் துத்தம் காயம் சுருக்கும்
முழுநீர்க் கள்ளு உண்போர் முறைமை அகன்றோர்
செழுநீர்ச் சிவன்தன் சிவ ஆனந்தத் தேறலே.

* பசுவில் இருந்து பெறப்படும் கோசலம் அதன் புனிதமான மேனியில் இருந்து தேராது தெளியாது உருவாகும் அமிர்தம் ஆகும்;
* உடலை ஓய்வு நிலையில் ஒடுக்க நிலையில் வைத்திருப்பதாயின் ஆர்வத்துடன் இக்கோசலத்தை அருந்த வேண்டும்;
* உலகத்தவர்கள் வெறியைத் தருகின்ற கள் உண்பார்கள். முறை மாறி அறநெறியில் இருந்து விலகித் தறி கெட்டு வாழ்வார்கள்;
* உண்மையில் நாம் இறைபரம் பொருளில் இருந்து புறப்படும் பேரானந்தத்தையே அருந்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

325. சித்தம் உருக்கிச் சிவமாம் சமாதியில்
ஒத்த சிவ ஆனந்தத்து ஓவாத தேறலை
சுத்த மது உண்ணச் சுவானந்தம் விட்டிடா
நித்தல் இருத்தல் கிடத்தல் கீழ்க்காலே.

* *சித்துக்கள் ஆடுகின்ற சித்தத்தை முற்றாகச் சிதைந்து போகும் வண்ணம் உருக்க வேண்டும். அவ்வாறு சிவமாம் பரம் பொருளோடு சமாதி நிலையில் அமர வேண்டும்;*
* *சிவபரம் பொருளில் இருந்து புறப்படும் வற்றாத பேரானந்த அமிர்தத்தை உணர வேண்டும்;*
* *இந்தத் தூய்மையான சிவாமிர்தம் அருந்தும் பொழுது சிவானந்த நிலை எமக்குக் கைகூடும்;*
* *அதன் பிற்பாடு நாம் நிற்போம், நடப்போம். இறைவனது பாதார விந்தங்களில் கிடந்தே விடுவோம்.*

326. காமமும் கள்ளும் கலதிகட்கே ஆகும்
மாமலமும் சமயத்து உள்மயல் உறும்
போமதி ஆகும் புனிதன் இணை அடி
ஓமய ஆனந்தத் தேறல் உணர்வு உண்டே.

* *மிருக நிலையில் இருப்பவர்களே, காமத்திலும் கள்ளிலும் மதிமயங்கி வாழ்வர்;*
* *மிகவும் கொடிய மலமாகிய ஆணவம், ஆத்மீக வாழ்க்கை மேற்கொண்டுள்ளவர்களிலும் மையல் கொண்டு நிற்கும்;*
* *உங்கள் வளரும் புத்தியைப் பயன்படுத்தி இறைவனது புனிதமான திருவடியைச் சேர்ந்து கொள்ளுங்கள்;*
* *ஓம் எனும் சப்த சொரூபத்தில் இருந்து, அதில் உண்டாகும் ஆனந்த அமிர்தத்தை உண்டவாறு தெளிந்த உணர்வோடு அமர்ந்து கொள்ளுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

327. வாமத்தோர் தாமும் மது உண்டு மாள்பவர்
காமத்தோர் காமக் கள்உண்டே கலங்குவர்
ஓமத்தோர் உள்ஒளிக்கு உள்ளே உணர்வார்கள்
நாமத்தோர் அன்றே நணுகுவர் தாமே.

* கிருஷ்ண அவதாரங்கள் - கிருஷ்ண லீலை செய்பவர்கள் எல்லோரும் வெறி தருகின்ற மதுவகைகளை உண்டு அழிந்து போவார்கள்;
* இவர்கள் என்றும் காமக் கள்ளினை அருந்தியவாறு சதா கலங்கிக் கொண்டே இருப்பார்கள்;
* "ஓம்" இன் சப்த்த சொரூபத்தைத் தாண்டிய பெருமக்கள், ஜோதி சொரூபத்தினுள் சென்று தம்மை முழுமையாக உணர் வார்கள்;
* சதா இறைவனை வழிபட்டு, இறைவனது நாமங்களை ஜெபம் செய்பவர்களும் இறைவனை நாடியே என்றும் செல்வர்.

328. உள் உண்மை ஓரார் உணரார் பசு பாசம்
வள்ளன்மை நாதன் அருளினில் வாழ்வுறார்
தெள் உண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்
கள் உண்ணும் மாந்தர் கருத்து அறியாரே.

* தம் உள்ளே உள்ள உண்மையை ஓர்ந்து கொள்ளவே மாட்டார்கள். ஆத்மாவையும், சுத்த சக்தியையும் உணர மாட்டார்கள்;
* இறைவன் என்றும் வாரி வழங்கிய வண்ணம் உள்ள அருட் கடாக்ஷத்தினைப் பெற்றுத், தங்களது வாழ்க்கையினை வளம் படுத்த மாட்டார்கள்;
* தெள்ளிய தெளிந்த உண்மையான சிவஞான யோகத்தைச் சேர்வுற மாட்டார்கள்;
* கள்ளினை உண்ணும் மக்கள் எந்தவித கருத்தும் அறியவே மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

329. மயக்கும் சமய மல மன்னு மூடர்
மயக்கு மது உண்ணு மாமூடர் தேரார்
மயக்குறு மாமாயை, மாயையின் வீடு
மயக்கில் தெளியின் மயக்குறும் அன்றே.

* சமயமும் வெறி தருகின்ற கள் ஆகும். அதில் ஆணவமே தலை தூக்கி நிற்கும். மூடர்களே இவ்வெறிக்கு உட்படுவர்;
* தன் நிலையினை மயக்கி மது உண்பவர்கள் பெரிய மூடர்கள் ஆவர். இவர்கள் எதனையும் தெளிந்து கொள்ள மாட்டார்கள்;
* அசுத்த மாயையின் செயற்பாட்டில் இவர்கள் மயங்கிப் போய் இருப்பார்கள். சுத்த மாயை வீடு பேற்றுக்கு வழி சமைக்கும்;
* எல்லா மயக்கங்களில் இருந்தும் விடுபட்டுத் தெளிவு பெற்றுக் கொள்ளுங்கள்.

330. மயங்கும் தியங்கும் கள் வாய்மை அழிக்கும்
இயங்கும் மடவார் தம் இன்பமே எய்தி
முயங்கும் நயம் கொண்ட ஞானத்து முந்தார்
இயங்கும் அடையறா ஆனந்தம் எய்துமே.

* மயக்கம் தருகின்ற கள்ளினை அருந்தி, அதிலேயே ஊறிப் போய் இருப்பார்கள். இது அவர்களது வாய்மையை அழித்துவிடும்;
* எல்லாப் பெண்களுடனும் ஒன்று கூடி, காம இன்பத்தையே எய்துவர்;
* ஞான விசாரம் செய்வதற்கு முயற்சி செய்யவே மாட்டார்கள் – முனையவே மாட்டார்கள்;
* நீங்கள், இடையறாத ஆனந்த நிலையிலேயே இயங்குவதற்கு உரிய நிலையை அடையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

331. இராப் பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்கு அற ஆனந்தத் தேறல் பருகார்
இராப் பகல் அற்ற இறை அடி இன்பத்து
இராப் பகல் மாயை இரண்டு இடத்தேனே.

* இரவு பகல் இல்லாத இடத்திலேயே நான் அமர்ந்து கொண்டேன்;
* எந்த விதமான குறைவும் அற்ற ஆனந்தமான அமிர்தத்தைப் பருகிக் கொண்டேன்;
* இறைவனது திருவடி இன்பம், இரவு பகல் அற்ற இடத்திலேயே - நிலையிலேயே உணரப்படும்;
* இரவு - இருள், தீமை, துன்பம், அறிவின்மை, கெட்டது. பகல் - ஒளி, நன்மை, இன்பம், அறிவு, நல்லது. மாயையின் செயற்பாடு, என்றும் இருமை வகையான தொழில்களுக்கே உட்பட்டது.

332. ச்த்தியை வேண்டிச் சமயத்தோர் கள் உண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானம் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞான ஆனந்தத்தில் சார்தலே.

* அழிவு தருகின்ற - சித்துக்கள் ஆடுகின்ற அவதார புருஷர்கள் சத்தியை வேண்டி காம லீலையில் ஈடுபடுவர்;
* இவர்கள் தங்கள் நிலைப்பாட்டினை முற்றாக மறந்து போய் விடுவார்கள். இவர்கள் தம் பிறப்போடு எடுத்து வந்த அல்லது வேண்டிப் பெற்ற சத்தியும் முற்றாக அழிந்துவிடும்;
* ஆக்கபூர்வமான அருள் தருகின்ற சிவஞானத்தை, உங்களுக்கு உள்ளேயே ஆய்ந்து உணருங்கள்;
* அப்பொழுது நீங்கள் உண்மையின் - சத்தியத்தின் -ஞானத்தின் ஆனந்தத்தோடு கூடி இருப்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

333. சத்தன் அருள் தரில் சத்தி அருள் உண்டாம்
சத்தி அருள் தரில் சத்தன் அருள் உண்டாம்
சத்தி சிவமாம் இரண்டும் தன் உள் வைக்கச்
சத்தியம் எண் சித்தித் தன்மையு மாமே.

* இறைவன் வழங்கும் அருள் எமக்குக் கிடைக்கும். மாயை வழங்கும் ஆக்க அழிவுக்கு உட்பட்ட சத்தியும் கிடைக்கும்;
* இவ்விரு செயற்பாடும் எமக்கு மாறி மாறிக் கிடைக்கும்;
* சுத்த சத்தியையும், உண்மையாம் சிவத்தையும் எம்முள்ளே உணர வேண்டும்;
* எண் வகையான சத்தியம் நிறைந்த சித்துக்கள் கைகூடும்.

334. தத்துவம் நீக்கி மருள் நீக்கித் தானாகிப்
பொய்த்தவம் நீக்கி மெய்ப் போகத்துட் போகியே
மெய்த சகம் உண்டு, விட்டுப் பர ஆனந்தச்
சித்தியது ஆக்கும் சிவ ஆனந்தத் தேறலே.

* எல்லாவிதமான தத்துவங்களையும் நீக்கிவிடுங்கள். எல்லா வகையான மாயையின் செயற்பாடுகளையும் நீக்கிவிடுங்கள். நீங்கள் நீங்களாக இருங்கள்;
* பொய்யான தவத்தை நீக்கிவிடுங்கள். மெய்யான உண்மைச் சிவபோதத்தினுள் சென்று விடுங்கள்;
* கண்முன்னாலே நிகழும் பூவுலகச் செயற்பாடுகள் உண்மை போன்றே புலப்படுகின்றன; இவற்றை எல்லாம் விட்டு விடுங்கள். பரம்பொருளின் பரம ஆனந்தத்துடன் சேர்ந்து கொள்ளுங்கள்;
* அப்பொழுது உங்களுக்கு எல்லாச் சித்திகளும் தரவல்ல சிவ ஆனந்தத்து அமுதம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

335. யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்
போத அமுதைப் பொசித்தவர் எண்சித்தி
மோகியர் கள்உண்டு மூடராய் மோகம் உற்று
ஆகும் மதத்தால் அறிவு அழிந்தாரே.

* யோக புருஷர்கள் இட, வல, நடு, நாடிகளைக் கட்டி விடுவார்கள். ஒப்பு உவமை கூற முடியாத சிவ ஆனந்த போத அமுதை இவர்கள் உண்பார்கள். எண் சித்திகளும் கைவரப் பெற்றவர்கள்;
* மோகியர்கள் எல்லாவகையான மோகம் தருகின்ற கள்ளைக் - காமத்தை உண்பர். வெறும் மூடராய் மோகம் பிடித்துத் திரிவர்;
* எல்லா வெறியும் தலைக்கு ஏறி மதம் பிடித்து அலைவர். தங்களிடம் இருந்த சொற்ப அறிவையும் அழித்துக் கொள் வார்கள்.

336. உண்ணீர் அமுதம் உறும் ஊறலைத் திறந்து
எண்ணீர் குரவன் இணை அடித் தாமரை
நண்ணீர் சமாதியில் ஆடி நீர் ஆநலம்
கண்ணால் ஒடே சென்று கால் வழி காணுமே.

* அமுதம் ஊறி வருகின்ற வழியைத் திறந்து அமுதத்தை உண்ணுங்கள்;
* இறைவனது திருவடித் தாமரையை எப்பொழுதும் எண்ணிக் கொள்ளுங்கள்;
* சமாதியின் நிலை கைவரப்பெற்று, அதில் நீங்கள் ஆடி மகிழ்ந்து, அதனையே என்றும் நாடிக் கொள்ளுங்கள்;
* ஆத்ம நலத்தையே என்றும் நாடுங்கள். அகக் கண்ணைப் பயன்படுத்திக் காலம் கடந்த நிலையை அடையுங்கள்.

முதலாம் தந்திரம் முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 96 தத்துவங்கள்

| | | | |
|---|---|---|---|
| அந்தக்கரணம் | 4 | | மனம், புத்தி, சித்தம், அகங்காரம். |
| அறிகருவி | 5 | | மெய், வாய், கண், மூக்கு, செவி. |
| தொழிற்கருவி | 5 | | வாக்கு, கை, கால், எருவாய், கருவாய். |
| பஞ்சபூதங்கள் | 5 | | நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம். |
| உணர்தன்மை | 5 | | சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். |
| | 24 | | ஆத்ம தத்துவம் |
| சத்தி தத்துவம் | 7 | | சக்தி, காலம், நியதி, கலை, வித்தை, ராகம், புருடன். |
| சிவ தத்துவம் | 5 | | நாதம், விந்து, சதாக்கியம், ஈச்சரம், சுத்தவித்தை. |
| | 12 | | |
| | | 36 | தத்துவங்கள் |
| நாடிகள் | 10 | | இடைகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, கஸ்தி, சிங்கவி, அலம்புடை, புருஷன், குரு, சங்கினி |
| வாயுக்கள் | 10 | | பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தன்னியாயன். |
| தாதுக்கள் | 7 | | எலும்பு, மச்சை, இரத்தம், நிணநீர், சுக்கிலம், உரோமம், நகம். |
| ஆதாரம் | 6 | | மூலாதாரம், மணிப்பூரகம், அனாகதம், விசுக்த்தம், சுவாதிஷ்டானம், ஆக்ஞை. |
| அத்துவா | 6 | | எழுத்து, சொல், பொருள், கலை, தத்துவம், புவனம். |
| சப்த்தம் | 4 | | சூக்குமை, பைகரி, வைசந்தி, மத்திமை. |
| நிலைகள் | 4 | | நனவு, கனவு, விழிப்பு, துரியம். |
| மலங்கள் | 3 | | ஆணவம், கன்மம், மாயை. |
| கர்மம் | 3 | | சஞ்சிதம், ஆகாமியம், பிராரர்த்துவம். |
| குணம் | 3 | | சத்துவம், தாமதம், ராஜதம். |
| மாயை | 2 | | பிரகிருதி, விகுருதி. |
| வினை | 2 | | நல்வினை, தீவினை. |
| | | 60 | தாத்துவிகங்கள். |
| | | 96 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் தந்திரத்தின் சாராம்சம்

1. அகத்திய மகரிஷியின் சிறப்புக் கூறப்படுகின்றது.

2. தேவர்களினதும், தேவதைகளினதும் செயற்பாடுகள் கூறப்படுகின்றன.

3. உமை அம்மையார், இராவேணஸ்வரர், தண்டீஸ்வரர் ஆகியோரின் தவமகிமையும், வழிபாட்டின் சிறப்பும் கூறப்படுகின்றன.

4. பிரம்மா, விஷ்ணு இறைஜோதியின் அடி, முடி, தேடிய வரலாறு கூறப்படுகின்றது.

5. பிரளய காலத்து நிகழ்வுகள் விபரிக்கப்படுகின்றன.

6. சர்வத்தினதும் படைத்தல், காத்தல், அழிததல், அருளல், மறைத்தல், ஆகியன எடுத்துக் காட்டப்படுகின்றன.

7. குழந்தை உருவாகும் விதமும், குடும்ப வாழ்க்கையின் பயன்பாடுகளும் கூறப்படுகின்றன.

8. ஆத்மாவின் வகைகள், அதன் பக்குவ - அபக்குவ தன்மைகள் தெளிவுபட விபரிக்கப்படுகின்றன.

9. உண்மையான புனித தீர்த்தமும் அதன் மகிமையும் விபரிக்கப்படுகின்றன.

10. திருக்கோயில், சிவம், குரு, மகேஷ்வரர், பெரியோர்கள் ஆகியோரின் சிறப்பும்; அவர்களை நிந்தனை செய்தால் ஏற்படும் விளைவுகளும் கூறப்படுகின்றன.

11. கீழ் நோக்கிய இறை முகமாகிய - ஆறாவது முகம் பற்றிய செய்தி கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# இரண்டாம் தந்திரம்

## I. அகத்தியம்

337. நடுவு நில்லாது இவ் உலகம் சரிந்து
கெடுகின்றது, எம்பெருமான், என்ன! ஈசன்
நடு உள அங்கி அகத்திய நீ போய்
முடுகிய வையத்து முன் இரு என்றானே.

* நடுவு நில்லாது, சமம் இல்லாது, உலக நீதியுடன் ஒழுகாது, தெய்வ நீதியுடன் இணையாது, மனித தர்மத்துடன் ஒட்டி வாழாது, சர்வ உயிரினங்களினதும் ஆத்ம தாற்பரியத்தை உணராது, இயற்கையுடன் இணையாது, அணுமுதல் சர்வ அண்டங்களின் யதார்த்த அமைப்பைத் தெளியாது, யோக நுட்பத்தால் நடுநாடியூடாக – சுழுமுனை ஊடாகப் பிராணனை ஏற்றி இறக்கி வாழாது இருப்பதனால்;
இவ் உலகம் சரிந்து கெடுகின்றதே! உலக மக்கள் அழிந்து போகின்றார்களே;

* "எம்பெருமானே இறைவா நாம் என்ன செய்யப் போகின்றோம்!" என்று தவத்தில் பெரியோர்கள் இறைவனை வேண்டுகின்றார்கள்;

* "தவத்தில் சிறந்த, ஞானாக்கினியை உம்முள்ளே முழுமையாகக் கொண்ட அகத்திய முனிவரே! நீர் இப்பூமியின் எல்லாப் பாகங்களுக்கும் செல்லும்;

* "பூமியில் உள்ள எல்லா மக்களையும் விழிப்பு நிலைக்குக் கொண்டுவாரும். நடுவு நிலையை ஏற்படுத்தும்" என இறைவன் அகத்தியமா முனிவருக்குக் கட்டளை இடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

338. அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயம் செய்மேல் பால் அவனொடு
அங்கி உதயம் செய் வடபால் தவமுனி
எங்கும் வளம் கொள் இலங்கு ஒளிதானே.

* அகத்திய முனிவர்; என்றும் உள்ளே ஞானாக்கினியையும், வெளியே ஓமத்து அக்கினியையும் வளர்ப்பவர்;
* ஞானாக்கினி என்றும் அகத்திய முனிவரின் உடலில் உதயமாகிப் பிரகாசித்துக் கொண்டே இருக்கும்;
* கைலாய மலையின் வடசாரலில் இருந்து தவம் செய்து ஞானாக்கினியை வளர்க்கவும், உணரவும் முழுமையாகத் தெரிந்தவர் - தெளிந்தவர் அகத்திய மகரிஷி ஆவர்;
* இதனால் பூமியின் எல்லா இடங்களிலும் ஆத்ம வளமும், பலமும் ஏற்படுத்தும் ஞான ஒளியைப் பெற்றார் அகத்திய மகரிஷி.

## II. பதிவலி இயல் வீரட்டம் எட்டு

339. கருத்து உறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத்து உயிர்களை எல்லாம்
வருத்தம் செய்தான் என்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலம் கைக்கொண்டு கொன்றானே.

* ஒரு அரசன் தவம் செய்து வரம்பெற்றான். பின்னர் அதனைத் தவறாகப் பயன்படுத்தினான். இதனால் தான் பெற்ற அகக் கண் குருடாகி விட்டது;
* அதனால் கொடூரமாக நடந்து உலகத்தில் உள்ள உயிர்களை எல்லாம் வாட்டி வதைத்தான்;
* வானவர்கள் சென்று, இறைவனிடம், இந்த வேதனையை எடுத்தியம்பி தம்மைக் காக்குமாறு வேண்டினார்கள்;
* உருத்திர மூர்த்தியாகிய சங்கரன் அந்த அரசனைச் சங்காரம் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

340. கொலையில் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தான் அங்கு இட்டு
நிலை உலகுக்கு இவன் வேண்டும் என்று எண்ணித்
தலையை அரிந்திட்டுச் சந்தி செய்தானே.

* மக்களுக்கு எல்லாம் தலைவனாக ஒரு அரசன் விளங்கினான். அவன்தான் பிரம்ம தேவன். ஆனால் ஒரு சமயம் அவன் பல கொலைகளைச் செய்து அவற்றில் இருந்து தப்பித்துக் கொண்டான்;
* இவனது தலையை வெட்டி அக்கினியில் இட்டான் சங்கரன்;
* சங்கரன் இவனை முற்றாக அழித்து ஒழிக்காது, இவன் இவ் உலகிற்குப் பயன்படுவான் என்று தீர்மானித்து, அவனது வேகத்தை அடக்கி விட்டான்;
* முதலில் அவ் அரசனின் - பிரம்மாவின் தலையை வெட்டித் தண்டனை கொடுத்துவிட்டான். நாலு முகங்களில் ஒரு முகமே வெட்டப்பட்டது.

341. எங்கும் பரந்தும் இருநிலம் தாங்கியும்
தங்கும் படித்தவன் தாள் உணர் தேவர்கள்
பொங்கும் சினத்துள் அயன் தலைமுன் அற
அங்கு அச்சுதனை உதிரம் கொண்டானே.

* தேவதைகளுக்குள் மிகவும் முதன்மையாக விளங்குபவர் சிவன் ஆவர். சிவன் இருமை வகைத் தன்மைகளையும் தாங்கியவர். எல்லாவற்றையும் அறிந்தவர்.
* தேவதைகளில் ஒருவரான பிரம்மாவின் ஒரு தலை சிவனால் கிள்ளி எறியப்பட்டது. காரணம் பிரம்மாவின் ஆணவச் செருக்கும் தேவர்களை அடக்கி ஆண்டதுமாகும்;
* அண்டங்களுக்கு எல்லாம் தானே அதிபதி என்று கூறிக்கொண்ட, தேவதைகளுள் ஒருவரான விஷ்ணுவினது, உதிரத்தையும் எடுத்துச் செருக்கை அடக்கினார் சிவனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

342. எங்கும் கலந்தும் என் உள்ளத்து எழுகின்ற
அங்க முதல்வன் அருமறை ஓதி பால்
பொங்கும் சலந்தரன் போர் செய்ய நீர்மையின்
அங்கு விரல் குறித்து ஆழி செய்தானே.

* இறைவனது ஏற்பாடாகிய சிவன் எனும் தேவதை எல்லா இடமும் கலந்துள்ளது; என் உள்ளத்திலேயும் தென்படுகின்றது;
* எல்லா அங்கங்களுக்கும் உடல்களுக்கும் தலைவனாக சிவன் செயற்படுகின்றான். வேதம் ஓதும் இடத்திலே வெளிப்படுகின்றான்.
* போரையே செய்வதற்கு என விஷ்ணு எனும் தேவதையும், இறைவனின் ஒரு ஏற்பாட்டிற்கு உட்பட்டது. விஷ்ணுவின் சஞ்சாரம் நீர்மேலேயே அதிகம்; பூமி சமுத்திரத்தினால் சூழப்பட்டுள்ளது.

343. அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் ஆவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே.

* இவ்வாறான பணிகளைச் செய்கின்ற சிவன் செஞ்சடை உடையவன். ஆதியானவன். புராதனம் ஆனவன்;
* சிவன் எரித்தது மண், வான், விண் ஆகிய முப்புரத்தையே என்று மூடர்கள் பேசிக் கொள்வார்கள்;
* உண்மையில் எம் உள்ளே உள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய முப்புரத்தையே சிவன் எரிக்கின்றான்.
* சிவன் இந்த முப்புரத்தையும் எரிக்கின்ற வகை வழிமுறை ஒருவராலும் அறிய முடியாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

344. முத்தீக் கொளுவி முழுங்கு எரிவேள்வி உள்
அத்தி உரி அரன் ஆவது அறிகிலர்
சத்தி கருதிய தாம் பல தேவரும்
அத்தீயின் உள் எழுந்து அன்று கொலையே.

* சந்திரநாடியால், சூரியநாடியால், நடுநாடியால் அக்கினி ஏற்படுத்தப்பட்டு எம்முள்ளே உண்மையான வேள்வி நடைபெறுகின்றது;
* சிவனுடைய கண்காணிப்பிலேயே இவ்வாறு நிகழ்வதை யாரும் அறியாது உள்ளார்கள்;
* எல்லாத் தேவர்களும் சத்தியை வேண்டி அக்கினி வளர்த்து வேள்வி செய்கின்றார்கள். ஆனால் அந்த வேள்வியில் பலியிடும் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

345. மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேல் உற நோக்கி முக்
கால் உற்றுக் காலனைக் காய்ந்து அங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே.

* மூலத் துவாரத்தின் ஊடாக சிவன் அக்கினி சொரூபமாக உள்ளே வெளிப்படுகின்றான்;
* சிரசின் - சகஸ்ரத்தின் உச்சியை ஒருமையுடன் நோக்க வேண்டும்;
* அப்பொழுது முக்காலத்தையும் கடந்து விடலாம். காலனை வென்று விடலாம். அக்கினி சொரூபமான யோகத்தில் இருந்து, ஞான சொரூபமாகிய இறைவன் இடத்திலே மிகவும் நலமாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

346. இருந்த மனத்தை இசைய இருத்திப்
பொருந்தி இலிங்க வழியது போக்கித்
திருந்திய காமன் செயல் அழித்து அங்கண்
அருந்தவ யோகம் கொறுக்கை அமர்ந்ததே.

* அலைபாய்கின்ற மனத்தை ஒரு வகையாக வழிப்படுத்தி ஆற்ற வேண்டும்;
* பின்னர் சிவலிங்கத்திலே மனத்தைப் படிமானம் ஆக்க வேண்டும்;
* அப்பொழுது காமத்தின் செயற்பாடுகள் எல்லாம் அழிந்து போகும்;
* அதன் பிற்பாடே நல்ல தவம் கைகூடும். நல்ல யோகம் சித்தித்து ஆறுதல் கிடைக்கும்.

## III. இலிங்க புராணம்

347. அடி சேர்வன் என்ன எம் ஆதியை நோக்கி
முடிசேர் மலை மகனார் மகள் ஆகித்
திடமார் தவம் செய்து தேவர் அறியப்
படியார அர்ச்சித்துப் பத்தி செய்தானே.

* இமய மலையின் மகனின் மகளாகிய உமை அம்மையார் இறைவனை வேண்டித் தவம் செய்தார்;

* மிகவும் உறுதியுடனும், திடசங்கல்பத்துடனும் தவம் செய்தார். தேவர்கள் இதனை அறிந்து வியந்தார்கள்;

* மிகவும் பணிவோடு மலர் தூவி பக்தியுடன் வழிபாடு செய்தார் உமை அம்மையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

348. திரிகின்ற முப்புரம் செற்ற பிரானை
அரி அயன் என்று எண்ணி அயர்வுற வேண்டா
புரிவு உடையாளர்க்குப் பொய் அல்லன் ஈசன்
பரிவொடு நின்று பரிசு அறிவானே.

* முப்புரமாகிய - திரிபுரமாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை எரித்தவர் சிவன் ஆவர்;
* இதைச் செய்தவர் பிரம்மாவாக இருக்குமோ! விஷ்ணுவாக இருக்குமோ! என்று சிந்தனை செய்து நீங்கள் யாரும் குழப்பம் அடைய வேண்டாம்;
* உண்மை உணர்வு உடையவர்களுக்கு இறைவன் என்றுமே வெளிப்படாது இருந்ததில்லை;
* நீங்கள் எல்லோரும் மிகவும் ஆத்மார்த்தமான பணிவோடு வாழ்ந்து இறைவனின் அருளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

349. ஆழி வலம் கொண்டு அயன் மால் இருவரும்
ஊழி வலம் செய்ய ஒண் சுடர் ஆதியும்
ஆழி கொடுத்தனன் அச்சுதற்கு அவ்வழி
வாழி பிரமற்கும் வாள் கொடுத் தானே.

* ஒண்சுடரின் அடியினையும், முடியினையும் தேடி விஷ்ணுவும், பிரம்மாவும் ஊழி ஊழி காலங்களாகவே பிரபஞ்சத்தை வலம் வந்தார்கள்;

* அவர்களால் தங்களது முயற்சியில் வெற்றி பெற முடியவில்லை;

* சிவனார் இறுதியில், விஷ்ணுவிற்கு சக்கராயுதத்தை வழங்கினார். பிரம்மாவிற்கு வாளினைக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

350. தாங்கி இருபது தோளும் தடவரை
ஓங்க எடுத்தவன் ஒப்பில் பெருவலி
ஆங்கு நெரித்து அமரா என்று அழைத்த பின்
நீங்கா அருள் செய்தான் நின்மலன் தானே.

* இருபது தோள்களின் வலிமையை ஒருங்கே சேரப்பெற்ற, தர்மத்தில் உயர்ந்த அரசர் ஒருவர் இருந்தார். அவரே இலங்கேஸ்வரர் - இராவணேஸ்வரர் - சாமவேத கானன்;

* தனது தவ வலிமையால் கைலாய மலையை ஒரே மூச்சில் எடுத்தார் இராவணேஸ்வரர். அதனை இலங்காபுரியில் வைப்பதற்காக எடுத்தார். தனது தாயார் வழிபாடு செய்வதற்காகவே அவ்வாறு செய்தார். ஞானத்தில் மிகவும் உயர்ந்தவர். உமை அம்மையாரினதும், முனிவர்களினதும் வேண்டுகோளுக்கு இணங்க சிவனார் அக்கைலாய மலையை எடுத்துச் செல்லாது தடுத்துவிட்டார்;

* இந்தப் பெருமலையைப் பெயர்த்துத் தூக்குவதற்கு அதி அற்புதமான விஞ்ஞான நுட்பத்தை இராவணேஸ்வரர் அன்று கையாண்டார். "அமரா! உமக்கு என்றும் அழிவே இல்லை"! என்று விழித்து "இராவணேஸ்வரர்" என அழைத்து "வீணைக்கொடியை உடையவரே" என்று கூறி அணைத்து எடுத்தார் சிவனார்;

* என்றுமே விட்டு அகலாத இறைவனது பேரானந்தத்துப் பேர் அருளினை இராவணேஸ்வரருக்கு வழங்கினார் சிவனார்.

குறிப்பு: இராவணேஸ்வரர்: இலங்காபுரியை ஆண்டவர்.

திரிகூட பர்வதம் என்று இலங்காபுரிக்கு ஒரு நாமம் உண்டு. மேருமலை, கோணமலை, பாதமலை மூன்றும் சேர்ந்ததே இலங்காபுரியாகும். தற்போது மேருமலை கடலுக்குள் சென்று விட்டது. கோணமலை - திருக்கோணமலையில் ஒரு சிறுபாகமே வெளியே உள்ளது. மிகுதி கடலுக்குள் அமிழ்ந்து விட்டது. பாத மலை - சிவன் ஒளிபாத மலை மட்டுமே முழுமையாகத் தற்போது உள்ளது. சிவனாரின் ஒளியினைப் பெற்றவரது பாதம் - அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணேஸ்வரரின் பாதம். அதனால் சிவன்ஒளி பாத மலை ஆகியது. இராவணேஸ்வரரின் தந்தையார் பாரத பூமியைச் சார்ந்தவர். தாயார் இலங்காபுரியைச் சார்ந்தவர்.இராவணேஸ் வரரின் துணைவியார் தவத்தில் சிறந்தவர். சிறந்த கற்புநெறி உடையவர். பெயர் - வண்டோதரியார்.
(ஏர் தரும் ஏழு உலகும் ....... மணிவாசகர்)

இராவணேஸ்வரர் சிறந்த ஓர் அரசர். தபசி, ஞானி, மருத்துவர், இசைவிற்பன்னர், சாமவேதம் பாடியவர், சாமகானம் இசைத்தவர், சதுரங்க விளையாட்டைக் கண்டு உலகுக்கு அறிவித்தவர், வான் ஊர்திகள் வைத்திருந்தவர். ஒழுக்கத்தில் உயர்ந்தவர். அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர். இராவணேஸ்வரரின் தவச் சிறப்பினாலேயே இலங்காபுரி சிவபூமி எனத் திருமூலரால் போற்றப்பட்டது. மிகவும் சிறந்த சிவபக்தன். இராவணேஸ்வரரின் சிறப்பை நாயன்மார்கள் நால்வரும் மிகவும் தெளிவுபடப் பாடி உள்ளார்கள். யுத்த நுட்பங்களை நன்கு அறிந்தவர். உலகம் பூராவும் சிவவழி பாட்டினை ஏற்படுத்தியவர். உலகின் பத்துப் பிரதேசங்களையும் ஆண்டவர்.

கைலாய மலையின் மையத்திலே இராவணேஸ்வரரால் ஸ்தாபிக்கப் பட்ட தங்கச் செங்கோல் உண்டு. அதிலே விலைமதிப்பற்ற நவரத்தினங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. தங்கத்தால் ஆன வீணைக் கொடியும் அங்கே காணப்படுகின்றது. இன்றும் இக்காட்சியை நாம் நேரடியாகவே பார்க்கலாம்.

கைலாயமலை : உயரம் : 19,000' - 22,000'

வெளிச்சுற்றுப் பிரகாரம் -
3ஆம் வீதி - 32 மைல்கள் சுற்றளவு.
இரண்டாம் சுற்றுப் பிரகாரம் -
2ஆம் வீதி - 24 மைல்கள் சுற்றளவு
முதற் சுற்றுப் பிரகாரம் -
1ஆம் வீதி - 8 மைல்கள் சுற்றளவு.

மிகவும் தவத்தில் உயர்ந்தவர்களால் தான் முதலாம் வீதியில் எழுந்தருளியுள்ள இறைகாட்சியை அனுபவிக்க முடியும். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையத்திலேயே இராவணேஸ்வரரது தங்கச் செங்கோலும், தங்கத்தால் ஆன வீணைக்கொடியும் இன்றும் புதுப் பொலிவுடனேயே காணப்படுகின்றது. கைலாயத்தின் ஒருபுறத்தில் இராவணேஸ்வரரால் அமைக்கப்பட்ட "இராவணேஸ்வர தீர்த்தம்" என்று இன்றும் அந்த ஏரி அழைக்கப்படுகின்றது. கைலாயத்தின் மறுபுறத்தில் "மானசரோவர்" எனும் ஏரி உண்டு. இதன் நீளம் 85 மைல்கள். அகலம் 56 மைல்கள். வாகீச முனிவர் இராவணனைச் சந்தித்தவர்.

வால்மீகியும், கம்பரும் வேண்டுமென்றே திட்டமிட்டு இராவணேஸ்வரரைத் தங்களது எழுத்துக்களால் மான பங்கப்படுத்திவிட்டார்கள். இவர்கள் சைவர்களுக்கும், திராவிடர்களுக்கும், தமிழர்களுக்கும் பெரும் அழிவு செய்து விட்டார்கள். இது என்றும் மறுக்க முடியாத உண்மையாகும். இவை என்றோ ஒருநாள் வெளிவருவது நிச்சயம். இராவ ணேஸ்வரரின் காலம் கி. மு, 12,000 ஆண்டுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

351. உறுவது அறிதண்டி ஒண்மணல் கூட்டி
அறுவகை ஆன் ஐந்தும் ஆட்டத் தன் தாதை
செறு வகை செய்து சிதைப்ப முனிந்து
மறு மழுவால் வெட்டி மாலை பெற்றானே.

* ஒரு குழந்தை ஆற்றங்கரையில் மணலை ஒன்று சேர்த்து சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்து வந்தது;
* இக் குழந்தையின் தந்தை இதன் வழிபாட்டினைக் கேலி செய்தார். மண்ணால் ஆன சிவலிங்கத்தைக் காலால் சிதைத்தார்;
* குழந்தை வேதனை அடைந்தது. அருகே இருந்த ஒரு சிறு தடியால் தந்தையின் காலை நோக்கி வீசியது;
* தடி வாளாக மாறித் தந்தையின் கால்களைத் துண்டாடியது. சிவனார் இக்குழந்தைக்கு "ஞானம்" எனும் மாலையை வழங்கினார். "தண்டீஸ்வரர்" எனும் நாமத்தையும் சூட்டினார்.

352. ஓடி வந்து எல்லாம் ஒருங்கிய தேவர்கள்
வாடி முகமும் வருத்தத்து தாம் சென்று
நாடி இறைவா நம என்று கும்பிட
ஈடில் புகழோன் எழுக என்றானே.

* தேவர்கள் தங்களது வேதனைகளைத் தாங்காது ஓடிச் சென்றார்கள் சிவனாரிடம்;
* வாடிய முகத்துடன் தாங்கமுடியாத வருத்தத்துடன் அவர்கள் அனைவரும் காணப்பட்டனர்;
* நமக! நமக! என்று கூறி இறை நாமங்களை ஓதியவாறு சிவனாரைக் கும்பிட்டனர்;
* அளவிட முடியாத இறை அருள், புகழ், நிறைந்த சிவனார் இவர்கள் அனைவரையும் ஆட்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV. தக்கன் வேள்வி

353. தந்தை பிரான் வெகுண்டான் தக்கன் வேள்வியை
வெந்தழல் ஊடே புறப்பட்ட விண்ணவர்
முந்திய பூசை முடியார் முறை கெட்டுச்
சிந்தினர் அண்ணல் சினம் செய்த போதே.

* *தக்கன் எனும் தேவ அரசன் பிரம்மாவால் படைக்கப்பட்டவன். தக்கன் பலிகள் கொடுத்து வேள்விகள் செய்தான்;*
* *விண்ணவர்களும் இந்த வேள்வியைப் பெரிது என்று மயக்கத்தால் எண்ணி வேள்வித் தீயைச் சூழ்ந்தனர்;*
* *சிவனால் இந்த அக்கிரமத்தைப் பொறுக்க முடியவில்லை. சிவன் கோபம் கொண்டார்;*
* *அதனால் எல்லோரும் வேள்வி நடந்து கொண்டு இருந்த இடத்தை விட்டு ஓடி மறைந்தனர். வேள்விப் பூசையும் அழிந்தது.*

354. சந்தி செயக் கண்டு எழுகின்றது அரிதானும்
எந்தை இவன் அல்ல யாமே உலகினில்
பந்தம் செய் பாசத்து வீழ்ந்து தவம் செய்ய
அந்தம் இலானும் அருள் புரிந்தானே.

* *தக்கனது வேள்வி சிவனால் அழிக்கப்படுவதை உணராது இருந்தார் விஷ்ணு தேவர்;*
* *நானே எல்லா உலகங்களுக்கும் அதிபதி என்று பந்தமும், சொந்தமும் கொண்டாடிப் பாசத்தில் வீழ்ந்து கிடந்தார்;*
* *பின்னர் உணர்வு பெற்று சிவனாரை நோக்கித் தவம் செய்ய ஆரம்பித்தார்;*
* *ஆதி அந்தம் இல்லாத சிவனும், இவரின் தவறை மன்னித்து இறைவறின் அருட்கடாட்சத்தை வழங்கினார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

355. அப்பரிசே அயனார் பதி வேள்விஉள்
அப்பரிசே அங்கி அதிசயம் ஆகிலும்
அப்பரிசே அது நீர்மையை உள் கலந்து
அப்பரிசே சிவன் ஆலிக்கின்றானே.

* இறைஅருளை வேண்டி பிரம்மதேவர் சிவனை நோக்கி வேள்வி செய்யலானார்;
* இறைஅருளை வேண்டி அக்கினி தேவன் சாட்சியாக இருந்து எல்லா அதிசயங்களையும் பார்த்துக் கொண்டுள்ளார்;
* நீரிலேயும் இறைவனின் அருள் காணப்படுகின்றது;
* எல்லா நிகழ்ச்சிகளையும் சிவன் கண்காணித்துக் கொண்டே உள்ளார்.

356. அப்பரிசே அயன் மால் முதல் தேவர்கள்
அப்பரிசே அவர் ஆகிய காரணம்
அப்பரிசு அங்கி உள நாளும் உள் இட்டு
அப்பரிசு ஆகி அலர்ந்து இருந்தானே.

* இறை அருள் வேண்டியே பிரம்மாவும், விஷ்ணுவும் மற்றும் தேவர்களும் தவம் செய்வார்கள்;
* இறைவனது அருட்கடாட்சத்தாலேயே இவர்கள் அனைவரும் சிறந்தவர்களாக விளங்குவார்கள்;
* இறைவனது அருட் கடாட்சத்தைப் பெறுவதற்குத் தினமும் அக்கினி வளர்த்து,ஆகுதி கொடுத்து, அக்கினி ஊடாக இறைவனை வேண்டுவர்;
* சிவன், இறைவனின் அருளாகி எல்லாரிடத்திலும் மலர்ந்து அலர்ந்து இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

357. அலர்ந்து இருந்தான் என் அமரர் துதிப்பக்
குலம் தரும் கீழ் அங்கி கோள் உறநோக்கிச்
சிவந்த பரம் இது சென்று கதுவ
உவந்த பெருவழி ஓடி வந்தானே.

* என்னுடைய இறைவன் அமரர்களுக்கு எல்லாம் தலைவன். நான் இறையவர் துதிபாடி வழிபாடு செய்ய இறைவன், என்னுள்ளேயே மலர்ந்து அலர்ந்து இருக்கின்றார்;
* அக்கினி வளர்த்து, அக்கினி ஊடாக இறைவழிபாடு செய்பவர்கள், சிறந்த ஒரு நிலையில் – குலத்தில் இருப்பவர்கள் ஆவர்;
* இவர்கள் சிவபரம் பொருள் இதுதான் என்று உறுதியாகப் பற்றிக் கொள்வார்கள்;
* என்னிலை கண்டு, இறை பரம்பொருள், மிகவும் உவப்பு எய்தி ஏகப் பெருவழியாய் என்னிடம் ஓடி வந்து விட்டார்.

358. அரி பிரமன் தக்கன் அருக்கன் உடனே
வரு மதி வாலை வன்னி நல் இந்திரன்
சிரமுக நாசி சிறந்த கைதோள் தான்
அரன் அருள் இன்றி அழிந்த நல்லோரே.

* பிரம்மா, விஷ்ணு, தக்கன், சூரியன், சந்திரன், அக்கினி தேவன், இந்திரன், வாலை ஆகியவர்கள்;
* சிரசு, முகம், நாசி, சிறந்த கைகள், வலிமை மிக்க தோள்கள் ஆகியவற்றை உடையவர்கள்தான்;
* ஆனால் இவர்கள் நல்லவர்களாக இருந்த போதிலும் சிவனது அருள் இன்மையால் அழிந்து ஒழிந்து போனார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

359. செவி மந்திரம் சொல்லும் செய் தவத் தேவர்
அவி மந்திரத்தின் அடுக்களை கோலிச்
செவி மந்திரம் செய்து தாம் உற நோக்கும்
குவி மந்திரம் கொல் கொடியது வாமே.

* கேள்வி ஞானத்தால், மந்திரத்தைக் கேட்டுத், தேவர்கள் மந்திரம் சொல்லித் தவம் செய்கின்றனர்;
* அக்கினி வளர்க்கும் இடத்தை நன்கு ஏற்பாடு செய்து மந்திரம் சொல்லி அவிசு – ஆகுதி கொடுக்க வேண்டும்;
* கேள்வி ஞானத்தால் மந்திரம் பயின்றால், அவர்கள் தாமாகவே தம்முள் நோக்கிச் செல்வர்;
* ஒரு சந்தர்ப்பத்தில் மந்திரங்கள் அனைத்தும் குவிந்து ஒன்றிலே நிற்கும். அப்பொழுது எம்மில் உள்ள கொடிய தன்மைகள் எல்லாம் அழிந்து ஒழிந்து போய்விடும்.

360. நல்லார் நவகுண்டம் ஒன்பதும் இன்புற
பல்லார் அமரர் பரிந்து அருள் செய்கென
வில்லால் புரத்தை விளங்கு எரி கோத்தவன்
பொல்லா அசுரர்கள் பொன்றும் படிக்கே.

* நல்ல தவம் உடையவர்கள் ஒன்பது ஓமகுண்டங்கள் செய்து அக்கினி வளர்ப்பார்கள். இன்புற்று இருப்பார்கள்;
* தேவர்கள் பரிந்து அருள் வேண்டி வழிபாடு செய்தார்கள். மும்மல காரியமாகிய முப்புரத்தையும் சிவனார் சிரித்தவாறே எரித்து விட்டார்.
* பிரம்மா, விஷ்ணு, தக்கன், சூரியன், சந்திரன், அக்கினி தேவன், இந்திரன், வாலை ஆகிய எண்மரும் மும்மலங்களால் அசுரர் ஆனார்கள். இவர்களைச் சிவனார் அழித்து ஒழித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

361. தெளிந்தார் கலங்கினும் நீ கலங்காதே
அளிந்து ஆங்கு அடைவது எம் ஆதிப்பிரானை
விளிந்தான் அது தக்கன் வேள்வியை வீயச்
சுளிந்து ஆங்கு அருள் செய்த தூய் மொழியானே.

* இந்த எண்மரும் - பிரம்மா, விஷ்ணு, தக்கன், சூரியன், சந்திரன், இந்திரன், அக்கினி தேவன், வாலை ஆகியோர் தெளிந்தவர்கள் ஆவர். ஆனால் சதா கலங்கிக் கொண்டே உள்ளார்கள். நீங்களோ கலங்க வேண்டாம் எனச் சிவனார் எமக்கு ஆறுதல் கூறுகின்றார்;
* எமக்கு அருள் பாலிக்கின்றார். இதனால் நாம் இறைபரம் பொருளை அடைவதற்கு எமக்கு வழி ஏற்படுகின்றது;
* ஆனால் தக்கனோ பலியிட்டு வேள்வி செய்து சிவனை நிந்தனை செய்தான்;
* சிவனாரின் கோபத்திற்கு உள்ளானான். அதனால் தக்கன் அழிந்தான். ஆனால் மீண்டும் சிவனார் தக்கனுக்கு அருளையே வழங்கினார்.

## V. பிரளயம்

362. கருவரை மூடிக் கலந்து எழும் வெள்ளத்து
இருவரும் கோவென்று இகல இறைவன்
ஒருவனும் நீர் உற ஓங்கு ஒளியாகி
அருவரையாய் நின்று அருள் புரிந்தானே.

* உலக மாயா மயக்க வெள்ளத்தில் கலந்தமையால், பிரம்மா வையும், விஷ்ணுவையும் ஆணவம் சூழந்து கொண்டது;
* தாங்கள் தான் இவ் உலகங்களுக்கு எல்லாம் தலைவன் என்று ஒருவருக்கு ஒருவர் போட்டியிட்டனர்;
* இறைவன் ஒருவனே சகல பிரபஞ்சங்களுக்கும் ஏகமாகி ஒன்றாகி உள்ளான். நீங்கள் இருவரும் பிறப்பு இறப்புக்கு உட்பட்டவர்கள் என்று சிவனார் கூறி;
* அவர்களுக்கு முன்னே இறை சொரூபமாகிய ஒளி வடிவம் எடுத்து அவர்களின் ஆணவத்தை அகங்காரத்தை அடக்கி, இறை அருளை வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

363. அலைகடல் ஊடு அறுத்து அண்டத்து வானோர்
தலைவன் எனும் பெயர் தான் தலைமேல் கொண்டு
உலகார் அழல்கண்டு உள் வீழாது ஓடி
அலைவாயில் வீழாமல் அஞ்சல் என்றானே.

* பிரம்மா, விஷ்ணுவிற்கு முன்தோன்றிய இறைஜோதி: பூமி, அலைகடல், வான், விண், அண்டங்கள் அனைத்தையும் ஊடறுத்து விளங்கும்;
* வானவர்கள், இறைவனை உணர்ந்து அவன் திருப்பாதங்களைச் சிரமேல் கொண்டார்கள்;
* உலக மக்கள் இப்பெரும் ஜோதியைக் கண்டு திக்குத் திசை தெரியாது ஓடினார்கள்;
* இறைவனது அனுக்கிரகத்தால் அவர்கள், அச்சத்தில் இருந்து காப்பாற்றப்பட்டனர்.

364. தண் கடல் விட்டது அமரரும் தேவரும்
எண் கடல் சூழ் எம் பிரான் என்று இறைஞ்சுவர்
விண் கடல் செய்தவர் மேல் எழுந்து அப்புறம்
கண் கடல் செய்யும் கருத்து அறியாரே.

* குளிர்ச்சி நிறைந்த கருணைக் கடலை; அமரர்களும், தேவர்களும் சேர்ந்து கொள்ளத் தவறி விட்டார்கள்;
* பின்னர் எண்ண முடியாத துன்பக் கடல்களைத் தாண்டி இறைவா! எம்பிரானே! என்று இறைஞ்சி வேண்டுவர்;
* விண்ணையும், அண்டாதி அண்டக் கடல்களையும் ஏற்பாடு செய்தவரை, அப்புறம் இப்புறம் என்று மேலும் கீழும் எழுந்து தேடி அலைவர்;
* எம் அகக் கண்ணுக்குள் அருட் கடாட்சமாக விளங்கும் புலப்படும் ஜோதியின் தாற்பரியத்தை இந்தத் தேவாதி தேவர்களும் அறியமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

365. சமைக்க வல்லானைச் சயம்பு என்று ஏத்தி
அமைக்க வல்லார் இவ் உலகத்து உளாரே
திகைத்த எண்நீரில் கடல் ஒலி ஓசை
மிகைக் கொள அங்கி மிகாமை வைத்தானே.

* எல்லாவற்றையும் ஆக்கி அழித்துக் காக்க வல்லானை - அந்த ஒருவனை - சிவன் என்று எல்லோரும் ஏத்தி வழிபடுவார்கள்;

* இவ்வாறு எல்லாவற்றையும் ஏககாலத்திலே நெறிப்படுத்த வல்லார் இவ் உலகத்திலே ஒருவரும் இல்லை;

* கடல் நீர் திகைத்து எழுந்து, எண்ண முடியாத ஒலி அலைகளையும் ஓசையையும் உருவாக்கும்;

* அக்கினியும் அளவாகவே இப்பூவுலகில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

366. பண் பழி செய் வழிபாடு சென்று அப்புறம்
கண் பழி யாத கமலத்து இருக்கின்ற
நண் பழியாளனை நாடிச் சென்று அச்சிரம்
விண் பழியாத விருத்தி கொண்டானே.

* உங்கள் பண்பாட்டு உயரிய சீலங்களில் நின்று இறைவனை வழிபாடு செய்யுங்கள்;

* குவிந்து போகாத ஆத்மீக இதயத் தாமரையில் இருப்பவரை, மிகமிக நன்றாகவே நண்ணி அணுகிக் கொள்ளுங்கள்.

* இறைவனை - உங்கள் சிரமேல் சூடிக் கொள்ளுங்கள். விண்ணவர்களும் எந்த விதமான குறையும் கூற முடியாதவாறு ஆக்கத் தன்மைகளை உள்ளாக்கியுள்ளார் சிவனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VI. சக்கரப்பேறு

367. மால் போதகன் என்னும் வண்மைக்கு இங்கு ஆங்காரம்
கால் போதம் கையினோடு அந்தரச் சக்கர
மேல்போக வெள்ளி மலை அமராபதி
பார்போகம் ஏழும் படைத்து உடையானே.

* திருமால் தவம் இருந்து சிவனிடம் சக்கராயுதத்தைப் பெற்றுக் கொண்டார். அதனால் அவரிடம் ஆங்காரமும் வலிமையும் நிறைந்து காணப்படுகின்றது;
* சக்கராயுதத்தை என்றும் கையிலேயே வைத்துள்ளார்;
* வெள்ளி மலையாகிய கைலாயத்தில் அமரர்களுக்கு எல்லாம் அதிபதியான சிவனார் வீற்றிருக்கின்றார்;
பூமியில் உள்ள ஏழு வகையான பிறப்பின் போகங்களும் சிவனாரின் ஏற்பாட்டிற்கு உட்பட்டதே. அவையாவன;

1. உணவு 2. நோய் 3. காமம்
4. இதய சஞ்சாரம் 5. கண்ட சஞ்சாரம்
6. புருவமத்தி சஞ்சாரம் 7. சகஸ்ர சஞ்சாரம்

368. சக்கரம் பெற்று நல் தாமோதரன் தானும்
சக்கரம் தன்னைத் தரிக்க ஒண்ணா மையால்
மிக்க அரன் தன்னை விருப்புடன் அர்ச்சிக்கத்
தக்க நல் சத்தியைத் தான் கூறு செய்ததே.

* சக்கர ஆயுதத்தை ஒருவாறு தாமோதரன் ஆகிய திருமால் பெற்றுக் கொண்டான்;
* ஆனால் திருமாலால் அச்சக்கரத்தின் வீரியத்தைத் தாங்கிக் கொள்ளக் கூடிய ஆற்றல் இருக்கவில்லை;
* மீண்டும் வலிமை வேண்டி மிகவும் விருப்பத்துடனேயே இறைவனை அர்ச்சித்து வழிபாடு செய்தார் திருமால்;
* அப்பொழுது சிவனார் சக்தியின் ஒரு கூறாகிய லக்ஷ்மிதேவியை அவருக்கு வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

369. கூறு அதுவாகக் குறித்து நல் சக்கரம்
கூறது செய்து கொடுத்தனன் மாலுக்குக்
கூறது செய்து கொடுத்தனன் சத்திக்குக்
கூறது செய்து தரித்தனன் கோலமே.

* சக்கர ஆயுதத்தின் வேகத்தையும் குறைத்து விட்டார் சிவனார்;

* பின்னர் திருமாலுக்கு அதனை வழங்கினார்;

* சக்தியையும் மிகவும் அளவுபடுத்தியே திருமாலுக்கு வழங்கினார்;

* இவ்வாறு பிரபஞ்சங்கள் எல்லாம் ஒரு அளவுக்குள் உட்பட்டே செயற்படுகின்றன. இந்தக் கோலமே மிகமிக அற்புதமாகும்.

370. தக்கன் தன் வேள்வி தகர்த்த நல்வீரர்பால்
தக்கன் தன் வேள்வியில் தாமோதரன் தானும்
சக்கரம் தன்னைச் சசிமுடி மேல்விட
அக்கி உமிழ்ந்தது வாயுக் கரத்திலே.

* பலியிட்டுத் தக்கன் செய்த வேள்வி, சிவனாரின் ஏற்பாட்டால் அழிக்கப்பட்டது;
* தக்கனின் அக்கிரமமான வேள்வியில் விஷ்ணு தேவரும் பங்கு கொண்டார்;
* விஷ்ணு தேவர் வேண்டிப் பெற்ற சக்கராயுதத்தை இந்திரனது ராணியின் முடிமேல் வைத்து விட்டார்;
* இந்திராணி தனது கண்ணின் பார்வையினாலேயே சக்கராயுதத்தை அப்புறப்படுத்த, அது வாயுபகவானின் கரத்திலேயே போய்ச் சேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VII. எலும்பும் கபாலமும்

371. எலும்பும் கபாலமும் ஏந்தி எழுந்த
வலம்பன் மணி முடி வானவர் ஆதி
எலும்பும் கபாலமும் ஏந்திலன் ஆகில்
எலும்பும் கபாலமும் இற்று மண்ணாமே.

* *எலும்புக் கூடுகளையும், மண்டை ஓட்டினையும் சிவனார் அணிந்துள்ளார்;*
* *சிவனார் வலது பக்கச் சுற்றுள்ள மணிமுடி தாங்கியவர்; அவர் வானவர்களுக்கு எல்லாம் ஆதியானவர்;*
* *அன்றே சிவனார் எலும்புக் கூட்டையும் கபாலத்தையும் ஏந்தி இருக்காவிட்டால்;*
* *எலும்புக் கூடும் கபாலமும் உக்கி மண்ணாய்ப் போய்விடும்.*

## VIII. அடி முடி தேடல்

372. பிரமனும் மாலும் பிரானே நான் என்னப்
பிரமன் மால் தங்கள் தம் பேதைமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்து முன் நிற்க
அரன் அடி தேடி அரற்று கின்றாரே.

* *பிரம்மாவும், விஷ்ணுவும் தாங்கள் தான் இறைவன் என்று தங்களுக்குள் வாக்கு வாதப் பட்டனர்;*
* *இவ்வாக்குவாதம் இவ் இருவரினதும் அறியாமைத் தன்மையால் ஏற்பட்டதே;*
* *சிவனார் அனல் உருவாய் அண்டங்கள் எல்லாம் ஊடறுத்துப் பரந்து அவர்கள் முன் வெளிப்பட்டார்;*
* *திருமால் சிவனாரின் அடியினைத் தேடி அரற்றிக் கொண்டே உள்ளார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

373. ஆம் ஏழு உலகு உற நின்ற எம் அண்ணலும்
தாம் ஏழு உலகில் தழல் பிழம்பாய் நிற்கும்
வான் ஏழு உலகு உறும் மாமணி கண்டனை
நானே அறிந்தேன் என் ஆண்மையினாலே.

* ஏழு ஏழு உலகங்களாக, ஏழு ஏழு அண்டங்களாக இந்த அண்ட சராசரங்கள் அனைத்தும் அமைந்துள்ளன. இவற்றில் எல்லாம் இறைவன் ஒன்றாகியே உள்ளான். ஆம். இது என்றும் உள்ள உண்மை;
* இந்த அண்டசராசரங்களில் எல்லாம் இறைவன் அக்னிப் பிழம்பாகப் புலப்படுவார்;
* வெறுவெளி எல்லாம் ஊடறுத்து நிற்கின்ற என் பொன்னான இறைவனை;
* நான் எனது உயர்ந்த சீரிய ஒழுக்கத்தால், ஆண்மையினால் உணர்ந்து அறிந்தேன்;

374. ஊனாய் உயிராய் உணர்வு அங்கியாய் முன்னம்
சேண் ஆய் வான் ஓங்கித் திரு உரு அண்டத்துத்
தாணுவும் ஞாயிறும் தண்மதியும் கடந்து
தான்முழுது அண்டமும் ஆகி நின்றானே.

* இறைவன் ஊனாக உள்ளான். உயிராக உள்ளான். உணர்வாய் உள்ளான். அக்கினியாய் உள்ளான்;
* மலை உச்சியாக உள்ளான். வான் ஆகி ஓங்கி உள்ளான். அண்டங்களில் உள்ளான். திருஉருவங்களில் உள்ளான்.
* நிலைபேறாக உள்ளான். சூரியனையும், குளிர்ச்சி பொருந்திய சந்திரனையும் கடந்து உள்ளான்;
* அண்டங்கள் முழுவதும் ஆகி, அதில் ஆனந்த நடனம் ஆடியவாறே உள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

375. நின்றான் நிலமுழுது அண்டத்து உள்நீளியன்
அன்றே அவன் அடி அஞ்சினர் ஆய்ந்தது
சென்றார் இருவர் திருமுடி மேல் செல
நன்று ஆங்கு கழல் அடி நாட ஒண்ணாதே.

* பூமியில் இருந்து இறைவன் அண்டம் முழுவதும் கடந்து நீண்டே உள்ளான்;
* தக்கனது பலி வேள்வியை சிவனார் அழித்த அன்றே தேவர்களும், பிரம்மாவும், விஷ்ணுவும் அஞ்சினார்கள். அத்துடன் இறைவனது திருமுடியையும் திருவடியையும் ஆராய ஆரம்பித்தனர்;
* பிரம்மாவால் மேலே சென்று திருமுடியைக் காண முடிய வில்லை; விஷ்ணுவால் கீழே சென்று திருவடியைக் காண முடியவில்லை;
* இவர்கள் தேவர்கள் நிலையில் இருந்து ஒருபோதும் ஒன்றும் காணவே மாட்டார்கள்.

376. சேவடி ஏத்தும் செறிவுடை வானவர்
மூவடி தா என்றானும் முனிவரும்
பாவடியாலே பதம் செய் பிரமனும்
தாவடி இட்டுத் தலைப்பு எய்து மாறே.

* அடக்கமே உடைய வானவர்கள், காண முடியாத இறைவனது திருவடியைப் போற்றி வழிபடுவார்கள்;
* மூன்று பாதச் சுவடு உள்ள இடம் தா என்று வேண்டினார் விஷ்ணுதேவர்; விண்ணைக் கேட்டு, வானைக் கேட்டு, இறுதியில் மண்ணையும் கேட்டார்;
* முனிவர் பெருமக்கள் பாக்கள் பாடி இறைவனைப் போற்றி வழிபடுவார்கள்;
* பிரம்ம தேவரால், இறைவனது திருமுடியைத் தேடி அலைந்தும் காண முடியவில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

377. தான் அக் கமலத்து இருந்த சதுமுகன்
தான் அக் கருங்கடல் ஊழித் தலைவனும்
ஊனத்தின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற
தான் அப்பெரும் பொருள் தன்மைய தாமே.

* தாமரை மலர்மேல் பிரம்ம தேவர் வீற்றிருக்கின்றார்;
* கருங்கடலிலே விஷ்ணு தேவர் பள்ளி கொள்ளுகின்றார்;
* ஊழித் தலைவனாகிய சங்கரன் உடம்பின் உள்ளே உயிர்ப்புத் தன்மையாகி உள்ளான்;
* எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருளை - பெரும்பொருளை - உண்மையை உணர்வதே மேன்மை உடையதாகும். சிறப்புடையதாகும்.

378. ஆலிங்கனம் செய்து எழுந்த பரம் சுடர்
மேல் இங்ஙன் வைத்ததோர் மெய்ந் நெறி முன் கண்டு
ஆலிங்கனம் செய்து உலகம் வலம் வரும்
கோலிங் கனம் அஞ்சு அருள் கூடலுமாமே.

* பரம்பெரும் பொருளும், ஆத்ம கோடிகளும் ஒன்றாகும் காலத்து அதி அற்புதமான பரம்பெரும் ஜோதி வெளிப்படும்;
* இந்தப் பரம்பெரும் ஜோதியே இறைவனை அடைவதற்குரிய உண்மையான சிறந்த நெறியாம். இந்த ஜோதி எல்லோர் முன்னிலையிலும் தென்படும்;
* இந்தப் பெரும் ஜோதி சர்வ அணு அண்ட கோடிகளுடனும் ஒன்றாகியே உள்ளது;
* இறைவனது நிழலில் அமர்வதற்குப் பணிவும், பயபக்தியும் அவசியம் ஆகும். அப்பொழுதுதான் நாம் இறையருளுடன் கூடிக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

379. வாள் கொடுத்தானை வழிபட்ட தேவர்கள்
ஆள் கொடுத்து எம்போல் அரனை அறிகிலர்
ஆள் கொடுத்து இன்பம் கொடுத்துக் கோளாகத்
தாள் கொடுத்தான் அடி சாரகி லாரே.

* பிரம்மாவிற்கு வாள் கொடுத்த சிவனைத் தேவர்கள் எல்லோரும் வழிபடுகின்றார்கள்;
* ஆனால் மனிதர்கள் சிவனைத் தெளிந்து உணர்வது போன்று தேவர்களால் உணர முடிவதில்லை;
* தேவர்களுக்கு என்றும் இன்பத்தையே சிவன் கொடுத்துள்ளான் இவர்களுக்குத் துன்பத்தின் சாயலே தெரியாது;
* ஆனாலும், தேவர்கள் இறைவனது திருவடியினைச் சேர்ந்து கொள்ள முடியாது அவதி உறுகின்றார்கள்.

380. ஊழி வலம் செய்து அங்கு ஓரும் ஒருவற்கு
வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்
வீழித் தலைநீர் விதித்தது தாவென
ஊழிக் கதிரோன் ஒளியை வென்றானே.

* ஊழிக் காலங்கள் தோறும், எல்லா இடமும் இறைவனது திருமுடியைத் தேடி அலைந்து திரிந்தார் பிரம்ம தேவர்;
* இறுதியில் சிவன் பிரம்ம தேவரை ஆட்கொண்டு, அவருக்குப் படைத்தல் தொழிலை வழங்கினார்;
* கங்கை நீர் சிவனாரது முடியில் இருந்து பூமியை நோக்கி என்றும் பாய்ந்த வண்ணம் உள்ளது. இந்தக் கங்கை நீரினால் பூமியின் எல்லா வளங்களும் சிறப்படைகின்றன;
* சிவனார் ஊழிக் காலத்தையும், ஒளியையும் கடந்தே உள்ளார்; கங்கை நீர் - அன்பும் அருளும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IX. சர்வ சிருஷ்டி

381. ஆதியோடு அந்தம் இலாத பராபரம்
போதம் அதாகப் புணரும் பராபரை
சோதி அதனில் பரம் தோன்றத் தோன்றுமாம்
தீதில் பரை அதன் பால் திகழ் நாதமே.

* பரம் பொருளுக்கு - உண்மைக்கு ஆதியும் இல்லை அந்தமும் இல்லை;
* சுத்த சக்தி என்றும் இறையவர் அருளுடன் இணைந்தே புலப்படும்;
* பரம்பொருளுடன் இணைந்தே உள்ள சுத்த சக்தியில் இருந்தே பெரும் ஜோதி வெளிப்படும்;
* நாதமும் சுத்த சக்தியில் இருந்தே வெளிப்படுகின்றது.

382. நாதத்தில் விந்துவும் நாத விந்துக்களில்
தீது அற்று அகம் வந்த சிவன் சத்தி என்னவே
பேதித்து ஞானம் கிரியை பிறத்தலால்
வாதித்த இச்சையில் வந்து எழும் விந்துவே.

* நாதம் தனியாக உள்ளது. விந்து தனியாக உள்ளது. நாதமும், விந்துவும் ஒன்றோடொன்று சேர்ந்தும் உள்ளன;
* சிவசக்தி ஐக்கியம் எம்முள்ளேயும் உண்டு. அவை நாத விந்து வகையாகப் புலப்படும்;
* ஞானத்தின் கட்டளையின் நிமித்தம் பிறப்பு நிலை ஏற்படுகின்றது;
* சுத்த சக்தியின் விருப்பத்திற்கு அமைய, சப்த்த சொரூபம் பிறப்பு நிலைக்குக் காரணமாக அமைகின்றது.

நாதம் - அதிர்வு, விந்து - சப்த்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

383. இல்லது சத்தி இடம் தனில் உண்டாகிக்
கல் ஒளி போலக் கலந்து உள் இருந்திடும்
வல்லது ஆக வழிசெய்த அப் பொருள்
சொல்லது சொல்லிடில் தூராதி தூரமே.

* சுத்த சக்தியானது தனது இருப்பிடமாகிய பரம்பொருளில் இருந்து புறப்படுகின்றது;
* எல்லா அணுக்கள் உள்ளும், அண்டங்களிலும் ஒளி சொரூபமாகிக் கலந்தும், மறைந்தும், வெளிப்பட்டும் சுத்த சக்தி விளங்கும்;
* சுத்த சக்தி முழுமைத்துவம் ஆன செயற்பாடு உடையது;
* சுத்த சக்தியை, அதன் நாமதத்தை, அதன் செயற்பாட்டைக் கூறுவது எட்டாத காரியம்தான்.

384. தூரத்தில் சோதி தொடர்ந்து ஒரு சத்தியாய்
ஆர்வத்து நாதம் அணைந்து ஒரு விந்துவாய்
பார்அச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்
சார்வத்துச் சத்தி ஓர் சாத்து மான் ஆமே.

* சுத்த சக்தியைத் தொடர்ந்து தூய ஜோதி புறப்படும்;
* ஜோதியைத் தொடர்ந்து தூய நாதம் வெளிப்படும். பின் விந்து வெளிப்படும்;
* உண்மை – சர்வம் ஆகும் – சிவம் ஆகும். பூமியில் இருந்து சர்வ அண்டங்களும், அணுக்களும், ஜீவ கோடிகளும் ஐந்து அடிப்படை மூலப் பொருட்களை உள்ளாக்கியது;
* மூலப் பொருள்கள் – சடப் பொருள்கள் :- பூமி, நீர், தீ, கற்று, வெளி ஆகும். சுத்த சத்தியானது சர்வ பிரபஞ்சங்களையும் சிறந்த ஒழுங்கில் கூட்டம் கூட்டமாக நெறிப்படுத்தி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

385. மானின் கண் வான் ஆகி வாயு வளர்ந்திடும்
கானின் கண் நீரும் கலந்து கடினமாய்த்
தேனின் கண் ஐந்தும் செறிந்து ஐந்து பூதமாய்ப்
பூவின் கண் நின்று பொருந்தும் புவனமே.

* சுத்த சக்தியின் செயற்பாட்டால், வெளியில் வாயுமண்டலம் உருவாக்கப்படுகின்றது.
* அதனைத் தொடர்ந்து அக்கினி, வாயு மண்டல வெளியுள் விடப்படுகின்றது;
* மேலும், நீர் மூன்றாவதாக, வெளிவாயு அக்கினி வலயத்திற்குள் ஏற்படுத்தப்படுகின்றது;
* இறுதியாகத் திண்மநிலை, பூமி, கோள்கள், அணுக்கள், அண்டங்கள் அண்ட சராசரங்கள் மிக அற்புதமாக உருவமைக்கப்படுகின்றன.

386. புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்
புவனம் படைப்பானும் பூமிசை ஆனாய்
புவனம் படைப்பான் அப்புண்ணியன் தானே.

* பரம்பொருளின் முன்னிலையில் அண்டங்களும், அண்ட சராசரங்களும் சுத்தசக்தியால் ஏற்படுத்தப்படுகின்றது;
* சுத்த சக்திக்கு ஐந்து பேர் புத்திரர்கள் ஆவர். இவர்களே சகலவற்றையும் நிர்வகிப்பார்கள். இவர்கள் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரர், மகேஷ்வரர், சதாசிவர்;
* இவர்கள் அனைவரின் செயற்பாடு, பூமியிலும் உண்டு.
* சர்வ அண்ட அணுக்களையும் கடந்து, சர்வத்தின் உள்ளும், புறமும் பரம்பொருளாகிய உண்மை விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

387. புண்ணியன் நந்தி பொருந்தி உலகு எங்கும்
தண்ணிய மானை வளர்த்திடும் சத்தியும்
கண் இயல்பாகக் கலவி முழுதுமாய்
மண் இயல்பாக மலர்ந்து எழு பூவிலே.

* எனது வழிகாட்டியாகிய நந்தி எம் பெருமான் சர்வ உலகங்களிலும் விளங்குவார்;
* குளிர்ச்சி நிறைந்த சுத்தசக்தியானது, சர்வத்திலும் சர்வ காலங்களிலும் புதுமை புதுமையாகப் புலப்படும்;
* சுத்த சக்தி சர்வத்திலும் கலந்து ஒன்றாகி இருக்கும்;
* பூமியிலேயும் சுத்த சக்தியின் இயல்புகள், தெளிவாக வெளிப்படும். இந்நிகழ்ச்சி பூக்கள் மரங்களில் இருந்து மலரும் நிகழ்வைப் போன்று தானாக இயல்பாக ஏற்படுவது.

388. நீர் அகத்து இன்பம் பிறக்கும் நெருப்பிடை
காயத்தில் சோதி பிறக்கும் அக்காற்றிடை
ஓர்வு உடை நல் உயிர்ப் பாதம் ஒலி சத்தி
நீர்இடை மண்ணின் நிலைப் பிறப்பாமே.

* நீர்த் தன்மையினால் எம் அகத்திலே இன்பம் பிறக்கின்றது;
* அக்கினியின் செயற்பாட்டால், எம் உள்ளே ஜோதி வெளிப்படும்;
* காற்றின் செயற்பாட்டால், தெளிவான ஓர் உயிர்ப்புத் தன்மை – உயிர் வெளிப்படும் – ஒலி வெளிப்படும்; இந்நிகழ்வுகள் அனைத்தும் ஏக காலத்தில் நிகழ்வன;
* சுத்த சக்தி, இவை அனைத்தையும் நீரில் ஆரம்பித்து மண்ணிலே நிறைவாக ஏற்படுத்துடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

389. உண்டு உலகு ஏழும் உமிழ்ந்தான் உடனாகி
அண்டத்து அமரர் தலைவனும் ஆதியும்
கண்டு அச்சது முகக் காரணன் தன்னொடும்
பண்டு இவ் உலகம் படைக்கும் பொருளே.

* இறையவர், சர்வ பிரபஞ்சங்களையும் தன் உள்ளேயே மறைத்துப் பின்னர் வெறு வெளியில் விட்டு விட்டார்;
* இவற்றை மறைப்பதும், வெளிக் கொணர்வதும் சுத்த சக்தியாகும்;
* இறையவர் அண்டங்களுக்கு அதிபதியாகவும், தேவதைகளுக்கு எல்லாம் முதலாக ஆதியாக உள்ளார்;
* பண்டு தொட்டு, தொன்று தொட்டு இப்பிரபஞ்சங்களின் மறைப்பும், வெளிப்பாடும் நிகழ்ந்து கொண்டே உள்ளன.

390. ஓங்கு பெரும் கடல் உள்உறு வானொடும்
பாங்கார் கயிலைப் பராபரன் தானும்
வீங்கும் கமல மலர் மிசை மேல் அயன்
ஆங்கு உயிர் வைக்கும் அது உணர்ந்தேனே.

* இந்தப் பூமியில் மிகப்பெரும் கடல்கள் உண்டு. பூமியைச் சூழ வானம் உண்டு;
* பூமியில் உள்ள கைலாய மலையில் சிவனார் மறைபொருளாகி உள்ளார்;
* இதயத் தாமரையின் கண்ணே, உயிர் தெளிவாக இருப்பதை உணர்ந்து கொண்டேன்;
* இதனைப் பிரம்ம தேவர் தெளிவாகப் படைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

391. காரணன் அன்பில் கலந்து எங்கும் நின்றவன்
நாரணன் நின்ற நடு உடலாய் நிற்கும்
பாரணன் அன்பில் பதம் செய்யும் நான்முகன்
ஆரணமாய் உலகாய் அமர்ந்தானே.

* எல்லாவற்றிற்கும் மூல காரணமான பரம்பொருள், தூய ஆத்ம அன்பில் கலந்து எங்கும் உள்ளது;
* விஷ்ணு தேவர் சகல உயிரினங்களையும் காவல் செய்கின்றார்;
* அன்பை முதலாக வைத்து பிரம்ம தேவர் அனைத்தையும் உருவாக்கும் தொழிலைச் செய்கின்றார்;
* சிவனார் உலகங்கள் எல்லாவற்றிலும் அமர்ந்தே விட்டார்.

392. பயன் எளிதாம் பருமா மணி செய்ய
நயன் எளிது ஆகிய நம்பன் ஒன்று உண்டு
அயன் ஒளியாய் இருந்து அங்கே படைக்கும்
பயன் எளிதாம் வயணம் தெளிந்தேனே.

* இந்த அண்டசராசரங்களை வட்டம் வட்டமாக, மணிமணியாக உருவமைத்து விடுவதில் சுத்த சக்திக்கு பேரின்பம் ஆகும். அதற்கு இது விளையாட்டும், எளிமையான காரியமுமாகும்;
* இவற்றை எல்லாம் தெளிந்த அவதானிப்புடன் ஞானக் கண்ணால் ஒருவர் பார்த்த வண்ணமே உள்ளார். அவர்தான் சிவனார்;
* பிரம்மதேவர், சுத்த சக்தியின் ஒளியாய் இருந்து படைக்கும் தொழிலை மிகவும் திறம்பட ஆற்றுகின்றார்;
* நான் இந்த சர்வ சிருஷ்டியின் பயன்பாட்டை மிகவும் எளிதாகத் தெளிந்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

393. போக்கும் வரவும் புனிதன் அருள் புரிந்து
ஆக்கமும் சிந்தையது ஆகின்ற காலத்து
மேக்கு மிக நின்ற எட்டுத் திசையொடும்
தாக்கும் கலக்கும் தயாபரன் தானே.

* இறப்பும், பிறப்பும் : ஆக்கமும், அழிவும் எமக்குத்தான் உண்டு. இறைவர் புனிதமானவர். அருள் அன்பு நிறைந்தவர்;

* எமது ஆத்மீக இதயம் தெளிவு பெறுகின்ற காலத்திலே, காலம் கடந்த இறையவர், திசைகள் எல்லாம் கடந்து எம்முடனேயே வந்து கலந்து கொள்வார். அளவு கடந்த தயவு நிறைந்தவர்.

394. நின்று உயிராக்கும் நிமலன் என் ஆர்உயிர்
ஒன்று உயிராக்கும் அளவை உடல் உற
முன் துயர் ஆக்கும் உடற்கும் துணையதா
நன்று உயிர்ப்பானே நடுவு நின்றானே.

* இறையவர் என் சிறந்த உயிருடனேயே இருந்து, அதற்கு சதா உயிர்ப்பினை ஊட்டிக் கொண்டே உள்ளார்;

* இவ்வாறு எத்தனையோ எண்ணிறந்த கோடிக் கணக்கான உயிர் அணுக்களுக்கு எல்லாம் உயிர்ப்பினை ஊட்டிக் கொண்டே உள்ளார் இறையவர்;

* துயர் நிறைந்த உடம்பிற்கும் இறையவர் துணையாக உள்ளார்;

* இறையவர் மிகவும் சிறப்பான வகையில் சர்வத்திற்கும் உயிர்ப்பினை ஊட்டியவாறு நடுவு நிலையிலேயே அமர்ந்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

395. ஆகின்ற தன்மையில் அக்கணி கொன்றையன்
வேகின்ற செம்பொனின் மேலணி மேனியன்
போகின்ற சீவன் புகுந்து உடலாய் உளன்
ஆகின்ற தன்மை செய் ஆண்டகை யானே.

* ஆகின்ற வகையில் ஆக வேண்டியவற்றை ஆகவிடுங்கள். அவை எல்லாம் இறைவனின் கணிப்புக்கு உட்பட்டவை;
* அக்கினியில் வேகுகின்ற செந்நிறமான பொன்னினைப் போன்ற மேனியை இறையவர் உடையவர்;
* போகின்ற உயிருக்கு உள்ளே புகுந்து உயிராகவும் உடலாகவும் உள்ளார் இறையவர்;
* எல்லாவற்றையும் ஆளுகின்ற இறையவர், சர்வத்தையும் தானாகவே மலர்ச்சி அடைய வழிவகை செய்துள்ளார்.

396. ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்
பருவங்கள் தோறும் பயன் பலவான
திரு ஒன்றில் செய்கை செகமுற்றுமாமே.

* ஒரு ஆணும் ஒரு பெண்ணும் அன்போடு ஒன்றுகூடி விளையாடிக் கொள்வார்கள்;
* இவ் இருவருடைய விளையாட்டும் எல்லாவிதமான அன்பு நிகழ்ச்சிகளையும் தோற்றுவிக்கும்;
* எமது வாழ்க்கை, ஒவ்வொரு பருவங்கள் தோறும் பல வகையான பயன்பாடுகளைத் தோற்றுவிக்கின்றது;
* இந்தப் பூமி இறைவனின் திருவருள் ஒன்றாலேயே செய்கை பண்ணப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

397. புகுந்து அறிவான் புவனாபதி அண்ணல்
புகுந்து அறிவான் புரி சக்கரத்து அண்ணல்
புகுந்து அறிவான் மலர்மேல் உறை புத்தேள்
புகுந்து அறியும் முடிக்காகி நின்றாரே.

* சகல புவனங்களுக்கும் அதிபதியாக விளங்கும் இறைவர், சர்வ அணுக்களுக்குள்ளும் புகுந்து உள்ளார்;

* திருமாலுக்கு சக்கராயுதத்தை வழங்கி உள்ளார்;

* பிரம்மாவிற்குப் படைக்கும் தொழிலை வழங்கி உள்ளார்;

* ஆனால் பிரம்மாவும், விஷ்ணுவும் தாங்களே இறையவர் என்று ஒருவருக்கு ஒருவர் மோதிக் கொண்டார்கள்.

398. ஆணவச் சத்தியும் ஆம் அதி ஐவரும்
காரிய காரண ஈசர் கடை முறை
பேணிஐந்தொழிலால் விந்துவில் பிறந்து
ஆணவம் நீங்காதவர் என லாகுமே.

* சுத்த சக்தியும் ஆணவம் நிறைந்தவள். ஐவர் ஆகிய பிரம்மா, விஷ்ணு, உருத்திரர், மகேஷ்வரர், சதாசிவர் ஆகியோர்; ஒவ்வொருவருக்கும் இடையில் காரண காரிய தொடர்புகளை, அவர்களின் தொழில் நிமித்தம் ஏற்படுத்தியுள்ளார்கள்;

* பிந்துவின் செயற்பாடே ஐவரின் ஐந்து தொழில்களுக்கும் ஏதுவாக இருக்கின்றது;

* இவர்கள் ஒருவரும் ஆணவத்தில் இருந்து விடுபடாதவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

399. உற்ற முப் பால் ஒன்று மாயாள் உதயமா
மற்றைய மூன்று மாயோதயம் விந்து
பெற்றவன் நாதன் பரையில் பிறத்தலால்
துற்ற பரசிவன் தொல் விளையாட்டிதே.

* சுத்த சக்தியானவள், முக்காலங்களையும் அதன் செயற்பாட்டையும் ஆராய மாட்டாள். சுத்த சக்தி காலம் கடந்தே உள்ளாள். எங்கும் என்றும் உதயமாகிக் கொண்டே உள்ளாள்;
* பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய இவர்களும் காலப் பிரமாணத்திற்கு உட்பட்டவை. இவர்கள் மாயையின் காரியத்தை முன் எடுத்துச் செல்வர்;
* இம்மூவர்க்கும் பிந்துவே செயற்பாட்டு சக்தியை வழங்குகின்றது. இம்மூவரும் சுத்த சக்தியால் உருவாக்கப்பட்டவர்கள்.
* பரம்பொருளாகிய சிவம் - பரம்பொருள் முன்னிலையிலேயே, சக்தியின் ஆதியான விளையாட்டுகள் நடைபெறுகின்றன.

400. ஆகாயம் ஆதி சதாசிவர் ஆதி என்
போகாத சத்தியுள் போந்து உடன் போந்தனர்
மாகாய ஈசன் அரன்மால் பிரமனாம்
ஆகாயம் பூமி காண அளித்தலே.

* ஆகாயமும் தொன்றுதொட்டு இருந்தே வருகின்றது. சதாசிவர் எனும் மறைத்தல் தொழில்புரியும் தேவதையும், தொன்றுதொட்டு இருந்தே செயற்படுகின்றார்;
* பிரம்மா, விஷ்ணு, உருத்திரர், மகேஷ்வரர், சதாசிவர் - இவ் ஐவரும் சுத்த சக்தியின் படைப்புகள் ஆகும்;
* இவர்களின் செயற்பாடுகள் ஐந்தும் பூமியிலும் இடம்பெறுகின்றன. இவற்றைக் கருணையோடு ஆகாயம் முதல் பூமி வரை சுத்த சக்தி ஏற்படுத்தியுள்ளாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

401. அளியார் முக்கோணம் வயிந் தவம் தன்னில்
அளியார் திரிபுரையாம் அவள் தானே
அளியார் சதாசிவமாகி அமைவாள்
அளியார் கருமங்கள் ஐந்து செய்வாளே.

* சுத்த சக்திதான், மும்மூர்த்திகளுக்கூடாகச் செயற்பட்டு, அரிய தவம் உடையோர்களுக்குக் கருணையுடன் காட்சி கொடுப்பாள்;
* சுத்த சக்திதான், கருணையுடன் முப்புரங்களையும் வலம் வருவாள்;
* சுத்த சக்திதான், சதாசிவர் எனும் தேவதையூடாகக் கருணை யுடன் செயற்படுவாள்;
* படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்து தொழில்களையும் சுத்த சக்தியே செய்விக்கின்றாள்.

402. வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி
காரணி காரியம் ஆகக் கலந்தவள்
வாரணி ஆரணி வானவர் மோகினி
பூரணி போதாதி போதமும் ஆமே.

* சுத்த சக்தியானவள் மிகவும் அழகு நிறைந்தவள். எமது மனம், புலன்களால் வர்ணிக்க முடியாதவள்;
* சுத்த சக்தியே காரணமாகவும், காரியமாகவும் எல்லாவற்றிலும் கலந்து விளங்குகின்றாள்;
* அழகு நிறைந்த சுத்த சக்தியானவள் வானவர்களால் மிகவும் போற்றி வணங்கப்படுபவள்;
* சுத்த சக்தி பூரணத்துவம் ஆனவள். போதத்தின் போதம் ஆகிய இறைவனின் மெய்ஞ்ஞான போதமும் சுத்த சக்தியே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

403. நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்று அங்கு இயங்கும் அரன் திருமாலவன்
மன்றது செய்யும் மலர்மிசை மேல் அயன்
என்று இவராக இசைந்து இருந்தானே.

* எல்லா இடங்களிலும், அருளல் தொழில் செய்கின்ற மகேஷ்வரர் காணப்படுகின்றார்;

* அவ்வாறே படைத்தல் தொழில் புரியும் பிரம்மாவும், காத்தல் தொழில் புரியும் விஷ்ணுவும், அழித்தல் தொழில் புரியும் அரனும் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றனர்.

404. ஒருவனுமே உலகு ஏழும் படைத்தான்
ஒருவனுமே உலகு ஏழும் அளித்தான்
ஒருவனுமே உலகு ஏழும் துடைத்தான்
ஒருவனுமே உலகோடு உயிர்தானே.

* இறையவர் ஒருவரின் முன்னிலையில், சுத்த சக்தியின் செயற்பாட்டால்;
சர்வ உலகங்களும் - சர்வ உயிர்களும் - சர்வ அண்டங்களும் - இவை ஏழு ஏழு தொகுதிகளாகவே பரவெளியில் உள்ளன. ஆக்கப்படுகின்றன, காக்கப்படுகின்றன, அழிக்கப்படுகின்றன.

* மீண்டும் இறையவர் முன்னிலையில் சுத்த சக்தி அனைத்தையும் புதுப்பிக்கின்றாள். உயிர்ப்பிக்கின்றாள். இவை மாறி மாறி நிகழும் நிகழ்வுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

405. செந்தாமரை வண்ணன் தீவண்ணன் எம்இறை
மைந்தார் முகில்வண்ணன் மாயம்செய் பாசத்தும்
கொந்தார் குழலியர் கூடிய கூட்டத்தும்
அந்தார் பிறவி அறுத்து நின்றானே.

* இறையவர் செந்தாமரை நிறத்தை உடையவர். நெருப்பு நிறத்தை உடையவர்;
* இறையவர், முகில் கூட்டங்களின் பல்வேறு நிறங்களின் தோற்றப்பாட்டையும் உடையவர்;
* சுத்த சக்தியுடனும் இறையவர் கலந்தே உள்ளார்;
* அந்தமே இல்லாத இறையவர், பிறப்பு இறப்புகளுக்கு உட்பட்ட தேவதைகளை எல்லாம் கடந்தே நிற்கின்றார்.

406. தேடும் திசை எட்டும் சீவன் உடல் உயிர்
கூடும் பிறவிக் குணம் செய்த மாநந்தி
ஊடும் அவர் தமது உள்ளத்து உள்ளே நின்று
நாடும் வழக்கமும் நான் அறிந்தேனே.

* எனது உடல், உயிர், ஆத்மா இம் மூன்றும் இறையவரைத் தேடி எட்டுத் திக்கும் செல்லும்;
* நல்ல சிறந்த குணங்களை எல்லாம் என் பிறவியுடன் கூடும்படி செய்துவிட்டார், சிறந்த வழிகாட்டியாகிய நந்தி எம்பெருமானார்;
* நந்தி எம்பெருமானார் என் உள்ளத்து உள்ளே சதா என்னுடன் ஊடிய வண்ணமே உள்ளார்;
* இறையவரை என்றும், எவ்வாறு நாடிக் கொள்வது என்ற நடைமுறையை, நான் அறிந்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

407. ஓர் ஆயமே உலகு ஏழும் படைப்பதும்
ஓர் ஆயமே உலகு ஏழும் அளிப்பதும்
ஓர் ஆயமே உலகு ஏழும் துடைப்பதும்
ஓர் ஆயமே உலகோடு உயிர்தானே.

* *ஏழு வகையான உலகங்கள், வீடு பேற்று நிலைகள் என்னுள்ளேயே ஆக்கப்படுகின்றன - காக்கப்படுகின்றன - அழிக்கப்படுகின்றன. அதேநேரத்தில் உயிர்ப்பிக்கப்படுகின்றன.*

408. நாதன் ஒருவனும் நல்ல இருவரும்
கோது குலத்தொடும் கூடிக் குழைத்தனர்
ஏது பணி என்று இசையும் இருவருக்கு
ஆதி இவனே அருளு கின்றானே.

* *இறையவரின் கட்டளையின் நிமித்தமே; ஒரு சிறந்த ஆணும், ஒரு சிறந்த பெண்ணும் மணம் செய்வார்கள்;*

* *இவ் இருவரும் தம் இதய ஆனந்தத்துடன் கூடிக் கொள்வார்கள்;*

* *ஏது பணிகள் இன்னும் இருக்கின்றன என, இவ் இருவரும் விழிப்புடன் ஒன்றாகி இசைந்தே உள்ளார்கள்;*

* *ஆதியாம் பரம்பொருள் இவர்களுக்கு அருளிய வண்ணமே உள்ளார்.*

409. அப்பரிசு எண்பத்து நான்கு நூறு ஆயிரம்
மெய்ப் பரிசு எய்தி உயிராய் நிற்கும்
பொய்ப் பரிசு எய்திப் புகலும் மனிதர்கட்கு
இப்பரிசே இருள் மூடி நின்றானே.

* *இவ் இருவருக்கும் கிடைக்கும் - ஆண் பெண் இருவருக்கும் பரிசு 84,100,000 வகைப்படும்;*

* *உண்மையான பரிசு ஒன்றே ஒன்றுதான். அது எமது ஆத்மாவைச் சூழ்ந்து நிற்கும். அதுதான் அருளாகும்;*

* *மற்றையவை எல்லாம் பொய்யான பரிசுகள் ஆகும். இவற்றையே மனிதர்கள் விரும்பித் தேடி நாடுகின்றனர்;*

* *இப்பரிசுகள் எல்லாவற்றையும் இருளே மூடி நிற்கின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

410. ஆதித்தன் சந்திரன் அங்கி எண் பாலர்கள்
போதித்த வான் ஒலி பொங்கிய நீர் புவி
வாதித்த சத்தாதி வாக்கு மனாதிகள்
ஓதுற்ற மாயையின் விந்துவின் உற்றதே.

* சூரியன், சந்திரன், அக்கினிதேவன்; இந்திரன், காலதேவன், நிருதன், வருணன், வாயுதேவன், குபேரன், ஈசன்;
* ஆகியோரின் போதனைகள் வானத்தில் ஒலி வடிவம் பெறுகின்றன. இவையின் ஒலிகள் பூமியிலே நீரிலே பிரதிபலிக்கின்றன;
* வாக்காலும், மனதாலும் செயற்படும் மனிதர்கள், இந்தக் காவல் தேவர்களின் ஒலியைக் கேட்டு, இது இறைவன் ஒலி என்று வாதனை செய்கின்றார்கள்;
* இவை எல்லாம் மாயையின் செயற்பாடுகளே. இந்த சப்தசொரூபம் காலப் பிரமாணத்திற்கு உட்பட்டதாகும்.

## X திதி

411. புகுந்து நின்றான் வெளியாய் இருள் ஆகிப்
புகுந்து நின்றான் புகழ்வாய் இகழ்வாகிப்
புகுந்து நின்றான் உடலாய் உயிராகிப்
புகுந்து நின்றான் புந்தி மன்னி நின்றானே.

* இறையவர் வெளியின் உள்ளும் உள்ளார். இருளின் உள்ளும் உள்ளார்;
* இகழ்ச்சியிலேயும் உள்ளார். புகழ்ச்சியிலேயும் உள்ளார்;
* உடலாகவும் உள்ளார். உயிராகவும் உள்ளார்.
* ஆத்மாவோடு பின்னிப் பிணைந்தும் நிற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

412. தானே திசையொடு தேவருமாய் நிற்கும்
தானே உடல் உயிர் தத்துவமாய் நிற்கும்
தானே கடல்மலை ஆதியுமாய் நிற்கும்
தானே உலகில் தலைவனும் ஆமே.

* இறையவர் தானாகவே திசையாகத், தேவர்களாகத் தென்படுகின்றார்;

* உடலாகவும், உயிராகவும், தத்துவம் ஆகவும் நிற்கின்றார்;

* ஆதியாகவே உள்ளவர் கடலாகவும், மலையாகவும் நிற்கின்றார்;

* உலகங்கள் எல்லாவற்றிற்கும் தலைவராகவும் உள்ளார்.

413. உடலாய் உயிராய் உலகம் அதாகிக்
கடலாய்க் கார்முகில் நீர்பொழி வானாய்
இடையாய் உலப்பிலி எங்கும் தான் ஆகி
அடையார் பெருவழி அண்ணல் நின்றானே.

* உடலாகவும், உயிராகவும், உலகங்களாகவும் இறையவர் காணப்படுகின்றார்;

* கடலாக, கார்முகில் கூட்டங்களாக, நீர்பொழிகின்ற வானமாக உள்ளார்;

* உலகங்கள் எல்லாவற்றிலும் தானாகவும், இடைப்பட்டும், எங்கும் உள்ளார்;

* இறையவரை அடையக் கூடியவர்களுக்கு எல்லாம் பெரு வழியாகவும் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

414. தேடும் திசை எட்டும் சீவன் உடல் உயிர்
கூடு மரபில் குணம் செய்த மாநந்தி
ஊடும் அவர் தமது உள்ளத்து உளே நின்று
நாடும் வழக்கமும் நான் அறிந்தேனே.

* எனது உடல், உயிர், ஆத்மா இம்மூன்றும் இறையவரைத் தேடி எட்டுத் திக்கும் செல்லும்;

* நல்ல சிறந்த குணங்களை எல்லாம் என்மரபில் கூடும் படி செய்து விட்டார், சிறந்த வழிகாட்டியாகிய நந்தியெம் பெருமானார்;

* நந்தி எம்பெருமானார் என் உள்ளத்து உள்ளே சதா என்னுடன் ஊடிய வண்ணமே உள்ளார்;

* இறையவரை என்றும் எவ்வாறு நாடிக் கொள்வது என்ற நடைமுறையை நான் அறிந்து கொண்டேனே.

415. தான் ஒரு காலம் சயம்பு என்று ஏத்தியும்
தான் ஒரு கால் சண்ட மாருதமாய் நிற்கும்
தான் ஒரு காலம் தண் மழையாய் நிற்கும்
தான் ஒரு காலம் தண் மாயனும் ஆமே.

* இறையவர், எல்லாவற்றிலும் என்றும் வெற்றியுடன் விளங்குபவர் என்று நான் வழிபடுவேன்;

* இறையவர் ஒருசமயம் கடும் குளிருடன் கூடிய, கடும் காற்றாக வெளிப்படுவார்;

* ஒருசமயம் குளிர்ச்சி நிறைந்த மழையாகவும் வெளிப்படுவார்;

* ஒருசமயம் குளிர்மையான மறைபொருளாகவே புலப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

416. அன்பும் அறிவும் அடக்கமுமாய் நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியுமாய் நிற்கும்
முன்புறு காலமும் ஊழியுமாய் நிற்கும்
அன்புற ஐந்தில் அமர்ந்து நின்றானே.

* அன்பாகவும், அறிவாகவும், அடக்கமாகவும் உள்ளவர்களிடம் இறையவர் வெளிப்படுவார்;
* இன்பமாகவும், இன்பம் தருகின்ற கல்வியாலும் உணரப்படுவார்;
* முன்புள்ள காலங்கள் தோறும், ஊழிகள் தோறும் வெளிப்பட்டுக் கொண்டே உள்ளார்;
* அன்பாகவே ஐந்து தொழில்பாடுகளிலும் அமர்ந்தே உள்ளார்.

417. உற்று வனைவான் அவனே உலகினைப்
பெற்று வனைவான் அவனே பிறவியைச்
சுற்றிய சாலும் குடமும் சிறு தூதை
மற்றும் அவனே வனைய வல்லானே.

* சர்வ உலகங்களையும் இறையவரே உறுதியாக வனைவார் - ஒழுங்குபடுத்திக் கொள்வார்;
* பிறவிகளின் கோடிக் கணக்கான சுழற்சியையும், இறையவரே நெறிப்படுத்துவார்;
* உடம்பை மிக நுட்பமாக - அற்புதமாக அமைத்துவிட்டார்;
* மற்றைய அனைத்தையும் இறையவரே தெளிவாக வனைந்து கொள்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

418. உள் உயிர்ப்பாய் உடலாகி நின்றான் நந்தி
வெள் உயிர் ஆகும் வெளியாய் நிலம் கொளி
உள் உயிர்க்கும் உணர்வே உடல் உட்பரந்து
அள் உயிர் ஆ வண்ணம் தாங்கி நின்றானே.

* என் வழிகாட்டியாகிய நந்தி எம்பெருமான் என்னுள்ளே "உயிர்ப்பு" நிலையாக உள்ளார். உடலாகவும் உள்ளார்;
* தூய்மையான உயிரானது பூமி தொடக்கம் வெளிவரை சஞ்சாரம் செய்யும்;
* தூய்மையான உயிர், உள் இருந்தவாறே உடல் பூராவும் உணர்வு சொரூபமாகச் செயற்படும்;
* புலப்படும் உயிரையும், ஆத்மாவையும் சிறந்த வகையிலே நெறிப்படுத்துகின்றார் நந்தி எம்பெருமான்.

419. தாங்கு அரும் தன்மையும் தான் அவை பல்உயிர்
வாங்கிய காலத்து மற்றோர் பிறிது இல்லை
ஓங்கி எழுமைக்கும் யோகாந்தம் அவ்வழி
தாங்கி நின்றானும் அத் தாரணி தானே.

* எல்லாவற்றையும் தாங்கக்கூடிய அரிய பெரிய தன்மைகளை உயிர் கொண்டுள்ளது;
* உயிர் உடல் எடுக்கும் பொழுது தனித்தே எடுக்கின்றது. வேறு எதுவும் அதன்கூட இல்லை;
* பிற்பாடு ஏழுவகையான யோகங்களையும் மிகவும் வேகத்துடன் உயிர் அனுபவித்து, அவ்வவ்வழி இறையவரை நாடி நிற்கும்;
* சர்வ உலகங்களையும் இறையவரே தாங்கி நிற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

420. அணுகினும் சேய் அவன் அங்கியில் கூடி
நணுகினும் ஞானக் கொழுந்து ஒன்று நல்கும்
பணிகினும் பார்மிசைப் பல்உயிர் ஆகித்
தணிகினும் மண்உடல் அண்ணல் செய்வானே.

* இறையவரை நாம் நணுகிச் சென்றால், அவர் அக்கினியில் கூடி இருப்பதை நாம் உணர்வோம்.
* இறையவரை நாம் அணுகிச் சென்றால் ஞானத்தை எமக்கு நேரடியாக வழங்குவார்;
* நாம் உண்மையான பணிவை உடையோமானால் இறையவர் பல்கோடி உயிர்களிலும் எமக்குப் புலப்படுவார்;
* நாம் ஓய்வு பெற்றுக் கொள்வதற்காகவே உடல் உயிர் எல்லாவற்றையும் இறையவர் நெறிப்படுத்துகின்றார்.

## XI. சங்காரம்

421. அங்கி செய்து ஈசன் அகலிடம் சுட்டது
அங்கி செய்து ஈசன் அலைகடல் சுட்டது
அங்கி செய்து ஈசன் அசுரரைச் சுட்டது
அங்கி அவ் ஈசற்குக் கை அம்பு தானே.

* அக்கினியினாலே அகலிடத்தை - உடம்பை - உயிரை நீறாக்கிவிட்டார் ஈசர்;
* அக்கினியாலே அலைகள் நிறைந்த கடலை ஆவியாக்கிவிட்டார் ஈசர்;
* அக்கினியாலே யுத்தத் தலைவர்களை நீறாக்கிவிட்டார் ஈசர்;
* அக்கினி ஈசர்க்குக், கையில் திகழுகின்ற ஓர் அம்பு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

422. இலயங்கள் மூன்றினும் ஒன்று கற்பாந்த
நிலை அன்று அழிந்தமை நின்று உணர்ந்தேனால்
உலை தந்த மெல் அரி போலும் உலகம்
மலை தந்த மாநிலம் தான் வெந்ததுவே.

* மூன்று வகையான ஒடுக்கங்கள் உள்ளன.
  1. சடப்பொருள் ஒடுக்கம் - சர்வகோடி உயிர்களினதும் ஒடுக்கம்
  2. செயற்பாட்டு ஒடுக்கம் - சர்வதேவர்கள், தேவதைகள் ஒடுக்கம்
  3. சக்தி ஒடுக்கம் - சுத்த சக்தியின் ஒடுக்கம்
* இம்மூன்றில் ஒன்றான செயற்பாட்டு ஒடுக்கத்தை - அழிவை நான் உணர்ந்து கொண்டேன்.
* சடப்பொருள் ஒடுக்கம் ஏற்படும்போது, மலைகள் நிறைந்த பூமியானது, கொதிக்கும் நீர்ப் பானையில் உள்ள அரிசி போன்று வெந்துபோகும்.

423. பதம் செய்யும் பாரும் பனிவரை எட்டும்
உதம் செய்யும் ஏழ்கடல் ஓதம் முதலாம்
சுதம் செய்யும் அங்கி கொளுவி ஆகாசம்
விதம் செய்யும் நெஞ்சில் வியப்பு இல்லைத்தானே.

* பூமி, உயிர் வாழ்வதற்கு உரிய வகையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. மிக உயர்ந்த பனிமலைகள் பூமியைச் சூழ்ந்துள்ளன.
* ஏழு கடல்களும் பூமியில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சப்த சொரூபமே பூமியில் முதலாக உள்ளது;
* ஆகாசமும் பூமியைச் சூழ உள்ளது. எரிக்கும் அக்கினியும் பூமியில் அமைந்துவிட்டது;
* இவ்வாறு எல்லாவற்றையும் ஒழுங்காக்கி சமப்படுத்தியே பூமி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவற்றை எண்ணி நீங்கள் யாரும் வியப்பு அடைய வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

424. கொண்டல் வரை நின்று இழிந்த குலக்கொடி
அண்டத்து உள் ஊறி இருந்து எண் திரையாகி
ஒன்றின் பதம் செய்த ஓம் என்ற அப்புறக்
குண்டத்தின் மேல் அங்கி கோலிக் கொண்டானே.

* பூமியில் உள்ள மிக நீண்ட உயர்ந்த மலைகளின் உச்சியிலே;
* அண்ட சராசரங்கள் எல்லாம் சஞ்சாரம் செய்கின்ற சுத்தசக்தி, கோடிக் கணக்கான அலைவடிவத்திலே வெளிப்பட்டுப் படிகின்றது;
* "ஓம்", "ஓம்" என்ற சப்த்த சொரூபத்துடன், அனைத்தும் நெறிப்படுத்தப்படுகின்றது;
* எங்கெல்லாம் அக்கினி வளர்க்கப்பட வேண்டுமோ அங்கெல்லாம் அக்கினி குண்டத்தை கோலிக் கொண்டே உள்ளார் இறையவர்.

425. நித்த சங்காரம் உறக்கத்து நீள் மூடம்
வைத்த சங்காரம் சாக்கிர அதீதமாம்
சுத்த சங்காரம் தொழில் அற்ற கேவலம்
உய்த்த சங்காரம் பரன் அருள் உண்மையே.

* நித்தமும் நிகழும் சங்காரச் செயல், நீண்டதோர் உறக்க நிலையைக் குறிக்கும்;
* எல்லா இடத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ள சங்காரச் செயல் விழிப்பு நிலையின் அதி உன்னத நிலையைக் குறிக்கும்;
* சுத்தமான சங்காரச் செயல் எல்லாவிதமான தொழில்களும் அற்ற ஆரம்ப நிலையைக் குறிக்கும்;
* எல்லாம் உய்வு அடையும் பொருட்டு நிகழும் சங்காரச் செயலில் தான், இறையவரின் அருள் உண்மையாகப் புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

426. நித்த சங்காரம் இரண்டு உடல் நீவுதல்
வைத்த சங்காரமும் மாயா சங்காரமாம்
சுத்த சங்காரம் மன அதீதம் தோய்வுறல்
உய்த சங்காரம் சிவன் அருள் உண்மையே.

* இரண்டு உடல்கள் புணர்ச்சியில் ஈடுபடும்போது, நித்தம் நித்தம் சங்காரம் ஏற்படுகின்றது;
* மாயமான சங்காரச் செயல்களே, எல்லா இடத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன;
* மனமும், அதன் அதீத செயற்பாடுகளும், சுத்தமான சங்காரத்திலே முற்றாக அற்றுப்போகும்;
* எல்லாம் உய்யும்பொருட்டு நிகழும் சங்காரமே, இறையவரின் அருள் ஆணைக்கு உட்பட்ட உண்மை நிகழ்வாம்.

427. நித்த சங்காரம் கரு இடர் நீக்கினால்
ஒத்த சங்காரம் உடல் உயிர் நீவுதல்
சுத்த சங்காரம் அதீதத்து உள் தோய்வுறல்
உய்த்த சங்காரம் பரன் அருள் உண்மையே.

* துன்பத்தினுடைய மூலத்தை நீக்குவதற்கே, நித்தம் நித்தம் சங்காரம் நிகழ்கின்றது;
* உடலும் உயிரும் ஒருமித்துப் புரிந்துணர்வுடன் இயங்கச் சங்காரம் நிகழ்கின்றது;
* மிக உன்னதமான நிலையை அடைவதற்கே சங்காரம் சுத்தமாக நிகழ்கின்றது;
* எல்லாம் உய்வு அடையும் பொருட்டு நிகழும் சங்காரமே உண்மையாம். அது இறையவர் அருள் நிறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

428. நித்த சங்காரமும் நீடுஇளைப்பு ஆற்றலின்
வைத்த சங்காரமும் மன்னும் அனாதியில்
சுத்த சங்காரமும் தோயாப் பரன் அருள்
உய்த்த சங்காரமும் நாலாம் உதிக்கிலே.

* நித்தம் நித்தம் நிகழும் சங்காரத்தால் மிக நீண்ட "இளைப்பு ஆற்றல்" நிலை கைகூடும்;
* எல்லா இடத்திலும் ஏற்படுத்தப்பட்ட சங்காரச் செயலானது, அனாதியோடு ஐக்கியப்படுத்தி விடுகின்றது;
* இறைவரின் அருள் மழையில் நனைய வேண்டுமானால், சுத்தமான சங்காரம் ஏற்பட வேண்டும்;
* எல்லாம்உய்வு அடையும் பொருட்டு நிகழும் சங்காரச் செயலால் இறைவரின் அருள் நாலா பக்கத்திலும் உதிக்கும்.

429. பாழே முதலா எழும் பயிர் அப்பயிர்
பாழாய் அடங்கினும் பண்டைப் பாழ் பாழாகா
வாழாச் சங்காரத்தின் மால் அயன் செய்தியாம்
பாழாம் பயிராய் அடங்கும் அப்பாழிலே.

* சங்காரச் செயலின் போது எல்லாமே அழிந்து போகின்றன;
* ஆனால் ஆத்மகோடிகள் அநாதியானவை. அவை அழியாது உறக்க நிலையில் இருக்கும்;
* சங்காரச் செயலின்போது பிரம்மாவும், விஷ்ணுவும் அவர்களின் தொழிற்பாடுகளும் முற்றாக அற்றுப் போகின்றன;
* இவைகள் எல்லாம் அழிந்து முற்றாக நீறாகியே விடும். இவை இறைவரின் ஏற்பாட்டினால் மீண்டும் பயிராகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

430. தீய வைத்து ஆர்மின்கள் சேரும் வினைதனை
மாய வைத்தான் வைத்த வன்பதி ஒன்று உண்டு
காயம் வைத்தான் கலந்து எங்கும் நினைப்பதோர்
ஆயம் வைத்தான் உணர்வு ஆர வைத்தானே.

* அக்கினியை வளர்த்து, நாள்தோறும் சேரும் எல்லா வினைகளும் எரிந்து போகும் வண்ணம் இறைநாமங்களை உச்சாடனம் செய்து வழிபடுங்கள்;

* இறையவர் அக்கினியை எமக்காக ஏற்படுத்தி உள்ளார். அக்கினியில் எல்லாமே மாய்ந்து போகும்;

* உடல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு ஏற்ப நினைவு அலைகளும் எல்லா இடத்திலும் ஏற்பட்டுள்ளன;

* பூமியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எல்லோரும் உணரும் படியாக, இறையவரின் உணர்வு அலைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## XII. திரோபவம்

431. உள்ளத்து ஒருவனை உள்உறு சோதியை
உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உரு அறியாதே.

* இறையவர் எமது உள்ளத்திலேயே ஒருவராக உள்ளார். ஜோதியாகவும் எம் உள்ளே புலப்படுவார்;

* எமது உள்ளத்தைவிட்டு ஒரு கணமேனும் இறையவர் நீங்க மாட்டார்;

* எமது உள்ளத்தோடு இறையவர் இருந்த போதிலும் உள்ளத்தால் இறையவரின் உருவத்தை அறியமுடியாது உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

432. இன்பப் பிறவி படைத்த இறைவனும்
துன்பம் செய் பாசத் துயருள் அடைத்தனன்
என்பில் கொளுவி இசைந்து உறுதோல் தசை
முன்பிற் கொளுவி முடிகுவ தாமே.

* இன்பம் தருகின்ற மானிடப் பிறவி எமக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது;

* பாசமாகிய துன்பம் நிறைந்த நிலையும் பிரபஞ்சத்திலே காணப்படுகின்றது;

* மானிடப் பிறப்பு இருமை வகைக்கு உட்பட்டது. அது எலும்பும், தசையும், தோலும் வைத்து அமைக்கப்பட்டுள்ளது.

433. இறையவன் மாதவன் இன்பம் படைத்த
மறையவன் மூவரும் வந்து உடன் கூடி
இறையவன் செய்த இரும் பொறி யாக்கை
மறையவன் வைத்த பரிசு அறியாதே.

* இறையவர், மாதவம் உடையவர்களுக்கு பேரருள் இன்பத்தினை ஏற்படுத்தி உள்ளார்;

* இறையவர் முன்னிலையில் மும்மூர்த்திகளும் வந்து கூடிக் கொள்வார்கள்;

* இருமை வகைக்கு உட்பட்ட பொறியாகிய இந்த உடம்பு இறையவரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது;

* மறையவரால் வைக்கப்பட்டுள்ள அருளாகிய பெரும் பரிசை இம்மும்மூர்த்திகளும் அறியாதே உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

434. காண்கின்ற கண்ஒளி காதல் செய்து ஈசனை
ஆண் பெண் அலி உருவாய் நின்ற ஆதியை
ஊண்படு நா உடை நெஞ்சம் உணர்ந்திட்டுச்
சேண்படு பொய்கைச் செயல் அணையாரே.

* கண்ணினது ஒளியானது, அன்பு செய்து இறையவரைக் காண்பதற்கே பயன்படுத்தப்பட வேண்டும்;

* ஆண், பெண், அலி என்று எந்தவிதமான உருவ பாகுபாடும் இல்லாது ஆதியாகிய எம் இறைவர் உள்ளார்;

* பஞ்சப் புலன்களில் ஒன்றாகிய நா, என்றும் உணவையே தேடும். நல் உணர்வுகளை நெஞ்சம் ஆனது உள்ளாக்கியது;

* இருந்தும் மனிதர்கள் இதயத் தாமரையின் தடாகத்தில் நிகழும் செயற்பாட்டினை உணராது சேராது உள்ளார்கள்.

435. தெருளும் உலகிற்கும் தேவர்க்கும் இன்பம்
அருளும் வகை செய்யும் ஆதிப் பிரானும்
சுருளும் சுடர் உறு தூவெண் சுடரும்
இருளும் அறநின்று இருட்டு அறையாமே.

* தெளிந்த உணர்வுள்ள உலகத்தவர்களுக்கும், தேவர்களுக்கும் இறையவரின் அருளால் பேரின்பமே என்றும் கிடைக்கும்;

* இறையவரின் தூய வெண் சுடர் ஒருபோதும் அணைந்து போவதில்லை;

* சுத்த சக்தியின் இடமோ இருளே அற்ற இருட்டு அறையாகும் – மிகமிகச் சூக்ஷ்சுமமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

436. அரைக்கின்ற அருள் தரும் அங்கங்கள் ஓசை
உரைக்கின்ற ஆசையும் ஒன்றோடு ஒவ்வாப்
பரக்கும் உருவமும் பாரகம் தானாய்க்
கரக்கின்ற அவை செய்த காண் தகையானே.

* பக்குவப்பட்ட ஆத்மாக்களுக்கே இறையவர் அருள் கிடைக்கும்.

* உடல் இச்சை உள்ளவர்களுக்கு இறையவர் அருள் ஒருபோதும் இல்லை. இவ் இரண்டும் ஒன்றோடொன்று ஒவ்வாதன;

* எல்லாவிதமான உருவ அமைப்புகளும் நிறைந்தே இந்தப் பூமி காணப்படுகின்றது;

* இப்பூமியில் நேரடியாக இல்லாது மறைபொருளாகவே இறையவர் உள்ளார்.

437. ஒளித்து வைத்தேன் உள் உற உணர்ந்து ஈசனை
வெளிப்பட்டு நின்று அருள் செய்திடும் ஈண்டே
களிப்பொடும் காதன்மை என்னும் பெருமை
வெளிப்பட்டு இறைஞ்சினும் வேட்சியும் ஆமே.

* உள்ளார்ந்தமாக, ஆத்மார்த்தமாக இறைவரை உணர்ந்து அவரை நான் ஒளித்து வைத்துள்ளேன்;

* இறையவர் எக்காலமும் வெளிப்பட்டு எனக்கு அருள் புரிந்த வண்ணமே உள்ளார்;

* மிகவும் ஆனந்தத்துடன் நான் இறையவரை அன்பு செய்து கொண்டே உள்ளேன்;

* மிகவும் விருப்பத்துடன் இறையவரை இறைஞ்சி வேண்டி வழிபாடு செய்த வண்ணமே உள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

438. நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்று அங்கு இயங்கி அரன் திருமாலவன்
நன்றது செய்யும் மலர்மிசைமேல் அயன்
என்று இவராகி இசைந்து இருந்தானே.

* இறையவர் தானாகவே உள்ளார். மகேஷ்வரருக்கு ஊடாகச் செயற்படுவர்;

* விஷ்ணுவுக்கும், உருத்திரருக்கு ஊடாகவும் இயங்குவர்;

* பிரம்மாவிற்கு ஊடாக நல்ல செயற்பாடுகள் நிகழும்;

* இறையவர் எல்லாத் தேவதைகளுடன் இசைந்தும் தானாகவும் உள்ளார்.

439. ஒருங்கிய பாசத்துள் உத்தம சித்தன்
இருங்கரை மேல் இருந்து இன்புற நாடி
வரும் கரை ஓரா வகையினில் கங்கை
அரும் கரை பேணில் அழுக்கு அறலாமே.

* மாயையின் செயற்பாடுகள் முற்றும் அற்றுப் போகின்ற நிலையில், உத்தம சித்த புருஷராகிய இறையவர் எம்முள்ளே வெளிப்படுவார்;

* இருட்டின் எல்லையின் மேல் இருந்து கொண்டால், இன்பத்தையே நாடிக் கொள்ளலாம்;

* கங்கை நதி பாயும் பொழுது எதிரே வரவுள்ள எந்தத் தடைகளையும் எதிர்பார்த்துப் பாய்வதில்லை;

* இறையவரின் ஏற்பாட்டை நாம் உணர்ந்து பேணில், எல்லா விதமான அழுக்குகளும் எம்மைவிட்டு நீங்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

440. மண் ஒன்று தான் பல நற் கலம் ஆயிடும்
உள் நின்ற யோனிகட்கு எல்லாம் ஒருவனே
கண் ஒன்று தான் பல காணும் தனைக் காணா
அண்ணலும் இவ் வண்ணம் ஆகி நின்றானே.

* பாத்திரங்கள் பல்வேறு வகையாகும். அவை ஒரே மூலப் பொருளில் இருந்தே ஆக்கப்படும்;

* கோடிக் கணக்கான யோனிகளுக்கு எல்லாம் ஒருவரே இறையவர்;

* ஒரே ஒரு கண்தான் - ஆனால் காட்சிகளோ எண்ணிறந்தவை;

* இவ்வாறே, இறையவரும் சர்வத்திலும் சர்வமாகி உள்ளார்.

## XIII. அனுக்கிரகம்

441. எட்டுத் திசையும் எறிகின்ற காற்றோடு
வட்டத் திரை அனல் மாநிலம்ஆகாயம்
ஒட்டி உயிர் நிலை என்னும் இக் காயப்பை
கட்டி அவிழ்ப்பான் கண்ணுதல் காணுமே.

* காற்று வீசுகின்ற பொழுது எட்டுத் திசைகளுக்கும் வீசும்;

* பூமி வட்ட வடிவானது. அக்கினி வட்ட வடிவானது. ஆகாயம் வட்ட வடிவானது;

* இக்காயப் பையில் உயிர் நன்கு இணைந்தே நிலை கொண்டுள்ளது;

* இவை அனைத்தும் இறையவரின் மேற்பார்வையின் கீழ் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

442. உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பம் கொள்வார்க்கு நமன் இல்லை
விச்சும் விரிசுடர் மூன்றும் உலகுக்குத்
தச்சும் அவனே சமைக்க வல்லானே.

* இறை ஒளியில் இருந்து புறப்படும் நாதத்தை உச்சியால் - சகஸ்ரத்தால் எடுத்துக் கொள்ள வேண்டும்;

* இறைநாத இன்பத்தை அனுபவிப்பவர்களைக் காலதேவன் ஒருபோதும் அணுகவே மாட்டான்;

* மண், வான், விண் ஆகிய மூன்று உலகங்களுக்கும் இறைஜோதியே மேலோங்கி நிற்கும்;

* இறையவரே எல்லாவற்றையும் ஏற்படுத்த வல்லார்.

443. குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணை
குசவன் மனத்து உற்றது எல்லாம் வனைவன்
குசவனைப் போல் எங்கள் கோன் நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அது இது ஆமே.

* பானை வனைகின்ற குயவன் அக்கினியில் மண்ணை இட்டு சூடாக்குவான்;

* தனது மனம் போகின்றவாறு பானைகளுக்கு வடிவம் கொடுப்பான்;

* ஞான வழிகாட்டியாகிய நந்தி எம்பெருமானார், பரிபூரண மௌன நிலையில் இருந்து;

* ஆத்ம கோடிகளை இறையவரிடம் நெறிப்படுத்தி விடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

444. விடை உடையான் விகிர்தன் மிகு பூதப்
படை உடையான் பரிச உலகு ஆக்கும்
கொடை உடையான் குணம் எண்குணம் ஆகும்
சடை உடையான் சிந்தை சார்ந்து நின்றானே.

* இறையவர் எருதை - நந்தியை உடையவர்;
* பஞ்ச பூதங்களையும் படையாக உடையவர்;
* உலகுக்கு அருளையே பரிசாக வழங்கும் கொடை வள்ளல்;
* சுத்த சக்தியைச் சடையாக உடையவர். இறை சிந்தை உள்ளவர்களோடு, இறையவர் சார்ந்து நிற்பார்.

எண்குணம்: - தன்வயத்தனாதல்,தூய உடம்பினனாதல், வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை.

445. உகந்து நின்றே படைத்தான் உலகு ஏழும்
உகந்து நின்றே படைத்தான் பல ஊழி
உகந்து நின்றே படைத்தான் ஐந்து பூதம்
உகந்து நின்றே உயிர் ஊன் படைத்தானே.

* மிகவும் விருப்பத்துடனேயே; இறையவர் ஏழு உலகங்களை, பலவிதமான அழிவுகளை, ஐந்து பூதங்களை, உயிர்களை, உடம்பை ஏற்படுத்தியுள்ளார்.

446. படைத்து உடையான் படு உலகங்கள் ஏழும்
படைத்து உடையான் பல தேவரை முன்னே
படைத்து உடையான் பல சீவரை முன்னே
படைத்து உடையான் பரம் ஆகி நின்றனே.

* இறையவர் மிகவும் பழமை வாய்ந்த ஏழு உலகங்கள், பல கோடிக் கணக்கான தேவர்கள், பல கோடி ஆத்மாக்கள் ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளார்.

* இறையவர் எல்லாவற்றிற்கும் பரம் பொருளாகவும் விளங்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

447. ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதம்
ஆதி படைத்தனன் ஆசில் பல் ஊழி
ஆதி படைத்தனன் எண்ணிலி தேவரை
ஆதி படைத்தவை தாங்கி நின்றானே.

* எல்லாவற்றிற்கும் ஆதியை ஏற்படுத்தியவர் இறையவர் ஆவர்;

* ஐம்பெரும் பூதங்களை, குற்றமிலாத பல அழிவுகளை, எண்ண முடியாத தேவர்களை இறையவர் ஏற்படுத்தியுள்ளார்;

* அனைத்தையும் இறையவர் தாங்கியுள்ளார்.

448. அகன்றான் அகல் இடம் ஏழும் ஒன்றாகி
இவன்தான் என நின்ற எளியனும் அல்லன்
சிவன்தான் பலபல சீவனும் ஆகி
நவின்றான் உலகு உறு நம்பனும் ஆமே.

* அக உலகங்களாகிய ஏழு உலகங்களில் இருந்தும் விலகித் தனித்தே இறையவர் உள்ளார்;

* மிகவும் எளிமையாக இறையவர் காட்சிக்குப் புலப்படுபவர் அல்லார்;

* சிவன் எனும் தேவதைதான் சர்வ ஆத்ம கோடிகளுக்கும் உயிர்ப்பினை வழங்குகின்றது;

* உலகங்கள் எல்லாவற்றிற்கும் தலைவனாகிய இறையவர், அனைத்தையும் கண்காணித்துக் கொள்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

449. உள் நின்ற சோதி உற நின்ற ஓர் உடல்
விண் நின்று அமரர் விரும்பும் விழுப்பொருள்
மண் நின்ற வானோர் புகழ் திருமேனியன்
கண் நின்ற மாமணி மாபோதம் ஆமே.

* எமது உடலின் உள்ளே இறையவர் ஜோதி, மிகவும் ஆனந்தமாக வெளிப்பட்டு நிற்கும்;

* விண்ணில் உள்ள அமரர்கள், விழுப்பொருளாகிய இறை ஜோதியை விரும்புவார்கள்;

* மண்ணில் உள்ள மனிதர்கள் இறையவர் புகழ் பாடுவார்கள்.

* எமது அகக் கண்ணில் இறையவர் சிறந்த அருட்போதமாக உள்ளார்.

450. ஆரும் அறியாத அண்டத் திருஉருப்
பார் முதலாகப் பயிலும் கடத்திலே
நீரினில் பால் போல் நிற்கின்ற நேர்மையைச்
சோராமல் காணும் சுகம் அறிந்தேனே.

* அண்டங்கள் எல்லாம் கடந்திருக்கும் இறையவரின் திரு உருவத்தை யாரும் அறிய முடியாது;

* பூமியில்இருந்து இறையவரின் திருக்கூத்து எங்கும் வியாபித்து உள்ளது;

* நீரும் பாலும் ஒரு பாத்திரத்தில் கலந்து இருந்தாலும் பால் வேறு நீர் வேறு ஆகும்; அவ்வாறே ஆத்மா இறையவருடன் கலந்து இருந்தாலும் ஆத்மா வேறு இறையவர் வேறு ஆகும்;

* இந்த அற்புதமான உண்மையை; ஒன்றாகி வேறாகி, வேறாகி ஒன்றாகி இருக்கும் சுகத்தை எந்தவிதமான சோர்வும் இல்லாமல் காணும் நான் அறிந்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## XIV. கர்ப்பக்கிரியை

451. ஆக்குகின்றான் முன் பிரிந்த இருபத்து ஐஞ்சு
ஆக்குகின்றான் அவன் ஆதி எம் ஆர் உயிர்
ஆக்குகின்றான் கர்ப்பக் கோளகை உள் இருந்து
ஆக்குகின்றான் அவன் ஆவது அறிந்தே.

* முன்பு கலைந்து போன ஆத்ம தத்துவங்கள் 25 ஐயும் ஒன்றாக்கி உடலை உயிரை இறையவர் நெறிப்படுத்தி ஆக்குகின்றார்;

* கர்ப்பத்தின் உள் இருந்தே அனைத்தையும் நுட்பமாக நெறிப்படுத்துகின்றார்;

* ஆக வேண்டிய அனைத்தையும் ஆக்கிய வண்ணமே உள்ளார்.

452. அறிகின்ற மூலத்தின் மேல் அங்கி அப்புச்
செறிகின்ற ஞானத்துச் செந்தாள் கொளுவிப்
பொறை நின்ற இன் உயிர் போந்து உறநாடிப்
பறிகின்ற பத்து எனும் பாரம் செய்தானே.

* நாம் அறிய வேண்டிய மூலத்தின் மேல் அக்கினியும் உண்டு. நீரும் உண்டு;

* அன்பு நிறைந்த, ஞானமே உருவான, நாம் பற்ற வேண்டிய செந்நிறமான இறையவர் தாள் உண்டு;

* பொறுமை மிகுந்த சிறந்த உயிர், இவற்றை எல்லாம் நாடிக் கொள்ளும்;

* எம்மை விட்டு விலகக் கூடிய அஞ்ஞான இருளே உலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

453. இன்புறு காலத்து இருவர் முன்பு ஊறிய
துன்புறு பாசத் துயர் மனைவான் உளன்
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத்து அமைத்து ஒழிந்தானே.

* ஆணும், பெண்ணும் மகிழ்ந்து இன்பம் அனுபவிக்கும் காலத்திலே;

* துன்பம் ஆனது பாசம் ஊடாக வளர்ந்து கொள்ளும்;

* பண்புடன் தெளிந்த வாழ்க்கையைப் பூமியில் நடாத்தும் போது, இறையவர் அன்பை ஏற்படுத்தி மறைபொருளாகவே அமர்ந்து கொள்வார்.

454. கருவை ஒழிந்தவர் கண்ட நால் மூ ஏழ்
புருடன் உடலில் பொருந்து மற்று ஓரார்
திருவின் கருக்குழி தேடிப் புகுந்த
துருவம் இரண்டாக ஓடி விழுந்ததே.

* புணர்ச்சி செய்யாதவர், கருநிலையை ஏற்படுத்தாதவர், 84 இற்கு மேற்பட்ட தத்துவங்களைக் காணபர்;

* ஆத்மா குடியிருக்கும் உடலில், வேறு ஒரு உடல் வந்து பொருந்தும் தன்மையை ஓரமாட்டார்கள்;

* இறையவர் அருளாலேயே குழந்தை கரு உருப் பெறுகின்றது;

* புணர்ச்சியில் இரு எதிர்ப் புலங்கள் - ஆண் பெண் தாதுக்கள் சந்தித்து சங்கமிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

455. விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதல் ஐந்தும் ஈர் ஐந்தொடு ஏறிப்
பொழிந்த புனல் பூதம் போற்றும் கரணம்
ஒழிந்த நுதல் உச்சி உள்ளே ஒளித்ததே.

* புணர்ச்சிக் காலத்தில், தாதுவை வெளியேற்றிய நிலையில் ஆண்குறி ஓய்வெடுக்கும். ஆண் தாதுவைப் பெற்ற நிலையில் பெண் குறி விரிந்து விழிப்பாய் இருக்கும்;

* ஐம்பூதங்களாலும் ஆக்கப்பட்டது ஆண் தாது. புணர்ச்சியின் பின் தேடி வைத்த முதலாகிய தாது இழக்கப்பட்டு விடும். மறுபடி இருவரும் சந்திக்கும் போது ஐம்பூதங்களுக்கூடாக ஆண் பெண் தாதுக்கள் உருவாகிக் கொள்ளும்;

* காமாக்கினியினால் ஐந்து பூதங்களும் சரியான விகிதாசாரப்படி உள்ளே ஓர் அமைப்பைப் பெறுகின்றது;

* தாதுக்கள் ஐக்கியமாகும் வேளை நெற்றி செயலற்றுப் போகின்றது. உச்சியும் மயக்க நிலையில் இருந்து விடும்.

456. பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவும்
தாவி உலகில் தரிப்பித்த வாறு போல்
மேவிய சீவனில் மெல்ல நீள் வாயுவும்
கூவி அவிழும் குறிக் கொண்ட போதே.

* வாசம் நிறைந்த மலர்களில் இருந்து நறுமணத்தை, காற்றானது வீசுமிடம் எல்லாம் எடுத்துச் செல்லும்;

* தாதுக்கள் இணையும் காலத்திலே, கரு உருவாகும் வேளையில், ஆத்மாவைச் சூழ, வாயுவானது உயிர்ப்பு சக்தியாகிச் சூழந்து கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

457. போகின்ற எட்டுப் புகுகின்ற பத்து எட்டு
முழ்கின்ற முத்தனும் ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டு உடன் நாலு புரவியும்
பாகன் விடான் எனில் பன்றியும் ஆமே.

* ஆண் தாது சுக்கிலத்தில் இருந்து வெளிப்படும்போது அகர நிலையாகிப், பெண் தாதுவினுள் புகும்போது அகரஉகர நிலையாகிச் சங்கமிக்கின்றது;
* பெண் இடத்தில் கரு ஏற்பட்டு, அதில் ஒன்பது வாயில்கள் அமைகின்றன;
* எட்டு நாகங்களாகிய ஐந்து புலன்கள், மும்மலங்கள் ஏற்படுகின்றன. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கு புரவிகளும் கருவிலேயே ஏற்படுகின்றன;
* இறையவரின் கட்டளை தெளிவாகக் கருவிலேயே பதியப் படாவிட்டால் உதிக்கும் குழந்தை வெறும் உடல் இச்சைக்காக உழலும் பன்றிக்கு ஒவ்வானதாகிவிடும்.

458. ஏற எதிர்க்கில் இறையவன் தானாகும்
மாற எதிர்க்கில் அரி அவன் தானாகும்
நேர் ஒக்க வைக்கில் நிகர் போதத்தன் ஆகும்
பேர் ஒத்த மைந்தனும் பேர் அரசு ஆளுமே.

* ஆண் பெண் இருவரும் புணர்ச்சியில் ஈடுபடும்போது, இருவரது தாதுக்களும் சங்கமிக்கும்போது, இருவரது பிராணசக்தியும் மேல்நோக்கிச் செல்லும்போது ஒரேநேரத்தில் ஒன்றோடொன்று எதிர்கொள்ளில்; தோன்றும் குழந்தை இறை அம்சம் நிறைந்தே இருக்கும்;
* பிராண சக்தி கீழ்நோக்கிச் செல்கையில், ஒன்றோடு ஒன்று எதிர்ப்படில் தோன்றும் குழந்தை விஷ்ணு அம்சம் பொருந்திய வராக இருக்கும்;
* இருவரது பிராண சக்தியும் ஐக்கியமாகில், தோன்றும் குழந்தை எல்லாவித சுகபோகங்களையும் அனுபவிக்கும். நாட்டை ஆளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

459. ஏயம் கலந்த இருவர் தம் சாயத்துப்
பாயும் கருவும் உருவாம் எனப் பல
காயம் கலந்தது காணப் பதிந்த பின்
மாயம் கலந்த மனோலயம் ஆனதே.

* ஆண் பெண் இருவர் மனம் ஒருமித்துப் புணர்ந்து கொள்ளும் போது, இரு மூல தாதுக்களும் சங்கமிக்கின்றன;

* அப்போது பெண்ணிடத்தில் கரு உருவாகின்றது;

* பெண்ணினது உடலில் கருப் பதிந்து விடுகின்றது;

* புணர்ச்சியின் போது - தாதுக்கள் பரிமாறுகின்றபோது இருவருக்கும் மனோலயம் ஏற்படுகின்றது. ஆனால் இந்த மனோலயம் நிரந்தரமானது அல்ல. மாயமானது.

460. கர்ப்பத்துக்கு எல்லாம் மாயாள் கிளை கூட்ட
நிற்கும் துரியமும் பேதித்து நினைவு எழ
வற்புறு காமியம் எட்டாதல் மாயே அம்
சொற்புறு தூய்மறை வாக்கினாம் சொல்லே.

* உருவாகும் கருவுக்கு சக்தியானவள் வேண்டியவற்றை எல்லாம் வழங்குகின்றாள்;

* விழிப்பு நிலை, எண்ண நிலை கருவிலேயே ஏற்படுகின்றது;

* "அகர நிலை" உறுதியாக உருவாகின்றது;

* தூய்மறையாகிய சொல் - "ஓம்" எனும் வாக்கு கருவிலே பதிவாகின்றது - இவை காமிக ஆகமத்தில் கூறப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

461. என்பால் மிடைந்து நரம்பு வரிக்கட்டிச்
செம்பால் இறைச்சி திருந்த மனை செய்து
இன்பால் உயிர்நிலை செய்த இறை ஓங்கும்
நன்பால் ஒருவனை நாடு கின்றேனே.

* கருவைச் சூழ என்புகள் ஏற்படுகின்றன. நரம்புகள் சுற்றப்படுகின்றன;

* தசைகளால் இடைவெளி எல்லாம் நிரப்பப்பட்டு உடலாகிய மனை செய்யப்படுகின்றது;

* இன்ப நிலையில் உள்ள – உயிர் நிலையை – ஏற்படுத்தியவர் ஓங்கும் புகழ் கொண்ட இறையவர் ஆவர்;

* நல்ல வகையால் நான் இறையவரை நாடுகின்றேன்.

462. பதம் செய்யும் பால் வண்ணன் மேனிப் பகலோன்
இதம் செய்யும் ஒத்து உடல் எங்கும் புகுந்து
குதம் செய்யும் அங்கியின் கோபம் தணிப்பான்
விதம் செய்யு மாறே விதித்து ஒழிந்தானே.

* ஒளியே வடிவான இறையவர் எல்லாவற்றையும் பதப்படுத்தி விடுகின்றார்;

* உடலின் எல்லா இடங்களிலும் மிகவும் பதுமையாகவே இறையவர் புகுந்து உள்ளார்;

* கோபத்தினால் ஏற்படும், அழிவு செய்யும் அக்கினியைத் தணித்து விடுவார் இறையவர்;

* இவ்வாறு எல்லாவற்றையும் வகை வகையாக ஏற்படுத்தி விட்டு, இறையவர் மறைபொருளாகவே உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

463. ஒழிபல செய்யும் வினை உற்ற நாளே
வழிபல நீர் ஆடி வைத்து எழு வாங்கிப்
பழிபல செய்கின்ற பாசக் கருவைச்
சுழிபல வாங்கிச் சுடாமல் வைத்தானே.

* எப்பொழுதெல்லாம் வினை ஏற்படுகின்றதோ, அப்பொழுதே பலவிதமான அழிவுகளும் ஏற்பட ஆரம்பிக்கின்றன;

* பலவகையான செயற்பாடுகள் - பல வழிகளாலும் - நீர்த்தன்மை ஊடாக ஏற்படுத்தப்பட்டுள்ளன;

* பாசம் நிறைந்த கரு - வளரும் சிசு ஆனது குற்றங்கள் நிறைந்தது;

* ஆனால் இறையவர் அதன் நிலையைப் பலவித கவசங்களால் சிதைந்து போகாதவாறு கண்காணிக்கின்றார்.

464. சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக் கிரமத்தே தோன்றும் அவ் யோனியும்
புக்கிடும் எண்விரல் புறப்பட்டு நால் விரல்
அக்கரம் எட்டும் எண் சாண் அதுவாமே.

* "சுக்கிலநாடி" எனும் மூலக் கலத்தில் இருந்து ஆண் தாதுவாகிய "வெள்ளி" உருவாகின்றது;

* இவ்வாறே பெண் மூலக் கலத்தில் இருந்து பெண் தாதுவாகிய "பொன்" உருவாகின்றது;

* எட்டு அங்குல தூரத்தைக் கடந்த ஆண் தாது, நாலு அங்குல தூரத்திற்குப் பயணம் செய்து அங்கே உள்ள பெண் தாதுவுடன் ஐக்கியமாகிக் கொள்ளும்;

* இறுதியில் எண் சாண் உடம்பு ஒன்று உருவாகிக் கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

465. போகத்து உள் ஆங்கே புகுந்த புனிதனும்
கோசத்து உள் ஆகங் கொணர்ந்த கொடைத் தொழில்
ஏகத்து உள் ஆங்கே இரண்டு எட்டு மூன்று ஐந்து
மோகத்து உள் ஆங்கு ஒரு முட்டை செய்தானே.

* *ஆண் பெண் இருவரினது போகச் செயற்பாட்டின் உள்ளே இறையவர் புகுந்து கொண்டார்;*

* *எல்லாவற்றையும் ஆக்கவல்ல, வழங்கவல்ல ஐந்து கோசங்களும் கருவைச் சூழ்ந்துள்ளன;*

* *ஏகமாகிய மூலத்துள் சக்தி, சிவம், முப்புரம், ஐந்து தொழில்கள் ஆகியன கருவிலேயே ஏற்படுகின்றன;*

* *இருவரது மோகத்தின் பலனால், அற்புதமாக ஒரு கருவை ஏற்படுத்தி விடுகின்றார் இறையவர்.*

466. பிண்டத்தில் உள் உறு பேதைப் புலன் ஐந்தும்
பிண்டத்தின் ஊடே பிறந்து மரித்தது
அண்டத்தின் உள் உறு சீவனும் அவ்வகை
அண்டத்து நாதத்து அமர்ந்திடும் தானே.

* *பிண்ட நிலையிலேயே - கரு நிலையிலேயே பேதமை நிறைந்த ஐந்து புலன்களும் உருவாகிவிடுகின்றன;*

* *இறுதியில் உடம்பு இல்லாது போகும் பொழுது ஐந்து புலன்களும் அழிந்து போகின்றன;*

* *அண்டங்கள் எல்லாம் ஆத்மாவானது சஞ்சாரம் செய்கின்றது;*

* *இறுதியில் ஆத்மாவானது அண்டத்தின் நாத நிலையோடு அமர்ந்து விடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

467. இலைப் பொறி ஏற்றி எனது உடல் ஈசன்
துலைப் பொறியில் கரு ஐந்து உடன் ஆட்டி
நிலைப் பொறி முப்பது நீர்மை கொளுவி
உலைப் பொறி ஒன்பதில் ஒன்று செய்தானே.

* இந்த உடல் இருமைவகைச் செயற்பாடுகள் உடைய பொறியிலே சிக்கி இயங்குகின்றது;

* கருவிலே ஐந்து புலன்களும் அமைந்து விடுகின்றன. 30 தத்துவங்களும் ஏற்படுகின்றன;

* ஒன்பது வாயில்களும் உருவாகின்றன. இவை எல்லாம் ஒரே கருவிலே ஒன்றாகிச் செயற்படும் வண்ணம் உருவாக்கப் படுகின்றன.

468. இன்புற்று இருவர் இசை வித்து வைத்த மண்
துன்பக் கலசம் மனை வான் ஒருவனே
ஒன்பது நீர்ச் சால் கலசம் பதின் எட்டு
வெந்தது சூளை விளைந்தது தானே.

* இருவரினது ஒன்றிணைந்த இன்பத்தினால் குழந்தை உருவாகின்றது;

* துன்பம் நிறைந்த உடலே வனையப்பட்டுள்ளது.

* உடலிலே ஒன்பது நீர் பாயும் பெரும் துவாரங்கள் உள்ளன. பதினெட்டுக் கலசங்கள் - பைகள் உண்டு;

* காமத்தின் வேட்கையால் புதியதோர் உடல் உருவாகிவிடும்.

பதினெட்டுக் கலசங்கள் - பைகள் ஆவன

கண்ணீர்ப்பை 02, உமிழ்நீர்ப்பை 02, சுக்கிலப்பை 02, விதைப்பை 02, காதுப்பை 02, நாசிப்பை 01, அமுதப்பை 01, இதயப்பை 01, நுரையீரல் பை 02, பித்தப்பை 01, இரைப்பை 01, சகஸ்ரப்பை 01.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

469. அறியீர் உடம்பினில் ஆகிய வாறும்
பிறியீர் அதனில் பெருகும் குணங்கள்
செறியீர் அவற்றின் உள் சித்திகள் இட்ட
தறிய ஈர் ஐந்தின் உள் ஆனது பிண்டமே

* உடம்பு ஆகின்ற தன்மையை அறியாது உள்ளீர்களே. அதிலிருந்து பெருகி உருவாகும், தவிர்க்கப்பட வேண்டிய குணங்களில் இருந்து விலகாது உள்ளீர்களே;

* உடம்பின் உள்ளே ஏற்படுத்தப்பட்டுள்ள தெய்வீகப் பெறு பேறுகளை உணராது உள்ளீர்களே;

* ஐந்து புலன்களாலும், அதன் செயற்பாடுகளாலும் கட்டப்பட்டுள்ளதே இந்த உடல் ஆகும்;

470. உடல் வைத்த வாறும் உயிர் வைத்த வாறும்
மடை வைத்த ஒன்பது வாய்தலும் வைத்துத்
திடம் வைத்த தாமரைச் சென்னியுள் அங்கிக்
கடை வைத்த ஈசனைக் கை கலந்தேனே.

* உடலுக்கு ஏற்ப உயிரும், உயிருக்கு ஏற்ப உடலும் அமைக்கப்பட்டுள்ளது;

* உலகத்தை அவதானிக்க ஒன்பது வாயில்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன;

* சிரசில் "சகஸ்ரம்" எனும் ஆயிரம் இதழ்த் தாமரையும், அக்கினியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன;

* ஞானக் கடைவைத்துள்ள இறையவருடன் நான் இணைந்து கொண்டேன்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

471. கேட்டுநின்றேன் எங்கும் கேடில் பெரும் சுடர்
முட்டுகின்றான் முதல் யோனி மயன் அவன்
கூட்டுகின்றான் குழம்பின் கருவை உரு
நீட்டி நின்று ஆகத்து நேர் பட்ட வாறே

* எந்தவித குற்றமும் இல்லாத இறைபெரும் ஜோதியை எல்லா இடத்தில் இருந்தும் சப்த்த சொரூபத்தின் ஊடாக நான் கேட்கின்றேன்;
* இறையவரே பெண் தாதுவாகவும் விளங்குகின்றார்;
* ஆண் பெண் தாதுக்களை ஒன்று கூட்டுபவரும், கருவை உருவாக்குபவரும் இறையவரே;
* எல்லாவற்றையும் சரியாக்கித், தெளிவாக்கியே ஏற்படுத்துகின்றார் இறையவர்;

472. பூவுடன் மொட்டுப் பொருந்த அலர்ந்த பின்
காவுடைத் தீபம் கலந்து பிறந்திடும்
நீரிடை நின்ற குமிழி நிழல் அதாய்ப்
பார் உடல் எங்கும் பரந்து எட்டும் பற்றுமே

* ஆண் பெண் தாதுக்கள் மிகவும் ஐக்கியமாகவே இணைந்து கொள்ளும். தாதுக்களைக் காவிச் செல்லும் உறுப்புக்கள் மலர்ச்சி அடைந்திருக்கும்;
* உருவாகும் கருவில் ஆத்மா, ஜோதியாகக் கலந்து பின் குழந்தையாக உருவெடுக்கும்;
* நீரினில் தேன்றும் நீர்க்குமிழியும், அதன் நிழலும் நிலையற்றவை. சடுதியாக மறைந்து விடும்;
* பூமி பூராவும் கோடிக் கணக்கான கரு நிலைகள்- குழந்தைகள் உருவாகின்றன. சிவ நிலையாகவே எல்லாம் காட்சி அளிக்கின்றன. ஆனால் மனிதப் பருவங்கள் நீர்க்குமிழிபோன்று சடுதியாக மறைந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

473. எட்டின் உள் ஐந்தாகும் இந்திரியங்களும்
கட்டிய மூன்று கரணமுமாய் விடும்
ஒட்டிய பாச உணர்வு என்னும் காயப்பை
கட்டி அவிழ்த்திடும் கண்ணுதல் காணுமே

* அகர நிலையை உள்ளாக்கிய கருவில் ஐந்து புலன்களும் ஏற்படுகின்றன;

* பதி பசு பாச நிலைப்பாடுகளும் ஏற்படுகின்றன;

* பாசம் - இதன் உணர்வே மேலோங்கிக் காயம் ஆகிய பையை உருவாக்கிவிடும்;

* பாசம் - இதுதான் அனைத்தையும் ஆட்சி செய்து கொண்டு இருக்கின்றது. பாசம்தான் பரவெளியில் காணப்படும் சுத்த சக்தியாகும்.

474. கண்ணுதல் நாமம் கலந்து உடம்பாய் இடைப்
பண்ணுதல் செய்து பசு, பாசம் நீங்கிட
எண்ணிய வேதம் இசைந்த பரப்பினை
மண் முதலாக வகுத்து வைத்தானே

* சுத்த சக்தியின் திருநாமமே கருவோடு கலந்து உடம்பை உருவாக்குகின்றது;

* இசையினால் இறைவரை வழிபடும்போது ஆத்மாவை விட்டு சுத்த சக்தி முற்றாக விலகிவிடும்;

* சப்த்த சொரூபமே இசைவடிவாகி எண்ணியல் தாளப் பிரமாணத்திற்குள் உட்பட்டு, பூமி தொடக்கம் சுர்வ பிரபஞ்சங்கள் வரை பரந்துள்ளது. இதனை இறையவர் வகுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

475. அருள் அல்லது இல்லை அரன் அவன் அன்றி
அருள் இல்லை ஆதலின் அவ் ஓர் உயிரைத்
தருகின்ற போது இருகைத் தாயர் தம்பால்
வருகின்ற நண்பு வகுத்திடும் தானே.

* *இறையவர் இல்லாது தனித்து அருள் ஆனது செயற்படவே மாட்டாது;*

* *கருவிலே உருவாகும் உயிர்க்கு இரு பக்கங்கள் அமைந்து விடுகின்றன. ஒன்று ஆத்மாவாகிய அருள் நிறைந்த பகுதி. மற்றையது உடலாகிய சக்தி நிறைந்த பகுதி;*

* *உடலை, உள்ளத்தை நல்ல வகையில் பயன் படுத்தினால், ஆத்மாவானது இறையவருடன் அருளால் ஆத்மார்த்த நட்பைத் - தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும்.*

476. வகுத்த பிறவியை மாது நல்லாளும்
தொகுத்து இருள் நீக்கிய சோதி அவனும்
பகுத்து உணர்வு ஆகிய பல் உயிர் எல்லாம்
வகுத்து உள்ளும் நின்றதோர் மாண்பதுவாமே.

* *சுத்த சக்தியானவள் பிறவியை வகுத்து விடுகின்றாள்;*

* *ஜோதிமயமான இறையவர் எல்லாவகையான இருளையும் நீக்கிவிடுகின்றார்;*

* *எல்லா உயிர்களுக்கும் உணர்வுநிலை ஏற்படுத்தப்பட்டே உள்ளது;*

* *இறையவர் சர்வத்தின் உள்ளும் நின்று புலப்படுவார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

477. மாண்பு அது ஆக வளர்கின்ற வன்னியும்
காண்பது ஆண் பெண் அலி எனும் கற்பனை
பூண்பது மாதா பிதா வழி போலவே
ஆம்பதி செய்தான் அச்சோதித்தன் ஆண்மையே

* மிகவும் சிறப்போடு, அக்கினி சொரூபம் போன்று குழந்தை உள்ளே வளருகின்றது;
* எமது மன எண்ணங்கள் ஆண், பெண், அலி என்று கற்பனையால் பேதப்படுத்தப்படுகின்றன;
* தந்தை தாய் வழியை அடியொற்றியே, உருவாகும் குழந்தை அமையும்;
* ஜோதிமயமான இறையவர் இந்த ஏற்பாடுகளை எல்லாம் அமைத்துவிட்டார்;

478. ஆண்மிகில் ஆண் ஆகும் பெண்மிகில் பெண் ஆகும்
பூண் இரண்டு ஒத்துப் பொருந்தில் அலியாகும்
தாண் மிகும் ஆகில் தரணி முழுது ஆளும்
பாணவ மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே

இப்பாடலில் பரம்பரை இயல், நிறமூர்த்தக் காரணிகள், அவற்றின் பெறுபேறுகளைத் திருமூலர் பெருமான் கூறுகின்றார்.

* ஆண் குழந்தைக்குரிய காரணிகள் இருவரிலும் வலிமை பெற்றிருந்தால் தோன்றும் குழந்தை ஆண் ஆகும். பெண் குழந்தைக்குரிய காரணிகள் இருவரிலும் வலிமை பெற்றிருந்தால் தோன்றும் குழந்தை பெண் ஆகும்;

* இருவரிலும் இரு பாலுக்குரிய காரணிகள் வலிமை இழந்து இருப்பின் தோன்றும் குழந்தை அலியாகும். ஆணின் பரம்பரைக் காரணிகளே குழந்தை ஆணா பெண்ணா என்பதைத் தீர்மானிக்கும்;

* தாதுக்கள் பரிமாறும் காலம் இருவருக்கும் அதிகமானால் தோன்றும் குழந்தை பூமி முழுவதையும் ஆளும்;

* பெண்இயல் காரணிகள் ஆணில் மிகுதியாக இருந்தால் ஆணில் இருந்து தாதுப்பொருள் பாயவே மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

479. பாய்ந்த பின் ஐஞ்சு ஓடில் ஆயுளும் நூறாகும்
பாய்ந்தபின் நாலு ஓடில் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயு பகுத்து அறிந்து இவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலும் ஆமே

* *தாதுக்கள் பரிமாற்றம் அடைந்த பிற்பாடு ஆணில் பிராண ஓட்டம் ஐந்து தடவைகள் ஏறி இறங்குமானால் பிறக்கும் குழந்தை வயசு 100 ஆகும்; பிராண ஓட்டம் நாலு தடவைகள் ஏறி இறங்குமானால் பிறக்கும் குழந்தைக்கு வயசு எண்பதாகும்;*

* *யோகநிலை கைவரப்பெற்ற ஒருவரால் மாத்திரமே பிராண ஓட்டச் செயலை நன்கு உணர்ந்து தாதுவைப் பரிமாற்ற முடியும்;*

* *இறுதியில் புறப்படும் தாதுவை முன்னோக்கி அனுப்ப ஒரு யோகியால் மட்டுமே முடியும்.*

480. பாய்கின்ற வாயு குறையில் குறள் ஆகும்
பாய்கின்ற வாயு விளைக்கில் முடம் ஆகும்
பாய்கின்ற வாயு நடுப்படில் கூனாகும்
பாய்கின்ற வாயு மாதர்க்கு இல்லைப் பார்க்கிலே

* *தாது பரிமாறுகின்றபோது பிராண ஓட்டம் குறைந்து போகில் உருவாகும் குழந்தை குள்ளமாகும்;*

* *பிராண ஓட்டம் வீசி அடிக்கப்பட்டால் குழந்தை நொண்டியாகும்;*

* *பிராண ஓட்டம் நடுவே நின்று விட்டால் குழந்தை கூனாகிவிடும்;*

* *வாயு ஓட்டம் ஆணிற்கே பார்க்கப்படும் பெண்ணிற்கு அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

481. மாதா உதரம் மலம் மிகில் மந்தனாம்
மாதா உதரம் சலம் மிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டு ஒக்கில் கண் இல்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே.

* புணர்ச்சிக் காலத்தில் தாயின் வயிற்றில் மலம் மிகுதியாக இருந்தால் தோன்றும் குழந்தை மந்த புத்தி உள்ளதாக இருக்கும்;

* சலம் மிகுதியாக இருந்தால் தோன்றும் குழந்தை மூடத்தன்மையாக இருக்கும்;

* சலமும் மலமும் தாயின் வயிற்றில் புணர்ச்சிக்காலத்தில் இருந்தால் தோன்றும் குழந்தைக்குக் கண் தெரியாது போய்விடும்.

482. குழவியும் ஆணாம் வலத்தது ஆகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது ஆகில்
குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலியாகும் கொண்ட கால் ஒக்கிலே

* தாதுப் பரிமாற்றத்தின் போது ஆணுக்கு வலது நாடியால் பிராண ஓட்டம் இருப்பில் தோன்றும் குழந்தை ஆண் ஆகும்;

* இடது நாடியால் பிராண ஓட்டம் இருப்பில் குழந்தை பெண் ஆகும்;

* அபான வாயு மேல் நோக்கி எதிர் கொள்ளில், தோன்றுவது இரட்டைக் குழந்தையாகும்;

* இட வல நாடிகள் இரண்டிலும் சுவாச ஓட்டம் தடைப்படில் குழந்தை அலியாகத் தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

483. கொண்ட நல் வாயு இருவர்க்கும் ஒத்து எழில்
கொண்ட குழவியும் கோமளம் ஆயிடும்
கொண்ட நல்வாயு இருவர்க்கும் குழறிடில்
கொண்டதும் இல்லையாம் கோல் வளையாட்கே

* *தாதுப் பரிமாற்றத்தின்போது இருவர்க்கும் பிராண ஓட்டம் ஒரே ஒழுங்கில் ஒன்றாகி இயங்கில் தோன்றும் குழந்தை அழகு நிறைந்ததாக இருக்கும்;*

* *தாதுப் பரிமாற்றம் நிகழும் போது இருவர்க்கும் பிராண ஓட்டம் குழறுமானால், குழந்தை வயிற்றில் உருவாகவே மாட்டாது.*

484. கோல்வளை உந்தியில் கொண்ட குழவியும்
தால்வளை உள்ளே தயங்கிய சோதியாம்
பால் வளர்ந்து உள்ளே பகலவன் பொன் உருப்
போல் வளர்ந்து உள்ளே பொருந்து உருவாமே.

* *கருப்பையில் உருவாகும் குழந்தையும், அங்கே சோதியாகவே விளங்கும்;*

* *என்ன வகையான குழந்தையோ அதற்கு ஏற்றவாறு குழந்தை பொன்போல் வளர்ச்சி அடைந்து உருவமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

485. உருவம் வளர்ந்திடும் ஒண் திங்கள் பத்தில்
பருவம் அதாகவே பாரினில் வந்திடும்
மருவி வளர்ந்திடும் மாயையினாலே
அருவம் அது ஆவது இங்கு ஆர் அறிவாரே.

* *தாயின் வயிற்றில் கரு பத்து மாதங்கள் தங்கி வளர்ச்சி அடையும்;*

* *பின்னர் பூமியில் வந்து பிறக்கும்;*

* *சக்தியின் செயற்பாட்டால் குழந்தை பூமியில் மிக அற்புதமாக வளர்ந்து வரும்;*

* *ஆரம்பத்தில் அருவமாய் இருந்து, பின் உருவம் ஆகி அதன்பின் அருவமாகும் இந்த வாழ்க்கையை யார் தான் அறிந்து கொள்ளப் போகின்றார்கள்.*

486. இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்
தட்டான் அறிந்தும் ஒருவர்க்கும் உரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்கு உளன்
கெட்டேன் இம்மாயையின் கீழ்மை எவ்வாறே.

* *கரு உருவாகத் தாதுவைப் பரிமாற்றிய தந்தையும் அறிய மாட்டார். தாதுவை ஏற்றுக் கொண்ட தாயும் காணமாட்டாள்;*

* *இறைவர் முழுவதும் அறிந்திருந்தும் ஒருவருக்கும் கூறாது இருப்பார்;*

* *உண்மையை உணர்த்தும் இறையவரும் கருவுடனேயே உள்ளார்;*

* *மாயையின் இந்த ஆரம்பச் செயற்பாட்டினைத் தெரிந்து கொள்ளாது நான் இருந்து விட்டேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

487. இன்புற நாடி இருவரும் சந்தித்துத்
துன்புறு பாசத்தில் தோன்றி வளர்ந்த பின்
முன்புற நாடி நிலத்தின் முன் தோன்றிய
தென்புற நாடி நின்று ஓதலுமாமே.

* இன்பமாக இருவரும் நாடுவார்கள். ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்வார்கள்;

* துன்பம் ஆனது பாசத்தின் ஊடாகத் தோன்றி வளர்ந்து கொள்ளும்;

* முன்னர் ஈட்டிய இருவினைகளின் தன்மையால் பூமியில் உயிர்கள் தோன்றும்;

* இரு வினையால் ஏற்படும் செயற்பாடுகள் நீங்க, தென்முக மூர்த்தியாகிய திருநந்திதேவரை வழிபடவேண்டும்.

488. குயிற் குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டு இட்டால்
அயிர்ப்பு இன்றிக் காக்கை வளர்க்கின்றது போல்
இயக்கு இல்லைப் போக்கு இல்லை ஏன் என்பது இல்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே.

* குயில் காகத்தின் கூட்டின் உள்ளே முட்டையை இட்டு விட்டுச் செல்லும்;

* எந்தவித பேதத்தையும் காணாது காகம் தான் இட்ட முட்டையோடு குயில் இட்ட முட்டையையும் வளர்க்கும்;

* எப்படித் தனது கூட்டுக்குள் மேலதிகமாக முட்டை வந்தது என்ற சந்தேகமே காகத்திற்கு எழுவதில்லை;

* மயக்கத்தால் காகம், குயில் குஞ்சையும் தனது குஞ்சுகளுடன் சேர்த்து உணவு ஊட்டி வளர்க்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

489. முதல் கிழங்காய் முளையாய் அம் முளைப்பின்
அதல் புதலாய்ப் பலமாய் நின்று அளிக்கும்
அதற்கு அதுவாய் இன்பம் ஆவது போல
அதற்கு அதுவாய் நிற்கும் ஆதிப் பிரானே.

* *முதலில் கிழங்கை நிலத்தினுள் புதைத்தால் அதில் இருந்து முளை தோன்றும்;*

* *தோன்றும் இம்முளை, உருவாகும் மரத்திற்கு ஆதாரமாகவும் புதுமையாகவும், பக்க பலமாகவும் விளங்கி, அதன் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றும்;*

* *மரத்திற்கு அதன் மூலவேர் இன்பத்தை வழங்குவது போல;*

* *ஆதியாகிய இறையவர் எல்லாவற்றிற்கும் மூலமாய் இருந்து இன்பத்தை வழங்குவார்.*

490. ஏனோர் பெருமையன் ஆகினும் எம் இறை
ஊனே சிறுமையுள் உட்கலந்து அங்கு உளன்
வானோர் அறியும் அளவு அல்ல மாதேவன்
தானே அறியும் தவத்தினின் உள்ளே.

* *யாராலும் விபரிக்க முடியாத பெருமையை உடையவர் இறையவர்;*
* *இருந்தும் மிகமிகச் சிறிய அணுவின் உள்ளேயும் உள்ளார் இறையவர்;*
* *இறையவரின் அகண்டாகாரம் வானவர்களால் அறியக் கூடியது அல்ல;*
* *பெரியோர்களின் அரிய பெரிய தவத்தின் ஊடாக இறையவர் உணரப்படுவார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

491. பரத்தில் கரைந்து பதித்த நல் காயம்
உருத் தரித்து இவ் உடல் ஓங்கிட வேண்டில்
திரைக் கடல் உப்பு திரண்டது போல
திரித்துப் பிறக்கும் திரு அருளாலே.

* உடம்பானது, இறை அம்சத்தில் கரைந்து, இறை அம்சத்தால் உறுதிப்படுத்தப்பட்டு உருவாகியது;

* கருவாக உருவானது வளர்ந்து பின் உடலாக வெளிப்படுகின்றது;

* இந் நிகழ்வு நீரினுள் உப்பு திரண்டு உருவாவது போல்- கரைகின்ற உப்பு, கரைகின்ற நீரில் இருந்து உருவாவது போல்;

* திருவருளினால், அழிகின்ற உடம்பு (குழந்தை), அழிகின்ற உடம்பில் (தாய், தந்தை) இருந்து உருவாகும்.

## XV. மூவகைச் சீவ வர்க்கம்

492. சத்தி சிவன் விளையாட்டால் உயிர் ஆக்கி
ஒத்த இருமாயா கூட்டத்து இடைபூட்டிச்
சுத்தமது ஆகும் துரியம் பிரிவித்துச்
சித்தம் புகுந்து சிவமயம் ஆக்குமே.

* தேவதைகள் ஆகிய சத்தியினதும் சிவனினதும் செயற்பாட்டினால் உயிர்க்கோடிகள் உருவாக்கப்படுகின்றன;
* இவை அனைத்தும் இருமை வகைச் செயற்பாடுகள் உடைய மாயையின் கூட்டத்தோடு விடப்படுகின்றன;
* "விழிப்பு" எனும் நிலைப்பாடும் இவையோடு மிகவும் சுத்தமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன;
* சித்தத்தின் ஊடாகவே விழிப்பு நிலை ஏற்பட்டு, சிவமயம் ஆகும் நிலையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

493. விஞ்ஞானர் நால்வரும் மெய்ப் பிரளயாகலத்து
அஞ்ஞானர் மூவரும் தாங்கு சகலத்தின்
அஞ்ஞானர் மூவரும் ஆகும் பதின் மராம்
விஞ்ஞானர் ஆதியர் வேற்றுமை தானே.

*இப்பாடலில் பன்னிரண்டு வகையான ஆத்மாக்களின் நிலைப்பாடுகள் கூறப்படுகின்றன;*
*விஞ்ஞானர் - நாலு வகை*
*பிரளயாகலருடன்*
*கூடிய அஞ்ஞானர் - மூன்று வகை*
*சகலருடன் கூடிய*
*அஞ்ஞானர் - மூன்று வகை*
*சகலர் தனித்து - ஒரு வகை*
*பிரளயாகலர் தனித்து - ஒரு வகை*

*மொத்தம் பன்னிரண்டாகும்.*

494. விஞ்ஞானர் கேவலத்தார் அது விட்டவர்
அஞ்ஞானர் மூவரும் தாங்கு சகலத்தின்
எஞ்ஞானர் ஏழ்கோடி மந்திர நாயகர்
மெய்ஞ்ஞானர் ஆணவம் விட்டு நின்றாரே.

*கேவலத்தார் - ஆத்மா எந்தவித பிறப்பும் எடுக்க முன்னர் உள்ள நிலை;*
*விஞ்ஞானர் - ஆணவத்தால் மாத்திரம் பீடிக்கப்பட்டவர்கள்;*
*அஞ்ஞானர் - ஆணவத்தால் பீடிக்கப்பட்டவர்கள். ஆனால் தெளிவேதும் இல்லாதவர்கள்;*
*சகலர் - ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களால் பீடிக்கப்பட்டவர்கள்;*
*எஞ்ஞானர் - ஏழுவகையான மந்திர முடிபுகளை உணர்பவர்கள்;*
*மெய்ஞ்ஞானர் - ஆணவத்தை முற்றாக விட்டவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

495. இரண்டு ஆவதில் முத்தி எய்துவர் அத்தனை
இரண்டு ஆவது உள்ள இருமல பெத்தர்
இரண்டு ஆகு நூற்று எட்டு உருத்திரர் என்பர்
முரண் சேர் சகலத்தர் மும்மலத்தாரே.

* இருவகை வினைச் செயற்பாடுகளையும் நீக்குவார்களானால், அவர்கள் முத்தி அடைவார்கள்;

* பெத்த நிலையில் உள்ளவர்கள்: இருவகை வினைக்கும், ஆணவம் கன்மம் ஆகிய மலங்களுக்கும் உட்பட்டவர்கள் ஆவர்;

* எல்லா இருமை வகைத்தன்மைகளையும் கடந்தவர்கள் உள்ளனர். இவர்கள் 108 வகை உருத்திரர்கள் ஆவர்;

* சகலர் ஆணவம், கன்மம், மாயை, ஆகிய மலங்களை உடையவர்.

496. பெத்தத்த சித்தொடு பேண் முத்தச் சித்தது
ஒத்திட்ட இரண்டை ஊடு உற்றார் சித்துமாய்
மத்தது மும்மலம் வாட்டுகை மாட்டாதார்
சத்தத்து அமிழ்ந்து சகலத்து உளாரே.

* ஆரம்பத்தில் – முதலில் – மூலத்தில் வெளிநிலையும், முத்தியுடன் கூடிய வெளியும் காணப்படும்;

* இவ் இரு நிலைப்பாடுகளையும் உணர்பவர்கள் வெளியாய் விளங்குவர்;

* மூன்று மலங்களையும் விடுவிக்க இயலாதவர்கள் சகலர் நிலையிலேயே இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

497. சிவம் ஆகி ஐவகைத் திண் மலம் செற்றோர்
அவமாகச் சித்தர் முத்தாந்தத்து வாழ்வார்
பவமான தீர்வோர் பசு பாசம் அற்றோர்
நவமான தத்துவம் நாடிக் கண்டோரே.

* ஐந்து வகையான கொடிய மலங்களில் இருந்து விடுபட்டவர்களே சிவம் ஆகிய பரம்பொருளுடன் கலந்திருப்பார்கள்;
* சித்துக்களுடன் செயற்படும் சித்தர்கள் 'முத்தி' எனும் நிலைப்பாட்டில் வாழ்வார்கள்;
* எல்லாவித பாவத்தின் சுமைகளிலும் இருந்து விடுபட்டவர்கள்; ஆத்மா என்னும், மாயை என்னும் தன்மைகளில் இருந்து விலகியவர்கள் ஆவர்;
* இவர்கள் ஒன்பது வகையான சத்தி தத்துவங்களை நாடி உணர்ந்து கண்டு கொள்வார்கள்.

498. விஞ்ஞானர் ஆணவ கேவல மேவுவோர்
விஞ்ஞானர் மாயையில் தங்கும் இருமலர்
அஞ்ஞானர் அச் சகலத்தர் சகலராம்
விஞ்ஞானர் ஆதிகள் ஒன்பான் வேறு உயிர்களே.

* விஞ்ஞானர் வகை சார்ந்த ஆத்மாக்கள் ஆணவ மலத்தை மாத்திரம் உடையவர்கள். இவர்கள் கேவல வகை ஆத்மாக்களை மேவி நிற்போராவர்;

* அஞ்ஞானர் வகை சார்ந்த ஆத்மாக்கள் ஆணவம், கன்மம் ஆகிய மலங்களை உடையவர்கள்;

* சகலர் வகை சார்ந்த ஆத்மாக்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களை உடையவர்கள் ஆவர்;

* விஞ்ஞான வகை சார்ந்த ஆத்மாக்கள் மிகவும் ஆதியானவை. இவர்களை மற்றைய ஆத்ம வகைகளோடு ஒப்பீடு செய்ய முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

499. விஞ்ஞான கன்மத்தால் மெய் அகம் கூடிய
அஞ்ஞான கன்மத்தினால் சுவர் யோனி புக்கு
எஞ்ஞான மெய் தீண்டியே இடை இட்டுப் போய்
மெய்ஞ்ஞானர் ஆகிச் சிவமேவல் உண்மையே.

* அறிவின் செயற்பாட்டால் கர்மங்கள் ஏற்பட்டு, உடல் உயிருடன் கூடுகின்றது;

* அறிவீனத்தின் செயற்பாட்டால், கர்மங்கள் ஏற்பட்டு ஆண் பெண் கூடல் நிகழ்கின்றது;

* எந்த வகையான அறிவும், அறிவீனமும் உடலோடு உடலையே இடைவிடாது புணர்ந்து கொண்டு இருக்கும்;

* மெய்ஞ்ஞானம் எய்தியவர்களே 'சிவம்' எனும் பரம் பொருளுடன் ஒன்றாகுவர். இதுவே உண்மை.

500. ஆணவம் உற்ற அவித்தா நனவு அற்றோர்
காணிய விந்து ஆ நாத சகல் ஆதி
ஆணவம் ஆதி அடைந்தோர் அவர் அன்றே
சேண் உயர் சத்தி சிவதத்துவம் ஆமே.

* ஆணவ மலத்தில் மட்டும் இருப்பவர்கள் நனவு அவத்தையைக் கடந்தவர்கள்;

* சகல அவத்தையில் உள்ள ஆத்மாக்கள் சப்த சொரூபத்தில் நாத சொரூபத்தில் திளைப்பர்;

* ஆணவத்தால் கட்டுண்டவர்கள் இறையவரை ஒருபோதும் அடையப் போவதில்லை;

* ஆகாயம் முழுவதும் ஊடறுத்து நிற்கும் சுத்த சத்தியானது, சிவதத்துடன் காட்சி கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## XVI. க.சா. பாத்திரம்

501. திலம் அத்தனையே சிவஞானிக்கு ஈந்தால்
பல முத்தி சித்தி பரபோகமும் தரும்
நிலம் அத்தனை பொன் நின் மூடர்க்கு ஈந்தால்
பலம் அற்றே பரபோகமும் குன்றுமே.

* எள்ளளவும் மீதம் வைக்காது உங்களிடம் உள்ள அனைத்து செல்வங்களையும், உண்மையான சிவஞானிக்கு வழங்குங்கள்;

* அப்பொழுது உங்களுக்கு நிலையான முத்தியும், சித்திகளும், இறையவரின் மெய்ஞ்ஞான போகமும் கிடைக்கும்;

* உங்கள் செல்வத்தை மூடர்களுக்கு வழங்கி விடாதீர்கள்;

* அவ்வாறு செய்தால், உங்கள் எல்லாச் சக்தியும் அற்றுப்போகும். இறையவர் கடாட்சமும் கிடைக்காது போய்விடும்.

502. கண்டு இருந்தார் உயிர் உண்டிடும் காலனைக்
கொண்டு இருந்தார் உயிர் கொள்ளும் குணத்தனை
நன்று உணர்ந்தார்க்கு அருள் செய்திடும் நாதனை
சென்று உணர்ந்தார் சிலர் தேவரும் ஆமே.

* கண் முன்னாலேயே கால தேவன் உயிரை எடுத்துச் செல்கின்றான். எல்லோரும் இதனைக் காண்கின்றார்கள்;

* இறைசிந்தை உள்ளவர்களை இறையவர் ஆட்கொண்டு விடுகின்றார்;

* தெளிவாகத் தன்னை உணர்ந்தவர்களுக்கு இறையவர் அருள் செய்திடுவார்;

* இறையவரை எல்லா இடமும் தேடி உணர்ந்தவர் சிலர் தேவர்கள் ஆகிவிடுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

503. கைவிட்டிலேன் கரு ஆகிய காலத்து
மெய்விட்டிலேன் விகிர்தன் அடி தேடுவன்
பொய்விட்டு நானே புரிசடையான் அடி
நெய்விட்டிலாத இடிஞ்சிலும் ஆமே.

* தாயின் வயிற்றில் கருக்கொண்ட காலத்தில் இருந்தே திருமூலராகிய நான் இறையவரை மிகவும் உறுதியாகப் பற்றிக் கொண்டேன்;

* இறையவரின் திருவடியினை, இந்த உடம்புடனேயே இருந்து, சர்வத்திலும் நான் தேடிக்கொண்டே இருப்பேன்;

* எல்லாவிதமான பொய்மைகளையும் விட்டு நீங்கி, இறையவரின் திருவடியிலேயே அமர்ந்து கொள்வேன்;

* எனது ஆத்மாவின் சுடர் என்றும் ஒளிர்ந்து கொண்டே இருக்கும். இது நெய்விடாத விளக்கு ஆகும்.

504. ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இளம் கிளையோனே.

* ஆகவேண்டியன எல்லாம் ஆகிக் கொண்டே உள்ளன. அழியவேண்டியன எல்லாம் அழிந்து கொண்டே உள்ளன;

* இறையவரை விட்டு விலக வேண்டியன விலகிக் கொண்டே உள்ளன. இறையவருடன் சேர வேண்டியன எல்லாம் சேர்ந்து கொண்டே உள்ளன;

* எனது ஞானக் காவலனாகிய நந்தி எம்பெருமானார், இவை அனைத்தையும் தெளிவுபடக் கண்டு எனக்குக் காட்டுகின்றார்;

* என்றும் இளமை நிறைந்த ஞான பரம்பரையை நந்தி எம்பெருமானார் உருவாக்கிய வண்ணமே உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

505. கோல வறட்டைக் குனிந்து குளகு இட்டுப்
பாலைக் கறந்து பருகுவதே ஒக்கும்
சீலமும் நோன்பும் இலாதவர்க்கு ஈந்தது
காலம் கழிந்த பயிராது ஆகுமே.

* *மலட்டுப் பசுவைப் பேணி வளர்த்து அதில் இருந்து பால் எடுத்து அருந்துவது மிகவும் சிரமமான - இயலாத -முடியாத காரியமாகும்;*

* *ஒழுக்கம் இல்லாதவர்களுடனும், விரதம் காக்காதவர் களுடனும் ஞான சம்பாஷணையைப் பரிமாறுவது, எந்த விதபலனும் இல்லாத காலம் கழிந்த பயிருக்கு ஒப்பாகும்.*

506. ஈவது யோக இயம நியமங்கள்
சார்வது அறிந்து அன்பு தங்கும் அவர்க்கு அன்றி
ஆவது அறிந்து அன்பு தங்காதவர்களுக்கு
ஈவ பெரும் பிழை என்று கொளீரே.

* *யோக நுட்பங்களையும், இயம நியமங்களையுமே வழங்க வேண்டும்;*

* *உண்மை அன்பு நிறைந்தவர்களுக்கு மாத்திரமே அவற்றை வழங்க வேண்டும்;*

* *உண்மை அன்பு இல்லாதவர்களுக்கு இவற்றை வழங்கவே கூடாது;*

* *அவ்வாறு வழங்கினால் அது மிகவும் தவறாகும். பெரும் குற்றமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

507. ஆமாறு அறியான் அதிபஞ்ச பாதன்
தோமாறும் ஈசற்கும் தூய குரவற்கும்
காமாதி விட்டோர்க்கும் தரல் தந்து கற்பிப்போன்
போ மாநகரில் புகான் போதம் கற்கவே.

* பஞ்சமா பாதகங்கள் செய்வோர் உண்மை அன்பு ஆவதை அறியவே மாட்டார்கள்;

* இறையவர் மீது பக்தி உள்ளவர்க்கும், தூய அன்பு நெறி நிற்போர்க்கும் - காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றை விட்டோர்க்குமே இயம நியம யோகங்களை வழங்க வேண்டும். கற்பித்தல் வேண்டும்;

* இவற்றைத் தெளிந்து கற்பிப்போர் ஒருபோதும் நரக வாயிலை அடையவே மாட்டார்கள்.

508. மண் மலை அத்தனை மா தானம் ஈயினும்
அண்ணல் இவன் என்றே அஞ்சலி அத்தனாய்
எண்ணி இறைஞ்சாதார்க்கு ஈந்த இருவரும்
நண்ணுவர் ஏழா நரகக் குழியிலே.

* பெரு நில புலங்களையும், மலைகள் அத்தனையும், பெரும் செல்வங்களையும் வழங்கினால் தான் என்ன;

* இறையவரை எண்ணி வழிபாடு செய்யாதவர்களுக்கு இயம நியம யோகங்களை வழங்கியவரும், பெற்றவரும்;

* ஏழு பிறப்புகளாகவே நரகத்தின் குழியிலேயே வீழ்ந்து கிடப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்த்தம்

509. உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்று ஆடார் வினை கெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனம் உடைக் கல்வியி லோரே.

* எம் உள்ளத்தின் உள்ளே பல வகையான தீர்த்தங்கள் உள்ளன. அவை அன்பு என்னும் தீர்த்தம், அருள் என்னும் தீர்த்தம், கருணை என்னும் தீர்த்தம், ஞானம் என்னும் தீர்த்தமாகும்;

* இந்தத் தீர்த்தங்களை மிகவும் நுட்பமாக உணர்ந்து, வினைகள் எல்லாம் போகும் வண்ணம், அவற்றில் நீராடாது உள்ளார்கள்;

* பள்ளமும் மேடும், காடும் மலையும் அலைந்து திரிவார்கள்;

* மனதிலே மாறுபட்ட எண்ணங்களும், செய்பாடுகளும் உடையவர்களே இவ்வாறு நடந்து கொள்வார்கள்.

510. தளி அறிவாளர்க்குத் தண்ணிதாய்த் தோன்றும்
குளி அறிவாளர்க்குக் கூடவும் ஒண்ணான்
வளி அறிவாளர்க்கு வாய்க்கிலும் வாய்க்கும்
தெளி அறிவாளர் தம் சிந்தை உளானே.

* இறையவர் வீற்றிருக்கும் கோயிலை அறிபவர்களுக்கு, இறையவர் மிகவும் குளிர்ச்சியாகக் காட்சி கொடுப்பார்;

* இறையவர் கோயில் அறியாதார் ஒருபோதும் இறையவருடன் கூடப் போவதில்லை.

* பிராணாயாம நுட்பம் தெரிந்தவர்க்கு – சாதனை செய்பவர்க்கு இறையவர் புலப்படலாம்;

* பரிபூரண தெளிவு நிலையில் இருப்பவர்களின் உள்ளத்தில் இறையவர் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

511. உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனைக்
கள்ளத்தினால் ஆரும் கலந்து அறிவார் இல்லை
வெள்ளத்தை நாடி விடும் அவர் தீவினைப்
பள்ளத்தில் இட்டதோர் பந்தர் உள்ளானே.

* எமது ஆத்மீக உள்ளத்தால் இறையவரை நாம் உணரலாம்;

* தூய அன்பினால் இறையவரை அறியக் கூடிய ஒருவரையும் காண முடியவில்லை;

* இறையவரின் அன்பு, கருணை, அருள், ஞானம் ஆகிய வெள்ளத்தை நாடினால் அவர்களின் தீவினை முற்றாக அற்றுப் போகும்;

* ஆத்மீக இதயங்களிலே மிகவும் ஆழமாக இறையவர் உள்ளார்.

512. அறிவார் அமரர்கள் ஆதிப் பிரானைச்
செறிவான் உறைபதம் சென்று வலம் கொள்
மறியார் வளைக்கை வரு புனல் கங்கைப்
பொறியார் புனல் மூழ்கப் புண்ணியர் ஆமே.

* ஆதியாகிய இறையவரை அமரர் பெருமக்கள் அறிந்து கொள்வார்கள்;

* அன்பு நிறைந்த இறையவரின் திருவடியினை அவர்கள் வலம் வந்து வழிபாடு செய்வார்கள்;

* யாராலும் தடுத்து நிறுத்த முடியாத புனிதமான கங்கா நதி ஒன்று பூமியிலே பாய்கின்றது.

* வழிபாட்டின் மகத்துவம் தெரிந்தவர்கள் இந்த கங்கையில் மூழ்கிப் புண்ணியர் ஆவார்கள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

513. கடலில் கெடுத்துக் குளத்தினில் காண்டல்
உடல் உற்றுத் தேடுவார் தம்மை ஒப்பார் இலர்
திடமுற்ற நந்தி திரு அருளால் சென்று
உடலில் புகுந்தமை ஒன்று அறியாரே.

* சம்சாரம் ஆகிய உலகியற் கடலில் அனைத்தையும் இழந்து, பின் இதயமாகிய குளத்தினில் தங்களைக் காணலாம் எனக் கூறுவர்;

* உடல் பூராவும் வருந்தி இறையவரைத் தேடுவார்கள். இவர்கள் தங்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என எண்ணுவர்;

* நந்தி எம்பெருமானுடைய அருள் நிறைந்த வழிகாட்டுதலை உணரமாட்டார்கள்;

* இவ்வழிகாட்டலில் இறையவர் உள்ளே புகுந்து கொண்டு இருப்பதை இவர்கள் அறியவே மாட்டார்கள்.

514. கலந்தது நீரது உடம்பில் கறுக்கும்
கலந்தது நீரது உடம்பில் சிவக்கும்
கலந்தது நீரது உடம்பில் வெளுக்கும்
கலந்தது நீர் நிலம் காற்று அது ஆமே.

* உடம்பில் காம நீர் அதிகளவில் கலந்தால்,
உடம்பு கறுத்துப் போய் விடும்;

* உடம்பில் ஞானம் எனும் நீர் கலந்தால்,
உடம்பு சிவப்பு நிறமாகிவிடும்;

* உடம்பில் அருள் எனும் நீர் கலந்தால்,
உடம்பு வெண்மை நிறமாக இருக்கும்;

* பஞ்சபூதங்களே எங்கும் கலந்து வியாபித்து உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## XIX. திருக்கோயில் இழிவு

515. தாவர லிங்கம் பறித்து ஒன்றில் தாபித்தால்
ஆவதன் முன்னே அரசு நிலை கெடும்
சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடும்
காவலன் பேர் நந்தி கட்டு உரைத்தானே.

* நாட்டில் உள்ள சிவன் கோயில் ஒன்றில் இருந்து லிங்கம் ஒன்றைப் பெயர்த்து வேறு இடத்தில் தாபித்தால்;

* அந்தப் புதிய இடம் உருவாவதன் முன்னரே அரசு நிலை கெட்டுப் போகும்;

* இவற்றிற்குக் காரணமாக இருந்தவர்கள் இறப்பதற்கு முன்னம்அவர்களுக்குக் கொடிய நோய்கள்வந்துவிடும்;

* நந்தி எம்பெருமானார் எனக்கு இதனைத் தெளிவுபட உரைத்து விட்டார்.

516. கட்டுவித்தார் மதில் கல் ஒன்று வாங்கிடில்
வெட்டுவிக்கும் அபிடேகத்து அரசரை
முட்டுவிக்கும் முனிவேதியர் ஆயினும்
வெட்டுவித்தே விடும் விண்ணவன் ஆணையே.

* திருக்கோயிலினைச் சூழ்ந்துள்ள மதிலில் இருந்து ஒரு கல்லினைப் பெயர்த்தால்;

* அரச பட்டத்தில் இருக்கும் நாட்டின் அரசனைக் கொன்று விடும்;

* இதனைச் செய்பவர்கள் முனிவரானாலும், வேதியர்கள் ஆனாலும் அவர்களுக்குப் பெரும் இடர்பாடு செய்து அவர்களையும் இல்லாமல் செய்துவிடும்;

* இவ்வாறு நிகழும் எனத் திருமூலராகிய நான் தெய்வத்தின் மேல் ஆணையாகச் சொல்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

517. ஆற்று அருநோய் மிக்க அவனி மழை இன்றிப்
போற்று அரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்று உதைத்தான் திருக்கோயில்கள் எல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே.

* *சிவஸ்தலங்களில் நித்திய நைமித்திய பூசைகள் தடைப்பட்டுப் போனால்;*

* *சிறந்த மன்னவர்களும் போர்க்களத்தில் தங்கள் வலிமையை இழந்து விடுவார்கள்;*

* *தீரமுடியாத வியாதிகள் நாட்டில் பெருகும். பூமியில் மழை பெய்யாது.*

518. முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடில்
மன்னர்க்குத் தீங்கு உள வாரி வளம் குன்றும்
கன்னம் களவு மிகுத்திடும் காசினி
என் அரு நந்தி எடுத்து உரைத்தானே.

* *ஆதி பரம் பொருள் அமைந்துள்ள கோயிலின் பூசைகள் தடைப்படுமானால்;*

* *அந்நாட்டின் மன்னவர்க்குத் தீமை ஏற்படும். நாட்டின் வளம் குன்றிப் போகும்;*

* *நாட்டிலே சூதும், களவும் மலிந்து விடும்;*

* *இவ்வாறு நடைபெறும் என நந்தி எம் பெருமானார் எனக்குக் கூறிவிட்டார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

519. பேர் கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்
போர் கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார் கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாம் என்றே
சீர் கொண்ட நந்தி தெரிந்து உரைத்தானே.

* *வெறும் பெயரை மாத்திரம் உடைய அந்தணர்கள் இறையவருக்குப் பூசை செய்தால்;*

* *போர் எண்ணம் கொண்ட மன்னவர்க்குத் தீர்க்க முடியாத நோய் உருவாகும்;*

* *நாட்டிலே பசி, பட்டினி தலைவிரித்தாடும்;*

* *நந்தி எம்பெருமானார் இவற்றை எனக்குத் தெரிந்து கூறிவிட்டார்.*

## XX. அதோமுக தரிசனம்

520. எம்பெருமான் இறைவா முறையோ என்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலி சொல்ல
அம்பவள மேனி அறுமுகம் போய் அவர்
தம்பகை கொல் என்ற தற்பரன் தானே.

* *அசுரனின் கொடுமை தாங்காது, வானவர்கள் இறையவரிடம் சென்று குய்யோ! முறையோ! என்று முறையிடுகின்றார்கள்;*

* *பொன் நிற மேனிதாங்கிய அறுமுகனை இறையவர் அனுப்புகின்றார்;*

* *அறுமுகனோ, நீங்கள் உங்களுக்குள்ளேயே உள்ள பகையை முதலில் கொன்று விடுங்கள் என்று தெளிவு படுத்தி விடுகின்றார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

521. அண்ட மொடு எண்திசை தாங்கும் அதோ முகம்
கண்டம் கறுத்த கருத்து அறிவார் இல்லை
உண்டது நஞ்சு என்று உரைப்பார் உணர்வு இலோர்
வெண்தலை மாலை விரிசடை யோற்கே.

* அனுக்கிரகம் நிறைந்த அதோ முகமானது அண்டங்களையும், எண் திசைகளையும் தாங்கியுள்ளது;

* சிவனின் கண்டம் கறுத்த காரணத்தை அறியமாட்டார்கள்;

* தலையில் வெண்ணிற மாலை சூடிய விரிசடை உடைய சிவன் நஞ்சை உண்டதனால் கண்டம் கறுத்து விட்டது என்று உணர்வில்லாதவர்கள் உரைப்பார்கள்.

522. செய்தான் அறியும் செழும் கடல் வட்டத்துப்
பொய்யே உரைத்து புகழும் மனிதர்கள்
மெய்யே உரைக்கில் விண்ணோர் தொழச் செய்வன்
மை தாழ்ந்து இலங்கு மிடறு உடையோனே.

* இறையவரால் ஏற்படுத்தப்பட்ட வட்ட அமைப்பான உலக சாகரத்தினுள் மனிதர்கள் உள்ளார்கள்.

* மனிதர்கள் பொய்யினைக் கூறித் தங்களைத் தாங்களே புகழ்ந்து கூறிக் கொள்வார்கள்;

* நாம் "மெய்" மாத்திரம் உரைப்போமானால், விண்ணோர்களே எம்மைத் தொழும்படி செய்து விடுவார் இறையவர்;

* கருமை நிறம் உடைய சுத்த சத்தியின் பகுதியாக - அமுதீஸ்வரியை சிவனார் கண்டத்தில் வைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

523. நந்தி எழுந்து நடுவுற ஓங்கிய
செந்தீக் கலந்து உட் சிவன் என நிற்கும்
முந்திக் கலந்து அங்கு உலகம் வலம் வரும்
அந்தி இறைவன் அதோமுகம் ஆமே.

* ஞான வழிகாட்டியாகிய நந்தி எம்பெருமானார் எல்லாத் தேவதைகளுக்கும் மேலாகி நடுவாகி விளங்குகின்றார்;

* சிவப்பு நிறமான அக்கினியோடு சிவன் கலந்து ஒரு புறம் புலப்படுவார்;

* ஆரம்பத்திலேயே இருந்து, இந்தப் பூமித்தாய் தன்னைத்தான் சுற்றி இறையவரை வலம் வந்து இறையவரின் அதோ முகத்தை வணங்கும்.

524. அதோ முகம் கீழ் அண்டம் ஆன புராணன்
அதோ முகத் தன்னொடும் எங்கு முயலும்
சதோ முகத்து ஒண் மலர்க் கண்ணிப் பிரானும்
அதோ முகன் ஊழித் தலைவனும் ஆமே.

* இறையவரின் அதோமுகத்தின் கீழேயே அண்டங்கள் காணப்படுகின்றன. இது தொடர்பாகப் புராணங்கள் உருவாகின்றன்;

* இறையவரின் அதோமுகமானது எங்கும் வியாபித்து உள்ளது; அது

* சத்தியத்தை முகமாக உடையது. ஞானத்தைக் கண்களாக்கி மாலையாக அணிந்துள்ளது;

* அதோ முகத்தை உடையவர் ஊழிக்காலத்தில் உருவாகும் ஒரு தலைவர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

525. அதோ முகமாம் மலர் ஆயது கேளும்
அதோ முகத்தால் ஒரு நூறாய் விரிந்து
அதோ முகம் ஆகிய அந்தமில் சத்தி
அதோ முகம் ஆகி அமர்ந்து இருந்தானே.

* அதோ முகமானது மென்மையான மலர் போன்றது. தெய்வீகம் நிறைந்தது;

* அதோ முகம் நூறு நூறாய்ப் பல்கிப் பெருகிச் செல்லும்;

* அதோ முகத்துடன் அளவிட முடியாத சத்தியும் காணப்படும்;

* இறையவரே அதோ முகமாகி அமர்ந்துள்ளார்.

## XXI. சிவ நிந்தை

526. தெளி உறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே
அளிவு உறுவார் அமராபதி நாடி
எளியன் என்று ஈசரை நீசர் இகழில்
கிளி ஒன்று பூஞையில் கீழ் அதுவாகுமே.

* தெளிந்த ஞானம் உள்ளவர்களது சிந்தை கருணை நிறைந்ததாக இருக்கும். இவர்கள் எப்பொழுதும் இறையவரை வணங்குவர்;

* இறையவரை யாராவது இகழ்ந்து பேசுவார்களானால், அவர்கள் பூனையின் வாயில் அகப்பட்ட கிளிக்கு ஒப்பாவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

527. முளிந்தவர் வானவர் தானவர் எல்லாம்
விளிந்தவர் மெய்ந்நின்ற ஞானம் உணரார்
அளிந்து அமுது ஊறிய ஆதிப் பிரானைத்
தளிந்தவர்க்கு அல்லது தாங்க ஒண்ணாதே.

* இதயத்தில் கருணையே இல்லாது தானம் செய்பவர்கள், வானவர்கள், திகைப்பவர்கள் - இவர்கள் இறையவரின் மெய்மையான ஞானத்தை உணர மாட்டார்கள்;

* சதா கருணையுடன் அமுது ஊறிய வண்ணம் உள்ள இறை காட்சியை, இறை அருள் பெற்றவர்களால் மாத்திரமே என்றும் தாங்க முடியும் - காணமுடியும்.

528. அப் பகையாலே அசுரரும் தேவரும்
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்
எப் பகை ஆகிலும் எய்தார் இறைவனைப்
பொய்ப் பகை செய்யினும் ஒன்று பத்தாமே.

* அசுரரும் தேவரும் தங்களின் வரவின் நோக்கத்தை உணராது, தங்களுக்குள் ஏற்பட்ட பகையினாலேயே வாழ்க்கையின் பாதி வழியில் அழிந்தனர்;

* இவர்கள் எந்த வகையான பகைமை வந்தாலும் இறைவரை வணங்க மாட்டார்கள்;

* விளையாட்டாகப் பகைமை செய்தாலும் அது பலவாகப் பெருகி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

529. போகமும் மாதர் புலவியது நினைந்து
தாகமும் உள் கலந்து அங்கு உளன் ஆதலில்
வேதியர் ஆயும் விகிர்தனாம் என்கின்ற
நீதியுள் ஈசன் நினைப்பு ஒழிவாரே.

* உலக போகத்திலும், மாதரின் புணர்ச்சியிலும், உடல் தாகத்திலும் சதா கலந்திருப்பவர்கள் - அவர்கள் அந்தணரானாலும் விகாரப்பட்டவர்கள் ஆவர்;

* இவர்கள் இறையவரின் நினைப்பு எல்லாம் ஒழிந்து போவார்கள்.

## XXII.

## குரு நிந்தை

530. பெற்று இருந்தாரையும் பேணார் கயவர்கள்
உற்று இருந்தாரை உளைவன சொல்லுவர்
கற்று இருந்தார் வழி உற்று இருந்தார் அவர்
பெற்று இருந்தார் அன்றி யார் பெறும் பேறே.

* கண் முன்னே வழிகாட்டியாக விளங்குபவர்களைக், கயமை உள்ளவர்கள் பேணவே மாட்டார்கள்;

* தெளிவு பெற்று இருப்பவர்களை வாய்க்கு வந்தபடி எல்லாம் சொல்லுவார்கள்;

* இறை ஞானத்தைக் கற்று உணர்ந்தவர்கள், உறுதியான தெளிவு நிலையில் உள்ளவர்கள், பெற்றுக் கொண்ட இறை ஞான அருட்பேற்றினை வேறு யாவர் பெறுவர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

531. ஓர் எழுத்து ஒரு பொருள் உணரக் கூறிய
சீர் எழுத்தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊர் இடைச் சுணங்கனாய்ப் பிறந்து அங்கு ஓர் உகம்
வார் இடைக் கிரிமியாய் மாய்வர் மண்ணிலே.

* *ஓர் எழுத்து – "அ" ஒரு பொருள் – "சிவம்" உணர்வுபடக் கூறியவர்களை;*

* *அவ்வாறான இறை அருளாளர்களைச் சிந்தை சிதைவு படத்தங்கள் வாயால் ஏசுபவர்கள்;*

* *இந்தப் பூமியில் நாயாய்ப் பிறந்து, ஒருயுக காலமாய்ச் சுழல்வார்கள்;*

* *இவர்கள் இறுதியாகக் கிரிமிகளாய் மண்ணிலே மாய்ந்து போவார்கள்.*

532. பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டு ஒன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதா நந்தி ஆணையே.

* *கற்புடைய பெண்கள், இறைபக்தர்கள், இறைதத்துவ ஞானிகள் ஆகியோரது சித்தம் கலங்குமாறு அழிவுகள் செய்தால்;*

* *உயிர், உடம்பு, பொன், பொருள், போகம் எல்லாம் ஓர் ஆண்டில் அழிந்து விடும்;*

* *இவ்வாறு உண்மையில் நிகழும். இது சத்தியம். நந்தி எம் பெருமானார் மீது ஆணையாகச் சொல்கின்றேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

533. மந்திரம் ஓர் எழுத்து உரைத்த மாதவர்
சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங்கனாய்ப் பிறந்து நூறு உரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே.

* *இறை மூல மந்திரத்தை, ஓர் எழுத்தை - "அ" - தெளிவுபடக்கூறிய மாதவம் உடையவர்களின் சிந்தை நொந்துபோகத் தீமைகள் செய்தவர்கள்;*

* *நூற்றுக் கணக்கான பிறப்புகள் நாயாகப் பிறந்து பன்றி வாழ்க்கை வாழ்ந்து மண்ணிலே மாய்ந்து போவார்கள்.*

534. ஈசன் அடியார் இதயம் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசமதாகுமே நம் நந்தி ஆணையே.

* *இறைவனுடைய அடியவர்களின் இதயம் கலங்கும் படியாகத்தீமைகள் செய்தால்;*

* *நாடு நகரங்களின் சிறப்புகள் எல்லாம் அழிந்து விடும்;*

* *இந்திரனது சபையும், பெரிய மன்னர்களது பீடமும் அழிந்து போகும் என நந்தியெம் பெருமானார் மீது நான் ஆணையாகக் கூறுகின்றேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

535. சன்மார்க்கம் சற்குரு சந்நிதி பொய்வரில்
நல் மார்க்கமும் குன்றி ஞானமும் தங்காது
தொன் மார்க்கம் ஆய துறையும் மறந்திட்டுப்
பன் மார்க்கமும் கெட்டுப் பஞ்சமும் ஆமே.

* காதன்மை நெறியும், சிறந்த வழிகாட்டல்களின் சந்நிதானமும் பொய்த்துப்போனால்;

* இறைவனைக் காட்டும் நல்ல மார்க்கங்கள் குன்றிப் போகும். ஞானமும் தங்க மாட்டாது;

* மிகவும் புராதனமான அன்பு வழியும் விடுபட்டுப் போகும்; பல வகையான நல்ல மார்க்கமும் கெட்டு, நாடு பஞ்ச நிலைக்கு உள்ளாகும்.

536. கைப்பட்ட மாமணி தான் இடை கைவிட்டு
மெய்ப்பட்ட கல்லைச் சுமப்போன் விதி போன்றும்
கைப்பட்ட நெய் பால் தயிர் நிற்கத் தான் அறக்
கைப்பிட்டு உண்பான் போன்றும் கன்மி ஞானிக்கு ஒப்பே.

* இறைமாமணி எம் கையிலேயே வந்து வீற்றிருக்கின்றார். அதனை விட்டு, வெறும் உடம்பையே கல்லாகச் சுமந்து திரிகின்றார்களே;

* பால்; தயிர் ஊடாகக் கடைந்து வெண்ணெய் எடுக்கப்படுகின்றது. அதுவும் கையில் உண்டு;

* வெண்ணெயில் இருந்து நெய் எடுத்து அதை அருந்தாது பிட்டு உண்பதற்காக அலைகின்றார்களே. இது அவர்களின் கன்ம விதி போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## XXIII. மயேசுர நிந்தை

537. ஆண்டான் அடியவர் ஆர்க்கும் விரோதிகள்
ஆண்டான் அடியவர் ஐயம் ஏற்று உண்பவர்
ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினோர்
தாம் தாம் விழுவது தாழ் நரகு ஆமே.

* *இறையவரால் ஆட்கொள்ளப்பட்டவர்கள், அடியவர்கள், பிச்சை எடுத்து உண்பவர்கள் ஆகியோரை வேண்டாது விரோதியாக நினைத்து ஏசியவர்கள்; இவர்கள்*

* *சென்று வீழ்வது மிகவும் தாழ்ந்த நரகக் குழியிலேயே ஆகும்.*

538. ஞானியை நிந்திப்பவனும் நலன் என்றே
ஞானியை வந்திப் பவனுமே நல் வினை
ஆன கொடு வினை தீர்வார் அவன் வயம்
போன பொழுதே புகும் சிவபோகமே.

* *இறை ஞானம் பெற்றவரை நிந்தனை செய்பவருக்குத் தீவினையும், வழிபாடு செய்பவர்க்கு நல்வினையும் கிடைக்கும்;*

* *இருமை வகையான தன்மைகளை நீக்கியவர்கள்- நல் வினை தீவினைகளில் இருந்து விடுபவர்களே சிவபோகத்தின் உள் புகுவார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## XXIV. பொறை உடைமை

539. பற்றி நின்றார் நெஞ்சில் பல்லி தான் ஒன்று உண்டு
முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவையும்
தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றாது ஒழிவது மாகமை யாமே.

* *இறைவரைப் பற்றி நிற்பவர்களின் நெஞ்சங்களில் சித்தாடும் எண்ணம் குடி கொண்டுள்ளது;*

* *இவ்வெண்ணம் செயலாக அவர்களின் சுவாசத்தின் ஊடாகவும், வாக்கின் ஊடாகவும் வெளிப்படும்;*

* *இறுதியில் அவர்களின் சிந்தையானது முற்றாகச் சிதைந்து விடும்;*

* *மனமாகிய மாயையானது முற்றாக ஒழிந்து போவது மிகவும் சிரமமாகும்.*

540. ஓலக்கம் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பால் ஒத்த மேனியன் பாதம் பணிந்து உய்ய
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் மன்னவன்
ஞாலத்தில் இவன் மிக நல்லன் என்றாரே.

* சப்த்த சொரூபத்தால் உலகம் சூழப்பட்டுள்ளது. அங்கே தேவர்களும் உள்ளார்கள்;

* பால் போன்ற மேனியை உடைய இறையவரின் பாதத்தைப் பணிந்து வழிபாடு செய்து நாம் உய்ய வேண்டும்;

* இறையவர் ஆதியாகிய மாலுக்கும், பிரம்மாவிற்கும் தலைவர் ஆவர்;

* ஞாலத்திலே இறையவர் ஒருவர் தான் நல்லவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

541. ஞானம் விளைந்தவர் நம் இட மன்னவர்
சேனை வளைந்து திசை தொறும் கைதொழ
ஊனை விளைத்திடும் உம்பர் தம் ஆதியை
ஏனை வளைந்து அருள் எட்டலும் ஆமே.

* இறையவர் ஞானமே உருவானவர். அன்பு நிறைந்தவர். எந்தத் திக்கிலும் இறையவரை வணங்க - இறையவர் காட்சி வெளிப்படையாகவே உள்ளது;

* சர்வ உருவங்களையும் இறையவரே ஒழுங்கு படுத்துகின்றார். இறையவரின் கருணைக் கடலான அருளை நாம் அனைவருமே பெற்றுக் கொள்ளலாம்.

542. வல் வகையாலும் மனையிலும் மன்றிலும்
பல் வகையாலும் பயிற்றிப் பதம் செய்யும்
கொல்லையில் நின்று குதி கொள்ளும் கூத்தனுக்கு
எல்லை இலாத இலயம் உண்டாமே.

* உங்களின் எல்லா வலிமையையும் பயன்படுத்தி - பல்வேறு வழிவகைகளாலும் - உங்கள் வீட்டில் இருந்தோ, மலைகளில் இருந்தோ உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள்;

* அப்பொழுது தான் இறையவர் எம் உள்ளேயே நின்று அருள் நடனம் புரிவார்;

* அப்பொழுது எமக்குள்ளேயே அளவிட முடியாத ஒடுக்கம் - பொறைமை ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## XXV. பெரியாரைத் துணைகோடல்

543. ஓட வல்லார் தமரோடு நடா வுவன்
பாட வல்லார் ஒலி பார் மிசை வாழ்வன்
தேட வல்லார்க்கு அருள் தேவர் பிரானொடும்
கூட வல்லார் அடி கூடுவன் யானே.

* குடும்ப சுற்றத்துடன், வாழ்க்கை எனும் ஓடத்தில் உள்ளவர்களுடன் திருமூலராகிய நான் மிகவும் அன்போடு பழகுவன்;

* இறையவரின் மீது, இசையுடன் இறை அருட் பாடல்கள் பாடுபவர்களுடன் நான் சேர்ந்து வாழ்வேன்;

* தேவர்களுக்குத் தலைவராகிய இறையவர், உண்மையைத் தேடுகின்றவர்களுக்கு அருளை வழங்குவார்;

* இறையவரின் திருவடியினைக் கூடவல்லார்களோடு நானும் கூடிக் கொள்வேன்.

544. தாம் இடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மா மனத்து அங்கு அன்பு வைத்தது இலையாகும்
நீ இடர்ப்பட்டு இருந்து என்செய்வாய் நெஞ்சமே
போம் இடத்து என்னொடும் போது கண்டாயே.

* மிகவும் துன்பப்பட்டு தளிர்கள் போன்று தயங்கினாலும், நீங்கள் உள்ளார்ந்த அன்பை இறையவர் மீது வைக்காது உள்ளீர்களே;

* உண்மை அன்பை நீங்கள் இறையவர் மீது வைக்காது, உங்களை வாட்டி வதைத்து என்ன செய்யப் போகின்றீர்கள்;

* நீங்கள் போகின்ற இடம் எதுவானாலும் திருமூலனாகிய என்னோடு சேர்ந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

545. அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிலர் தத்துவத்தை
நெறிதான் மிகமிக நின்று அருள் செய்யும்
பெரியார் உடன் கூடல் பேர் இன்பமாமே.

* அமரர்களின் தலைவனாகிய இறையவரைப் பெரியவர்கள் என்றும் நாடிக் கொள்வார்கள்;

* அன்பு நிறைந்தவர்கள் இறைதத்துவத்தைப் பெற்றுக் கொள்வார்கள்;

* இறை வழிபாட்டு நெறி ஒன்றுதான் நிலையாக நின்று சதா அருள் புரியும்;

* இறையவரை சதா நாடிக் கொள்ளும் பெரியவர்களுடன் கூடி வாழ்தல் பேர் இன்பம் ஆகும்.

546. தார் சடையான் தன் தமராய் உலகினில்
போர் புகழான் 'எந்தை பொன் அடி' சேருவர்
வாய் அடையா உள்ளம் தேவர்க்கு அருள் செய்யும்
கோ அடைந்து அந்நெறி கூடலும் ஆமே.

* இறையவர் சுத்த சத்தியைச் சடையாகவும், தனது துணையாகவும் இப் பிரபஞ்சத்தில் கொண்டுள்ளார்;

* எந்த விதமான நல்ல தீய பலாபலன்களையும் யுத்தத்தினால் பெற்றுப் போற்றாதவர்கள் – இறையவரின் பொன்னான திருவடியினைச் சேர்ந்து கொள்வார்கள்;

* மௌனநிலையில் உள்ளவர்களுக்கும், தேவர்களுக்கும் இறையவர் அருள் செய்வார்;

* இறையவர் நெறியை அடைந்தால் இறையவருடன் கூடிக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

547. உடையான் அடியார் அடியார் உடன் போய்ப்
படையார் அழன் மேனிப் பதிசென்று புக்கேன்
கடையார நின்றவர் கண்டு அறிவிப்ப
உடையான் வருகென ஓலம் என்றாரே.

✳ இறையவரின் அடியவர்களுடன், அடியார் கூட்டம் சேர்ந்து கொள்ளும்;

✳ ஐந்து பூதப் படைகளை உடைய பொன்னிற மேனியை உடைய இறையவருடன் நான் சேர்ந்து கொண்டேன்;

✳ இறையவரின் ஞானக் கடையின் அருகே நிற்பவராகிய நந்தி எம்பெருமான், இறை ஞானத்தை – இறைவரை நேரடியாகக் கண்டவண்ணமே எனக்கு அறிவிக்கின்றார்;

✳ "திருமூலரே" உம்மை இறையவர் வரும்படி அழைக்கின்றார் என நந்தி எம் பெருமானார் ஓம் எனும் ஒலியால் எனக்குக் கூறுகின்றார்.

548. அருமை வல்லான் கலை ஞானத்துள் தோன்றும்
பெருமை வல்லோன் பிறவிச் சுழி நீந்தும்
உரிமை வல்லோன் உணர்ந்து ஊழி இருக்கும்
திருமை வல்லாரொடு சேர்ந்தனன் யானே.

✳ மிகவும் அருமை பெருமையாக இறைவரைப் போற்று பவருக்கே இறையவரின் கலை ஞானம் கிடைக்கும்;

✳ இறைவரின் அருமை பெருமைகளை உணர்ந்தவர்களே பிறவி என்னும் வட்டத் தொடரை நீந்திக் கடப்பார்கள்;

✳ இறையவரை மிகவும் ஆத்மார்த்த உரிமையுடன் உணர்ந்து கொள்பவர்கள் ஊழி ஊழியாக இருப்பார்கள்;

✳ இறையவரின் பரிபூரண அருள் பெற்றவர்களுடன் நான் சேர்ந்திருந்தேன்.

இரண்டாம் தந்திரம் முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thirumoolar Thirumanthiram

Stanzas with Interpretation.

Publication No - 6

*Publication & Copyright*

**Mounashram Trust**
**19. I. B. C. Road,**
**Colombo - 6. Wellawatta,**
**Shri Lanka**

NEW DI.HAYAN PUBLICATION (PVT) LTD.
83 2/1, HAMPDEN LANE
COLOMBO 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by United Merchants Ltd

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org